www.tamilarangam.net

# உயிர்ப்பு

3

93

UYIRPPU

உள்ளே ......

முகவுரை

தேசியவாதம் குறித்த ஒரு விவாதத்திற்கான முன்னுரை

இலங்கையில் தேசங்களின் உருவாக்கம் — தேவதாஸ்

பெண்களும் புரட்சியும் :
மார்க்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் : மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவினை நோக்கி ....
— ஹெய்டி கார்ட்மன்

வாசகர் கடிதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உயிர்ப்பு**

## உங்களுடன் நாம் ......

தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள இன்றைய தேக்க நிலையைக் களைந்து போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுக்க வேண்டும் என்ற அக்கறை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள முன்னேறிய பிரிவினரிடையே பரவலாகக் காணப்படுகிறது. இன்றைய பாசிச தலைமைக்குப் பதிலாக உண்மையான புரட்சிகர மாற்றை (Real Revolutionary Alternative) உருவாக்குவது பற்றியும் அதிகம் பேசப்படுகிறது. இந்த அடிப்படையிலேயே புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்ற விவாதமும் நடைபெறுகிறது. இதில் நாம் கூட கலந்து கொண்டோம். கடந்த காலத்தில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதங்களின் விளைவுகளை இன்று திரும்பிப் பார்க்கும் எவருமே திருப்தியுற முடியாது. ஏனெனில், இந்த விவாதமானது தனது இலக்கில் அதிகம் முன்னேற முடியாது போனதே யதார்தமான நிலையாகும். இதனால் போராட்டத்திலுள்ள தேக்கநிலையைக் களைய முற்பட்டவர்கள் தாமே தேக்க நிலைக்குள்ளாகும் அவலம் நேர்கிறது. முன்னேறிய பிரிவினரிடத்தில் ஐக்கியத்தை உருவாக்கப் போவதாக கூறியவர்கள், தமக்கிடையிலான வேறுபாடுகளை அதிகரித்துக் கொண்டதே நடந்து முடிந்துள்ளது.

வெளிப்படையாகவே கூறினால், இன்று விவாதத்தில் ஈடுபடும் பல தரப்பினரிடமும் பலவிதமான கேள்விகள் இருக்கின்றன. உடனடியாகவே விடைகண்டாக வேண்டிய அவசரமான கோட்பாட்டுப் பிரச்சனைகள் இவை. ஆனால், இந்த கோட்பாட்டுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான கோட்பாட்டு ரீதியான உழைப்பை வழங்கத்தான் யாருமே இன்று தயாராக இல்லை. மாறாக, இந்த கோட்பாட்டு இடைவெளியானது வெறுமனே 'தர்க்கப் பலத்தின்' மூலம் இட்டு நிரப்பும் முயற்சி நடைபெறுகிறது. சாதாரண பொதுப் புத்தி (Commonsense) மட்டத்திலேயே நடைபெறும் இந்த விவாதங்களில் பழைய கருத்தாக்கங்களும், சாதாரண தகவல்களுமே மாறி மாறி போடப்படும் ஒருவித சொற்களின் விளையாட்டே நடைபெறுகிறது. முடியாத போது உரத்த குரலில் பேசுவதன் மூலம் இது ஈடு செய்யப்படுகிறது. அதுவும் போதாதபோது கிண்டல், கேலி, முத்திரை குத்தல், சேறு பூசுதல் என்று போய் இறுதியில் நேரடியான தாக்குதலாக இது மாறிவிடுகிறது.

இத்தனைக்குப் பின்பும் ஆரம்பத்திலிருந்த அதே கோட்பாட்டுப் பிரச்சனைகள் தீர்வு காணப்படாமல் அப்படியே இருக்கின்றன. மாறாக, கசப்பான மன உணர்வுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்த விதமான அணுகுமுறையானது முன்னேறிய பிரிவினர் தமக்கிடையிலுள்ள வேறுபாடுகளைக் களைவதற்குப் பதிலாக, இந்த வேறுபாடுகளுக்கே அதிகம் அழுத்தம் கொடுப்பதாகவும், இந்த வேறுபாடுகளை இன்னமும் தீவிரப்படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றன. பல்வேறுபட்ட தரப்பினரும் முகம் கொடுக்கும் பல தரப்பட்ட கோட்பாட்டுப் பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டு அனைத்துத் தரப்பினரையும் மேவிச் செல்லக் கூடிய சித்தாந்த மேலாண்மையை உருவாக்குவதன் மூலமே முன்னேறிய பிரிவினரின் இணைவு எனும் பிரச்சனை தீர்க்கப்பட முடியும்.

"எங்கிருந்து தொடங்குவது?" என்பது ஒவ்வொரு புரட்சியாளரும் விடை கண்டாக வேண்டிய முதன்மையான கேள்வியாகும். தம்முடைய குறிப்பான வரலாறு மற்றும் போராட்ட சூழலில் இந்த கேள்விக்கான விடையை துல்லியமாக கண்டறிவதன் மூலமே தமது சமூகத்தில் நடைபெறும் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் ஆற்றல் உடையவர்களாக புரட்சியாளர்கள் தம்மை ஆக்கிக் கொள்வது சாத்தியப்படும்.

ஒரு சமூகப் புரட்சி என்பது தனிநபர்களுடைய விருப்பு வெறுப்புகளிலிருந்து மட்டும் பிறந்து விடுவதில்லை. முக்கியமாக இதுவோர் புறநிலையான நிகழ்வாகும். இந்த நிகழ்வானது தனக்கேயுரிய இயக்க விதிகளைக் கொண்டுள்ளது. இந்த விதிகளை புரிந்து கொள்வதென்பது எந்தவொரு புரட்சிகர மாற்றத்திற்கும் முன்நிபந்தனை ஆகும். எந்தவொரு புரட்சியிலும் போராடும் மக்களே தீர்க்கமான சக்தியாவர். போராடும் மக்கள் தமது முன்னணிப் படையான புரட்சிகர தாபனத்தால் தலைமை தாங்கப்படும் போதே அவர்களது போராட்டமானது புரட்சிகர இலக்குகளை அடைவது உத்தரவாதப்படுத்தப்படும். அப்படிப்பட்ட ஒரு புரட்சிகர தாபனம் ஒரு போராட்டச் சூழலில் இல்லாதபோது அதனைக் கட்டுவதே அந்த சமூகத்திலுள்ள முன்னேறிய பிரிவினரது உடனடிப் பணியாகிறது.

புரட்சிகர தாபனத்தைக் கட்டும் பணி என்பதும் சில விதிகளுக்கு உட்பட்டதே. எந்தவொரு புரட்சிகர தாபனத்தின் வரலாற்றிலும் அதன் வளர்ச்சியின் மூன்று கட்டங்களை வேறு பிரித்து அறிவது சாத்தியப்படும்.

**1.** புரட்சிகர தாபனமானது தனக்கான அடித்தளத்தை இடுவது முதலாவது கட்டமாகும். தமது புரட்சியுடன் தொடர்புடைய பல்வேறு கோட்பாட்டு, அரசியல் பிரச்சனைகளையும் விவாதித்துத் தீர்வுகண்டு, திட்டத்தை வரைவது இந்தக் கட்டத்தின் முதன்மையான பணியாகும். சமூகத்திலுள்ள முன்னேறிய பிரிவினரே இந்த காலகட்டத்தில் பிரதான அக்கறைக்குறியவர்களாவர்.

**2.** புரட்சிகர தாபனமானது தன்னைப் பலப்படுத்திக் கொள்வது இரண்டாவது கட்டமாகும். மக்கள் எங்கெல்லாம் உள்ளார்களோ அங்கெல்லாம் சென்று பணியாற்றி, பிரச்சாரம், கிளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு, போராடும் மக்களை அமைப்பாக்கி அவர்களது போராட்டத்தை அமைப்பு நிலையில் தலைமை தாங்க வல்லவர்களாக மாற்றுவது இந்த கட்டத்தில் பிரதான பணியாகும்.

**3.** அதிகாரத்தைக் கையேற்பது மூன்றாவது கட்டமாகும், போராட்டத்தில் ஈடுபடும் பலதரப்பட்ட சக்திகளுக்கிடையில் ஐக்கிய முன்னணியை அமைப்பதன் மூலம் எதிரிக்கெதிரான தாக்குதல்களை ஒன்றுகுவிப்பது இக் கட்டத்தில் பிரதான

www.tamilarangam.net

உயிர்ப்பு

பணியாகும்.

இப்படியாக போராட்டத்தில் புரட்சிகர தாபனத்தில் வளர்ச்சி மட்டத்திற்கேற்ப வேறுபட்ட பணிகள் முதன்மை பெறுவதைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திலுமுள்ள முதன்மையான பணிகளில் தமது ஆற்றல்கள் முழுமையாக குவிக்கப்படுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்வது புரட்சியாளர்களிற்கு அத்தியாவசியமானது. இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு புரட்சிகர தாபனமே இல்லை என்ற நிலையில் இன்றுள்ள முன்னேறிய பிரிவினர் அப்படிப்பட்ட ஒரு புரட்சிகர தாபனத்திற்கான அத்திவாரத்தை இடும் வகையில் கோட்பாட்டுப் பணிகளில் தமது முதன்மையான அக்கறைகளைச் செலுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இந்த முதன்மையான கோட்பாட்டுப் பணிகளிற்கு மாறாக செய்யப்படும் வேறு எந்த பணிகளாயினும் –அது எவ்வளவுதான் மக்களிற்கும் புரட்சிக்கும் பயனுள்ளதாக கருதப்பட்டாலும் கூட– அவை தன்னியல்பின் பாற்பட்டவையே என்பதை மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

இன்று பலதரப்பட்ட பிரிவினரும் செய்யும் பணிகளை பரிசீலித்துப் பார்க்கும் எவரும் இவர்களது பணிகள் எதுவுமே தன்னியல்பு கட்டத்தை தாண்டி விடவில்லை என்பதை இலகுவிலேயே இனங்கண்டு கொள்ள முடியும். கோட்பாட்டுப் பணிகளில் செலவழித்தாக வேண்டிய மிகவும் அரிதான இந்த உழைப்புச் சக்தியானது தன்னியல்பு வேலைகளில் 'விரயமாக்கப்படுவதே' முன்னேறிய பிரிவினர் இன்று முகம் கொடுக்கும் தேக்க நிலையின் ஊற்று மூலமாகும்.

இன்று விவாதத்தில் ஈடுபடும் முன்னேறிய பிரிவினரின் பல தரப்பினரும் தம்மிடம் கோட்பாட்டு ரீதியான பற்றாக் குறைகள் இருப்பதாக வெளிப்படையாகவே ஒத்துக்கொள்கின்றார்கள். இதுவோர் நல்ல தொடக்கமே. ஆனால் இன்று இதனை விட முக்கியமானது என்னவென்றால் இந்தப் பற்றாக் குறைகளை களைய யதார்த்தத்தில் என்ன விதமான முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதே. எமது அவதானிப்பில், இப்படியான முயற்சிகள் பரவலாக இடம்பெறவில்லை என்பதே உண்மையாகும். இதற்கு பல்வேறு காரணங்களையும் விட தன்னியல்பு வேலைகளில் ஆற்றல்கள் விரயமாக்கப்படுவது முக்கியமான குறைபாடாகும். பற்றாக் குறைகளை களைவதில் ஆக்கபூர்வமாக ஈடுபடாமல் வெறுமனே பற்றாக்குறைகளைப் பற்றி மட்டும் பேசுவதன் அர்த்தமென்ன? "அறியாமையே பலம்" என்று போற்றி வழிபடப் போகிறோமா?

தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினரின் கோட்பாட்டுப் பற்றாக்குறைகள் ஒருபுறம் இருக்க, இன்னோர் புறத்தில் புத்திஜீவிகள் மீதான காட்டுத்தனமான தாக்குதல்கள் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் புத்திஜீவிகள் தொடர்பாக எமக்கு சில விமர்சனங்கள் உள்ள போதிலும், இப்படிப்பட்ட தாக்குதல்களில் எமக்கு உடன்பாடு கிடையாது. கடந்த காலத்தில் போராட்டத்தில் நடைபெற்ற தவறுகளில் புத்திஜீவிகளின் பாத்திரம் என்ன? என்பது ஒருபுறமிருக்க, அவர்களை புரட்சிகரமான பணிகளில் சரியாக ஈடுபடுத்த முடியாத தாபனங்களின் பாத்திரமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். கடந்த காலத்தில் மட்டுமன்றி இன்றுவரையில் புரட்சிகரப் பணிகள் அனைத்தையுமே தன்னியல்பாக ஓடவிட்டு விட்டு புத்திஜீவிகளைத் தாக்குவதன் மூலம் ஏதும் பயன் விளையப் போவதில்லை. இங்கு அடுத்தகட்ட நகர்வு அல்லது புரட்சிகர மாற்று என்பது ஏனைய அமைப்புகளிலிருந்து முறித்துக் கொள்வது என்பதை மட்டுமன்றி, தமது கடந்தகால சிந்தனை முறையிலிருந்தும், வேலை முறைகளிலிருந்தும் முறித்துக் கொள்வதாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். தன்னியல்பு வேலை முறையுடன் கணக்குத் தீர்க்காத வரையில் இந்த முறிவு ஏற்படப் போவதில்லை.

புத்திஜீவிகள் தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டிய இன்னோர் விடயம் யாதெனில், புரட்சிகரத் தாபனத்திற்கும் புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்கள் ஆகியோருக்கும் இடையிலான உறவென்பது எந்த நாளுமே சர்ச்சைக்குரிய தொன்றாகவே இருந்து வந்துள்ளது என்பதாகும். எனவே இந்த உறவுகளை முறையாக கையாள்வதில் புரட்சிகர சக்திகள் அதிக கவனம் எடுப்பது முக்கியமானது. புரட்சியை செய்வதற்கான விருப்பம் மட்டும் இங்கு போதாது. அதனை சாதிப்பதற்கான முதிர்ச்சியும், பக்குவமும் அவசியமானது.

புரட்சிகரமான மாற்றை கட்டும் பணியில் கோட்பாட்டுப் பணிகளே இன்று முதன்மை பெறுகின்றன எனும்போது, நாம் பின்வரும் கோட்பாட்டுப் பிரச்சனைகள் உடனடியாக தீர்வுகாணப்பட வேண்டியவை என்று இனம் காண்கிறோம்

1. தேசிய வாதம் தொடர்பாக ஒரு தெளிவான புரிதலை நிலைநாட்டுவது.
2. எமது தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டை முன்வைப்பது.
3. வேலைமுறையிலும் சிந்தனை முறையிலும் உள்ள தன்னியல்புப் போக்கை முடிவுக்கு கொண்டு வருவது.

அண்மைய எதிர்காலத்தில் மேற்கூறப்பட்ட கோட்பாட்டுப் பிரச்சினைகளையே 'உயிர்ப்பு' தனது பிரதானமான இலக்காகக் கொண்டு செயற்படும்.

எந்த ஒரு போராட்டமும் புரட்சிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு, அது மிகவும் முன்னேறிய கோட்பாட்டால் வழிகாட்டப்பட வேண்டும் என்றார் லெனின். ஆனால் எமது போராட்டத்தை உற்றுநோக்கும் எவருமே எமது போராட்டமானது கோட்பாட்டு ரீதியில் பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்பதை கண்டு கொள்ள முடியும். தேசிய விடுதலைப் போராட்டம் பல வருடங்களாக நடைபெற்றுக் கொண்டுள்ள போதிலும் தேசியவாதம் தொடர்பான கோட்பாடுகளில் நாம்70 வருடங்கள் பின்தங்கியே நிற்கின்றோம்.

எமது போராட்டத்தில் பெண்களின் தீர்க்கமான பாத்திரம் வெளிப்படையாகவே நிலைநாட்டப்பட்டு விட்டது. ஆனால் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களில் நாம் நம்ப முடியாத அளவிற்கு பின்தங்கியுள்ளோம். போராட்டத்திற்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்ப்பு

கோட்பாட்டிற்கும் இடையில் இவ்வளவு தூரம் இடைவெளி இருக்குமாயின் ஒரு பிற்போக்குத் தலைமை உருவாவதில் ஆச்சரியப்பட ஏதும் இருப்பதாக நாம் கருதவில்லை.

எமது போராட்டத்திலுள்ள கோட்பாட்டு இடைவெளியைக் களையும் நோக்கில் தேசியவாதம் தொடர்பான புதிய கருத்துக்களை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தவும் விவாதிக்கவும் எண்ணியுள்ளோம். இதன் ஒரு தொடக்கமாகவே "தேசியவாதம் குறித்த ஒரு விவாதத்திற்கான முன்னுரை" எனும் கட்டுரை இந்த இதழில் இடம்பெறுகிறது. பெண் விடுதலை தொடர்பாக ஒரு விரிவான புரிதலை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் "Women and Revolution" என்ற நூலில் வந்த 'கெய்டி கார்ட்மன்' உடைய "மார்க்சியத்தினதும் பெண்நிலைவாதத்தினதும் மகிழ்ச்சியற்ற திருமணம்" எனும் கட்டுரை மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகிறது. இக் கட்டுரையானது மேற்குலகில் நடைபெற்ற விரிவான விவாதங்களுடனும், அங்குள்ள சமூக நடைமுறைகளுடனும் ஓரளவு தொடர்புடையதே என்றபோதிலும், இதில் ஆணாதிக்கமானது சார்பளவில் சுயாதீனமான ஒரு கட்டமைப்பாக கையாளப்படுவதும், முதலாளித்துவம் மற்றும் ஆணாதிக்கம் ஆகியவற்றை இணைத்துப் பார்ப்பதனாலேயே எமது சமூக உருவாக்கமானது அதிலும் குறிப்பாக பெண்ணடிமைத்தனத்தின் வடிவங்களும் சரியாக புரிந்து கொள்ளப்படலாம் என்ற கருத்தானது நிலைநாட்டப்பட்டுள்ளது.

எமது தேசிய விடுதலைப் போராட்டமானது பல ஆண்டுகளாகவே நடைபெற்றுவரும் போதிலும் அது கோட்பாட்டு ரீதியாக சரியான முறையில் விளக்கப்படாததாகவே இருந்து வந்துள்ளது. இப்படியாக தேசிய விடுதலைப் போராட்டமானது போதியளவு கோட்பாட்டாக்கம் செய்யப்படாத (Under Theorised) நிலையானது போராட்டத்தில் பல குழப்பங்களுக்கும், ஊசலாட்டங்களுக்கும் காரணமாக அமைவதாக உணர்கிறோம். ஒவ்வொரு திருப்பத்திலும் தேசியவிடுதலை, ஐக்கியப்பட்ட புரட்சி பற்றிய விவாதங்கள் –அதுவும் கோட்பாட்டு மட்டத்திலற்ற பொதுப் புத்தி மட்டத்திலேயே– திரும்பத் திரும்ப பல தடவைகள் நடைபெற்றும் இன்றும் இந்தப் பிரச்சனை இந்த முன்னேறிய பிரிவினர் மட்டத்தில் தீர்க்கப்படவேயில்லை. இன்னும் குறிப்பாக சொல்வதானால் தமிழ்த் தேசத்தின் முன்னேறிய பிரிவினர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமது காத்திரமான பங்களிப்பைச் செலுத்தமுடியாமல் போனதில் இந்த ஊசலாட்டத்திலேயே தமது பெரும்பாலான காலத்தை ஓட்டியதே பிரதான காரணமாதும். "பிரேமதாசா கொலைக்குப் பின்னர் இனக்கலவரம் நடைபெறாததால் இனவாதம் மறைந்து விட்டது" என்பது இந்த ஊசலாட்டத்தின் அண்மைய பதிப்பாகும். சமூக நிகழ்வுகளை ஒரு நிகழ்வுப் போக்காகக் கருதி அதனை கோட்பாட்டு ரீதியில் புரிந்துகொள்ள முடியாது, சம்பவங்களை எடுத்துக் கொண்டு பொதுப் புத்தி மட்டத்தில் விளக்குவது தொடரும் வரை இந்த முன்னேறிய பிரிவானது திரிசங்கு சொர்க்கத்திலேயே நிரந்தரமாக சீவிக்குமாறு சபிக்கப்பட்டிருக்கும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை கோட்பாட்டாக்கம் செய்யும் விதத்திலேயே "இலங்கையில் தேசங்களின் உருவாக்கம்" எனும் கட்டுரையாகும். இக் கட்டுரையானது உயிர்ப்பு–2 இல் இடம்பெற்ற "பேரினவாதத்தின் இயக்கப் போக்கு" எனும் கட்டுரையுடன் இணைத்துப் படிக்கத் தக்கது

இவற்றோடு கூடவே எமது வாசகர் ஒருவர் எழுதிய விரிவான கடிதத்தின் ஒரு பகுதியையும் பிரசுரித்துள்ளோம். இதில் சாதியம் பற்றி இவர் குறிப்பிடுபவை கவனிக்கத் தக்கவை. தமிழ்த் தேசத்தின் சமூக உருவாக்கத்தை சரியாக புரிந்து கொள்வதற்கு இவ்விதமான முயற்சிகள் மிகவும் அவசியமானவையாகும்.

'உயிர்ப்பு' இல் வரும் ஆக்கங்கள் ஒரு விரிவான விவாதத்தை எதிர்பார்த்தே இடம்பெறுகின்றன. இதனால் ஒரு புரட்சிகர மாற்றை உண்மையிலேயே காண விழைபவர்களிடமிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புகள் இதில் மிகவும் முக்கியமானது என்பதால் வாசகர்களது பிரதிபலிப்புகளை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

'உயிர்ப்பு' இல் வரும் ஆக்கங்களை படிப்பது சிரமமாக இருப்பதாகவும், வெகுசன வாசிப்புத் தன்மை சிறிதும் இல்லையென்றும் சில விமர்சனங்களை நாம் முகம் கொடுக்க நேர்கிறது. இது தொடர்பான எமது நிலைப்பாட்டையும் இங்கு குறிப்பிடுவது அவசியமென நினைக்கிறோம். "பிறருக்கு புரியாத விதத்தில் எழுதுவது கெட்டித்தனம்" என்று நினைக்கும் 'விடலைப் பருவத்தை' நாம் கடந்து விட்டோம் ஏன்றே நினைக்கின்றோம். உண்மையில் நாம் யாருக்காக எழுதுகின்றோமோ, அவர்களுக்கு அது புரியவில்லையானால் எமது முயற்சி வெற்றி பெறவில்லையென்றே கருதப்பட வேண்டும். ஆனால் கோட்பாட்டுப் பணியென்பது சூட்சுமமான சில கருத்தாக்கங்களிலிருந்து தொடங்கி அந்த கருத்தாக்கங்களுக்கிடையிலான உறவை பின்பற்றிச் செல்லும் ஒரு செயற்பாடு ஆதலால், இந்த எழுத்துக்களில் ஒருவித கடினத்தன்மை ஏற்படுவதை முற்றிலும் தவிர்த்துவிட முடியாது என்றே கருதுகின்றோம். அத்தோடு எழுதுபவரது கோட்பாட்டு ரீதியான பற்றாக்குறைகள் கூட எழுத்துக்களில் இலாவகமான, சீரான ஓட்டத்திற்கு தடையாக அமைந்து, இந்த கடினத் தன்மையை கூட்டிவிடுகிறது. எனினும், இன்று நடைபெறும் கோட்பாட்டு முயற்சிகள் முன்னேறிய பிரிவினரை இலக்காகக் கொண்டு நடைபெறுவதனால், இந்த முன்னேறிய பிரிவினரும் வாசிப்பை, கோட்பாட்டு முயற்சியிலான தமது பங்களிப்பாகக் கருதி செயற்படுத்த வேண்டும். இங்கு வாசிப்பு என்பது வெறும் பார்வை அல்ல எனவும், அது கோட்பாட்டு ரீதியிலான முயற்சி, உழைப்பு எனவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். முதற் பார்வையில், ஓட்டமான வாசிப்பில் விளங்காமல் இருக்கும் விடயங்கள் கூட திரும்பத் திரும்ப வாசிக்கப்படவும், குழு அளவில் விவாதிக்கப்படவும் செய்தால் கைவரப் பெறாமல் போய்விடுவதில்லை. கோட்பாட்டு முயற்சிகளில் ஆக்கங்களை எழுதுபவர்கள் மாத்திரமன்றி அதன் வாசகர்களும் கூட ஒருவிதமான கோட்பாட்டு ரீதியான உழைப்பிற்கு தயாராக இருக்க வேண்டும். வாசகர்களது உழைப்பிலும் நம்பிக்கை வைத்தே எழுதுபவர் செயற்படுகிறார் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். நடப்பு சமூக அமைப்பையே தலைகீழாக மாற்றிவிடத் துணிந்தவர்களிடம் இப்படிப் பட்டதோர் உழைப்பை எதிர்பார்த்தால் அது தப்பில்லை தானே? இன்றைய யதார்த்த நிலைமை அத்தகைய உழைப்பையே வேண்டி நிற்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசியவாதம் குறித்த

## ஒரு விவாதத்திற்கான முன்னுரை

இடத்திற்கிடம், சூழலுக்குச் சூழல் மிகவும் வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட தேசியப் பிரச்சினை தொடர்பாக ஒரு விரிவான கோட்பாட்டை உருவாக்குவதில் சகல கோட்பாட்டாளர்களும் தோல்வியையே கண்டுள்ளனர். தேசியப் பிரச்சினை குறித்து ஒன்றுபட்ட, முரணற்ற ஒரு கோட்பாட்டை உருவாக்குவதிலுள்ள கஷ்டங்களை பரவலாக பலரும் அங்கீகரித்தும் உள்ளனர். இங்கு மார்க்சியமானது தேசியப் பிரச்சனை தொடர்பாக ஒரு முழுநிறைவான கோட்பாட்டை உருவாக்கி முன்வைக்கும் ஆற்றலை தனக்குள் கொண்டிருந்தும் தனது குறுகிய போக்குகளால், ஆக்கபூர்வமற்ற தனது வரலாற்றால் தேசியப் பிரச்சினையை ஒரு எல்லையில் உள்ள பிரச்சனையாகவே வைத்திருக்கின்றது. மார்க்சியமானது தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது, வெறுமனே ஒரு தற்செயல் விபத்தல்ல. மிகவும் குறுகிய, இறுகிய சட்டம் போட்டு வரையறுத்து இதுதான் மார்க்சியம் என மார்க்சியவாதிகள் அறைந்து விட்டதால், உலக ரீதியில் நாளுக்கு நாள், சகாப்தத்திற்கு சகாப்தம் தோன்றும் புதிய பிரச்சினைகளின் பரிமாணங்களுக்கு மார்க்சியத்தினுள் இடமில்லாமற் போய் விடுகிறது.

ஈழம் தொடக்கம் ஸ்கொட்லன்ட் ஊடாக அஜர்பைஜான் வரையும் இன்று ஒரு கூர்மையடைந்த பிரச்சினையாகவும், மாற்றத்திற்கு வேண்டிய சமூக சக்தியாகவும் விளங்கும் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமையால் உலக ரீதியில் மார்க்சியத்தின் தோல்வியும் தவிர்க்க முடியாததாகிறது. பெண்கள், நிற, சூழல், பிராந்திய, போன்ற பல பிரச்சினைகள் – முக்கியமாக தேசியப் பிரச்சினை – மார்க்சியம் தன்னை காலாகாலமாக சுற்றிக் கட்டிவைத்துள்ள அரணை உடைத்து ஒரு பரந்த சட்டத்தில் வைத்து பிரச்சினைகளை அணுகுவதற்கு வற்புறுத்துகிறது.

"மார்க்சியமும் தேசியமும்" என்ற மிகவும் விரிவான பகுதியில் கால் வைத்திருக்கின்றோம். மார்க்சிசம், தேசியம் ஆகிய இரண்டுமே இலகுவில் கடந்துவிட முடியாத விடயங்கள்தாம். ஆதலால் இவை இரண்டும் தொடர்பாக சில குறிப்புக்களை மாத்திரம் முன்வைக்கலாம் என நினைக்கின்றேன். குறிப்பாக இவற்றை தேசியம் தொடர்பான மார்க்சியத்தின் அணுகுமுறை பற்றிய விமர்சனக் குறிப்புகளாகவும் இவற்றைக் கொள்ளலாம்.

**தேசியம் தொடர்பாக மார்க்சியம் கொண்டிருந்த நிலைப்பாடுகளை சுருக்கமாக பின்வருமாறு கூறலாம் :**

முதலாவதாக,
தேசியவாதமானது முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தமாகவே பார்க்கப்பட்டது. ஏனெனில் தேசியவாத சித்தாந்தமானது நிலப்பிரபுக்களுக்கு எதிராக வளர்ந்துவந்த முதலாளி வர்க்கத்திற்கு சேவை செய்தது.

இரண்டாவதாக,
தேச – அரசின் வளர்ச்சியானது ஆரம்பகால முதலாளித்துவத்திற்கு அவசியமான தொன்றாகும். ஆனால் முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் கூடவே படிப்படியாக தேசியமும் தேய்ந்து மறைந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது.

மூன்றாவதாக,
தேசியப் போராட்டம் என்பது ஒரு குறிப்பான வடிவிலுள்ள வர்க்கப் போராட்டமே யாகும். ஆகவே இது சர்வதேச அளவில் நடத்தப்பட வேண்டிய போராட்டமாகும். வர்க்க ரீதியிலான போராட்டத்தில் ஏற்படும் கூர்மையானது தேசியப் போராட்டத்தை மழுங்கடித்துவிடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

தேசியவாதம் குறித்த செவ்வியல் மார்க்சியமானது (Classical Marxism) சரியான புரிதலைத் தரவில்லை என்ற விமர்சனம் நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. இந்த நோக்கில் பல புதிய தேடல்களும், விவாதங்களும் மார்க்சியவாதிகளிடையே தொடர்ச்சியாகவே நடைபெற்று வந்துள்ளன. 70 களில் இவை தொடர்பான பல கட்டுரைகள் ஐரோப்பிய மார்க்சிய சஞ்சிகைகளில் வெளிவந்தன. தமிழ்த் தேசிய எழுச்சி தீவிரமடைந்ததும் இதே காலப்பகுதியில்தான். 1983ம் ஆண்டில் 'Immagined Communities', 'Nation and Nationalism' போன்ற தேசியவாதம் தொடர்பான முக்கியமான நூல்கள் வெளிவந்தன. இதே ஆண்டில்தான் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டமும் வீறுகொண்டெழுந்தது. இதில் மிகவும் வேதனைக்குரிய விடயம் யாதெனில் இன்றுவரையில் இந்தக் கட்டுரைகளோ, நூல்களோ தமிழில் மொழிபெயர்க்கப்படாதது மட்டுமன்றி இவற்றிலுள்ள முக்கியமான கருத்துக்கள்கூட இதுவரையில் தமிழ் வாசகர்களிடையே முறையாக அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதுதான். தமிழ் முன்னேறிய பிரிவினரிடம் இருப்பதெல்லாம் லெனின், ஸ்டாலின் ஆகியோரது சில கட்டுரைகள் மட்டுமே. இக் கட்டுரைகள் எழுதப்பட்ட குறிப்பான வரலாற்றுச் சூழ்நிலை பற்றிய எவ்வித தெளிவுமின்றி, அந்தச் சூழலில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு சில வரட்டுச் சூத்திரங்களாக ஆக்கப்பட்டுவிட்ட இவை, இன்றைய தமிழ்த் தேசிய இயக்கத்தைப் புரிந்து கொள்வதில் அதிக பங்காற்றமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்

ஒரு புரட்சிகர போராட்டமானது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாயின் அப் போராட்டமானது மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிகாட்டப்பட வேண்டும் என்றார் லெனின். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டமானது கோட்பாட்டு ரீதியில் பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்கும் இன்றைய நிலையில் இப் போராட்டமானது ஒரு பிற்போக்குத் தலைமையின் கரங்களுக்குச் சென்றடைந்ததில் ஆச்சரியப்பட ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

www.tamilarangam.net

இன்றைய 'பாசிச' நிலைமைக்கு உண்மையிலேயே ஒரு புரட்சிகர மாற்றை முன்வைப்பதாயின், முதலில் கோட்பாட்டு ரீதியாக நாம் இந்த 'இருண்ட காலத்தை' கடந்தாக வேண்டியுள்ளது. கோட்பாட்டு ரீதியான ஒரு பாய்ச்சலை மேற்கொள்வது எந்தவொரு மாற்றத்திற்கும் முன்நிபந்தனையானது. இவ்வாறான ஒரு பாய்ச்சலை மேற்கொள்ளாமல் தமிழ் முன்னேறிய பிரிவினர் மத்தியில் காணப்படும் தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த பலவிதமான மயக்கங்கள், நம்பிக்கையீனங்கள், அரசியல் தேக்கம் போன்றவற்றைக் களைந்து, பலதரப்பட்ட பிரிவினரையும் இணைத்து உண்மையான புரட்சிகர மாற்றை உருவாக்குவது சாத்தியப்படமாட்டாது. அந்தவகையில் தேசியவாதம் தொடர்பான கோட்பாட்டு ரீதியான தேடலில் அதிக அக்கறை செலுத்துவது அவசியமானதாகிறது.

"கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தைகளும் அதிக நேரத்திற்குப் பயன்படாது" என்பது முதுமொழி.

இங்கு மார்க்சியமென்பது மார்க்சிய முன்னோடிகளது, ஆசான்களது ஒருசில படைப்புகளே என்று குறுக்கிக் கொள்ளாமல், மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாகக் கருதி அதன் வெளிச்சத்தை இருள் படர்ந்த இடங்களிலெல்லாம் பாய்ச்சவும், அதன் வெளிச்சத்தில் பல புதிய உண்மைகளைக் கண்டறிய முயல்வதுமே எம்முன்னுள்ள கடமையாகும். இந்தவகையில் "தேசியவாதம்" பற்றித் தொடரவிருக்கும் ஒரு விவாதத்திற்கான ஒரு முன்னுரையாகவே இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

ஐரோப்பிய நாடொன்றில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் படிக்கப்பட்ட இந்தக் கட்டுரையில் வரும் கருத்துக்கள் அனைத்தும் எமக்கு உடன்பாடானவை என்று கூற முடியாவிட்டாலும் இக் கட்டுரையில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் சாதாரணமாக தட்டிக் கழிக்கப்படக் கூடியவை அல்ல. அந்தவகையில் தொடரவிருக்கும் ஒரு விவாதத்திற்கு உதவியாக, சிந்தனையைக் கிளறும் விதத்தில் இக் கட்டுரை அமையும் எனக் கருதியே இங்கு பிரசுரிக்கின்றோம். இக் கட்டுரை தொடர்பாக விரிவான கருத்துக்களை அக்கறையுடையோரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

- ஆ. ர் குழு

ஆனால் 20ம் நூற்றாண்டின் உலக அரசியலானது இந்த எதிர்பார்ப்புகள், எதனையும் நிறைவு செய்யவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும். முதலாளித்துவம் வளர்ந்து ஏகாதிபத்தியமாக ஆகிவிட்ட நிலையில் ஏகாதிபத்திய யுத்தங்களும், தேசிய விடுதலைப் போராட்டங்களும் உலகளாவிய போக்காக இக் காலகட்டத்தில் மாறிவிட்டுள்ளது. இங்கு தேசியவாதம் மறைவதற்குப் பதிலாக தேசியவாதமே பிரதான போக்காக மாறி மார்க்சிய போராளிகளையே உள்ளிழுத்துக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.

முதலாம் உலக யுத்தின்போது சர்வதேச அகிலத்தின் கோட்பாடுகளைக் கைவிட்டு ஆளும் வர்க்கத்தின் தேசியவாதங்களுக்குப் பலியாகிப்போய் தத்தம் நாட்டின் கொள்ளைக்கார யுத்தங்களுக்குத் துணைபோன "சமூக ஏகாதிபத்தியவாதிகள்" தொடக்கம் பாசிசத்தின் முறியடிப்பில் சோவியத்தும், அதனைத் தொடர்ந்து வந்த பல புரட்சிகளும் ஏதோ ஒரு விதத்தில் தேசியவாதத்துடன் தொடர்புபட்டே நடந்தேறின என்பதையும் வரலாற்றில் காண முடிகிறது. இன்றும்கூட உலகெங்கும் தேசியமே பிரதான போக்காகி புரட்சியாளருக்கே சவாலாக நிற்கிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியிலும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியிலும் தேசியத்திற்கு நிறையவே பங்குண்டு என்பது மறுக்கப்பட முடியாததாகும். ஆனால் தேசியத்தை வெறுமனே முதலாளித்துவத்துடன் மட்டுமே தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமாக அமைய மாட்டாது. ஏனெனில் முதலாளித்துவம் தனது வாசனையைப் பரப்புவதற்குமுன்பே சீனாவின் கெடுபிடியால் பாதிக்கப்பட்ட வியட்நாம், கொரியா போன்ற நாடுகளின் மக்கள் வரலாற்றில் மிகவும் முந்திய காலங்களிலேயே பலமான 'தேசிய' உணர்வுகளைக் கொண்டிருந்தமையை மேற்கூறிய எடுகோள் விளக்க மாட்டாது.

தேசத்தை மேற்கட்டுமானங்களில் ஒன்றாகக் கருதி அடிப்படையிலான உற்பத்தி முறையிலான மாற்றமானது தேசியத்தை மாற்றிவிடும் அல்லது இல்லாமற் செய்துவிடும் என்பதும், தேசியத்தை பொருளாதாரக் காரணிகளே தீர்மானிப்பதாக குறைத்து மதிப்பிடுவதும் வெறும் யாந்திரிகமான கருத்துக்களாகும். இவை பொருளாதார வாதத்தின் பாற்பட்டவையுமாகும். இது தேசியத்தின் சார்பளவிலான சுயாதீனப் பண்பை, அதன் அரசியல் அம்சத்தை, வரலாற்றை, ஏன் அடிப்படையான சமூக யதார்த்தத்தையே மறுக்கும் போக்காகும்.

தேசம் என்பது வெறும் மேற்கட்டுமானமல்ல. மொழி போன்றே தேசமும் அடித்தளக் கட்டுமானத்தின் ஒரு பகுதியாகும். ஈழத்தில் தேசியமானது எரியும் பிரச்சினையாக இருக்கும்போது சர்வதேசியம் என்ன சொல்கிறது என்பது முதன்மையானதல்ல. இங்கு சர்வதேசியம்தான் மேற்கட்டுமானத்தைச் சேர்ந்ததாகும். அதனால்தான் வரலாற்றில் அவை சுலபமாக தூக்கியெறியப்பட்டன.

"மார்க்சியமும் தேசியமும்" என்னும் தலைப்பின் கீழ் தேசியம் தொடர்பாக மார்க்சியத்தின் அணுகுமுறைகள் பற்றி இத்தனை நீண்ட ஒரு விமர்சனத்தை வைக்க நேர்ந்தது மார்க்சியத்தின் மீதான நம்பிக்கையீனத்தினாலோ அல்லது வேறு ஏதாவது கோட்பாடுகள் மார்க்சியத்தைவிட தேசியத்தை சிறப்பாக மதிப்பிட்டுள்ளதோ என்பதனால் அல்ல. மாறாக, இந்த விமர்சனமானது உண்மையில் மார்க்சியத்தின் மீதானதாக அல்லாமல் மார்க்சியத்தை குறுகிய சில வறட்டுச் சூத்திரங்களாக ஆக்கும் போக்கிற்கு எதிரானதாகவே கொள்ளப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசம் மேற்கட்டுமானங்களில் ஒன்றான தால் வரலாற்றில் நிரந்தரமில்லாத, தற்காலிகமான ஒரு வகையினைச் சேர்ந்ததாகும் என்று மார்க்சியம் கொண்டிருந்த நம்பிக்கையானது மானுடத்தின் மானுடவியல் கூறுகளை, இயல்பான போக்குகளை மறுதலித்த தொன்றாகும். தேசம் என்பது வரலாற்றில் நிரந்தரமற்றது என்பது ஒருவகையில் உண்மையானதே என்ற போதிலும் இன்னோர் வகையில் இந்தக் கூற்றானது பொய்யானதும்கூட. தேசத்தின் நிரந்தரமான, பொருள் பொதிந்த அம்சங்களைப் பார்க்க மார்க்சியம் தவறியுள்ளது.

தேசமானது பொருளாதாரம், மொழி, பிரதேசம், கலாச்சாரம், பாரம்பரியம், வரலாறு, மதம், நிறம் போன்ற பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்பட்டு ஒரு வரலாற்று **விபத்தாகத்தான்** தோன்றுகிறது. தேசத்தின் **தோற்றத்திற்கு** இந்த பலதரப்பட்ட காரணிகளும் ஒரே சீரான வகையில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

பொருளாதாரத் தால் மட்டுமன்றி வேறு பலதரப்பட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டும் வரலாற்றின் ஒரு கட்டத்தில் தேசமானது தோன்றுவதானது, தேசத்தின் இந்த வரலாற்று உருவாக்கமானது அதன் நிரந்தரமின்மையை சுட்டிக் காட்டினாலும்கூட, மாறமுடியாத அம்சமான கலாச்சார ஒழுங்கமைவானது ஒரு பூச்சிய புள்ளியில் இருந்து தொடங்கிவிடுகிறது. இந்த தொடக்கப் புள்ளி சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை திரும்பத் திரும்ப செய்வதற்கு வழிவிடுவதால், இந்த காலம் மீளமுடியாததாகிறது. இது வரலாற்றில் பழங்குடிகள் தொடக்கம் தேசம்வரை வளர்ந்து இன்னும் இன்னும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வளர்ந்துகொண்டே போகும் அம்சமாக உள்ளதே யொழிய தேய்ந்துபோகும் அம்சமாக இல்லை.

இப்படியாக மானுடத்தில் பதிந்துவிடும் அம்சங்கள் தேசியத்திற்கான ஒரு அர்த்தத்தைத் தருகிறது. இதுபோன்ற இயற்கையான மானுடவியல் அம்சங்களை விளக்குவதற்கு குறுகிய மார்க்சிய பார்வையில் இடமில்லை. வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தில் நாங்கள் என்ன உற்பத்தி செய்கிறோம், எதனை சிருஸ்டிக்கிறோம் என்று அறியலாமே யொழிய நாங்கள் எவற்றை தீர்மானிக்க முடியாது என்று அறியவோ எவற்றால் உருவாக்கப்படுகிறோம் என்று அறியவோ வழியில்லை.

மொஸ்கோவிலிருந்து நம்மூர் காத்தான்குடிவரை வரலாற்றுப் போக்கானது ஒழுங்கமைவாக படைக்கப்பட்ட ஒரு சூத்திரத்திற்கேற்ப நடைபெறும் என்று எதிர்பார்த்து, உலகப் புரட்சிக்கான திட்டத்தின் பல்வகைகளையும் ஒன்றாகத் திரட்டி ஒரு முழுமையான இயக்கமாக்கி செயற்படலாம் எனக் கொள்வது வரலாற்றுப் போக்கிற்கு எதிரான செயற்பாடாகும். புரட்சிக்கான வேலைத்திட்டம் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்பட வேண்டும். முரண்பட்டு நிற்கும் தேசிய நிலைமைகளை முதன்மையாகக் கருதவேண்டும்.

மார்க்சியக் கருத்தான ஒழுங்காக, வரிசை முறைப்படி சீராக அமைந்த, ஐக்கியமான வரலாற்றுப் போக்கு என்பது ஒரு கற்பனாவாதக் கருத்தாகும். இது தேசம் என்ற கருத்தாக்கத்தை வரலாற்றில் இருந்து இல்லாமல் செய்வதற்கான கருத்தாக்கமாகும். புராதன கொம்யூனிசம், அடிமைஉடைமை சமூகம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், சோசலிசம் போன்ற ஐந்து வகையான உற்பத்தி முறைகளினூடாக எல்லா சமூகங்களும் கட்டாயமாக, அதே வரிசைக் கிரமத்தில் வருமெனவும், இந்த முறையில் வரலாறானது சீராக ஒழுங்கமைவாக முன்னேறுவதாகவும் கொள்வதானது தேசிய, கலாச்சார வேறுபாடுகளை குறைத்து மதிப்பிடுவதாகும்.

தேசமானது பொருளாதாரம், மொழி, பிரதேசம், கலாச்சாரம், பாரம்பரியம், வரலாறு, மதம், நிறம் போன்ற பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்பட்டு ஒரு வரலாற்று விபத்தாகத்தான் தோன்றுகிறது.

உண்மையில் இது முதலாளித்துவ ஆய்வு வகையை *(Bourgeois Analytic Reason)* சேர்ந்ததாகும். மார்க்சியத்தில் தோன்றியுள்ள இந்த போக்கானது மேற்குலகின் மறுமலர்ச்சிக்கால *(Enlightment)* மரபில் வேரூன்றியதாகும். இக் கருத்தானது இறுதியில் தேசிய வேறுபாடுகளின் குறிப்பான தனித்தன்மைகளை அழித்து சர்வதேச சோவியத் குடியரசை அமைக்க முடியும் என்ற லெனினிசத்தின் விநோதத்திற்கு இட்டுச் சென்றது.

மறுமலர்ச்சிக்கால "பகுத்தறிவுவாத" *(Rationalist)* மரபானது, உணர்வுகள், ஆசைகள் போன்ற மானுட அடிப்படைகளை மறுத்ததுடன் சுபாவமான அறிவு *(Instinct)*, உள்ளுணர்வான அறிவு *(Imperative)* போன்றவற்றை செல்லத்தகாததாக்கியது. இங்கு தேசியமானது சுபாவம் *(Instinct)* ஆகும். சர்வ தேசியமானது மனச்சாட்சி *(Conscience)* ஆகும். எப்போதும் தேசிய சுபாவம் சர்வதேசிய மனச்சாட்சியுடன் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் தேசியத்திற்கே மக்கள் சக்தி அதிகம் உண்டு.

மறுமலர்ச்சிக்கால பகுத்தறிவு வாத மரபானது மார்க்சியத்தினுள்ளேயே தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி வந்ததானது தேசியம் தொடர்பான பல தவறான நிலைப்பாடுகளுக்கு காரணமாகியுள்ளது. சர்வதேசியத்தின் பேரால் ஐரோப்பாவை மையப்படுத்திய *(Eurocentric)* கருத்துக்கள் ஒருபுறமும், ரஷ்ய பெருந்தேசிய வாதக் கருத்துக்கள் மறுபுறமும் வெளிக்கிட்டதை மார்க்சியத்தின் வரலாற்றில் காண முடியும்.

ஸ்லாவிக் தேசங்களை வரலாறற்ற தேசங்கள் என எங்கெல்ஸ் அழைத்த போதும் ஆசிய மக்களை காட்டுமிராண்டிகள் என மார்க்ஸ் குறிப்பிட்ட போதும் தேசியம் தொடர்பான தவறான கருத்துக்கள் மார்க்சிய மூலவர்களிடமும் கூட இருந்ததைக் காணமுடிகிறது. சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சியின் பேரால் பகுதிப் போராட்டங்களான தேசிய எழுச்சிகளை புறக்கணிப்பதானது, அதாவது சர்வ தேசியத்தின் பேரால் தேசியம் தியாகம் பண்ணப்பட வேண்டும் என்று கூறுவதானது, உண்மையான எதிர்கால சோசலிசத்திற்கான அனுகூலங்களை மறுப்பதாகும்.

மார்க்சும் எங்கெல்சும் செக், குரோசியா, தெற்கு ஸ்லாவியா

மொஸ்கோவிலிருந்து நம்மூர் காத்தான்குடிவரை வரலாற்றுப் போக்கானது ஒழுங்கமைவாக படைக்கப்பட்ட ஒரு சூத்திரத்திற்கேற்ப நடைபெறும் என்று எதிர்பார்த்து, உலகப் புரட்சிக்கான திட்டத்தின் பல்வகைகளையும் ஒன்றாகத் திரட்டி ஒரு முழுமையான இயக்கமாக்கி செயற்படலாம் எனக் கொள்வது வரலாற்றுப் போக்கிற்கு எதிரான செயற்பாடாகும்.

போன்ற தேசங்களது எழுச்சிகளை சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் பேரில் மறுத்திருந்தனர். இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமைந்த அனைத்து சோசலிச அரசுகளும் ரஷ்ய பெருந்தேசியவாதத்தின் அடிப்படையிலேயே அமைந்தன. 1956 இல் கங்கேரியிலும், 1968 இல் செக்கோஸ்லாவாக்கியாவிலும் நடைபெற்ற எழுச்சிகள் ரஷ்ய பெருந்தேசியவாதத்திற்கு எதிரானவையே. இந்த எழுச்சிகளை மொஸ்கோ சோசலிசத்தின் பேரால் நசுக்கிய போதும் அது அந்தந்த மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராகவே செயற்பட்டது.

இன்றைய கிழக்கு ஐரோப்பாவில் எல்லா தேசிய இனங்களும் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றன. அப்படியாயின் இத்தனை கால சோசலிச ஆட்சி தேசியப் பிரச்சினையை கையாண்டது தொடர்பாக கேள்வியெழுப்புவதை தவிர்க்கத்தான் முடியுமா? 1989 இல் போலந்தில் நடைபெற்ற மாற்றங்கள் ரஷ்யாவிற்கு எதிரான தன்மையையும் கொண்டிருந்ததை என்னவென்பதாம்? இத் தேசிய இனங்களின் போராட்டங்களை குறுகிய மார்க்சியத்தில் எங்கு வைப்பதாம்? இத்தனை வருட சோசலிச ஆட்சிக்குப் பின்பும் ஒரே மொழியைப் பேசும் குரோசியர்களும், பொஸ்னிய முஸ்லீம்களும் அதே மொழி பேசும் சேர்பியர்களால் நசுக்கப்படுகிறார்களே.... இதனை எப்படி விளக்குவதாம்? தியனமென் சதுக்கத்தில் மாணவர்கள்மீது 'ரதம் ஓட்டிய' கொம்யூனிச தலைமைப்பீடம் "தீபெத்தின் போராட்டக்காரர்கள் 18 வயதும் 20 வயதுமே உடையவர்கள், அவர்களுக்கு அரசியல் தெரியாது, அவர்களுக்கு படிப்பிக்க வேண்டும்" என்று கூறுகிறதே... இதனை என்னவென்பது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியப் பிரச்சினையை வெறுமனே பொருளாதாரத்துடன் மட்டுமே இணைத்துப் பார்த்தவர்கள் சோசலிசத்துடன் தேசியப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்றார்கள். சோவியத்தில் தேசிய பிரச்சினைகளே கிடையாது என்று 1990 வரை இவர்கள் சாதித்தார்கள். இன்று சோவியத் யூனியனுக்கு பதிலாக 16 குடியரசுகள் அந்த இடத்தில் இருக்கின்றன. அதுவும் ஒவ்வொரு குடியரசினுள்ளும் தொடரும் தேசியப் பிரச்சினைகளால் இன்றும் இரத்தம் சிந்தப்படுகிறது. இன்று முன்னாள் சோசலிச முகாம் நாடுகளில் நடைபெற்ற மாற்றங்களையும், எமது தேசியப் பிரச்சினைகளையும் காஷ்மீர், சீக்கிய பிரச்சினைகளையும் வெறுமனே ஏகாதிபத்தியத்தின் சதியெனக் காட்டமுயலும் இடதுசாரிகள் இன்றும் எம்மத்தியில் இல்லாமலில்லை. ஆனால் ஸ்கொட்லான்ட் தானாக தீர்மானித்தால் பிரிந்து போகலாம் என்று கூறும் தைரியம் முதலாளித்துவ வாதிகளுக்கு உள்ளபோது சோசலிஸ்ட்டுகள் இதில் இடறுவது ஏன்?

**தேசியமானது சுபாவம் (Instinct) ஆகும். சர்வ தேசியமானது மனச்சாட்சி (Conscience) ஆகும். எப்போதும் தேசிய சுபாவம் சர்வதேசிய மனச்சாட்சியுடன் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கும்.**

பின்தங்கிய நாடுகளில் காலனியாதிக்மானது முதலாளித்துவ வளர்ச்சியை உண்டுபண்ணும். இதனால் சோசலிசத்திற்கான முன் நிபந்தனைகள் உருவாக்கப்படும், என்பதன் பேரில் காலனியாதிக்கத்தை ஆதரித்தவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்ற ஒவ்வொரு புரட்சியுமே தேசியத்தை அடிப்படையாக வைத்தே நடந்த வரலாறுகளை எப்படி மறுக்க முடியும்? மெக்சிக்கோ, சீனா, கியூபா, வியட்னாம் போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்கள் அல்லவா?

எல்லா நவீன வரலாறுகளிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது தேசிய விடுதலைப் போராட்டத்தில் வேர்விட்டே பெறப்பட்டுள்ளது, அல்லது ஒரு தேசிய அடையாளத்தை (National Identity) பாதுகாக்கும் போராட்டத்திலேயே பெறப்பட்டுள்ளது. சோவியத்தில் 1919 இலும் 1941 இலும் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு போராட்டத்தினூடாகவே போல்ஷெவிக் கட்சியானது மக்களின் ஆதரவை பெருமளவில் பெற்றது. தேசியத்தினூடாகத்தான் சோவியத் சோசலிச குடியரசானது ஒவ்வொரு கட்டத்திலும் போல்ஷெவிக் கட்சியினால் பலப்படுத்தப்பட முடிந்தது. சீனாவில் புரட்சியானது மூன்றாம் அகிலத்தின் துணையின்றி – இன்னும் துல்லியமாக சொல்வதானால் மூன்றாம் அகிலத்தின் வழிகாட்டுதல்களுக்கு எதிராக – செயற்பட்டதன் மூலமே பெறப்பட்டதாகும்.

இப்படியாக தேசியமானது சோசலிச மாற்றங்களுடன் மிகவும் நெருக்கமாக உறவுகொண்டுள்ளதை வரலாற்றில் இனம்காண தவறக்கூடாது. அதுவும் ஒரு தீவிரமான தேசிய ஒடுக்குமுறையை முகங்கொடுக்கும் ஒரு தேசத்தினர் தேசியத்தின் முக்கியத்துவத்தை இனம்காணத் தவறக்கூடாது. இப்படியாக உலக ரீதியான அரசியல் மாற்றங்களில் உண்மையான உந்துசக்தியாக தேசியம் திகழும்போது அதனை மையப்படுத்தாத ஆய்வுகளால் நீண்ட தூரம் செல்ல முடியாது என்பதே உண்மையாகும்.

தேசம் என்ற கருத்தானது வரலாற்றுக்கு எதிராக கலகத்தை ஏற்படுத்தும் என்ற வகையில் உயர்ந்தபட்ச பொருள்முதல்வாதக் கருத்தாகும். மார்க்ஸ் நினைத்ததைவிட வரலாற்றின் யதார்த்தமானது இயங்கியல் தன்மையும், பொருட் தன்மையும் கூடியதாகும். சர்வதேசமயமாக்கல் என்பது மார்க்சிற்கு எல்லா தனித்தன்மைகளையும் ஒன்றுகலத்தல் என்று பொருள்பட்டது. ஆனால் இன்றைய யதார்த்தத்தில் தேசிய, பிராந்திய அபிலாசைகளை உயர்த்திப் பிடிப்பதானது பொருளாதார சமத்துவத்திற்கு அவசியமான தொன்றாகிறது. அடையாளத்தின் இயங்கியல் கருத்தானது (Dialectic Concept of Identity) நிச்சயமாக **வேறுபாடுகளைக் கணக்கில் கொண்டிருக்கும்.**

உற்பத்தியிலும் பரிவர்த்தனையிலும் தேசங்கள் ஒன்றுடன் ஒன்று தங்கியிருப்பதானது தேசங்களிடையே ஐக்கியத்திற்கான வழியாக இருந்தாலும், இது கலாச்சார வேறுபாடுகளுடன் இயங்கியல் முறையில் தொடர்புறாமல் சாத்தியப்படமாட்டாது. இன்றைய ஐரோப்பிய பொருளாதார சமூகத்தை (EEC) மனதிற் கொண்டால் பொருளாதார சமத்துவம் அல்லது ஐக்கியமானது தேசங்களின் கலாச்சார வேறுபாடுகளுடன் இயங்கியல் முறையில் தொடர்புபட்டுள்ளது புலனாகும். ஜேர்மனியின் வட்டி வீதமும் டென்மார்க்கின் இறைமை பற்றிய அக்கறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுவதால்தான் அவர்கள் பொருளாதார சமத்துவத்தையோ அல்லது பொருளாதார ஐக்கியத்தையோ பற்றிப் பேசக் கூடியதாக இருக்கிறது.

“மார்க்சியமும் தேசியமும்” என்னும் தலைப்பின் கீழ் தேசியம் தொடர்பாக மார்க்சியத்தின் அணுகுமுறைகள் பற்றி இத்தனை நீண்ட ஒரு விமர்சனத்தை வைக்க நேர்ந்தது மார்க்சியத்தின் மீதான நம்பிக்கையீனத்தினாலோ அல்லது வேறு ஏதாவது கோட்பாடுகள் மார்க்சியத்தைவிட தேசியத்தை சிறப்பாக மதிப்பிட்டுள்ளதோ என்பதனால் அல்ல. மாறாக, இந்த விமர்சனமானது உண்மையில் மார்க்சியத்தின் மீதானதாக அல்லாமல் மார்க்சியத்தை குறுகிய சில வறட்டுச் சூத்திரங்களாக ஆக்கும் போக்கிற்கு எதிரானதாகவே கொள்ளப்பட வேண்டும். இன்றுங்கூட உலகில் மிகவும் முன்னேறிய கோட்பாடாக திகழும் உள்ளாற்றல் மார்க்சியத்திற்கு மட்டுமே இருப்பதாகவே நான் நம்புகின்றேன்.

அந்தவகையில் தேசியமானது மார்க்சியத்தால் சரியாக புரிந்து கொள்ளப்படவோ, முறையாக கையாளப்படவோ முடியாத ஒன்றோ அல்ல. ஆனால் அப்படி செய்வதற்கு முன்பு மார்க்சியம் தனது குறுகிய சட்டங்களை உடைத்துக்கொண்டு ஒரு விஞ்ஞானமாக தன்னை மீண்டும் நிலைநாட்டிக்கொள்வது அவசியமானது.

**இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமைந்த அனைத்து சோசலிச அரசுகளும் ரஷ்ய பெருந்தேசியவாதத்தின் அடிப்படையிலேயே அமைந்தன. 1956 இல் கங்கேரியிலும், 1968 இல் செக்கோஸ்லவாக்கியாவிலும் நடைபெற்ற எழுச்சிகள் ரஷ்ய பெருந்தேசியவாதத்திற்கு எதிரானவையே. இந்த எழுச்சிகளை மொஸ்கோ சோசலிசத்தின் பேரால் நசுக்கிய போதும் அது அந்தந்த மக்களின் சுதந்திர உணர்வுக்கு எதிராகவே செயற்பட்டது.**

**தேசம் என்ற கருத்தானது வரலாற்றுக்கு எதிராக கலகத்தை ஏற்படுத்தும் என்ற வகையில் உயர்ந்தபட்ச பொருள்முதல்வாதக் கருத்தாகும்.**

சில வரட்டுச் சூத்திரங்களை திரும்பத் திரும்ப உச்சரிப்பதுடன் கற்பனையில் ஒருவித சுகம் காணும் நிலைமை உடனடியாகவே முடிவு கட்டப் படவேண்டும். இன்றைய தற்திருப்தி மனோபாவம் முடிவு கட்டப்பட்டு ஒரு புரட்சிகர கோட்பாட்டாளருக்கே அவசியமான புறநிலை யதார்த்தத்தை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் மதிப்பிடுவது, அதில் தோன்றும் புதியவை ஒவ்வொன்றையும் கூர்ந்து அவதானிப்பது, இந்த அவதானிப்புகளின் மீது கோட்பாட்டு ரீதியான உழைப்பைச் செலுத்தி இவற்றை கோட்பாட்டு மட்டத்திற்கு உயர்த்துவதில் அக்கறை என்பன வெளிப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மக்களது போராட்டங்கள் வலியுறுத்துபவற்றை கண்டுகொள்ளும் கூருணர்வு இங்கு தேவைப்படுகிறது.

[redacted]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மார்க்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம்

## – மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவினை நோக்கி ....

**ஹெய்டி காட்மன் (Heidi Hartmann)** என்பவரால் எழுதப்பட்ட "மார்க்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் : மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவினை நோக்கி . . . . ." என்ற இக் கட்டுரையானது, சோசலிசக் கண்ணோட்டத்தில் பெண்நிலைவாதக் கோட்பாட்டிற்கு ஒரு சிறந்த அறிமுகத்தைத் தருகின்றது. 'பெண்கள் பிரச்சினை' தொடர்பான பல்வேறு மார்க்சிய அணுகுமுறைகள் பற்றியும் அவ்வாறே தீவிரப் பெண்நிலைவாதிகளின் அணுகுமுறைகள் பற்றியும் இக் கட்டுரை மீளாய்வு செய்கிறது.

பெண்நிலைவாதிகளின் இலக்குகள் குறித்து ஆய்வு செய்வதற்கு மார்க்சிய முறையியல் இக் கட்டுரையில் எடுத்தாளப்படுகிறது. சமூகமானது முதலாளித்துவ முறைமை, ஆணாதிக்க முறைமை ஆகிய இரு வழிகளிலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதை இனம்கண்டால் மட்டுமே அச் சமூகத்தை மிகவும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும் என இக் கட்டுரை வாதிடுகின்றது.

மார்க்சிய ஆய்வு முறையானது வரலாறு, பொருளாதாரம் என்பவற்றுடன் தொடர்புடைய விதிகளினூடாக ஒரு விளக்கத்தை முன்வைக்கும் அதேவேளை, பால்வாதத்தினதும் பெண்ஒடுக்குமுறையினதும் இயக்கப் போக்கைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகின்றது. இவ் விடயத்தைப் பொறுத்தவரையில் மார்க்சியம் 'பால்–குருட்டுத்தன்மை' (Sex-blind) குறைபாட்டைக் கொண்டதாக உள்ளது. என்றாலும் வரலாறு குறித்தும், பொருள்முதல்வாத அணுகுமுறை நோக்கிலும் குருட்டுத்தனம் கொண்டதாக உள்ள பெண்நிலைவாத ஆய்வுகள் எதுவும் எமக்கு விரிவான தூரதிருஷ்டியான விளக்கத்தைத் தரப்போவதில்லை. எனவே இப்போது செய்யவேண்டியிருப்பது யாதெனில், இயக்கத்தின் பொருளாதார விதிகளைப் புரிந்துகொள்வதில் உள்ள மார்க்சிய ஆய்வின் பலத்தை பயன்படுத்துவதுடன் பெண்களின் குறிப்பான ஒடுக்குமுறையைப் புரிந்துகொள்வதில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ள பெண்நிலைவாத ஆய்வுகளுடன் பயனுள்ள முறையில் இணைப்பதுமேயாகும்.

இத்தகைய சோசலிச பெண்நிலைவாத அணுகுமுறையானது பாலினம் (sex), வர்க்கம் (Class) என்பவற்றிற்கு இடையிலான உறவுநிலை பற்றிய அறிவுபூர்வமான புரிதலை வளர்த்துக்கொள்ள வழியமைத்துக் கொடுக்கின்றது. அரசியல் நடவடிக்கையில் காட்டப்பட வேண்டிய சமத்துவ நிலையின் முக்கியத்துவத்தையும் இக் கட்டுரை கோடிட்டுக் காட்டுகின்றது: இதன் பொருள், தேசிய விடுதலை, வர்க்க, சாதிய போராட்டங்கள் மற்றும் சமூகப் புரட்சி என்பவற்றுடன் அதேயளவு முக்கியத்துவம் கொண்டதாக பெண்விடுதலை தொடர்புடைய அம்சங்களையும் இணைக்கும் வகையில் செயற்திட்டங்களை வகுத்து அவற்றை வளர்த்தெடுத்து பயன்படுத்த வேண்டும் என்பதாகும்.

**– ஆசிரியர் குழு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான 'இணைப்பு' என்பது ஆங்கில பொதுச் சட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் கணவன் மனைவி திருமணம் போன்றதாகும். அதாவது மார்க்சியம், பெண்நிலைவாதம் இரண்டும் ஒன்றேதான். ஆனால் அந்த ஒன்று என்பது மார்க்சியமேயாகும். மார்க்சியத்தையும் பெண்நிலைவாதத்தையும் இணைக்கும் சமீப கால முயற்சிகள் எமக்கு அதிருப்தி தருவனவாக இருக்கின்றன. ஏனெனில் பெண் நிலைவாதப் போராட்டத்தை முதலாளித்துவத்திற்கு எதிரான பெரிய போராட்டத்திற்குள் உட்படுத்துவனவாக இம் முயற்சிகள் இருக்கின்றன. இங்கு நாம் பயன்படுத்திய உவமையைத் தொடர்ந்து பயன்படுத்துவதாயின், திருமணம் என்ற ஆரோக்கியமான திருமணம் ஒன்று எமக்குத் தேவையாக உள்ளது. அல்லது எமக்கு ஒரு விவாகரத்தே அவசியமாகிறது என்று கூறலாம்.

பெரும்பாலான சமூக அம்சங்களைப் போலவே இத் 'திருமணத்தில்' காணப்படும் அசமத்துவங்கள் தற்செயலானவை அல்ல. பல மார்க்சியவாதிகள் பெண்நிலை வாதமானது வர்க்க முரண்பாட்டை விடவும் முக்கியமற்றதெனவும், அதன் மோசமான நிலையில் தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்துவது எனவும் வாதிடுவர். இத்தகைய அரசியல் நிலைப்பாடானது பெண்நிலைவாதத்தை வர்க்கப் போராட்டத்துள் ஆட்படுத்தும் ஒரு பகுப்பாய்விற்கு இட்டுச் செல்கின்றது. மூலதனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மார்க்சியத்தின் ஆய்வுத் திறனானது பால்வாதம் பற்றிய அதன் வரையறைகளைத் தெளிவற்றதாக்கியுள்ளது. மார்க்சிய ஆய்வானது வரலாற்று வளர்ச்சியின் விதிகள் குறித்து –சிறப்பாக மூலதனம் குறித்து– மிக அத்தியாவசியமான ஆழ்ந்த விடயங்களை (Insight) வழங்கியுள்ள போதிலும், அதனுடைய வகையினங்களானவை (Categories) பால்–குருட்டுத் தன்மை (Sex-blind) கொண்டனவாகவே உள்ளன என இங்கு நாம் வாதிடுகின்றோம். குறிப்பான பெண்நிலைவாத ஆய்வுமுறை மட்டுமே ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான உறவுகள் முறைப்படி ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள தன்மைகளை வெளிப்படுத்தும். எனினும் பெண்நிலைவாத ஆய்வை மாத்திரம் மேற்கொள்வதும் குறைபாடானதாகும். ஏனெனில் அது வரலாற்றுக் குருட்டுத்தனம் கொண்டதாகவும் போதுமான அளவு பொருள்முதல்வாத முறைமை அற்றதாகவும் உள்ளது. மார்க்சிய ஆய்வும் குறிப்பாக அதன் வரலாற்றுப் பொருள்முதல்வாத முறையியலும், பெண்நிலைவாத ஆய்வும் குறிப்பாக ஆணாதிக்க முறைமையை (Patriarchy)1* வரலாறு, சமூக அமைப்பாக இனம்காணும் முறையும் ஆகிய இரண்டும் இணைக்கப்படும் போதே மேற்கு முதலாளித்துவ சமூகங்களின் வளர்ச்சி பற்றியும், அச் சமூகங்களில் பெண்களுக்குள்ள சிக்கலான நிலைமை பற்றியும் விளங்கிக்கொள்ள முடியும். மார்க்சிய பெண்நிலைவாத ஆய்வில் ஒரு புதிய திசையை இக் கட்டுரையில் முன்வைக்கின்றோம்.

இக் கட்டுரையில் முதலாவது பகுதி "பெண்கள் பிரச்சினை" குறித்த பல மார்க்சிய அணுகுமுறைகளைப் பரிசீலிக்கிறது. இரண்டாவது பகுதியில் தீவிரவாதப் பெண்நிலைவாதிகளின் கருத்துக்களை ஆராய்கின்றோம். இக் கருத்துக்களில் ஆணாதிக்க முறைமை குறித்த வரைவிலக்கணங்களிலுள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிய பிறகு எமது கருத்துக்களை முன்வைக்கின்றோம். மூன்றாவது பகுதியில் மார்க்சியம், பெண்நிலைவாதம் ஆகிய தத்துவங்களிலுள்ள வலுவான கோட்பாடுகளைப் பயன்படுத்தி முதலாளித்துவ சமூகங்களின் வளர்ச்சி பற்றியும் பெண்களது தற்போதைய நிலை பற்றியும் சில கருத்துக்களைக் கூறுகின்றோம். மார்க்சிய முறையியலைப் பயன்படுத்தி சோசலிச பெண்நிலைவாத ஆய்வுகளில் காணப்படும் சமச்சீரற்ற நிலைமையை திருத்தி, சமீபகால சமூக, பொருளாதார உருவாக்கம் பற்றிய ஆய்வுகளை வெளிப்படுத்தி, பெண்நிலைவாத குறிக்கோள்களை பகுத்தாய முயல்கின்றோம். ஆணாதிக்க முறைமை என்பது வெறுமனே ஓர் உளவியல் அம்சம் மாத்திரமல்ல, மாறாக அது சமூக, அரசியல் அமைப்பும்கூட என பொருள் முதல்வாத ஆய்வு விபரிக்கிறது என்றும் நாம் வாதிடுகின்றோம். எமது சமூகமானது முதலாளித்துவ அடிப்படையிலும், ஆணாதிக்க முறைமை அடிப்படையிலும் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது என்பதை இனம்காணும் போதுதான் எமது சமூகத்தை நாம் நன்கு விளங்கிக்கொள்ள இயலும். முதலாளித்துவ நலன்களுக்கும், ஆணாதிக்க நலன்களுக்கும் இடையே முறுகல் (Tension) உள்ள அதேவேளை மூலதனக் குவிவானது ஆணாதிக்க முறைமையை ஏற்றுக்கொள்வது மாத்திரமின்றி அது நீடித்து நிலைக்கவும் உதவுகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பால்வாத சித்தாந்தமானது முதலாளித்துவ வடிவத்தை தற்காலத்தில் பெற்றுக் கொண்டுள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றோம். சுருக்கமாகக் கூறுவதாயின் முதலாளித்துவத் திற்கும் ஆணாதிக்கத்திற்கும் இடையே ஓர் இணைப்பு வளர்ந்துள்ளது.

இறுதியாக நான்காவது பகுதியில், பெண்களின் பிரச்சினைகளை இடதுசாரிகள் விளங்கிக் கொள்வதில் பெண்நிலைவாதம் என்பதையும் விட மார்க்சியத்திற்கே முதன்மை அளிப்பதற்கு மார்க்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான அரசியல் உறவுகளின் சமனற்ற தன்மைகளே காரணமாகிறது என வாதிடுகின்றோம். எனவே மார்க்சியம், பெண்நிலைவாதம் என்பவற்றின் முற்போக்கான, திருப்திகரமான இணைப்பிற்கு வர்க்கம், பால் ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகளை திருத்திய ஆய்வு முறையில் விளங்கிக் கொள்வது மாத்திரமன்றி, இடதுசாரி அரசியலில் ஆதிக்க குணாம்சத்திற்குப் பதிலான கூட்டுறவும் தேவை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

## 1) மார்க்சியமும் 'பெண்கள் பிரச்சனையும்'

'பெண்கள் பிரச்சனையானது' பெண்நிலை வாதப் பிரச்சனையாக என்றும் இருந்ததில்லை. பெண்நிலைவாதப் பிரச்சனையானது (Feminist Question) ஆண், பெண்ணுக்கு இடையிலான பால் அசமத்துவம் குறித்தும், ஆண் மேலாதிக்கம் குறித்தும் அதிக அக்கறை செலுத்துகிறது. ஆனால் பெரும்பாலான மார்க்சிய ஆய்வுகள் பெண்களின் பிரச்சினையை ஆண்களுடன் தொடர்பான பெண்களின் பிரச்சினையாகப் பார்ப்பதைவிட பொருளாதார அமைப்புக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவாகவே நோக்குகின்றன. பெண்கள் பற்றிய மார்க்சிய ஆய்வானது மூன்று முக்கிய வடிவங்களைப் பெற்றுள்ளது. பெண் ஒடுக்குமுறையை உற்பத்திக்கும் பெண்களுக்கும் இடையிலான தொடர்பில் தங்கியிருப்பதாய்க் கருதுகின்றன. பெண்களை தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாக வரையறை செய்யும் இத்தகைய ஆய்வுமுறை, மூலதனத்திற்கும் தொழிலாளருக்கும் இடையிலான உறவுக்குள் ஆண்–பெண்ணுக்கிடையிலான உறவைக் கீழ்ப்படுத்தி விடுகின்றன.

முதலில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், கோட்ஸ்கி, லெனின் உட்பட ஆரம்பகால மார்க்சிய வாதிகள், முதலாளித்துவமானது சகல பெண்களையும் கூலி உழைப்பாளர் படையில் சேர்க்கிறது எனவும், இவ்வாறு சேரும் நிகழ்வுப் போக்கில் பால் அடிப்படையில் அமைந்த வேலைப் பிரிவினை ஒழிந்துவிடும் எனவும் கருதினர். இரண்டாவதாக சமகால மார்க்சிய வாதிகள் முதலாளித்துவத்தில் நாளாந்த வாழ்க்கை பற்றிய ஆய்வுக்குள் பெண்கள் பற்றிய அக்கறையையும் இணைத்துள்ளனர். இத்தகைய ஒரு நோக்கில் எமது வாழ்வின் சகல அம்சங்களும் முதலாளித்துவ முறைமையை மீள் உருவாக்கம் செய்வதாகவும் நாம் அனைவரும் இம் முறைமையின் தொழிலாளராகவும் கொள்ளப்படுகின்றோம். மூன்றாவதாக மார்க்சிய பெண்நிலைவாதிகள் வீட்டு வேலை பற்றியும், அதற்கும் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றியும், அதிக அக்கறை காட்டுகின்றனர். வீட்டு வேலை உபரியை உற்பத்தி செய்கிறது எனவும், வீட்டுவேலையில் ஈடுபடுவோர் முதலாளிகளுக்காக உழைப்பதாகவும் சிலர் வாதிடுகின்றனர். இம் மூன்று அணுகுமுறைகள் குறித்தும் நாம் பரிசீலிப்போம்.

ஏங்கெல்ஸ், 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற தமது நூலில், பெண்களது தாழ்த்தப்பட்ட நிலைமையை தனிச்

குறிப்பு-1*– Patriarchy

பொதுவாக இப் பதம் 'தந்தை வழி' சமூகம், 'ஆணாதிக்க' சமூகம் என இரண்டு விதமாகவும் மொழிபெயர்க்கப்படுகிறது. நாம் இங்கு ஆணாதிக்கம் என்ற பதத்தையே பாவிக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொத்துடைமையின் விளைவாகக் காட்டினார். பூர்சுவாக குடும்பங்களில் பெண்கள் தமது எஜமானர்களுக்கு சேவகம் செய்து, ஒரு புருச மண ஒழுக்கத்தைப் பேணி, குடும்பத்தின் சொத்துக்களை தொடர்ந்தும் · பெருக்கும் வாரிசுகளைப் பெறவும் வேண்டியவர்களானார்கள். ஆனால் தொழிலாளி வர்க்கக் குடும்பங்களில் தனிச் சொத்துடைமை இன்மையால் பெண்கள் ஒடுக்கப்படவில்லை என வாதிட்டார். கூலி உழைப்பின் விருத்தியானது சிறு நிலவுடைமை விவசாயிகளை இல்லாதொழித்து, பெண்களையும், பிள்ளைகளையும் கூலித் தொழிலாளர் பட்டாளத்தில் ஆண்களுடன் சேர்த்துக் கொண்டது. இது குடும்பத் தலைவனாகிய ஆணினது அதிகாரத்தைக் குறைத்து ஆணாதிக்கமுறை உறவுகளையும் ஒழித்துவிட்டது என ஏங்கல்ஸ், மேலும் கூறினார்.

எனவே ஏங்கல்சின் கருத்துப்படி பெண்கள் தொழிலாளர்களாக மாறுவது அவர்களது விடுதலையின் திறவுகோலாகும். முதலாளித்துவம் பால் வேறுபாடுகளை ஒழித்து சகல தொழிலாளர்களையும் சமமாக நடாத்தும் என்பதாகிறது. பெண்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரமானவர்களாக மாறுவர், தொழிலாளர் புரட்சியை ஏற்படுத்துவதில் ஆண்களுடன் அவர்களும் சரிநிகராகப் பங்குகொள்வர் எனவும் ஏங்கல்ஸ் கூறினார். புரட்சிக்குப் பின்னர் சகல மனிதரும் தொழிலாளர்களாக இருப்பர், தனிச்சொத்துடைமை ஒழிந்து விடும். பெண்கள், மூலதனம், ஆண்கள் ஆகிய இரண்டிலிருந்தும் சுதந்திரம் பெறுவர் என்றும் கூறினார். பெண்கள் தொழிலாளராக மாறுவதால் அவர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஏற்படும் கஸ்டங்கள் பற்றியும் மார்க்சியவாதிகள் உணர்ந்திருந்தனர். இதனால் பெண்கள் இரு வேலைகளையும், – வீட்டு வேலையையும், கூலி உழைப்பையும்– ஒருசேர மேற்கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றனர். எனினும் பெண்கள் தொடர்ந்தும் தாழ்த்தப்பட்ட நிலையில் வீட்டில் வைக்கப் படுவது குறித்து கூடிய அக்கறை காட்டாமல் ஆணாதிக்க முறைமை உறவுகளில் 'உடைவு' ஏற்படச் செய்யும் முதலாளித்துவத்தின் முற்போக்கு குணாம்சத்திற்கே மார்க்சிய வாதிகள் முக்கியத்துவம் அளித்தனர். சோசலிச சமூக முறைமையின் கீழ் வீட்டுவேலைகள் அனைத்தும் கூட்டுழைப்பாக மாறும், பெண்கள் தமது இரட்டைச் சுமையிலிருந்து விடுபடுவர் எனவும் இவர்கள் கருதினர்.

இத்தகைய முதலாவது மார்க்சிய அணுகு முறையின் அரசியல் தாற்பரியம் மிகத் தெளிவானது. முதலாவதாக, ஆண்களைப் போல பெண்களும் கூலித் தொழிலாளராக உருவாவதும் இரண்டாவதாக முதலாளித்துவத்திற்கு எதிரான புரட்சிகர போராட்டத்தில் ஆண்களுடன் இணைந்து கொள்வதும் பெண் விடுதலைக்கான தேவைகள் என்ற கருத்து இதுவாகும். பொதுவாக தொழிலாளர் மீதான சுரண்டலுக்கு மூலதனம் காரணமாயிருப்பது போல பெண்கள் மீதான விசேடமான ஒடுக்கு முறைக்கு மூலதனமும் தனிச்சொத்துடைமையும் காரணமாயுள்ளன என ஆரம்பகால மார்க்சியவாதிகள் வாதிட்டனர்.

தமது காலத்தில் பெண்களுடைய மோசமான நிலை குறித்து உணர்ந்திருந்தபோதும் ஆரம்பகால மார்க்சியவாதிகள் முதலாளித்துவத்தின் கீழ் ஆண், பெண்ணுடைய அனுபவ வேறுபாடுகள் குறித்து கருத்துச் செலுத்தத் தவறிவிட்டனர். எப்படி, எவ்வழியில் பெண்கள், பெண்கள் என்ற வகையில் ஒடுக்கப்படுகின்றனர் என்ற பெண்நிலைவாத வினாவை எழுப்பத் தவறிவிட்டனர். பெண்கள் தொடர்ந்தும் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பதில் ஆண்களுக்கு நிலையான நலன்கள் உள்ளமை பற்றியும் உணரத் தவறிவிட்டனர். பின்னால் வரும் மூன்றாவது பகுதியில் நாம் கூறுவது போல ஆண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடாமல் இருப்பது, ஆண்களுக்காக அவர்களது மனைவியர் அல்லது புதல்வியர் சேவை செய்வது, அவர்களுக்கு உழைப்புச் சந்தையில் சிறந்த இடங்களைப் பெறுவது போன்ற நன்மைகளை ஆண்கள் பெறுகின்றனர். ஆணாதிக்க உறவுகள் காலத்திற்கு ஒவ்வாதவையாக முதலாளித்துவ காலகட்டத்தில் ஆகிவிடும் என ஆரம்பகால மார்க்சிவாதிகள் குறிப்பிட்டது போலன்றி, அவை தொடர்ந்திருப்பது மட்டுமல்லாமல் மூலதனத்துடன் இணைந்தும் செயற்பட்டன. மூலதனமும் தனிச் சொத்துடைமையும் மாத்திரம் பெண்கள், பெண்கள் என்ற வகையில் ஒடுக்கப்படுவதற்கு காரணமாகாததால் அவற்றின் அழிவு மாத்திரம் பெண்ணொடுக்கு முறை ஒழிவதற்குக் காரணமாகிவிடாது.

தற்போது பிரபலமாகியுள்ள 2வது மார்க்சிய அணுகுமுறையானது, 'எலிஷரட்ஸ்கி' (Eli Zaretsky) யின் 'சோசலிசப் புரட்சி' என்ற சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரைத் தொடரில் காணப்படும் கருத்தோட்டமாகும். பெண்நிலைவாத ஆய்வுகளுடன் ஒத்துப்போகும் அதே நேரம், பால்வாதம் (Sexism) என்பது முதலாளித்துவத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு புது அம்சம் அல்ல என்றும், மாறாக பால்வாதம் தற்போது மேற்கொண்டுள்ள குறிப்பான வடிவமானது முதலாளித்துவத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறுகிறார். முதலாளித்துவத்தின் கீழ் ஆண், பெண் அனுபவ வேறுபாடுகள் குறித்து 'ஷரட்ஸ்கி' முனைப்பான அக்கறை காட்டுகின்றார். முதலாளித்துவம் ஆண்களுடன் சமத்துவமான நிலையில் பெண்களை தொழிலாளர் படையில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றும் கூறுகின்றார். மாறாக முதலாளித்துவமானது வீடு, குடும்பம் தனிப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றிற் கிடையேயான வேறுபாடுகளை இன்னோர் பக்கத்திலும் ஏற்படுத்தியுள்ளது.

வீட்டு வேலை, கூலி உழைப்பு ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்ட பிரிவினை காரணமாக பால்வாதம் முதலாளித்துவத்தின் கீழ் மேலும் உக்கிரமானதாக மாறியுள்ளது. கூலி உழைப்பிலிருந்து பெண்களை விலக்கி வைத்திருத்தல் பெண்களது ஒடுக்குமுறைக்கு காரணமாகியுள்ளது. ஆண்கள் கூலி உழைப்பில் ஈடுபடுவதால் ஒடுக்கப்படுகின்றனர். ஆனால் பெண்களோ அவ்வாறு ஈடுபட அனுமதிக்கப்படாததால் ஒடுக்கப்படுகின்றனர் என ஷரட்ஸ்கி வாதிட்டார். கூலி உழைப்பில் இருந்து பெண்களை முதலாளித்துவமே விலக்கி வைக்கின்றது. ஏனெனில் முதலாளித்துவம் வீட்டுக்கு வெளியே கூலி உழைப்பை உண்டாக்குகிறது. முதலாளித்துவ அமைப்பிற்காக கூலி உழைப்பாளர்களை உருவாக்க வேண்டிய தேவை இருப்பதால் பெண்கள் வீட்டில் வேலை செய்துகொண்டு கூலி உழைப்பாளரை மறுஉற்பத்தி செய்யும் நிலை முதலாளித்துவத்திற்கு அவசியமாகின்றது. பெண்கள் கூலி உழைப்பாளர் படையை மறுஉற்பத்தி செய்கின்றனர். அவர்கட்கு உளவியல் கவனிப்பை அளிக்கின்றனர். அந்நியமாதல் நிலவும் நிலையில் பெண்கள் ஓர் அந்நியோன்யமான சூழ்நிலையையும் ஏற்படுத்துகின்றனர்.

ஷரட்ஸ்கியின் கருத்துப்படி மூலதனத்தின் குவிவுக்காகத்தான் பெண்கள் உழைக்கின்றனரேயன்றி ஆண்களுக்காக அல்ல. வீடு, வேலைத்தளம் என்ற பிரிவினை, வீட்டுவேலை தனியார் பொறுப்பானது போன்றவை முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்டிருக்கும். பெண்கள் வீட்டில் தனிப்பட்ட ஆண்களுக்காக வேலை செய்கின்றனர் * போன்ற 'தோற்றத்திற்கும்' பெண்கள் மூலதனத்திற்காகவே வேலை செய்யும் யதார்த்தத்திற்கும் உள்ள வேறுபாடே பெண்கள் இயக்கத்தின் சக்தியை பிழையான வழியில் செலுத்தியது. வீட்டில் வேலைசெய்த போதிலும் தாம் தொழிலாளவர்க்கத்தின் ஒரு பகுதியினரே என்பதை பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஷரட்ஸ்கியின் கருத்துப்படி, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகத்தின் இரு தொழிலாளர்களாக 'மனைவி' யும் தொழிலாளியும் தோற்றம் பெற்றுள்ளனர். அவர்களது வாழ்க்கையின் கூறுபட்ட நிலையானது தொழிலாளிக் கணவனையும் வீட்டை பாராமரிக்கும் மனைவியையும் ஒருசேர ஒடுக்குகிறது. வீட்டு உழைப்பு, ஏனைய சமூக ரீதியில் அத்தியாவசியமான வேலைகள் யாவற்றையும் உள்ளடக்கும் வகையான 'உற்பத்தி' பற்றிய ஒரு மறுகருத்தாக்கமே இத்தகைய ஓர் அழிவுகரமான பிரிவினை இல்லாதிருக்கக் கூடிய சமூகம் ஒன்றை நிறுவுவதற்கான போராட்டத்தை முன்னெடுக்க சோசலிசவாதிகளுக்கு உதவும். ஷரட்ஸ்கியின் கருத்துப்படி ஆண்களும், பெண்களும் ஒன்று சேர்ந்தோ (அல்லது வேறாகவோ) தமது வாழ்வின் பிரிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் ஒன்று சேர்க்கப் போராட வேண்டும். தனிப்பட்ட, பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய மனிதாய ரீதியான சோசலிசத்தை நிறுவ இது உதவும். தமது பிரச்சினையின் மூலவேர் முதலாளித்துவமே என்பதை உணரும்போது தான் அவர்கள் ஒருவருக்கு எதிராக ஒருவர் போரிடாமல் மூலதனத்திற்கு எதிராகப் போரிடுவர். முதலாளித்துவமே எமது தனிப்பட்ட, பொதுவாழ்வுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துவதால், முதலாளித்துவத்தின் முடிவானது இந்த பிரிவினையையும் முடிவுறச் செய்யும்,

* என்ற தோற்றத்தை மேற்கூறிய விடயங்களே உருவாக்கியுள்ளன. பெண்கள் ஆண்களுக்காக வேலை செய்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழக்கையை மீண்டும் ஒருமையுறச் செய்து பெண்களுக்கும், ஆண்களுக்கும் எதிரான ஒடுக்குமுறையை முடிவுக்கு கொண்டு வரும்.

ஷரட்ஸ்கியின் ஆய்வு பெண்நிலைவாதத்திற்கு கடப்பாடுடையதாக இருப்பினும், இறுதியில் இந்த இயக்கத்தின் குறுக்கத்திற்கு இட்டுச் செல்வதாகவே அவ்வாதம் அமைந்துள்ளது. பால்வாதம் முதலாளித்துவத்திற்கு முற்பட்டது என்ற பெண்நிலைவாதக் கருத்தை அவர் ஏற்றுக்கொள்கின்றார். மார்க்சியப் பெண்நிலைவாத ஆய்வுகளில் பெரும்பாலானவற்றை – மூலதனத்தின் மறுஉற்பத்திக்கு வீட்டுவேலையின் அவசியத்தை – ஒப்புக்கொண்டுள்ளார், வீட்டுவேலை கடினமானது எனவும் ஏற்றுக் கொண்டுள்ளார். பால்வாதம், ஆணாதிக்கம் போன்ற கருத்தாக்கங்களையும் பயன்படுத்துகின்றார், ஆனால் அவரது ஆய்வு இறுதியில் பிரிவினை எனும் கருத்திலேயே தங்கியுள்ளது. இதுவே பிரச்சினையின் மையம் என அவர் கருதுகின்றார். இது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட "ஒன்றுக்கொன்று உறுதுணை புரியும் பகுதிகள்" கருத்தோட்டத்தைப் போன்றது. அதாவது ஆண்களதும் பெண்களதும் உலகங்கள் வெவ்வேறானவை, ஆனால் ஒன்றுக்கொன்று உறுதுணையானவை. சம முக்கியமானவை என்பதே இக் கருத்தோட்டமாகும்.

பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையே நிலவும் அசமத்துவத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் ஷரட்ஸ்கி நிராகரிக்கின்றார். பெண்கள், குடும்பம், மற்றும் அந்த பிரத்தியேக உலகு என்பவற்றிக்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான உறவு குறித்தே அவரது அக்கறை அமைந்தது. அவர் விவாதிப்பது போல முதலாளித்துவமே தனிப்பட்ட விடயமாக ஒன்றாக வீடுசார்ந்த வாழ்க்கையை உருவாக்கியிருப்பினும் கூட பெண்கள் அதில் வேலை செய்யவேண்டும் என்பதும், ஆண்கள் கூலியுழைப்பில் ஈடுபடுவதென்பதும் எங்கனம் நேர்ந்தது? பெண்களின் மீது ஒழுங்கு முறைப்படி அமைந்த ஆண்களின் மேலாதிக்கம் என்ற ஆணாதிக்க முறையுடன் தொடர்புபடுத்தாமல் நாம் இதனை விளக்கமுடியாது. எமது கருத்துப்படி குடும்பம், உழைப்புச் சந்தை, பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றில் காணப்படும் பிரச்சினையானது, பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான வெறும் வேலைப் பிரிவினை அல்ல. மாறாக ஆண்களை உயர்வாகவும் பெண்களை கீழ்ப்பட்ட நிலையிலும் வைக்கும் ஒரு பிரிவினையில் தங்கியுள்ளது.

ஏங்கல்ஸ், தனிச்சொத்துடைமையை பெண்களின் ஒடுக்குமுறைக்கான காரணமாக கூறியது போல ஷரட்ஸ்கி, பெண்கள் தனிப்பட்ட வீடுகளில் உழைப்பதே அவர்களது ஒடுக்குமுறைக்குக் காரணம் எனக் கருதுகின்றார். ஏங்கெல்ஸும், ஷரட்ஸ்கியும் கைத்தொழில் காலகட்டத்திற்கு முற்பட்ட குடும்பத்தை சிறந்ததாக கருதினர். ஆண், பெண், முதியோர், இளையோர் யாவரும் ஒருங்கே குடும்பத்தை மையமாகக் கொண்டு தொழில் செய்து சமூக வாழ்வில் அனைவரும் பங்குகொண்டனர் என இவர்கள் கூறினர். ஷரட்ஸ்கியின் மனிதாய சோசலிசம் குடும்பத்தை மீள ஒழுங்குபடுத்தி 'மகிழ்ச்சிகரமான வேலைப் பட்டறையை' மீள்உருவாக்கம் செய்யும்.

ஆண்கள், பெண்கள் இருதரப்பாரதும் நலன்கள் சோசலிசத்தில் இருக்கிறது என நாம் வாதிடும்போதே, நாம் அனைவரும் ஒரேவிதமான மனிதாய சோசலிசத்திற்காக போராடுகின்றோமா? அல்லது அதனை அடைவதற்கு தேவைப்படும் போராட்டம் குறித்து நாம் அனைவருமே ஒரேவிதமான கருத்தாக்கத்தை கொண்டுள்ளோமா? மூலதனம் மட்டும் தான் இன்றைய ஒடுக்குமுறைக்கு காரணமாக உள்ளது, போன்ற அம்சங்கள் இங்கு தெளிவாக இல்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றோம். பெண்களின் உழைப்பு ஆண்களுக்காக என்று தென்படுகின்ற போதிலும் உண்மையில் அது மூலதனத்திற்காக என்று அவர் கருதுகின்றார். ஆனால் நாம், குடும்பத்தில் பெண்களது உழைப்பு ஆண்களுக்காகவே – அது முதலாளித்துவத்தை மீள் உருவாக்கம் செய்தபோதிலும் – என்று கருதுகின்றோம். உற்பத்தி பற்றிய மீள்கருத்தாக்கம் நாம் உருவாக்க விரும்பும் சமூகம் பற்றிச் சிந்திக்க எமக்கு உதவும். அவ்வாறு உருவாக்குவதற்கு மூலதனத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இணையாகவே ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கக் கூடிய போராட்டங்களும் தொடர வேண்டும்.

பெண்களது வீட்டு வேலை பற்றிய ஆய்வு செய்த மார்க்சிய பெண்நிலை வாதிகளும் பெண்நிலைவாதப் போராட்டத்தை மூலதனத்திற்கு எதிரான போராட்டத்திற்கு கீழ்ப்படுத்தியே நோக்கியுள்ளனர். 'மரியா ரோஸா டலா கொஸ்டா' (Maria Rosa Dolla Costa) வினுடைய வீட்டு வேலை பற்றிய தத்துவார்த்த ஆய்வானது அடிப்படையில் வீட்டு வேலைக்கும் மூலதனத்திற்கும் இடையிலான உறவு பற்றிய ஆய்வாக அமைந்ததே தவிர, ஆண் பெண்ணுக்கிடையிலான உறவு பற்றியதாக இல்லை. எனினும் வீட்டு வேலைக்கு வேதனம் வழங்கப்பட வேண்டும் என்ற இவரது அரசியல் நிலைப்பாடானது பெண்கள் இயக்கங்களிடையே வீட்டு வேலையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்துள்ளது. இக் கோரிக்கை இன்றும் கூட அமெரிக்க பெண்கள் குழுக்களிடையே பலத்த விவாதத்திற்கு இடமளிக்கிறது. பெண்கள் வீட்டிலிருந்து கொண்டு மூலதனத்திற்கு அவசியமான சேவைகளில், உழைப்பாளர் படையை மறுஉற்பத்தி செய்வதில் ஈடுபடுவது மட்டுமன்றி, வீட்டு வேலையின் மூலம் உபரியையும் உருவாக்குகின்றனர் என டலா கொஸ்டா வாதிட்டமை வீட்டுவேலை பற்றிய இடதுசாரிகளின் உணர்வை அதிகரித்ததுடன் அதற்கும் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றிய நீண்ட விவாதத்திற்கு தூண்டுகோலானது.

டலா கொஸ்டா, வீட்டு வேலை பற்றிய பெண்நிலைவாத விளக்கத்தைப் பயன்படுத்தி வீட்டுவேலை முதலாளித்துவத்தின் கீழ் உண்மையான வேலை என அங்கீகாரம் பெறவேண்டும் என்றும், அது வேதனம் பெறும் உழைப்பாக இருக்க வேண்டும் என்றும் விவாதித்தார். பாரம்பரியமான வேலைப்படையில் பெண்கள் நிர்ப்பந்தமாக சேர்க்கப்பட்டு 'இரட்டை நாள்' (Double day) வேலை செய்யவும், மூலதனத்திற்கான கூலி உழைப்பையும், கூலியற்ற உழைப்பையும் கொடுக்கவும் அனுமதியாமல் வீட்டு உழைப்புக்கு வேதனம் கோரவேண்டும் எனவும் அவர் கூறினார். வீட்டுவேலைக்கு வேதனம் பெறும் பெண்கள் தமது சொந்த வீட்டு வேலைகளை – உணவு தயாரிப்பது, குழந்தை வளர்ப்பது போன்ற – திறமையாகவும் கூட்டு அடிப்படையிலும் ஒழுங்கமைப்பார்கள் என்று அவர் கருதுகின்றார். வேதனத்திற்கான கோரிக்கையும் வேதனம் பெறுவதும் அவர்களின் வேலையின் முக்கியத்துவம் பற்றிய உணர்வை அதிகரிக்கும். அதன் சமூகப் பெறுமதியையும், தனிப்பட்ட அத்தியாவசியத்தையும் நோக்குவதற்கு வழிசமைக்கும் என்றார்.

வீட்டுவேலையின் சமூக முக்கியத்துவமானது மூலதனத்திற்கு அது அத்தியாவசியமாயிருப்பதில் தங்கியுள்ளது. வீட்டுழைப்பிற்காக கூலி கேட்பதன் மூலமும் உழைப்புச் சந்தையில் பங்கெடுக்க மறுப்பதன் மூலமும் பெண்கள் மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கலாம். பெண்களது சமூக அளவிலான இயக்கங்கள் – நிறுவனங்கள் என்பன மூலதனத்திற்கு எதிரானவை மாத்திரமன்றி புதிய சமூக உருவாக்கத்திற்கான அடிப்படையையும் இடமுடியும்.

பெண்களது விடுதலைக்கு எதிராக ஆண்கள் செயற்படுவர். இதனை எதிர்கொண்டு பெண்கள் போராடவேண்டும். ஆனால் இறுதி இலட்சியமான சோசலிசத்தை நிலைநாட்டுவதற்கு உட்பட்டதாக இப் போராட்டம் நடாத்தப்பட வேண்டும் என்றார் டலா கொஸ்டா. பெண்களது போராட்டம் அதன் பெண்நிலைவாத நிலைப்பாட்டுக்காக அன்றி அது முதலாளித்துவத்திற்கு எதிரானதாக உள்ளதாலேயே புரட்சிகர தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது என டலா கொஸ்டா கருதினார். பெண்கள் உபரி மதிப்பின் உற்பத்தியாளராகவும் அதன் விளைவாக தொழிலாள வர்க்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதாகவும் கருதியே புரட்சியில் ஒரு இடத்தை அவர்களுக்கு டலா கொஸ்டா அளித்தார். பெண்களது அரசியல் செயற்பாட்டை இந்த அம்சமே நியாயப்படுத்துகிறது.

பெண்கள் இயக்கமானது என்றுமே பெண்கள் போராட்டத்தின் முக்கியத்துவத்தை சந்தேகித்ததில்லை. ஏனெனில் பெண்நிலைவாத குறிக்கோள் பெண்களின் விடுதலையாகும். இது பெண்கள் போராட்டத்தினால் மட்டுமே அடையப்படக் கூடியதாகும். டலா கொஸ்டாவின் பங்களிப்பு வீட்டுவேலையின் சமூக இயல்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிய விளக்கத்தில் ஒரு முன்னேற்றம் தான். ஆனால் இங்கு விமர்சிக்கப்பட்ட ஏனைய மார்க்சிய அணுகுமுறைகள் போல இதுவும் ஆண், பெண் உறவுபற்றி அல்லாமல் மூலதனம் பற்றி அக்கறை காட்டுகிறது. முதலாளித்துவ முறைமை எவ்வாறு யாவரையும் தன்னகப் படுத்தி வைத்துள்ளது என்பது பற்றிய அவரது ஆய்வு முறையானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் நலன்கள், குறிக்கோள், வழிமுறைகள் ஆகியவற்றிடையேயுள்ள வேறுபாடுகளைத் தெளிவற்றதாக்குகிறது. டலா கொஸ்டாவின் எழுத்துக்களில் பெண்நிலைவாத வார்த்தை ஜாலமே காணப்படுகிறது. ஆனால் பெண்நிலைவாதத்தின் முனைப்பான நோக்கு இல்லை. அவ்வாறு இருந்திருப்பின் அவர், வீட்டு வேலை ஒரு சமூக உறவாக ஆணாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் அது தொடர்ந்து நீடிக்கவும் எவ்வாறு பங்காற்றுகிறது என்பது பற்றி அவர் கூறியிருப்பார்.

ஏங்கல்ஸ், ஷ்ரட்ஸ்கி, டலா கொஸ்டா யாவருமே குடும்பத்துள் நிகழும் உழைப்புச் செயல்முறை பற்றி போதியளவு ஆராயவில்லை. பெண்களது உழைப்பால் யார் நன்மை அடைகிறார்கள்? நிச்சயமாக முதலாளிகள், அத்துடன் நிச்சயமாக வீட்டில் அவர்களது தனிப்பட்ட சேவையை பெறும் கணவன்களும், தந்தைகளும் கூட இச் சேவைகளின் தன்மை, இயல்பு என்பன அவர்களது வர்க்கம், இனத்துவம் ஆகியவற்றுக்கு ஏற்ப வேறுபடினும், அவர்கள் இச் சேவையை பெறுகின்றனர் என்பது உண்மையே. ஆண்கள் ஆடம்பரப் பொருள் நுகர்வு, ஓய்வுநேரம், தாம் பெறும் சேவைகள் ஆகியவற்றில் பெண்களை விட உயர்ந்த வாழ்கைத்தரம் உடையவராயுள்ளனர். பொருள்முதல்வாத அணுகுமுறை இந்த முக்கிய விடயத்தை அலட்சியப்படுத்த முடியாது. பெண்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்படுவதில் ஆண்களுக்கு பொருள்வகை நலன்கள் உள்ளன என்ற கருத்து இதன் பயனாக மேலெழும். நீண்ட காலப்போக்கில் ஆணாதிக்க முறைமை அமைப்பினுள் 'அதிகாரப்படி நிலை அமைப்பு' (Hierarchy) 2* முறை ஒழிப்பானால் ஆண்கள் நன்மையடைய முடியும். ஆனால் குறுகிய காலப்பகுதியுள் இதில் மற்றவர்களின் உழைப்பைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

ஆரம்பகால மார்க்சிய வாதிகளுடைய அணுகுமுறையை வீட்டு உழைப்பை அலட்சியப்படுத்தி உழைப்புப் படையில் பெண்களின் பங்குபற்றுகைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தன. ஆனால் இரு சமீபகால அணுகுமுறைகள் வீட்டுவேலைக்கு அளித்த அதீத முக்கியத்துவத்தினால் உழைப்புச் சந்தையில் பெண்களின் பாத்திரத்தை புறக்கணிக்கின்றன. எவ்வாறாயினும் இம் மூன்று அணுகுமுறைகளும் தொழிலாளி வர்க்க வகையினத்தினுள் பெண்களை சேர்த்துக் கொள்கின்றன. இவற்றின்படி பெண்ணொடுக்கு முறை என்பது வர்க்க ஒடுக்கு முறையின் ஒரு அம்சமாக விளங்கிக் கொள்ளப்படுகிறது. இவ்வாய்வு முறையினால் பெண்நிலைவாத ஆய்வின் குறிக்கோளான ஆண், பெண் உறவுக்கு குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது.

"எமது பிரச்சினையானது" மிகவும் நயம்பட ஆராயப்பட்டிருக்கும் அதேவேளை அது தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. மார்க்சிய ஆய்வின் குவிமையம் வர்க்க உறவுகள் பற்றியதாகும். அதன் குறிக்கோள் முதலாளித்துவ சமூகத்தின் இயக்கத்தை விளக்குவதாகும். நாம், மார்க்சிய முறையியலானது பெண்நிலைவாத குறிக்கோள்களை உருவாக்கப் பயன்படுத்தப்படலாம் எனக் கருதினாலும், ஏற்கனவே மேலே எடுத்துக் காட்டப்பட்ட மார்க்சிய பெண்நிலைவாத அணுகுமுறை அவ்வாறு செய்யவில்லை, அவர்களது மார்க்சியத்தின் ஆதிக்கத்திற்கு பெண்நிலைவாதம் உட்பட்டுள்ளது.

நாம் ஏற்கனவே கூறியபடி, மார்க்சியத்தின் ஆய்வுத் திறன் இதற்கு ஒரு காரணமாகும். மார்க்சியமானது, வர்க்க சமூகத்தின் வளர்ச்சி, மூலதனக் குவிவுச் செயல்முறை, வர்க்க ஆதிக்கத்தின் மறு உற்பத்தி, முரண்பாடுகள், வர்க்கப் போராட்டம் ஆகியவை பற்றிய கோட்பாடாகும். மூலதனக் குவிவுச் செயல்முறையால் முதலாளித்துவ சமூகங்கள் இயக்கப்படுகின்றன. அவற்றில் உற்பத்தியானது பரிமாற்றத்தை நோக்கி அமைகின்றதே தவிர பயன்பாட்டுக்காக அல்ல. முதலாளித்துவ சமூகங்களில் உற்பத்தியின் முக்கியத்துவம் அவை இலாபத்திற்கு பங்களிப்பதிலேயே தங்கியுள்ளது. அவற்றின் பயன் மதிப்பு மிகக்குறைந்த அக்கறைக்குள்ளாகிறது. தொழிலாளர் உற்பத்தி செய்வதன் பெறுமதியைவிட மிகக் குறைவாக அவர்களுக்கு வேதனம் வழங்குவதிலும், உழைப்புச் சக்தியை சுரண்டும் முதலாளிகளின் திறமையிலுமே இலாபம் தங்கியுள்ளது. இலாபத்தின் குவியலானது உற்பத்தி உறவுகளை உருமாற்றுவது போலவே சமூக அமைப்பையும் ஒழுங்கு முறையில் உருமாற்றுகின்றது. உழைப்புச் சேமப்படை, அதிகளவான மக்களின் வறுமை ஆகியவை மூலதனக் குவிவுச் செயல் முறையின் பக்கவிளைவுகளாகும்.

முதலாளித்துவவாதிகளின் கருத்துப்படி தொழிலாளர் வர்க்கத்தின் மறுஉற்பத்தியை அதனிடமே விட்டுவிடலாம். அதேநேரம் மூலதனமானது தன்னுடன் சேர்ந்து வளர்கின்ற தனிநபர்வாதம், போட்டி மனோபாவங்கள், ஆதிக்கம் எமது காலத்தில் ஒரு குறிப்பிட்ட வகையான நுகர்வுத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சித்தாந்தத்தை உருவாக்குகின்றது. இவை முதலாளித்துவ சமூகங்களது அதிமுக்கியமான விழுமியங்களாகும்.

உற்பத்தியின் கட்டமைப்பு, ஒரு குறிப்பிட்ட தொழில் முறையின் பெருக்கம் மேலாதிக்க சித்தாந்த இயல்பு ஆகிய முதலாளித்துவ சமூகத்தின் பல அம்சங்கள் குறித்து விளங்குவதற்கு மார்க்சியம் உதவுகின்றது. முதலாளித்துவ வளர்ச்சி பற்றிய மார்க்சின் கோட்பாடானது "வெற்றிடங்களின்" வளர்ச்சி பற்றிய கோட்பாடாகும். மாக்ஸ், தொழிலாள வர்க்கத்தின் வளர்ச்சி பற்றியும், குட்டி பூர்சுவாக்களின் மறைவு குறித்தும் எதிர்வு கூறினார். ஏனையவர்கள் மத்தியில் பிறேவர்மான் (Braverman) முன்னேறிய முதலாளித்துவ சமூகங்களில் சேவையாளர்கள் எழுதுவினைஞர்கள் ஆகியோருக்கான இடங்கள் உருவாக்கப்பட்டமை குறித்தும் கூறினார். இத்தகைய வேலைகளில் அமரும் நபர்களைப் பற்றி கவலைப்படாமல் முதலாளித்துவம் இவற்றை உருவாக்குவது போல மாக்சிய ஆய்வுமுறையின் வகையினங்களான வர்க்கம், உழைப்புச் சேமப்படை, கூலி, உழைப்பாளி ஆகியவை ஏன் இக் குறிப்பிட்ட இடங்களை, குறிப்பிட்ட நபர்கள் நிரப்புகின்றார்கள் என்பது குறித்து விளக்கவில்லை.

குடும்பத்திற்கு உள்ளும் வெளியும் ஆண்களைவிட பெண்கள் ஏன் குறைந்த அந்தஸ்து வகிக்கின்றார்கள் என்றும் எத்தகைய கருத்தும் கூறவில்லை. மூலதனம் போலவே மார்க்சிய வகையினங்களும் பால்–குருட்டுத்தன்மை வாய்ந்தனவாக உள்ளன. மார்க்சியத்தின் வகையினங்களால் இந்த வெற்றிடத்தை யார் நிரப்புவார்கள்? என்று எமக்கு கூறமுடியவில்லை. பெண்கள் பிரச்சினை பற்றிய மாக்சிய ஆய்வுமுறை இத்தகைய அடிப்படை பிரச்சினையால் குறைபாடுற்றுள்ளது.

## கூடிய பயனுடைய மார்க்சிய பெண்நிலைவாதத்தை நோக்கி ....

மார்க்சியம் சமூக ஆய்விற்கான ஒரு முறைமையாகும். அது வரலாற்று இயக்கவியல் பொருள் முதல்வாதமாகும். இந்த ஆய்வு முறைமையை பெண்நிலைவாத வினாக்களுக்கு விடைகாண பயன்படுத்துவதன் மூலம் ஜூலியட் மிட்சேல் (Juliet Mitchell) ஸீலாமித் பயர்ஸ்ரோன் (Shulamith Fierstone) போன்றோர் மார்க்சிய பெண்நிலைவாதத்தில் புதிய திசைகளைச் சுட்டியுள்ளனர்.

மிட்சேல் பின்வருமாறு கூறுகின்றார்:

"எப்போதும் கேள்விக் குள்ளாக்கப்பட வேண்டியது சோசலித்துடனான 'எமது உறவு' அல்ல. எம்மீதான ஒடுக்குமுறையின் குறிப்பான இயல்பு, எமது புரட்சிகர பாத்திரம் என்பவற்றை ஆராய விஞ்ஞான சோசலிச முறையியலைப் பயன்படுத்துவது பற்றியே வினா எழுப்புகின்றோம். இத்தகைய ஒரு முறை முன்பு வளர்ச்சியடைந்த சோசலிச கோட்பாடுகளை விளங்கிக்கொண்ட தீவிரவாதப் பெண்நிலைவாதத்தையும் விளங்கிக்கொள்ள வேண்டும்."

ஏங்கல்ஸ் பின்வருமாறு எழுதினார் :

"பொருள்முதல்வாதக் கருத்துப்படி இறுதி ஆய்வில் வரலாற்றைத் தீர்மானிக்கும் காரணி உடனடி வாழ்க்கையின் உற்பத்தியும், மறு உற்பத்தியுமாகும். இது ஒருபுறம் வாழ்க்கைக்கு ஆதாரமான உணவு, உடை, இருப்பிடம் உற்பத்தித் தேவையான கருவிகள்

குறிப்பு-2* Hierarchy

இதன் பொருள் மேலிருந்து கீழான அதிகாரப் படிநிலை அமைப்பு என்பதாகும். கட்டுரையில் 'அதிகாரப் படிநிலை அமைப்பு' என்று பிரயோகிக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவற்றையும், மறுபுறம் மனிதர்களையும் உற்பத்தி செய்தல் ஆகும். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்த மக்களது சமூக ஒழுங்கு அமைப்பு இவ்விருவகை உற்பத்திகளாலும் தீர்மானிக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு ஆய்வுமுறையைக் கைக்கொள்ளவே மிட்சேல் முயன்றார். "பெண்கள் – ஒரு நீண்ட புரட்சி" என்ற அவரது முதலாவது கட்டுரையில் அவர் சந்தை, வேலை, உயிரின மறுஉற்பத்தி, பாலியல் (Sexuality) குழந்தை வளர்ப்பு ஆகியவற்றைப் பரிசீலிக்கின்றார்.

பெண்களது சகல வேலைகளையும் உற்பத்தியாக கொள்ளாததனால் போலும் மிட்சேல் தனது ஆய்வு முயற்சியில் முழுமையான வெற்றியைக் காணவில்லை. சந்தை வேலையையே அவர் உற்பத்தியாகக் காண்கின்றார். குடும்பத்தில் பெண்களின் வேலைகள் சித்தாந்தத்துடன் தொடர்பு கொண்டனவாக கருதப்படுகின்றன. குழந்தைப் பேறு, பாலியல் , பிள்ளை வளர்ப்பு ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் ஆணாதிக்க முறைக்கு எத்தகைய பொருள்வகை அடிப்படையையும் அவர் காணவில்லை. "Womens Estate" என்ற அவரது நூலில் பெண்களது சந்தை உழைப்புப் பற்றிய ஆய்வு வளர்த்தெடுக்கப்படுகின்றதே ஒழிய குடும்பத்தினுள் பெண்ணின் வேலை குறித்து ஆய்வுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இந்தவகையில் தீவிர பெண்நிலைவாதத்தால் அன்றி, மிட்சேல் மார்க்சிசத்தினாலேயே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவரது பிற்கால நூல் ஒன்றில் – 'உளவியல் ஆய்வும் பெண்நிலைவாதமும்' (Psychoanalysis and Feminism) – ஆண், பெண், உறவுநிலை பற்றி கற்றுக்கொள்ளக் கூடியதான முக்கிய பகுதியொன்றை ஆராய்கின்றார். குறிப்பாக ஆணினதும் பெண்ணினதும் பால் (Gender) 3* அடிப்படையில் உருவாகும் ஆளுமை வேறுபாடுகளை ஆராய முற்பட்டுள்ளார். மிட்சேல், ஆணாதிக்க முறையானது உளவியல் தளத்திலேயே செயற்படுவதாகக் கூற முயலுகின்றார். இந்த உளவியல் தளத்தில் பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் தாம் 'பெண்ணாகவும்' 'ஆணாகவும்' இருக்கும் விதத்தைக் கற்றுக்கொள்கின்றார்கள் என்பது குறிப்பிடப்படுகின்றது. இங்கு அவர் பாலுறவு, உயிரின உற்பத்தி, பிள்ளை வளர்ப்பு போன்றவற்றில் அக்கறை காட்டுகின்றார். ஆனால் அவற்றைச் சித்தாந்த தளத்திலேயே காண்கின்றார். இதனால் அவரது ஆரம்பகால ஆய்வுகளில் காணப்பட்ட அடிப்படைப் பலவீனம் இங்கும் தொடர்கின்றது. அவர் மிகத் தெளிவாக மூலதனம் எவ்வாறு அடிப்படையான பொருளாதார கட்டமைப்பாக உள்ளதோ அதேபோல ஆணாதிக்க முறைமையை சித்தாந்த கட்டமைப்பாக காண்கின்றார்.

"இவ் விடயத்தை ஒரு திட்ட அமைப்பில் கூறுவதெனில் நாங்கள் இரு சுயாதீனமான பரப்புகளைக் கையாள்கின்றோம், ஒன்று முதலாளித்துவ பொருளாதார முறைமை, மற்றது ஆணாதிக்கத்தின் சித்தாந்த முறைமை".

இவையிரண்டும் ஒன்றினையொன்று ஊடுருவியுள்ளமை பற்றி ஆராய்ந்த போதிலும் ஆணாதிக்க முறைமைக்கு ஒரு பொருள்வகை அடிப்படை அளிக்கத் தவறியமையும், ஆளுமை உருவாக்கத்திலும், பால் உருவாக்கத்திலும் (Gender Formation) பங்கு வகிக்கும் பொருள்வகை அம்சங்களைக் காணத்தவறியமையும் அவரது ஆய்வின் பயன்பாட்டைக் குறைத்து விடுகிறது.

ஷீலாமித் பயர்ஸ்ரோன் ஆணாதிக்க முறைமைக்கு பொருள்வகை அடிப்படையைக் காண்பதன் மூலம் மாக்சியத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் பாலம் அமைக்கின்றார். இரு பால்களினதும் இயக்கவியலே அடிப்படையான வரலாற்று இயக்கவியல் ஆகும், மனித இனத்தை மறுஉற்பத்தி செய்யும் பெண்களின் உழைப்பு ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படை என அவர் கூறுகின்றார். பெண்களது நிலையை ஆராய மார்க்சியத்தை பயன்படுத்துவதிலும் ஆணாதிக்க முறைமைக்கு ஒரு பொருள்வகை அடிப்படை உண்டு எனச் சுட்டிக்காட்டியதிலும் இவரது ஆய்வின் முக்கியத்துவம் மிகையாக மதிப்பிடப்பட முடியாதது. ஆனால் இவரது ஆய்வானது உயிரியல், மனித இன மறுஉற்பத்தி ஆகியவற்றிற்கு அளிக்கும் அதீத முக்கியத்துவத்தினால் பாதிக்கப்படுகின்றது.

நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில், எவ்வாறு ஒரு குறிப்பிட்ட "பாலினம்" (Sex– உயிரியல் அம்சம்) "பாலாக" (Gender– ஆண்மை, பெண்மை என்ற சமூக அம்சமாக) உருப்பெறுகின்றது என்பதுதான். மனித இன மறுஉற்பத்தியில் மாத்திரம் முக்கிய கவனம் செலுத்தாமல் பெண்களுடைய சகல உழைப்பையும் அவை நிகழும் சமூக வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்குவது முக்கியமானதாகும். மார்க்சிய முறையியலை பெண்நிலைவாதத்திற்குப் பயன்படுத்தினாலும் சகல வகையான ஏனைய ஒடுக்குமுறைகளுக்கும் (வர்க்க, வயது, இன (Race)) மூலகாரணமாக ஆண் பெண்ணில் செலுத்தும் ஆதிக்கமே அமைகிறது என்ற பயர்ஸ்ரோனின் கருத்தானது அவருடைய ஆய்வை மார்க்சிய பெண்நிலைவாத ஆய்வுக்குள் அல்லாமல் தீவிர பெண்நிலைவாத குழுவினருடனேயே சேர்க்கின்றது. அவரது நூல் தீவிர பெண்நிலைவாத நிலைப்பாட்டின் ஒரு முழுமையான அறிக்கை போல உள்ளது.

பயர்ஸ்ரோனது நூல் மார்க்சியவாதிகளால் இலகுவில் நிராகரிக்கப்பட்டது. ஷரட்ஸ்கி இதனை ஒரு அகநிலைவாதத்திற்கான முறையீடு என்கிறார். எனினும் பெண்களுக்கு மகிழ்ச்சியான விடயம் என்னவெனில், பெண்கள் மீதான ஆண்களின் அதிகாரம் பற்றிய அவரது ஆய்வும், அது குறித்த அவரது ஆரோக்கியமான கோபமும்தான். அவரது நூலில் காதல் பற்றிய அத்தியாயம் இதற்கு மையமாக அமைந்துள்ளது. அது வெறுமனே ஆண்மையின் சித்தாந்தம் பற்றியதல்ல, மாறாக பெண்கள் மீதான ஆண்களின் அதிகாரத் திணிப்பின் அகநிலை விளைவுகள் பற்றிய விளக்கமாகவும் ஆணாதிக்க சமூகத்தில் வாழ்வதை பெண்கள் எவ்வாறு உணருகின்றார்கள் என்பது பற்றியதுமாகும். "தனிப்பட்டது என்பதும் அரசியலே" (The Personal is Political) என்ற பெண்நிலைவாதிகளின் சுலோகம் ஷரட்ஸ்கி சொன்னது போன்று வெறுமனே அகநிலைவாதத்திற்கான ஒரு முறையீடு அல்ல. அது ஆண்களது அதிகாரத்தையும், பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையையும் அரசியல், சமூக யதார்த்தமாக அங்கீகரிக்குமாறு கேட்கும் கோரிக்கையாகும்.

## 2. தீவிர பெண்நிலைவாதமும் ஆணாதிக்க முறைமையும்

தீவிர பெண்நிலைவாத எழுத்துக்களின் மிகப்பெரிய அழுத்தம் 'தனிப்பட்டது என்பதும் அரசியலே' என்ற சுலோகமாகும். பெண்களின் அதிருப்தியானது குறைபாடுடையோரின் ஒப்பாரி அன்று. மாறாக பெண்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் ஆதிக்கப்படுத்தப்பட்டு, சுரண்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருக்கும் சமூக நிலைக்கான ஓர் எதிர்வினையாகும். உழைப்புச் சந்தையில் பெண்களின் குறைவான அந்தஸ்து, மத்தியதர வர்க்கத் திருமணத்தின் ஆண்–மைய உணர்வு அமைப்பு, விளம்பரங்களில் பெண்களைப் பயன்படுத்தல், கல்வியாளராலும், உளவியலாளராலும் பிரபல்யப்படுத்தப்பட்ட "பெண்கள் உளவியலானது அடிப்படையில் நரம்புத் தளர்ச்சி" (Neurotic) என்ற கருத்து ஆகியவை ஆராயப்பட்டுள்ளன. தீவிர பெண்நிலைவாத எழுத்துக்கள் எண்ணிக்கையில் அதிகமானவை. இலகுவில் சுருக்கிக் கூறமுடியாதவை. அதேவேளை உளவியல் பற்றிய அக்கறை இவற்றில் ஒரே சீராக

---

**குறிப்பு-3***

ஆங்கிலத்தில் Sex, Gender என்ற இரு வேறுபட்ட பதங்கள் புழக்கத்தில் உள்ளன. இதில் Sex என்பது ஆண்–பெண்களுக் கிடையிலான உயிரியல் வேறுபாட்டை –உயிரியல் அம்சத்தை– குறிக்கப் பயன்படுகின்றது. Gender என்பது இந்த உயிரியல் அடிப்படைக்கு மேலாக சமூகத்தால் கட்டமைக்கப்படும் ஆண்மை, பெண்மை போன்ற ஆளுமைக்குரிய பண்புகளைக் குறிக்கப் பயன்படுகின்றது. தமிழில் இந்த இரண்டு ஆங்கிலச் சொற்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை துல்லியமாகக் காட்டுவதற்கு இணையான சொற்கள் வழக்கில் இல்லை. சில மொழிபெயர்ப்பாளர்கள் Sex என்பதை 'பாலினம்' எனவும் Gender என்பதை 'பால்' எனவும் குறிப்பிடுகின்றனர். நாம் இம் மொழிபெயர்ப்பில் Sex/Gender என்ற பதங்களுக்கிடையில் துல்லியமான வேறுபாடுகள் காட்டப்பட வேண்டிய இடங்களில் பாலினம்/பால் போன்ற பதங்களைப் பாவித்துள்ளோம். அவ்வாறு அவசியப்படாத இடங்களில் யாவற்றையும் பொதுவாக 'பால்' என்றே பாவிக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளது. நியூயோர்க் தீவிர பெண்நிலைவாதிகள் அமைப்பின் பிரகடனம் "தன் முனைப்பின் அரசியல்" (The Politics Of Ego) என்பதாகும்.

தீவிர பெண்நிலைவாதிகளைப் பொறுத்த வரையில் "தனிப்பட்டது என்பதும் அரசியலே" என்பதன் பொருள் யாதெனில், ஆண் பெண்களுக்கிடையிலான பிரிவினையே முதலில் உருவானதும் அடிப்படையானதுமான வர்க்கப் பிரிவினையாகும். அத்துடன் பெண்கள் மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துவதற்கான ஆண்களின் போராட்டமே –பாலின் இயங்கியலே (Dialectical Sex) – வரலாற்றின் இயங்கு சக்தியாகும்.

இதற்கமைய அதிகாரத்தின் அர்த்தத்தில் சிறுவர்களும், (Boys), சிறுமிகளும் (Girls) எவ்வாறு ஆண்களாகவும் (Men), 'பெண்களாகவும்' (Women) வளர்ச்சி பெறுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் விதத்தில் பயர்ஸ்ரோன் பிராய்டின் கருத்துக் களை மீள எழுதினார். ஆண்மை, பெண்மை என்பவற்றின் பண்புகளை குணாம்சப்படுத்தும் இவரது விபரிப்புகள் தீவிர பெண்நிலைவாதி களின் எழுத்துக்களுக்கு ஒரு வகை மாதிரியாக உள்ளது. ஆண் அதிகாரத்தையும் ஆதிக்கத் தையும் தேடுகின்றான், அவன் தனிநபர் வாதம், காரியார்த்தம், போட்டி மனோபாவம், தன் முனைப்பு என்பவற்றை உடையவன். பயர்ஸ்ரோன் இதனை "தொழில்நுட்ப வகை மாதிரி" என்கிறார். பெண்ணானவள், போஷிப்பவளாக, கலைத்துவம், தத்துவ அம்சம் உடையவளாய் 'அழகியல் மாதிரியாக' இருக்கின்றாள். பெண்களை அழகியல் மாதிரி எனக் கொள்ளும் கருத்தானது பண்டைய கிரேக்கர்களுக்கு மிகவும் அதிர்ச்சிதரும் விடயமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேக மில்லை. இங்குதான் தீவிர பெண்நிலைவாத ஆய்வுமுறையின் குறைபாடு தங்கியுள்ளது. நிகழ் காலத்தில் ஆண்மை பெண்மைக் குணங்கள் அமைந்து கிடப்பது போல எல்லாக் காலங்களிலும் இருந்ததாகக் கூறுவது தவறு. நிகழ்காலம் பற்றிய தீவிர பெண்நிலை வாதிகளின் இவ் ஆய்வு வலுவுடையது. ஆனால் அதிகளவு முக்கியத்துவத்தை உளவியலுக்கு அளிப்பதன் மூலம் வரலாற்றுக் குருட்டுத்தன்மை இருப்பது அதன் மிகப்பெரிய பலவீனமாகும்.

தீவிர பெண்நிலைவாத முறை மாத்திரம் இக் குறைபாட்டுக்கு காரணமல்ல. சமூக ஒழுங்கமைப்பின் ஒரு நீடித்து நிற்கும் வடிவமாக ஆணாதிக்க முறைமை இருப்பதும் ஒரு காரணமாகும். பெண்கள் மீதான ஆணாதிக்கம் உள்ள ஒரு சமூக அமைப்பு முறையை குறிக்க ஆணாதிக்க முறைமை என்ற கருத்தாக்கத்தை தீவிர பெண்நிலைவாதம் பயன்படுத்துகின்றது. கேட் மிலற்றினுடைய (Kate Millett) வரைவிலக்கணம் இதற்குச் சரியான உதாரண மாகும்.

"எமது சமூகம் ஆணாதிக்க முறையில் அமைந்ததாகும். இராணுவம், கைத்தொழில், தொழில்நுட்பம், பல்கலைக் கழகங்கள், விஞ்ஞானம், அரசியல் விவகாரம், நிதி போன்ற அதிகாரத்தின் சகல வழிகளும் முற்று முழுதாக ஆண்களின் கைகளிலேயே தங்கியுள்ளமை யிலிருந்து இது புலப்படும்"

தந்தை வழி முறைமை (Patriarchy) 4* பற்றிய தீவிர பெண்நிலைவாதத்தின் வரை விலக்கணம் நாம் அறிந்த அனேக சமூகங்களுக்குப் பொருந்துவதாகும். இந்த சமூகங்களுக்கு இடையிலுள்ள வேறுபாட்டை இந்த வரைவிலக்கணத்தால் சுட்டிக் காட்டமுடியாது. தீவிர பெண்நிலைவாதிகள் வரலாற்றை பயன்படுத்தும் முறையானது எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் ஆணாதிக்கம் இருந்ததற்கான உதாரணங்க ளைச் சுட்டிகாட்டுவது என்பதுடன் மட்டும் நின்று விடுகின்றது. பெண்கள் இயக்கத்திற்கு முன்னர் மார்க்சியவாதிகளுக்கும் வேறு சமூக விஞ்ஞானிகளுக்கும் தந்தை வழிமுறைமை என்பது (Patriarchy) 4* பிரபுத்துவ, பிரபுத்துவத்திற்கு முன்னான சமூகங்களில் ஆண்களிடையேயுள்ள அரசியல், பொருளாதார உறவுகளின் முறைமை யைக் குறிப்பதாகும். பூர்சுவா சமூக விஞ்ஞானிகளால் முதலாளித்துவ சமூகங்க ளானவை அதிகாரத்துவம், சொந்தத் தன்மை இன்மை (Impersonal), திறமைக்கு மதிப்பளித்தல் ஆகிய தன்மைகளைக் கொண்ட தாய் விபரிக்கப்பட்டுள்ளது. மார்க்சியவாதி களுக்கு இது வர்க்க ஆதிக்கத்தின் முறைமையாகத் தென்படுகிறது. இவர்களில் எவரும் பழைய தந்தைவழி சமூகங்களை பெண்களை ஆதிக்கப்படுத்தக் கூடிய ஆண்களின் உறவு முறையாக நோக்கவில்லை.

## ஆணாதிக்க முறைமை பற்றிய வரைவிலக்கணத்தை நோக்கி ....

ஆணாதிக்க முறைமையை பின்வருமாறு பயனுள்ள முறையில் நாம் வரைவு செய்யலாம். அதாவது ஆணாதிக்க முறைமை என்பது பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்பான முறையில், ஆண்கள் தமக்கிடையே அதிகாரப் படிநிலை தன்மையுள்ளதும், பரஸ்பரம் சார்ந்திருப்பதும், ஒருமைப்பாடும் உள்ளதுமாக அமைத்துக் கொண்ட பொருள் வகை அடித்தளம் உள்ள சமூக உறவுகளின் தொகுப்பையே குறிக்கின்றது. ஆணாதிக்க அமைப்பு என்பது ஓர் அதிகார படிநிலை அமைப்பாக இருந்த போதிலும் வெவ்வேறு வர்க்கம், இனம், இனக்குழு, என்பவற்றைச் சேர்ந்த ஆண்களுக்கு வெவ்வேறுபட்ட ஸ்தானங்களே ஆணாதிக்க முறைமையில் இருப்பினும் பெண்கள் மீதான ஆதிக்கத்தின் பங்குதாரர் என்ற வகையில் அவர்கள் ஒற்றுமைப்பட்டு உள்ளனர். இந்த ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியும் உள்ளனர். ஆணாதிக்க முறைமை யின் அதிகாரப் படிநிலை அமைப்பில் சகல ஆண்களும், அவர்கள் அதில் எந்த ஸ்தானத்தை வகித்தாலும் சில பெண்களை யாவது கட்டுப்படுத்த முடியுமானவர்களா யுள்ளனர்.

அரச சமூகங்களில் ஆணாதிக்க முறைமை முதன்முதலில் நிறுவன மயப்படுத்தப்பட்ட போது, தமது குலக்குழுவின் (Tribal) மூலவலங்களைக் கையளித்தமைக்காக புதிதாக வந்த ஆட்சியாளர்கள் குலக் குழுவைச் சேர்ந்த ஆண்களுக்கு குடும்பத் தலைமைப் பதவியை அளித்தனர் என்பதற்கு சான்றுகள் உள்ளன. பெண்கள் மீதான தமது ஆதிக்கத்தைப் பேணுவதற்காக ஆண்கள் தமது அதிகாரப் படிநிலை அமைப்பையும் கடந்து ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளனர்.

பெண்களது உழைப்புச் சக்தியை ஆண் கட்டுப்படுத்துவதே ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படையாக அமைந்துள்ளது. அத்தியாவசியமான உற்பத்தி மூலவளங்களில் இருந்து பெண்களைப் புறம்தள்ளி வைப்பதன் மூலமும், பெண்களின் பாலியலைக் கட்டுப் படுத்துவதன் மூலமும் அவர்கள் மீதான தமது கட்டுப்பாட்டை ஆண்கள் நிலை நாட்டுகின்றார் கள். ஒரு புருஷ, எதிர்ப்பால் (Hetro Sexual) உறவுத் திருமணம் இத்தகைய கட்டுப்பாட்டி ற்கு வழி அமைக்கின்றது. மூலவளங்களுக்கான பெண்களது வாய்ப்பையும் அவர்களது பாலியலையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பெண் களது உழைப்புச் சக்தியை, ஆண்களுக்கு பல தனிப்பட்டதும், பாலியல் ரீதியானதுமான சேவைகளைப் பெறவும் பிள்ளைகளை வளர்க்கவும் பயன்படுத்த முடிகிறது.

ஆண்களுக்கு பெண்கள் அளிக்கும் சேவையானது மகிழ்ச்சியற்ற பல வேலைகளை (குளியலறை கழுவுதல்) ஆண்கள் செய்வதிலி ருந்து விடுவிக்கின்றது. இது குடும்பத்துக்கு உள்ளும் குடும்பத்திற்கு வெளியிலும் நடப்பதாகும். குடும்பத்திற்கு வெளியே நடை பெறும் உதாரணங்களாக, பெண் தொழிலாளர் கள் வேலை கொள்வோராலும், மாணவிகள் புரொபசர்களாலும் இம்சிக்கப்படுவது, தொல் லைகளுக்கு உள்ளாக்கப்படுவது, ஆண் அதிகாரிகள் தமது பெண்செயலாளர்களை பல தனிப்பட்ட வேலைகள் செய்யவும், காப்பி தயாரிக்கவும், பாலுணர்வுத் தூண்டல் சூழ்நிலையை வழங்கவும் பயன்படுத்துதல் போன்றன. பிள்ளை வளர்ப்பதும் ஆணாதிக்க முறைமையை ஓர் அமைப்பாக நிலைநிறுத்து வதற்கு உதவுகின்றது. வர்க்க சமூகமானது பாடசாலை, நுகர்வுமுறை, வேலைத்தளம் போன்றவற்றால் மறுஉருவாக்கம் செய்யப்படு வது போலவே ஆணாதிக்க சமூக உறவுகளும் மறு உருவாக்கம் செய்யப்படுகின்றன. எமது

குறிப்பு-4*

நாம் Patriarchy என்பதை ஆணாதிக்கம் என்றே பொதுவாகப் பயன்படுத்தியுள்ளோம். ஆனால் இந்தப் பந்தியில் மட்டும் Patriarchy என்பதை 'தந்தை வழி முறைமை' என்ற பதத்தால் குறிப்பிடும்போதே மிகவும் சரியான அர்த்தத்தைக் கொடுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்தில் பொதுவாக பிள்ளை வளர்ப்பு பெண்களால் வீட்டில் மேற்கொள்ளப்படுவதுடன் பெண்கள் சமூக ரீதியாக ஆண்களுக்குக் கீழ்ப் பட்டவர்களாக வரையறுக்கப்படவும் இனங் காணப்படவும் செய்கின்றார்கள்.

ஆண்கள் மிக அரிதாகவே குடும்ப அலுவல்களில் பங்கு கொள்கின்றனர். இத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகள் இலகுவில் பால் (Gender) அதிகாரப்படி நிலை அமைப்பில் தங்களது இடம் எதுவென இலகுவில் கற்றுவிடுவர். இதனைவிட குடும்பத்திற்கு வெளியே பாடசாலை, விளையாட்டுக்கள், ஆலயங்கள், தொழிற்சாலைகள், தொழிற் சங்கங்கள், இராணுவம், சுகாதார நிலையங்கள், அலுவலகங்கள், தொடர்பு சாதனங்கள் போன்றவை பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையை உறுதிசெய்து நிலைநிறுத்துகின்றன.

ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படை குடும்பத்தில் நிகழும் பிள்ளை வளர்ப்பில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. அது பெண்களின் உழைப்பைக் கட்டுப்படுத்த இயலுமானவர்களாக ஆண்களை ஆக்கும் சகல சமூகக் கட்டுமானங்களிலும் தங்கியுள்ளது. ஆணாதிக்க முறைமையை நிலைநிறுத்தும் சகல சமூகக் கட்டுமானங்களிலும் தங்கியுள்ளது. ஆணாதிக்க முறைமையை நிலைநிறுத்தும் சமூகக் கட்டுமானங்களின் அம்சங்கள் கோட்பாட்டு ரீதியாக இனங் காணப்படக் கூடியதாகவும் அதனால் ஏனைய அம்சங்களில் இருந்து பிரித்தறியக் கூடியனவாகவும் உள்ளன. கெய்ல் ரூபின் (Gayle Rubin) இத்தகைய சமூகக் கட்டுமானங்களின் கூறுகளை இலகுவாக இனங்காணும் வண்ணம் பாலினம்/ பால் முறைமை (Sex / Gender System) என்னும் ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கினார்.

"பாலினம்/ பால் முறைமை (Sex/Gender System) என்பது ஒரு சமூகம் தனது உயிரியல் பாலியலை மனித செயற்பாட்டின் உற்பத்திகளாக உருமாற்றும் ஒழுங்குமுறைத் தொகுதியைக் குறிக்கும். இவற்றினால் உருமாற்றப்பட்ட பாலியல் தேவைகள் பூர்த்தி செய்யப்படலாம்."

நாம் ஆண் பெண் எனும் இருவகைப் பாலினங்களாக (Sex) பிறந்துள்ளோம். ஆனால் சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படும் ஆண்மை, பெண்மை என்ற குணங்களைக் கொண்ட பால்களாக (Gender) நாம் உருவாக்கப்படுகின்றோம். நாம் எவ்வாறு அப்படி ஆக்கப்படுகின்றோம் என்பது ஏங்கல்ஸ் கூறிய உற்பத்தி முறையின் இரண்டாவது அம்சமாகும். அதாவது "மனித இனத்தின் உற்பத்தி, அதன் தொடர்ச்சியும் நிலைபேறும்" என அவர் கூறியமையாகும்.

எவ்வாறு மக்கள் தமது இனத்தை நிலைநிறுத்துகின்றனர் என்பது சமூக ரீதியாக தீர்மானிக்கப்படுவதாகும். உயிரியல் ரீதியாக மக்கள் பலதரப்பட்ட பாலுறவுகளையும் கொள்ளக் கூடியவர்களாக இருக்கும் நிலையில் சமூகமானது எல்லா வகையான பாலியல் வெளிப்பாடுகளையும் சமமாக அனுமதிக்கும் விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டிருக்குமானால் சில குறிப்பான பாலுறவுகளே மறுஉற்பத்திக்கு வழிவகுக்கும். பால் அடிப்படையில் உள்ள கறாரான உழைப்புப் பிரிவினை –சகல சமூகங்களுக்கும் பொதுவான சமூகக் கண்டுபிடிப்பு– இரு வேறுபட்ட ஆண்மை, பெண்மை (Gender) என்ற பிரிவுகளை உருவாக்குவதுடன் பொருளாதார காரணங்களுக்காக ஆணும் பெண்ணும் ஒன்றுசேர வேண்டிய தேவையையும் உருவாக்குகின்றது. இது எதிர்ப் பால் உறவை நோக்கி தமது பாலியல் தேவைகளை வழிநடத்துவதுடன் மனித இன மறுஉற்பத்தியையும் நிச்சயிக்கின்றது.

சில முன்னேறிய சமூகங்களில் மனித இன மறுஉற்பத்தி தொழில் நுட்பத்தினாலும் சாத்தியப்படலாம். ஆனால் இன்றுவரை பால் ரீதியான வேலைப் பிரிவினை யாவருக்கும் பொதுவானதாகவே உள்ளது. இவ் வேலைப் பிரிவினை பால்களுக்கிடையில் அசமத்துவத்திற்கு காரணமாகாமல் இருக்கக் கூடிய வாய்ப்பு கோட்பாட்டு ரீதியாக உண்டு. எனினும் சகல அறியப்பட்ட சமூகங்களிலும் இப் பிரிவினையே பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலைக்கு காரணமாக அமைந்துள்ளது. மேலும் இப் பிரிவினையே பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமூகத்தில் வெவ்வேறான அனுபவங்களை அளிப்பதற்கும் காலாகிறது. இதுவே உயர்ச்சி வாய்ந்த தொழில் வாய்ப்பு, வீட்டுவேலைகள் செய்யாமை ஆகியவற்றால் மாத்திரமல்லாமல் உளவியல் ரீதியாகவும் செயற்படத்தக்க ஆண் அதிகாரத்தின் பொருள் வகை அடிப்படையாக உள்ளது.

> **நாம் பெண்கள் என்ற வகையில் கடந்த காலத்தில் நடந்தது போல எமது பிரச்சினைகளின் தீவிரத்தையும், முக்கியத்துவத்தையும் கைவிடக் கூடாது. பெண்நிலைவாத இலட்சியங்களைக் கைவிடும்படி மறைமுகமாகவும் நேரடியாகவும் செய்யப்படும் கட்டாயப் படுத்தல்களுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டும்**

எவ்வாறு மனிதர்கள் தமது பாலியல் தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்? எவ்வாறு அவர்கள் தமது இனத்தை மறுஉற்பத்தி செய்கின்றனர்? புதிய தலைமுறையினருக்கு எவ்வாறு சமூக விழுமியங்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்? ஆண், பெண்ணாக இருப்பது குறித்து எவ்வாறு உணர்கின்றனர் ஆகிய இவை யாவும் ரூபின் குறிப்பிடும் பாலினம்/ பால் முறைமை (Sex/Gender System) என்பதில் அடங்கும். இரத்த உறவு முறைமைகளின் செல்வாக்கிற்கும் (யாருடன் பாலுறவு கொள்ளலாம் என இந்த உறவு முறைகள் நிர்ணயிக்கும்), குழந்தை வளர்ப்பு என்பவற்றினூடாக குறிப்பான பால் வகை ஆளுமை வளர்ச்சி அடைவதற்கும், 'ஒடிபஸ்' பொறிமுறைக்கும் (Oedipus Machine) ரூபின் முக்கியத்துவம் அளிக்கின்றார். இத்துடன் பால்களுக்கிடையே அதிகாரப் படிநிலை அமைப்பு முறையை வரைவு செய்து பேணுவதில் ஏனைய சமூக நிறுவனங்கள் வகிக்கும் பாத்திரத்தை ஆராய்வதற்கு பாலினம்/பால் (Sex/Gender) என்ற கருத்தாக்கத்தை பயன்படுத்த முடியும். கோட்பாட்டு ரீதியாக இந்த பாலினம்/பால் முறைமையானது பெண்ணாதிக்கமாகவோ, ஆணாதிக்கமாகவோ, சமத்துவமாகவோ கூட இருக்கலாம் என ரூபின் கூறுகிறார். ஆனால் இந்த முறையை வரலாற்று ரீதியாக பாகுபடுத்தவில்லை. நாம் எமது நிகழ்கால பாலினம்/பால் முறைமையை ஆணாதிக்க முறைமை எனக் கூறுகின்றோம். ஏனெனில் இக் கருத்தாக்கம் அதிகார படிநிலை அமைப்பு முறை, ஆணாதிக்கம் போன்ற நிகழ்கால சமூக முறைமையின் மையமாக உள்ளவற்றைக் குறிப்பதாகும்.

ஏங்கல்ஸ் கருத்துப்படி, பொருளாதார உற்பத்தியும் (மார்க்சியவாதிகள் உற்பத்தி முறைமை எனக் குறிப்பிட்டது) மனித இனத்தை பாலின/பால் அரங்கில் உற்பத்தி செய்வதும் ஒரு "குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்டில் எத்தகைய சமூக ஒழுங்கமைப்பின் கீழ் மக்கள் வாழ்கின்றனர் என்பதைத்" தீர்மானிக்கும் இவ்விருவகை உற்பத்தி முறைகளையும் நோக்குவதன் மூலம் முழுச் சமூகத்தையும் புரிந்து கொள்ள முடியும். "தூய்மையான முதலாளித்துவம்" என்பதோ "தூய்மையான ஆணாதிக்க முறைமை" என்பதோ இல்லை. அவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இயங்குகின்றன. உண்மையில் என்ன இருக்கிறது எனின் ஆணாதிக்க முறைமை நிலப்பிரபுத்துவம், ஆணாதிக்க முறைமை முதலாளித்துவம், சமத்துவமுடைய வேட்டையாடும், சேகரித்துண்ணும் சமூகங்கள், தாய்வழி அல்லது தந்தைவழி விவசாய சமூகங்கள் போன்றவை தாம். உற்பத்தியின் ஒரு அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இன்னோர் அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே அத்தியாவசியமான தொடர்பு இருக்க வேண்டும் என்பதில்லை. உதாரணமாக ஒரு சமூகம் முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்திற்கு மாறலாம்.. ஆனால் ஆணாதிக்க முறைமை தொடர்ந்திருக்கலாம். வரலாறு, எமது அனுபவம், பகுத்தறிவு ஆகியவை மூலம் மேற்கூறிய இரு உற்பத்திகளும் மிக நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளன என்பதும் ஒன்றில் ஏற்படும் மாற்றம் மற்றதில் இயக்கம், முரண்பாடு ஆகியவற்றை ஏற்படுத்தும் எனவும் அறியலாம்.

இனரீதியான (Racial) அதிகார படிநிலை அமைப்பு முறைமையையும் இப் பின்னணியில் விளங்கிக் கொள்ளலாம். நிற/இன (Colour/Race) அமைப்புகளை வரைவு செய்வதன் மூலம், உயிரியல் பிறப்பினால் உண்டாகும் நிறம் எவ்வாறு ஒரு சமூக வகைப்பாடாகிய இனமாக (Race) மாறுகிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற அடிப்படையில் இது மேலும் விரிவாக விளக்கப்படலாம். பால் ரீதியான அதிகார படிநிலை அமைப்பு முறைபோல இன ரீதியான அதிகார படிநிலை அமைப்பு முறையும் மக்கள் எவ்வாறு உற்பத்தியும், மறுஉற்பத்தியும் செய்யப்படுகிறார்கள் என்ற சமூக ஒழுங்கமைப் பின் அம்சங்களாகின்றன. இவை அடிப்படையில் சித்தாந்த வகைப்பட்டதல்ல. இரண்டாவது உற்பத்தி முறையான மனித இன உற்பத்தி, மறுஉற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியவை. எமது சமூகங்களை எளிமையாக வெறுமனே முதலாளித்துவ சமூகம் என்றில்லாமல் ஆணாதிக்க முறைமை முதலாளித்துவ வெள்ளைப் பேரினவாதம் என்று கூறுவது கூடிய பொருத்தமாக இருக்கும். 3வது பகுதியில் நாம் எவ்வாறு முதலாளித்துவம் இனரீதியான அம்சங்களைப் பயன்படுத்துகிறது என்பதையும் முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்க முறைமைக்கும் உள்ள பரஸ்பர தொடர்பு பற்றியும் விளக்கியுள்ளோம்.

முதலாளித்துவ வளர்ச்சியானது தொழிலாளர்களுக்கு இடையே ஒரு அதிகார படிநிலை அமைப்பு முறையை உருவாக்குகின்றது. ஆனால் பாரம்பரிய மார்க்சிய வகையினங்கள் எவர் எந்த இடத்தை வகிப்பார்கள் என்று கூறவில்லை. பால், இன அதிகார படிநிலை அமைப்புகள் யார் இத்தகைய வெற்றிடங்களை நிரப்புவர் என்பதை தீர்மானிக்கும். ஆணாதிக்க முறைமை என்பது வெறுமனே அதிகார படிநிலை ஒழுங்கமைப்பு அல்ல. மாறாக அது குறிப்பிட்ட நபர்கள், குறிப்பிட்ட இடங்களை வகிப்பது தொடர்பானதாகும். ஆணாதிக்க முறைமை பற்றிக் கற்கும் போதுதான் பெண்களே ஆதிக்கப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் அது எவ்வாறு என்பதையும் அறிகின்றோம்.

பெரும்பான்மையான சமூகங்கள் ஆணாதிக்க முறைமையுடையனவாக உள்ளன என்று நாம் நம்புகின்றோம். ஆனால் அது மாறுதலற்ற, சர்வ வியாபகமான அம்சமாகும் என நினைப்பதில்லை. பதிலாக, உண்மையில் இது காலப்போக்கில் மாறுதலடைந்து வந்துள்ளது. பெண்களை ஆதிக்கப்படுத்தும் ஆண்களுக்கிடையிலான பரஸ்பர உறவுகளின் வடிவங்கள் காலப்போக்கில் மாறியுள்ளன. ஆண்களுக்கிடையிலான அதிகாரப் படிநிலை அமைப்பும் ஆணாதிக்க முறைமையின் நன்மைகளைப் பெறுவதில் அவர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடும் முக்கியமாக ஆராயப்பட வேண்டியதாகும். வெவ்வேறு வர்க்கம், இனம், தேசம், திருமண அந்தஸ்து, பாலுறவுத் தேர்வு (Sexual Orient), வயது ஆகியவற்றை உடைய பெண்கள் வெவ்வேறு வகையான ஆணாதிக்க முறைமை அதிகாரத்திற்கு உட்படுகின்றனர். பெண்களும் கூட தமது ஆண்களை விட குறைந்த அந்தஸ்திலுள்ள ஆண்கள் மீது மேற்கூறிய அதிகாரங்களை பிரயோகிக்க முடியும்.

மீண்டும் மேலே கூறியவற்றை திருப்பிக் கூறுவதானால், பெண்களை ஆதிக்கப்படுத்தக் கூடியவர்களாக ஆண்களை ஆக்குகின்ற அவர்களுக்கிடையிலான அதிகாரப் படிநிலை அமைப்பு உறவுகளையும், ஒருமைப்பாட்டையும் கொண்டதுமான பொருள்வகை அடிப்படையைக் கொண்ட சமூக உறவுகளின் ஒரு தொகுதி ஆணாதிக்க முறைமை என நாம் வரைவு செய்கின்றோம். ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படை பெண்களின் உழைப்புச் சக்தியைக் கட்டுப்படுத்துவதாகும். பெண்களது பாலியலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் அத்தியாவசியமான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து அவர்களை புறம் தள்ளி வைப்பதன் மூலமும் ஆண்கள் இதனைச் சாதிக்கிறார்கள். பெண்களிடமிருந்து தமக்கு தனிப்பட்ட சேவைகளைப் பெறுவதன் மூலமும், வீட்டுவேலை பிள்ளை வளர்ப்பு போன்றவற்றில் தாம் ஈடுபடாமல் இருப்பதாலும், தமது பாலியல் தேவைகளுக்கு பெண்களின் உடலை அடையக் கூடியமையினாலும் இந்த அதிகாரத்தை அவர்கள் செயற்படுத்தி தாம் அதிகாரமுள்ளவர்கள் என உணர்கின்றனர், அதிகாரமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.

தற்காலத்தில் நாம் அனுபவிக்கும் ஆணாதிக்க முறைமையின் அம்சங்களாவன 'எதிர்ப்பால்' திருமணம் (இதன் விளைவாக ஏற்படும் ஓரினப் பால் புணர்ச்சியின் மீதான வெறுப்பு), பிள்ளை வளர்ப்பு, வீட்டு வேலைகள் பெண்களுக்கென ஒதுக்கப்படுதல், பெண்கள் ஆண்களில் பொருளாதார ரீதியாக தங்கியிருத்தல், அரசு, ஆண்களிடையேயான சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு நிறுவனங்கள் – கழகங்கள் (Clubs) விளையாட்டுகள், தொழிற்சங்கங்கள், தொழில்கள், பல்கலைக் கழகங்கள், கூட்டுத்தாபனங்கள், ஆயுதப்படைகள் – ஆகியவையாகும். ஆணாதிக்க முறைமையிலான முதலாளித்துவத்தை புரிந்துகொள்ள இவை யாவற்றையும் நாம் பரிசீலித்தல் வேண்டும்.

அதிகாரப் படிநிலை அமைப்பும், ஆண்களுக்கிடையிலான பரஸ்பர தங்கியிருத்தலும் பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலைமையும் எமது சமூகத்தின் செயற்பாட்டுடன் ஒன்றிணைந்ததாகும். அதாவது இவ்வுறவுகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய உறவுகளின் உருவாக்கம் பற்றிய வினாக்களை ஒருபுறம் வைப்போம். இப்போது முதலாளித்துவ சமூகத்தில் ஆணாதிக்க முறைமை உறவுகளை இனம் காணமுடியுமா? என்ற கேள்வியை எழுப்புவோம். முதலாளித்துவ சமூகங்களுக்குள் ஆண்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டையும் உறவையும் நாம் இனம் காண்பதுடன் அவை எவ்வாறு தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகின்றன என்பதையும் ஆராய வேண்டும். முதலாளித்துவ சமூகங்களின் வளர்ச்சிப் பாதையை ஆணாதிக்க முறைமை வடிவமைத்துள்ள வழிவகையை நாம் இனம் காண முடியுமா?

> தீவிர பெண்நிலைவாதிகளைப் பொறுத்த வரையில் "தனிப்பட்டது என்பதும் அரசியலே" என்பதன் பொருள் யாதெனில், ஆண் பெண்களுக்கிடையிலான பிரிவினையே முதலில் உருவானதும் அடிப்படையானதுமான வர்க்கப் பிரிவினையாகும். அத்துடன் பெண்கள் மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துவதற்கான ஆண்களின் போராட்டமே —பாலின் இயங்கியலே (Dialectical Sex) – வரலாற்றின் இயங்கு சக்தியாகும்.

## 3. முதலாளித்துவத்தினதும் ஆணாதிக்க முறைமையினதும் கூட்டு (Partnership)

முதலாளித்துவ சமூகங்களில் எவ்வாறு ஆணாதிக்க உறவுகளை இனம் காண்பது? பெண்கள் தமது சொந்த ஆண்களால் ஒடுக்கப்படுவது போல் தோன்றுகிறது. அது தனிப்பட்ட ஒன்றாகவும் தோன்றுகிறது. குடும்பங்களுக்கிடையிலும் ஆண்களுக்கிடையிலும் உறவு துண்டாடப் பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. ஆண்களுக்கிடையிலானதும், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலானதுமான உறவை ஒழுங்கு முறையான ஆணாதிக்க முறைமையாக இனம் காணுதல் கடினம்தான். எவ்வாறாயினும் ஆணாதிக்க முறைமை ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையிலான உறவுமுறையாக முதலாளித்துவ சமூகத்தில் அமைந்துள்ளது. அத்துடன் முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்க முறைமைக்கும் இடையே ஆரோக்கியமானதும், பலமானதுமான உறவு நிலவுகின்றது.

இன்றும் ஒருவர் ஆணாதிக்கம் பற்றிய கருத்தாக்கத்துடனும், முதலாளித்துவ உற்பத்தி முறை பற்றிய விளக்கத்துடனும் தொடங்குவாராயின் முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் இடையிலான கூட்டு என்பது தவிர்க்க முடியாதது அல்ல எனவும், பெண்களின் உழைப்புச் சக்தியை பயன்படுத்துவது என்ற குறிப்பான பிரச்சனையில் முதலாளித்துவத்திற்கும் ஆண்களுக்கும் இடையே முரண்பட்ட நலன்களைக் கொண்டிருப்பதையும் உடனடியாகவே அவர் இனம் காண்பார், பெருந்தொகையான ஆண்கள், பெண்கள் தமக்கு தனிப்பட்ட வகையில் வீட்டில் சேவை செய்ய வேண்டும் என விரும்புவர். ஆனால் முதலாளிகளான சிறுதொகை ஆண்கள் கூலி உழைப்புச் சந்தையில் பெண்கள் வேலை செய்ய வேண்டுமென விரும்புகின்றனர். இத்தகைய முரண்பாடுகளைப் பரிசீலிப்பதன் மூலம் ஆணாதிக்க முறைமை உறவுகளின் பொருள்வகை அடிப்படையையும், முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்க முறைமைக்கும் இடையிலுள்ள தொடர்பையும் இனம் காணக் கூடியதாக இருக்கும்.

### தொழில் மயமாதலும் குடும்ப வேதனத்தின் வளர்ச்சியும்

19ம் நூற்றாண்டில் தாம் கண்ட சமூக அம்சங்கள் சிலவற்றை வைத்து மார்க்சிய வாதிகள் குறிப்பிடத்தக்க தர்க்க ரீதியான முடிவுகளைச் செய்தனர். ஆனால் ஏற்கனவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலவிய ஆணாதிக்க சமூக சக்திகளின் பலத்தையும் இச் சக்திகளுடன் இணைந்து போக வேண்டிய தேவை முதலாளித்துவத்திற்கு இருந்ததையும் இவர்கள் குறைத்தே மதிப்பிட்டனர். கைத்தொழில் புரட்சியானது பெண்கள், சிறுவர்கள் உட்பட யாவரையும் உழைப்புப் படையில் சேர்த்தது. உண்மையில், முதலில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் பெண்களதும் சிறுவர்களதும் உழைப்பையே அனேகமாக முழுக்க முழுக்கப் பயன்படுத்தின. பெண்களும், சிறுவர்களும் ஆண்களிலிருந்து வேறாக வேதனம் பெற்றதானது அதிகார உறவு களைப் பலவீனப் படுத்தியதுடன் அனைவரது வேதனத்தையும் தாழ்ந்த மட்டத்தில் வைத்திருக்கவும் செய்தது. கோட்ஸ்கி 1892ம் ஆண்டு இது நிகழும் முறை குறித்து பின்வருமாறு கூறினார்:

"ஆண் தொழிலாளியின் மனைவியும் பிள்ளைகளும் தம்மைத் தாமே பராமரிக்க இயலுமானவர்களாயிருந்தனர். ஆண் தொழி லாளியின் வேதனமானது அவனது சொந்தத் தேவைகளின் பெறுமதியளவிற்கு, உழைப்புப் படையில் புதியவர்களை சேர்ப்பது தடைப் படாமலே குறைக்கப்படலாம்."

"பெண்களதும், பிள்ளைகளதும் உழைப் பைப் பெறுவதில் மேலதிக நன்மையும் உள்ளது. அதாவது இவர்கள் எதிர்ப்பை ஆண்களிலும் பார்க்க குறைவாகவே வெளிக்காட்டுவர். அத்துடன் உழைப்புச் சந்தையில் தொழிலாள ரின் எண்ணிக்கையையும் பெருமளவில் அதிகரிக்கின்றது."

"பெண்கள், பிள்ளைகளது உழைப்பானது சந்தையில் குவிவதானது ஆண் தொழிலாளர் களது போராடும் ஆற்றலைக் குறைத்தது. இவற்றின் விளைவாக ஆண் தொழிலாளர் களின் வேதனங்கள் குறைவடைந்தன."

குறைந்த வேதனம், உழைப்புச் சந்தையில் குடும்ப அங்கத்தவரது கட்டாய பங்கேற்பு ஆகியவை தொழிலாளர் குடும்பத்தில் ஏற்படுத் தும் மோசமான விளைவுகள் மார்க்சியவாதி களால் இனம் காணப்பட்டன. கோட்ஸ்கி பின்வருமாறு எழுதினார்:

"முதலாளித்துவ உற்பத்தி முறை ஆண் தொழிலாளிகளின் குடும்ப அலகை அழிக்க வில்லை. ஆனால் மகிழ்ச்சியற்ற அம்சங்க ளைத் தவிர்த்து ஏனையவற்றைத் திருடிக் கொண்டது. இன்று பெண்ணினது சுமைகள் வேறும் புதியவை சேர்ந்ததன் மூலம் அதிகரித்துள்ளன. ஆனால் ஒருவர் இரு எஜமானர்களுக்குச் சேவை செய்யமுடியாது. ஆண் தொழிலாளியின் குடும்பம் அவனது மனைவி தொழில் செய்து சம்பாதிக்கும்படி நேரும்போது பாதிக்கப்படுகின்றது."

பெண்களது கூலி உழைப்பினால் ஏற்படும் அசௌகரியங்களை பற்றி கோட்ஸ்கி போலவே உழைக்கும் ஆண்களும் உணர்ந்திருந்தனர். பெண்கள் உழைப்புச் சந்தையில் 'மலிவான போட்டியாளர்களாக' மாத்திரமன்றி ஆண் தொழிலாளர்களின் மனைவியராக வுமிருந்தனர். இப் பெண்கள் இரு எஜமானர்களுக்கு சிறப்பாக சேவையாற்ற முடியாதவர்களாக இருந்தனர்.

ஆண் தொழிலாளர், பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் பெருமளவு உழைப்புப் படையில் சேருவதை எதிர்த்தது மட்டுமன்றி தொழிற்சங்க அங்கத்துவ உரிமைகளில் இருந்தும் அவர்க ளைப் புறம் தள்ளி வைத்தனர். 1846ம் ஆண்டு 'பத்து மணித்தியாலங்களுக்காக வாதிடுவோர்' *(Ten Hours Advocates)* பின்வருமாறு கூறினர்:

"பெண் தொழிலாளரது வேலை நேரத்தைக் குறைத்தாலன்றி அவர்களது பௌதிக, உளவியல் நிலைகளை முன்னேற்றக் கூடிய முயற்சிகள் முழுப் பலனையும் தராது என நாம் கூறவேண்டிய அவசியமில்லை. திருமணமான பெண்கள் குடும்பக் கடமைகளை செய்வதே கூடிய நன்மை தருமென நாம் கூறுவோம். பருத்தி ஆலையில் கடின வேலை செய்வதற்குப் பெண்களை அனுப்பாமல் குடும்பத்திற்கு தேவை யான யாவற்றையும் கணவனே வழங்கக்கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை என நாம் நம்புகின்றோம்."

1854ம் ஆண்டில் அமெரிக்காவில் தேசிய அச்சகச் சங்கம் பெண் அச்சு கோப்பாளர்களை வேலைக்குச் சேர்ப்பதை ஊக்கப்படுத்தக் கூடாது என முடிவு செய்தது.

பெண் தொழிலாளர்களுக்கு சங்கப் பாதுகாப்பு அளிக்கவும் ஆண் தொழிற்சங்க அங்கத்தவர் கள் விரும்பவில்லை. 1879ம் ஆண்டு சுருட்டுத் தொழிலாளர்களின் சர்வதேசிய சங்கத் தலைவர் அடால்ப் ஸ்ராசா பின்வருமாறு கூறினார்:

" நாம் பெண்களை தொழிலில் இருந்து நீக்கமுடியாது. ஆனால் ஆலைச் சட்டங்களி னூடாக அவர்களது எண்ணிக்கை கூடுவ தைத் தடுக்க முடியும்."

கூலி பெறும் பெண்களையும் இளைஞர் களையும் ஒழுங்கமைப்பதன் மூலம் மலிவான போட்டி ஏற்படுத்தும் பிரச்சனைகள் தீர்க்கப் படக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால் குடும்ப வாழ்வு பாதிக்கப்படுவதை தீர்த்திருக்க முடியாது. ஆண்கள் தொழிற்சங்கப் பாதுகாப்பை ஆண்களுக்கு மட்டுப்படுத்திக் கொண்டு பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் தொழிற் சங்கப் பாதுகாப்புச் சட்டங்கள் தேவை என வாதிட்டனர். இந்தச் சட்டங்கள் பெண்கள், சிறுவர்கள் ஆகியோரது உழைப்பு தொடர்பான சில தீமைகளைக் குறைத்தாலும் ஆண்களுக் குரிய தொழில்கள் எனக் கருதப்பட்டவற்றில் பெண்கள் ஈடுபடுவதை மிகவும் மட்டுப் படுத்தின. உயர்ந்த வேதனம் அளிக்கும் வேலைகளை ஆண்கள் தாமே வைத்துக் கொண்டு ஆண்களுக்கான வேதனங்களை பொதுவாக உயர்த்த முயன்றனர். குடும்பத்துக்கு தேவையான செலவுக்குப் போதுமான பணம் வேதனமாகத் தரப்பட வேண்டும் என அவர்கள் கோரினர்.

19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் "குடும்ப வேதனம்" தொழிலாளர் குடும்பங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறையாகிவிட்டது. ஆண் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தினுள் கூலி ஊழைப்பில் ஈடுபட அவசியம் இல்லாத மனைவி என்பதும் உள்ளடக்கப்பட வேண்டும் எனப் பலரும் வாதிட்டனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம சம்பளம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்குப் பதிலாக ஆண் தொழிலாளர்கள் குடும்ப வேதனக் கோரிக்கையை முன்வைத்து, தமது மனைவியர் வீட்டில் வேலை செய்வதை விரும்பினர். ஆணாதிக்கமானது இல்லாதிருந்தால் ஐக்கியப் பட்ட தொழிலாள வர்க்கமானது முதலாளித்துவ த்தை எதிர்த்துப் போராடியிருக்கும். ஆனால் ஆணாதிக்க சமூக உறவுகள் தொழிலாள வர்க்கத்தை பிரித்ததன் காரணமாக, அதன் ஒரு பகுதியை (பெண்களை) விலையாகக் கொடுத்து மற்றப் பகுதி (ஆண்கள்) தம்மை விடுவித்துக் கொண்டது. ஆண்களுக் கிடையிலான அதிகாரப் படிநிலை அமைப்பு அடிப்படையில் அமைந்த உறவுகளும் அதேசமயம் அவர்களிடையே காணப்பட்ட ஒருமைப்பாடும் இத்தகைய ஒரு தீர்வை ஏற்படுத்தும் செயல்முறையில் முக்கியமாக செயல்பட்டன. பெண்களுடைய உழைப்புச் சக்தி குறித்து ஆணாதிக்க முறைமை, முதலாளித்துவம் ஆகியவற்றுக் கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் ஒரு தீர்வாக 'குடும்ப வேதனம்' விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

ஆண்களுக்கு குடும்ப வேதனம் அளிப்ப தானது, ஏனையவர்களுக்கு குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், சமூகத்தில் குறைந்த அந்தஸ்து உடையவர்கள் எனக் கருதப்படுபவர்கள் (ஐரிஸ் நாட்டவர், கறுப்பின மக்கள்) ஆகியோருக்குக் குறைந்த வேதனம் அளிப்பதற்கு வழிவகுக்கின்றது. பெண்கள், சிறுவர்கள், தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள ஆண்கள் ஆகியோருக்குக் குறைந்த வேதனம் வழங்குதல் உழைப்புச் சந்தையில் காணப்படும் வேலைப் பிரிவினையால் நிலைநிறுத்தப் படுவதாகும். இந்தப் பிரிவினையானது தொழிற்சங்கம், நிர்வாகம் முதலியவற்றாலும் பாடசாலைகள், பயிற்சி நெறிகள், இன்னும் குடும்பம் போன்ற துணையான நிறுவனங் களாலும் மேலும் தூண்டப்படுகிறது. பால் அடிப்படையில் வேலைப் பிரிவினையும், பெண்களுக்குக் குறைந்த வேதனம் பெறும் தொழில் வழங்குவதும் பொருளாதார ரீதியாக ஆண்களில் பெண்கள் தங்கியிருத்தலையும், ஆண், பெண்ணுக்கு வேறுவேறான பொருத்தமான இடச் செயற்களங்கள் உள்ளன என்ற கருத்தையும் உறுதி செய்வதாகும்.

எனவே பெரும்பான்மையான ஆண்களுக்கு குடும்ப வேதனத்தின் தோற்றமானது இரு வகையில் ஆணாதிக்கத்திற்கான பொருள்வகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையை அளிக்கிறது. முதலாவது, உழைப்புச் சந்தையில் ஆண்களுக்கு நல்ல தொழில்களையும், உயர்ந்த வேதனத்தையும் பெறும் சாத்தியப்பாடு உண்டு. பெண்கள் குறைந்த வேதனம் பெறுவதானது ஆண்களது பொருள்வகை ரீதியான உயர்ச்சிக்கும், பெண்கள் மனைவியராக இருத்தலை ஒரு தொழிலாகக் கொள்வதனையும் நீடிக்கச் செய்கிறது. இரண்டாவது, ஆண்களுக்கு நேரடியாக நன்மை அளிக்கும்படி பெண்கள் வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு, ஏனைய சேவைகள் ஆகியவற்றைச் செய்கின்றனர். பெண்களது வீட்டுக் கடமைகளாவன, உழைப்புச் சந்தையில் அவர்களது தாழ்த்தப்பட்ட நிலையை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த குடும்ப வேதனம் தொடர்பான இந்த விருத்திகள் முதலாளித்துவ நலன்களுக்கும் ஆணாதிக்க முறைமை நலன்களுக்கும் நன்மை தருவனவாய் அமைந்தன. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிலவிய கடுமையான நிலைமைகளால் தொழிலாளர் குடும்பங்கள் போதுமான அளவு தம்மை மறுஉற்பத்தி செய்து பெருக்கவில்லை என்பதை முதலாளித்துவ வாதிகள் கண்டு கொண்டனர். வீட்டுக்கு வெளியே வேலை செய்து உழைக்கும் பெண் வளர்க்கும் பிள்ளைகளை விடவும் வீட்டில் தங்கும் மனைவி வளர்க்கும் பிள்ளைகள் கல்வி கற்றவர்களாகவும், நல்ல வேலையாட்களாகவும் இருப்பதை பலரும் உணர்ந்தனர்.

"ஆண்களுக்கு குடும்ப வேதனம் வழங்குதல், பெண்களை வீடுகளில் வைத்தல்" என்ற பேரமானது ஆண் தொழிலாளர்களுக்கு எந்தளவுக்கு நல்ல வாய்ப்புகளை தந்தனவோ அதுபோல முதலாளிகளுக்கும் பொருத்தமாக அமைந்தது. பேரம் பேசுதலின் விதிகள் காலப்போக்கில் மாறினாலும் கூட குடும்பம் அதில் பெண்ணின் உழைப்பும் முதலாளித் துவத்திற்கு உழைப்பாளர் படையை அளிப்பதன் மூலம் சேவை செய்கின்றன. அத்துடன் தமது சலுகைகளை அனுபவிப்பதற்கு ஒரு இடத்தை உருவாக்குவதன் மூலம் ஆண்களுக்கும் சேவை செய்கின்றது. ஆண்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் உழைப்பதன் மூலம் சேவையாற்றுவது மட்டுமன்றி மூலதனத்திற்கும் நுகர்வோராக பெண்கள் சேவை புரிகின்றனர். பயர்ஸ்ரோன், பிராங்போட் சிந்தனை கூடம், வேறும் பலர் கூறியது போல பணிவு, ஆதிக்கம் ஆகியவற்றின் பயிற்சிக் கூடமாகவும் குடும்பம் விளங்குகின்றது. கீழ்ப் படிவுள்ள சிறுவர்கள் பணிவுள்ள வேலையாட்கள் ஆகின்றனர். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் தத்தமக்குரிய பாத்திரங்களைப் பழகுகின்றனர்.

குடும்ப வேதன முறையானது முதலாளித்துவம், ஆணாதிக்க முறைமையுடன் இசைந்து செல்கிறது என்பதை விளக்கும் அதேசமயம் சிறுவர்களுடைய மாறும் அந்தஸ்தானது ஆணாதிக்க முறைமை முதலாளித்துவத்துடன் இசைந்து செல்கிறது என்பதையும் விளக்குகின்றது. பெண்களைப் போலவே சிறுவர்களும் கூலி உழைப்பிலிருந்து புறம் தள்ளப்பட்டனர். பணம் உழைக்கும் சாத்தியப்பாடு குறைவடைந்தபோது சிறுவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இடையிலான சட்ட உறவும் மாறியது. அமெரிக்காவில் கைத்தொழில் காலகட்ட ஆரம்பத்தின் போது பிள்ளைகளின் தேவையை நிறைவு செய்ய அத்தியாவசியமானவர்களாக தந்தையர் கருதப்பட்டனர். சிறுவர் தாபரிப்பு வழக்குகளில் தந்தையருக்கு சட்ட முக்கியத்துவமும், முதன்மையும் அளிக்கப்பட்டது. பிள்ளைகளது உழைக்கும் திறன் குறைவடைந்த போது அன்னையர் அவர்கட்கு பொறுப்பானவர்களாகக் கருதப்பட்டனர். இங்கு பிள்ளைகளின் மாறும் பொருளாதார நிலைக்கேற்ப ஆணாதிக்க முறைமையும் தனது நலன்களை மாற்றிக் கொள்கிறது. பிள்ளைகள் அதிகளவு உற்பத்தித் தகைமையுடையோராக இருக்கும் போது அவர்களை ஆண்கள் உரிமை கொண்டாடினர். உற்பத்தித்திறன் குறைந்த போது பிள்ளைகள் பெண்களிடம் கொடுக்கப்பட்டனர்.

## 20ம் நூற்றாண்டில் முதலாளித்துவமும் ஆணாதிக்க முறைமையும்

19ம் நூற்றாண்டு மார்க்சியவாதிகள் முதலாளித்துவத்தின் வருகையுடன் ஆணாதிக்க முறைமை மெதுவாக அழிந்துவிடும் என்று முன்னுரைத்தமை உண்மையாகிவிடவில்லை. ஆணாதிக்க முறைமையின் பலம், நெகிழ்ச்சி ஆகியவற்றை அது குறைத்து மதிப்பிட்டது மாத்திரமன்றி, முதலாளித்துவத்தின் பலத்தையும் அதிகமாக மதிப்பிட்டது. நிலப்பிரபுத்துவத்தை தகர்த்து எறிந்த முதலாளித்துவத்தின் புதிய சமூக சக்தியை மிகவும் ஆற்றல் மிக்கதாக கருதினார்கள். சமகால அவதானிகள், நடைமுறையில் வரலாற்று சக்திகளை முகம் கொடுக்க நேர்கையில் தூய முதலாளித்துவத்தின் தன்மைகட்கும், யதார்த்தமான முதலாளித்துவத்தின் தன்மைகட்கும் இடையேயுள்ள வேறுபாட்டை சுட்டிக் காட்டக் கூடியவர்களாயுள்ளனர். முதலாளித்துவத்திற்கும் இன (Race) ஒழுங்குகள், உழைப்புச் சந்தையின் கூறுபாடுகள் ஆகியவற்றுக்கிடையிலான இணைப்புப் பற்றிய ஆராய்ச்சி எவ்வாறு தூய முதலாளித்துவ சக்திகள் வரலாற்று யதார்த்தத்தை நோக்குகின்றன என்பதற்கு உதாரணங்களைத் தருகிறது.

இத்தகைய செயல் முறையில் முதலாளித்துவம் அதிகளவு நெகிழ்ச்சியை காட்டுகிறது.

தென்னாபிரிக்கா பற்றி ஆராய்ந்த மார்க்சியவாதிகள் இன (Race) ஒழுங்குகள் சகல மக்களினதும் சமத்துவமான தொழிலாளர்மயப்படுத்தலை அனுமதிக்காவிடினும் இது இனத்தடைகள் மூலதனத்தின் குவிப்பைத் தடைசெய்யும் என்பதை குறிக்காது என வாதிடுகின்றனர். சூட்சுமமான நிலையில் அதிகளவான உபரி மதிப்பை உறிஞ்சி எடுக்கக் கூடிய ஒழுங்குகள் யாவை என்பது பற்றி ஆராச்சியாளர்கள் ஆராயக்கூடும் எனினும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிலையில் சமூகக் கட்டுப்பாடு, தொழிலாளரின் எதிர்ப்பு, அரசின் குறுக்கீடு என்பவை குறித்து முதலாளிகள் அக்கறை கொள்ளக் கூடும். சமூகத்தினை முழுமையாக மறுஉற்பத்தி செய்யக் கூடியதாக அரசு தலையீடு செய்வது அவசியமானதாகிறது. சில முதலாளிகளை கண்காணிப்பதும், மூலதனத்தின் சில அதிருப்திகரமான அம்சங்களைத் தவிர்ப்பதும் முக்கியமானதாகும். இத்தகைய அம்சங்களையும் கவனத்திற்கு எடுத்து கூடியளவு நடைமுறை ரீதியான இலாபங்களை முதலாளிகள் அதிகரிக்கக் கூடும். கூலி உழைப்பாளர் படையில் மேல், கீழ் மட்டங்களை யார்யார் நிரப்புவது என்பதை மூலதனம் தானாகவே நிர்ணயிக்காத போதிலும் முதலாளிகள், சமூகக் கட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு அவ் வேலைகளை ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒழுங்கமைப்பர். முதலாளிகள் ஆதிக்க சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் இனவாதிகளாகவும், (பால்வாதிகளாகவும்) இருப்பது மேற்கூறிய ஒழுங்கமைப்பிற்கு உதவி செய்கிறது.

உழைப்புச் சந்தையை கூறுபோடும் ஏகபோக மூலதனத்தின் குணாம்சங்கள் பற்றிய அண்மைக்கால விவாதங்கள் மேற்கூறிய புரிதல்களுடன் ஒத்துப் போகின்றன. தொழிலாளர்களின் இயற்கையான பண்புகளைப் பயன்படுத்தி உழைக்கும் வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதன் மூலம் முதலாளிகள் திட்டமிட்டு உழைப்பாளர் சக்தியை துண்டாடுகின்ற சந்தர்ப்பங்களில், அவர்களின் இம் முயற்சியானது குறுகிய அர்த்தத்தில் மூலதனத்தின் திரட்சிக்கான தேவை என்பதை விட சமூகக் கட்டுப்பாட்டை பெற்றுக் கொள்ளும் அவசியத்திலிருந்தே எழுகிறது.

காலப்போக்கில் இவ்வாறான எல்லா பிளவு முயற்சிகளும் பிளவுபடுத்துவதில் வெற்றியைத் தருவதில்லை. உழைப்புச் சக்தியை வடிவமைப்பதிலுள்ள மூலதனத்தின் திறமையானது இரண்டு அம்சங்களில் தங்கியுள்ளது. ஒன்று குறுகிய அர்த்தத்தில் வருமானத்தையே திரட்டுவதற்கான அத்தியாவசிய தேவைகள்: (உ–ம். பெருமளவு எண்ணிக்கையிலான தொழிலாளர்கள், தமக்கிடையில் தொடர்பு கொள்வதை அவசியமாக்கும் விதத்தில் உற்பத்தியானது ஒழுங்கமைக்கப் பட்டிருப்பின், தொழிலாளர் அனைவரும் ஒரே மொழியைப் பேசுபவர்களாக இருப்பது பயனை விளைவிக்கிறது). இரண்டாவது, அனுசரித்துச் செல்லுமாறு மூலதனத்தை நிர்ப்பந்திக்கும்/ தூண்டும் சமூக சக்திகள் ஒரு சமூகத்தில் காணப்படுவது: (உ–ம். தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் தனித்தனியான குளியலறை வசதிகளை அமைப்பது முதலாளிகளுக்கு பொருளாதாரச் செலவைக் கூட்டலாம். ஆனால் கறுப்பர்களுடன் ஒன்றாக குளியலறையைப் பாவிக்குமாறு நிர்ப்பந்திப்பதால் ஏற்படும் சமூக இழப்புடன் ஒப்பிடுகையில் இந்தப் பொருளாதாரச் செலவு அற்பமானதே.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலுள்ள வாதத்தின் முதலாவது கூறானது, முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் மூலதனமானது முழுக்க முழுக்க பலமானதல்ல என்பதை எடுத்துக் காட்டுகிறது. இரண்டாவது கூறானது மூலதனத்தின் சிறப்பான நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டுகிறது. மூலதனக் குவிப்பானது ஏற்கனவே நிலவும் சமூக விழுமியங்களை எதிர்கொள்கையில் சிலவற்றை அழிக்கிறது. அதேசமயம் இன்னும் சில வற்றுடன் இசையவும் செய்கிறது. இவ்வாறு இசைந்து செல்வதானது புதிய சூழலில், ஏற்கனவே நிலவும் சமூக வடிவங்கள், தம்மை விடாப்பிடியாக தக்கவைத்துக் கொள்வதில் வெளிப்படுத்தும் பலத்தின் அடையாளமாகும். இப்படியாக பழைய சமூக வடிவங்கள் தம்மை தக்கவைத்துக் கொள்ளினும் கூட, அவை மாற்றம் அடையாமலுமில்லை. உதாரணமாக, இனமும், பாலும் விளங்கிக் கொள்ளப்படும் சித்தாந்தமானது, மூலதன குவிப்பு செயல் முறையில் இன, பால் பிரிவுகள் மீள்உறுதிப்படுத்தப்படும் முறையால் வடிவமைக்கப்படுகிறது.

## இன்று குடும்பமும் குடும்ப வேதனமும்!

முதலாளித்துவமும் ஆணாதிக்க முறைமையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து போதலின் விளைவாக 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குடும்ப வேதன முறை உருவாகியது என மேலே வாதிட்டோம். முதலாளித்துவத்தினதும் ஆணாதிக்க முறைமையினதும் இணைப்பை குடும்ப வேதனம் உறுதி செய்தது. உழைப்புச் சக்தியில் பெண்களுடைய அதிகரித்த அளவு பங்களிப்பு இருந்த போதிலும் –குறிப்பாக 2ம் உலக யுத்தத்திலிருந்து இது விரைவாக அதிகரித்திருந்தது– பெண்கள் பிரதானமாக வீட்டு வேலைகளுக்குப் பொறுப்பாகவும் ஆண்கள் பிரதானமாக கூலி உழைப்புக்குப் பொறுப்பாகவும் உள்ளதுமான இன்றைய பால் ரீதியான வேலைப் பிரிவினைக்கு குடும்ப வேதனமே இன்றும் அத்திவாரமாக உள்ளது. உழைப்புச் சந்தையில் பெண்ணினது குறைந்த வேதனமானது (பிள்ளைகள் வேறொருவரால் வளர்க்கப்பட வேண்டிய தேவை உள்ள நிலையுடன் சேர்ந்து) குடும்பம் ஒரு வருமான அலகு என்ற நிலை தொடர்ந்திருக்கவும் காலாக அமைகின்றது. குடும்ப வேதனத்தால் தாங்கப்படும் குடும்பமானது இதனால் பெண்களது உழைப்பைக் குடும்பத்தினுள்ளும் வெளியிலும் கட்டுப்படுத்துவதற்கு ஆண்களை அனுமதிக்கின்றது.

பெண்களது கூலி உழைப்பானது குடும்பத்தில் பல அழுத்தங்களை ஏற்படுத்தினும் இதன் விளைவாக குடும்பமும் பால் அடிப்படையில் அமைந்த வேலைப் பிரிவினையும் ஒழிந்து விடும் என்று கருதுவது பிழையானதாகும். பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினை உழைப்புச் சந்தையில் மீண்டும் தலைகாட்டுகின்றது. அங்கும் அவர்கள் வீட்டில் செய்யும் வேலைகளைப் போன்றவற்றையே செய்கின்றார்கள். (உணவு சமைத்தல், துப்பரவாக்குதல், பராமரிப்பு போன்றவை). இந்த வேலைகள் குறைந்த அந்தஸ்து உடையனவாகவும் குறைந்த ஊதியம் தருவனவாகவுமுள்ளன. ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படை குடும்பத் தளத்திலிருந்து உழைப்புச் சந்தைக்கு மாறுகிறது. அது கைத்தொழில் அடிப்படையிலானதாக மாறுகிறது.

கைத்தொழில் அடிப்படையில் அமைந்த ஆணாதிக்க முறைமை உறவுகள் பல வழிகளில் உறுதிப்படுத்தப்படுகின்றன. குறைந்த வேதனம், குறைந்த நன்மைகள், வாய்ப்புகள் என்பவற்றை பெண்களுக்கு தொழிற் சங்கங்கள் பிரேரிப்பதானது வெறுமனே பால்வாதம், ஆணாதிக்கம் ஆகியவற்றின் மீத மிச்சங்களால் அல்ல, அவை உண்மையில் ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படையை உறுதி செய்கின்றது. குடும்பத்திலிருந்து ஆணாதிக்கம் ஏற்கனவே மறைந்தொழிந்து விட்டது எனும் அளவிற்கு சிலர் வாதிக்கின்ற போதிலும் நாம் அதனை மறுக்கின்றோம். ஆணாதிக்கத்திற்கும் மூலதனத்திற்கும் இடையில் ஏற்படும் இணக்கத்திற்கான நிபந்தனைகள் மாறிச் செல்கின்றன என்றபோதிலும், நாம் ஏற்கனவே விவாதித்தது போல, உழைப்புச் சந்தையில் வேலைகளை தீவிரமாக பாகுபடுத்துவதால் ஏற்படும் வேதன வேறுபாடானது குடும்ப அமைப்பையே பலப்படுத்துவதாக உள்ளது என்பது உண்மையாகும். அத்துடன் பெண்களை திருமணம் செய்ய ஊக்குவிப்பதன் மூலம் வீட்டு உழைப்புப் பிரிவினையும் பலப்படுத்தப்படுகிறது என்பதும் உண்மையே.

ஒரு குடும்பத்தைத் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு ஆண்கள் சம்பளம் பெற முடியும் என்பதைக் குறிக்கின்ற குடும்ப வேதனம் என்ற கருத்தாக்கமானது இன்னொரு கருத்தாக்கத்திற்கு –ஆணும் பெண்ணும் உழைத்து ஒரு குடும்பத்தின் வருமானத்திற்கு உதவுபவர் என்பதற்கு– இடமளிக்கிறது. வேதனத்திலுள்ள வேறுபாடு ஆணாதிக்க முறைமையையும், பெண்களின் உழைப்பைக் கட்டுப்படுத்தலையும் உறுதி செய்கின்றது. இந்த வேதன வேறுபாடானது பெண்களின் வேலையை இரண்டாந்தரமானது என வரைவு செய்வதற்கு உதவுவதுடன் பெண்கள் ஆண்களில் தங்கியிருத்தலை தொடரவும் வழிவகுக்கின்றது. உழைப்புச் சந்தையில் காணப்படும் பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினை ஆணாதிக்க முறைமையை உறுதி செய்கின்ற அதனது வெளிப்பாடு என்ற கூறலாம்.

ஆணாதிக்க முறைமையும் முதலாளித்துவமும் இன்று ஒன்றுடன் ஒன்று இணைந்து சென்றாலும் காலப் போக்கில் முதாலாளித்துவம் அதனைப் பொறுத்துக் கொள்ளாது என பலர் வாதிட்டுள்ளனர். காலப்போக்கில் குடும்பத்தையும் ஆணாதிக்க முறைமையையும் மூலதனம் ஒழித்துவிடும் என்று இவர்கள் கூறினர். இவ் வாதமானது தர்க்க ரீதியாக நீடிக்கப்படுகையில்,

> **குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் ஆணாதிக்க முறைமையிலான உழைப்புப் பிரிவினையானது இறுதியில் மூலதனத்தால் சகிக்க முடியாததாக இருக்குமோ இல்லையோ ஆணாதிக்க முறைமையானது இப்போது முதலாளித்துவத்தையே வடிவமைத்துக் கொண்டிருக்கிறது.**

முதலாளித்துவ சமூக உறவுகள் சர்வவியாபகம் அடைய பெண்கள் உழைப்பாளராவது அதிகரித்து குடும்பத்தில் ஆண்களுக்கு அடங்கிப் போக மறுப்பர் எனவும், குடும்பத்திற்கு வெளியில் சுதந்திரமாக மனிதர்களுக்கு வாழ முடியுமெனில் குடும்பம் நிலையிழந்து போகுமெனவும் கூறினர்.

ஆனால் குடும்பத்தில் இணைந்திருக்கும் ஆணாதிக்க முறைமை உறவுகள் அவ்வளவு இலகுவில் முதலாளித்துவத்தினால் அழிக்கப் படும் என நாம் கருதவில்லை. குடும்பமுறை குலைவுறுவதற்கு ஆதாரங்கள் இல்லை என்றே கொள்ளலாம். பெண்கள் வீட்டுக்கு வெளியே உழைப்பதன் அதிகரிப்பானது விவாகரத்தை சாத்தியப்படுத்தினாலும் அதற்கான உந்துதல் குறைவாகவே உள்ளது. பெண்களது சம்பளம் மிகக் குறைந்தளவு பெண்களையே சுந்திரமான முறையில் தம்மையும் தமது பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்கு இடமளிக்கிறது. மரபு வழியான குடும்பமானது சிதைவதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. விவாகரத்து வீதம் பெருமளவில் அதிகரிக்கவில்லை. ஆனால் மறுமண வீதம் அதிகரித்துள்ளது. 1970ம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பு வரையிலான காலத்தில் முதல் திருமணத்திற்கான வயது குறைத்து கொண்டே வந்திருந்தது. ஆனால் 1970 களில் இருந்து திருமணத்தையும் குழந்தைப் பேற்றையும் காலம் தாழ்த்தினாலும் கூட சமீப காலத்தில் பிறப்பு வீதாசாரம் அதிகரித்து வருகிறது. மரபு ரீதியான குடும்பங்களுக்கு வெளியே வாழ்வோரின் தொகை அதிகரித்துள்ளது. குறிப்பாக இளைஞர்கள் தாம் திருமணம் செய்து மரபு ரீதியான குடும்ப வாழ்க்கை தொடங்க முன்பே, தமது பெற்றோரின் வீடுகளில் இருந்து வெளியேறி தமக்கென இல்லங்களை அமைத்துக் கொள்கின்றனர். வயதானோர் குறிப்பாக, பெண்கள் தமது பிள்ளைகள் வளர்ந்த பின்னர், கணவர் பிரிந்த பின் அல்லது இறந்த பின் தனியாக வாழ்கின்றனர். முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் அதிகளவு இளைஞர்கள் தமது வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் கருக்குடும்பத்தை (Nuclear Family) நிறுவுவார்கள் என சமீபத்தைய போக்குகள் தெரிவிக்கின்றன.

மூலதனம் குடும்பத்தை அழித்துவிடும் என்ற வாதம் குடும்ப வாழ்க்கையை கவர்ச்சிகரமானதாக்கும் சமூக சக்திகளை அலட்சியப் படுத்துகின்றது. கருக் குடும்பம் உளவியல் ரீதியாக அழிவுத் தன்மை வாய்ந்தது என்ற விமர்சனம் இருந்தாலும் கூட இந்தப் போட்டிச் சமூகத்தில் குடும்பமானது பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதர்களது தேவைகளை நிறைவு செய்கின்றது. இது நீண்டகால ஒரு தார மண உறவில் மட்டுமன்றி குழந்தை வளர்ப்பிற்கும் அவசியமானதாகும். தனிப் பெற்றோர் (Single Parent) குழந்தை வளர்ப்பின் நிதிப் பொறுப்பினையும், உளவியல் அழுத்தங்களையும் தாங்க வேண்டியுள்ளது. குறிப்பாக தொழிலாளி வர்க்கப் பெண்களுக்கு இத்தகைய சுமைகள் உழைப்புப் படையில் பங்கேற்கும் சுதந்திரத்தை பொய்யாக்கி விடுகின்றன.

உழைப்புச் சந்தையில் பெண்களது அதிரிக்கும் பங்கேற்பானது குடும்பத்திற்க்குள் பால் அடிப்படையிலான வேலைப் பிரிவினையின் வீழ்ச்சியில் பிரதிபலிக்கிறது என்று கூறினாலும் இதற்கான சான்றுகள் குறைவாகவே உள்ளன. உழைக்கும் மனைவியுள்ள குடும்பங்களில் இன்னும் அவர்களே பெருமளவு வீட்டு வேலைகளை செய்கின்றனர் என்பதை சமீப கால புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. உழைக்கும் பெண்களைப் பொறுத்தவரையில் 'இரட்டை உழைப்பு' என்பதே இன்றைய யதார்த்தமாக உள்ளது. உழைப்புச் சந்தையில் நிலவும் பால் அடிப்படையில் அமைந்த வேலைப் பிரிவினை பெண்களைப் பொருளாதார ரீதியாக ஆண்களில் தங்கியிருக்கச் செய்யும் நிலையில் இது ஆச்சரியகரமானதல்ல. ஆணாதிக்க முறைமையின் எதிர்காலம் குடும்ப உறவுகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. ஏனெனில் ஆணாதிக்க முறைமையும் மூலதனமும் போல நெகிழ்வுடையதாகவும் இணக்கத் தன்மை உடையதாகவும் உள்ளது. குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் ஆணாதிக்க முறைமையிலான உழைப்புப் பிரிவினையானது இறுதியில் மூலதனத்தால் சகிக்க முடியாததாக இருக்குமோ இல்லையோ ஆணாதிக்க முறைமையானது இப்போது முதலாளித்துவத்தையே வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. நாம் கீழே விளக்கப்போவது போல, ஆணாதிக்க முறைமையானது மூலதனக் கட்டுப்பாட்டை நியாயப் படுத்துவதுடன் மூலதனத்திற்கு எதிரான சில போராட்ட வடிவங்களை நியாயமற்றதாகவும் காட்டுகின்றது.

## இருபதாம் நூற்றாண்டில் சித்தாந்தம்

ஆணாதிக்க முறைமையானது ஆண்களுக்கிடையிலான அதிகாரப் படிநிலை அமைப்பை நிலைநிறுத்தி, நியாயப்படுத்துவதன் மூலம் (எல்லாப் பிரிவினர்களையும் சேர்ந்த ஆண்களை குறைந்த பட்சம் சில பெண்களையாவது கட்டுப்படுத்த அனுமதிப்பதன் மூலம்) முதலாளித்துவ கட்டுப்பாட்டைப் பலப்படுத்துகிறது. முதலாளித்துவ விழுமியங்களானவை ஆணாதிக்கத்திற்கு சாதகமான வரையறைகளை வடிவமைக்கின்றது.

தங்கியிருத்தல், ஆதிக்கம் ஆகியவற்றிற்கிடையிலான உறவுகளில் என்ன நிகழ்கின்றது என்பதற்கு ஷுலாமித் பயர்ஸ்ரோன் கூறும் உளவியல் அம்சங்கள் உதாரணமாகும். ஆண்களது சமூக அதிகாரம் (இந்த அதிகாரம் பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது) என்ற யதார்த்தத்திலிருந்து இவை பிறக்கின்றன. ஆனால் அவை முதலாளித்துவ சமூகச் சூழலில் நடைபெறுகின்றன என்ற உண்மையால் வடிவமைக்கப்படுகின்றன. தீவிரவாதப் பெண்நிலைவாதிகள் ஆண்களை, போட்டித் தன்மை கொண்ட, பகுத்தறிவு வாய்ந்த, ஆதிக்க மனோபாவம் கொண்டோர் என விபரிப்பது போலவே நாம் முதலாளித்துவ சமூகத்தின் முக்கிய விழுமியங்களையும் விபரிக்கின்றோம்.

இந்த தற்செயல் இணைவு (Coincidence) இருவகையாக விளக்கப்படக் கூடும்

1. கூலி உழைப்பாளர்களான ஆண்கள் முதலாளித்துவ போட்டி உறவுகளினுள் இழுத்தெடுக்கப்பட்டு இந்த விழுமியங்களை ஏற்றுக் கொள்கின்றனர். ஆண்கள் பற்றிய தீவிர பெண்நிலைவாதிகளின் விபரிப்புகள் முதலாளித்துவ சமூகங்களில் இருந்து முற்றிலும் விடுபட்டது அல்ல.

2. பால் விழுமியங்கள் கூறுகிறபடி யதார்த்தத்தில் ஆண்களும் பெண்களும் நடந்து கொள்ளாவிடினும் கூட ஆண்கள், ஆதிக்க சித்தாந்தத்தால் மதிப்பீடு செய்யப்படுகின்ற அத்தகைய பண்புகளுக்கு தாமே உரிமை கோருகின்றனர். ஆகவே உதாரணமாக, 'Crest Wood Heights' என்ற நூலின் ஆசிரியர்கள் போல, ....... தமது உதவியாளர்களை தம்மிஷ்டப்படி கையாள்வதற்கு பகுத்தறிவுக்குப் பொருந்தாத பல நுட்பங்களை பயன்படுத்தும் நிபுணர்களான ஆண்களை பகுத்தறிவாளர்களாகவும், காரியார்த்த வாதிகளாகவும் சமூகம் சித்தரிக்கின்றது. அதேவேளை பிள்ளை வளர்ப்பு தொடர்பான விஞ்ஞான முறைகளைக் கற்பதில் தமது பெருமளவு ஆற்றலைச் செலவழிக்கும் பெண்களை சமூகமானது பகுத்தறிவற்றவர்களாகவும், உணர்ச்சி மயமானவர்களாகவும் சித்தரிக்கின்றது.

முதலாளித்துவ சமூகங்களில் ஆண்மை, பெண்மை பண்புகளை இது விளக்குவது மாத்திரமின்றி, இச் சமூகங்களில் பால்வாத சித்தாந்தம் எத்தகைய வடிவம் எடுக்கிறது என்பதனையும் விளக்கும். ஆணாதிக்கம், முதலாளித்துவ உற்பத்தி ஆகிய இரண்டையும் தொடர்ந்து காப்பாற்றும் இரட்டை நோக்கங்களுக்கு பெண்களின் உழைப்பானது பயன்படுவது போலவே, ஆண்மை பண்புகள்/ முதலாளித்துவ விழுமியங்கள் ஆகியவற்றைப் பாராட்டுவது, பெண்மைப் பண்புகள்/ சமூகத் தேவைகள் என்பவற்றை இழிவு செய்வது ஆகிய இரட்டை நோக்கங்களுக்கு பால்வாத சித்தாந்தம் சேவையாற்றுகின்றகூ

ஏனைய வேறு சமூகங்களில் பெண்கள் பலமற்றவர்க ளாகவோ, தாழ்த்தப்பட்டவர்களாகவோ இருப்பின் அதற்கு ஆண்கள் கூறும் காரணங்கள் வேறானவை. ஆனால் முதலாளித்துவ சமூகத்திலேயே பெண்கள் உணர்ச்சி பூர்வமானவர்கள், நிதானமற்றவர்கள் போன்ற காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு முதலாளித்துவ சமூகத்தில் மட்டுமே பெண்களை தங்கியிருப்பவர்களாக சித்தரிப்பது அர்த்தமுள்ளது போல் தோன்றும். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் இவ்வாறான சித்தரிப்பு அர்த்தத்தைக் கொடுக்கமாட்டாது. வேலைப் பிரிவினையானது குடும்பத்தில் மனைவியராகவும், தாய்மாராகவும் உள்ள பெண்கள் பயன்மதிப்பை உற்பத்தி செய்வதில் அக்கறை கொள்ளச் செய்வதை உத்தரவாதப்படுத்துகிறது. இந்த வேலைகளை இழிவுபடுத்துவதானது சமூகத் தேவைகளை மூலதனத்தால் நிறைவுசெய்ய முடியாமல் இருப்பதை மறைப்பதுடன் ஆண்களின் பார்வையில் பெண்கள் தரக்குறைவானவர்களாகத் தென்படவும் காரணமாகின்றது. இவை அனைத்தும் சேர்ந்து ஆண்களின் மேலாதிக்கத்திற்கு ஒரு நியாயத்தையும் வழங்குகிறது. இதற்கான ஓர் உதாரணத்தை, தொலைக்காட்சி விளம்பரத்தில் வரும் குறிப்பான இரட்டைத் தன்மைகளில் காணலாம். ஒருபுறம் சமூக ரீதியில் தேவைகள் ஈடுசெய்யப்படுவதற்கு உள்ள உண்மையான தடைகளை அவை வெளிப்படுத்துகின்றன. அது உடைகளை நாசம் செய்து, தோலில் அரிப்பை உண்டாக்கும் சவர்க்காரம் பற்றிச் சொல்கின்றன. மறுபுறம், இதனோடு தொடர்புள்ள உண்மையான பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு இவற்றை கையாளும் பெண்களை ஏளனம் செய்வதில் விளம்பரம் போய் முடிவடைகின்றது.

உழைப்பாளர் படை மத்தியில் காணப்படும் பால் ரீதியான வேலைப் பிரிவினையிலிருந்தும், முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் இடையிலான இணைவு பற்றி விளக்கும் இதற்குச் சமாந்தரமான ஒரு வாதத்தை உருவாக்கலாம். பால் ரீதியான வேலைப் பிரிவினையானது பெண்களுக்குப் பொருத்தமானது எனக் கருதப்படும் வேலைகளிலும், குறைந்த வேதனம் தரக்கூடிய வேலைகளிலும் அவர்களை வைக்கின்றது. பெண்கள் ஆசிரியைகளாகவும், சமூக நலத்துறை பணியாளர்களாகவும், சுகாதாரத் துறையில் பெரும் எண்ணிக்கையிலும் பணியாற்றுகின்றனர். முதலாளித்துவமானது தனிநபர் சுதந்திரங்களையும், சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குள்ள தனியார் துறையின் ஆற்றலையும் வலியுறுத்துகின்ற காரணத்தால் மேற்படி பராமரிப்புப் பணிகளில் பெண்கள் ஆற்றும் பாத்திரங்கள் குறைந்த அந்தஸ்து உள்ளனவாக இருக்கின்றன. இப் பராமரிப்பு வேலைகளை பெண்கள் செய்கின்றார்கள் என்ற காரணத்திற்காகவே அவற்றின் சமூக முக்கியத்துவம் தாழ்த்தப்படக் கூடியதாக இருக்கும் வரையிலும் மூலதனம் முக்கியத்துவம் கொடுக்கின்ற 'பரிவர்த்தனை மதிப்பிற்கும்', 'பயன்மதிப்பு' முக்கியத்துவப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இடையில் எழுகின்ற முரண்பாடுகள் தவிர்க்கப்படக் கூடிய நிலையே ஏற்படுகின்றது. இவ்வகையில் தொழிலாளி வர்க்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுபடுத்தி திசைதிருப்புவது பால்வாதமே அன்றி பெண்நிலைவாதம் அல்ல.

### 4) மிகவும் முற்போக்கான இணைவை நோக்கி ....

பல பிரச்சினைகள் ஆராய வேண்டியுள்ளது. நாம் இதுவரை பயன்படுத்தியுள்ள ஆணாதிக்க முறைமை என்ற பதம் ஆய்வுத் தன்மை கொண்டதாக அன்றி விவரணத்தன்மை கொண்டதாகவே உள்ளது. மார்க்சியம், தீவிர பெண்நிலைவாதம் என்பன போதாமையுடையன என நாம் கருதினால் புதிய வகையினங்களை நாம் முன்வைக்க வேண்டும். பால் ரீதியான வேலைப் பிரிவினை என்பது ஆணாதிக்க முறைமை முதலாளித்துவம் ஆகிய இரண்டையும் பலப்படுத்துவதாலும், முழுக்க முழுக்க ஆணாதிக்க முதலாளித்துவ சமூகத்தில் ஆணாதிக்க பொறிமுறைகளைத் தனியாக பிரித்தெடுப்பது கடினமானது என்பதாலும், இங்கு எமது பணியும் கடினமாகிறது. எனினும் இதுவே எம்மால் செய்யப்பட வேண்டியதாகவும் உள்ளது. பெண்களது உழைப்புச் சக்தியினால் யார் பயன் பெறுகின்றனர்? ஆணாதிக்க முறைமையின் பொருள்வகை அடிப்படை ஆண்களுக் கிடையிலான அதிகாரப் படிநிலை அமைப்பு, ஒருமைப்பாடு ஆகியவற்றின் பொறிமுறை என்பவை பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளோம். எனினும் நாம் எழுப்ப வேண்டிய வினாக்கள் ஏராளமாயும் முடிவற்றனவாயும் உள்ளன.

ஆணாதிக்க முறைமையின் இயக்கவிதிகள் பற்றி நாம் பேசலாமா? பெண்நிலைவாதப் போராட்டத்தை எவ்வாறு ஆணாதிக்க முறைமை தூண்டுகின்றது? வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகங்கள் தவிர்ந்த ஏனைய சமூகங்களில் எத்தகைய பால் அரசியலையும் போராட்டத்தையும் காணலாம்? ஆணாதிக்க முறைமையின் முரண்பாடுகள் எவை? இவற்றிற்கும் முதலாளித்துவத்திலுள்ள முரண்பாட்டிற்கும் இடையிலான உறவு யாது? ஆணாதிக்க முறைமை உறவுகள் பெண்நிலைவாத இயக்கத்தின் தோற்றத்திற்கு காரணமாயின எனவும், மூலதனம் வர்க்கப்போராட்டத்தை தூண்டுகிறது எனவும் நாம் அறிவோம். ஆனால் வரலாற்றுப் பின்னணியில் பெண்நிலைவாதத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடையிலான உறவு எப்படிப்பட்ட பாத்திரத்தை ஆக்கியுள்ளது?

இப் பகுதியில் கடைசி வினாவிற்கான விடையைத் தர முயலுகின்றோம்.

இடதுசாரிகள், பெரும்பாலும் பெண்கள் இயக்கம் சோசலிசப் புரட்சிக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்றே கூறிவந்துள்ளனர். இடதுசாரிகளான பெண்கள் பெண்நிலை வாதத்தை ஆதரிப்பது இடதுசாரி அமைப்பிலுள்ள ஆண்களுக்கு பயமூட்டுவதாய் இருந்தது.

### பெண்ணிலைவாதமும் வர்க்கப் போராட்டமும்

வரலாற்று ரீதியாகவும் தற்காலத்திலும் பெண்நிலைவாதமும் வர்க்கப் போராட்டமும் (முதலாளித்துவ பெண்நிலைவாதம் ஒரு புறமும், வர்க்கப் போராட்டம் மறுபுறமும் என்ற) இரு வேறான வழிகளில் சென்றுள்ளன. அல்லது இடதுசாரிக் கட்சிகளுள் பெண்நிலைவாதம் மார்க்சியத்திற்குக் கீழ்ப்பட்டதாயுள்ளது. இதில் இரண்டாவதற்கு மார்க்சியத்தின் ஆய்வுத் திறனும், கட்சிக்குள் ஆண்களின் ஆதிக்கமும் காரணமாயின. இவை இடதுசாரி அமைப்புகளில் பகிரங்கமான போராட்டத்திற்கும், மார்க்சிய பெண்நிலைவாதிகளின் முரண்பட்ட நிலைப்பாடுகளுக்கும் காரணமாயின.

தம்மைத் தீவிரவாதிகள் எனக் கருதும் பெரும்பான்மையான பெண்நிலைவாதிகள் பெண்கள் இயக்கத்தின் தீவிரவாதக் கிளையின் உற்சாகம் அணைந்து போனதையும் தாராண்மைவாதிகள் பல விடயங்களைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டனர் என்பதையும் ஏற்றுக் கொள்வர். முன்னர் கிளர்ச்சியூட்டும் ஆற்றல் மிகுந்த காலகட்டம் ஒன்று இருந்தது. அப்போது நாம் எது செய்தாலும் பயன் கிடைத்தது. அக் காலத்தில் எமது செயற்பாடுகள் பெண்களது பிரக்ஞையை உயர்த்தியது. அமைப்பினுள் உள்வாங்க இயலாத அளவிற்கு ஏராளமான பெண்களை இயக்கத்தினுள் கொண்டு வந்தது. சமூகத்திலுள்ள பெண்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்த உதவியது. பல சந்தர்ப்பங்களில் இது சமூகத்திலுள்ள முதலாளித்துவ ஆணாதிக்க உறவுகளுக்கு சவால்விடும் அளவிற்கு இருந்தது.

இப்போது எமது இயக்கம் அதுபோன்ற ஒரு காலகட்டத்தில் இல்லை. பெண்கள் இயக்கத்தின் சில பகுதிகள் வழக்கமான நடைமுறைகளால் கையேற்கப் பட்டதுடன் சில சமயங்களில் பெண்நிலைவாதமானது பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதையும் காணலாம். உதாரணமாக, விவாகரத்து வழக்குகளில் மனைவியரான பெண்களுக்கு தாபரிப்பு தேவையில்லை. ஏனெனில் அவர்கள் விடுதலையடைந்தவர்கள் என நீதிபதிகள் வாதிடுவதைக் காணலாம். அமெரிக்காவில் சமத்துவ உரிமைச் சட்டத்தை (Equal Right Amendment) உறுதி செய்யத் தவறியமை, பெண்நிலைவாதம் பெண்களுக்கு எதிராக தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்ற நியாயபூர்வமான பயத்தைக் குறிக்கின்றது. எமது இயக்கத்தை மறுமதிப்பீடு செய்ய வேண்டியமையையும் இது சுட்டிக் காட்டுகின்றது. மார்க்சியம் சமூக மாற்றம் பற்றிய ஒரு முன்னேறிய கோட்பாடு என்பதால் இந்த மறுமதிப்பீட்டுக்கு அதன் உதவியை நாடுதல் தர்க்க ரீதியானதே. பெண்நிலைவாதக் கோட்பாட்டுடன் ஒப்பிடும் போது மார்க்சியக் கோட்பாடு மிகவும் வளர்ச்சியடைந்ததாகும். அதனைப் பயன்படுத்தும் போது சில சமயம் நாம் பெண்நிலைவாதக் குறிக்கோள்கலிருந்து வழிதவறியும் விடுகின்றோம்.

இடதுசாரிகள், பெரும்பாலும் பெண்கள் இயக்கம் சோசலிசப் புரட்சிக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்றே கூறிவந்துள்ளனர். இடதுசாரிகளான பெண்கள் பெண்நிலை வாதத்தை ஆதரிப்பது இடதுசாரி அமைப்பிலுள்ள ஆண்களுக்கு பயமூட்டுவதாய் இருந்தது. பல இடதுசாரி அமைப்புக்கள் பெண்களது உழைப்பால் நன்மையடைந்துள்ளன. பெண்களது நிலை பற்றிய சுதந்திரமான விளக்கத்தைக் கைவிட்டு இடதுசாரி விளக்கம் ஒன்றைக் கைக்கொள்ளும்படி பெண்களைத் தூண்டினர். இந்த அழுத்தத்தின் எதிர்விளைவாக நாம் மார்க்சிய ஆய்வுகளை நோக்கித் திரும்புவது இயல்பானதே. ஆயினும் இந்த ஆய்வுச் சட்டத்தைப் பயன்படுத்தி 'சகோதரத்துவம்' என்பதில் ஒன்றிணைகையில், இது பெண்களது நிலைமை பற்றி ஆய்வு செய்து, எமது அரசியல் செயற்பாட்டை முன்னேற்றுவதற்குப் பதிலாக சகோதரத்துவத்தின் பேரால் எமது போராட்டத்தை நியாயப்படுத்துவதில் போய் முடியும். மேலும் பல மார்க்சியவாதிகள் பெண்கள் பிரச்சனை பற்றிய பாரம்பரிய மார்க்சிய ஆய்வுடன் திருப்தியடைந்தனர். பெண்களது நிலையை விளங்கிக் கொள்ள வர்க்கம் என்ற சட்டகம் போதுமானது என நினைத்தனர். பெண்கள் தொழிலாள வர்க்கத்தின் ஒரு பகுதி, முதலாளித்துவத்திற்கு எதிரான தொழிலாளர் போராட்டம் முதன்மையானது, வர்க்க ஒருமைப்பாட்டைச் சிதைக்க பால் முரண்பாட்டை அனுமதிக்க முடியாது எனக் கூறினர்.

கடந்த சில வருடங்களில் அமெரிக்காவின் பொருளாதார நிலை மோசமடைந்த போது மரபுவழி மார்க்சிய ஆய்வு மீண்டும் தன் கருத்தை வலியுறுத்தியது. 1960 களில் மாணவர் இயக்கம், யுத்த எதிர்ப்பு இயக்கம், சிவில் உரிமை இயக்கம், பெண்கள் இயக்கம், சூழல் பாதுகாப்பு இயக்கம் போன்றவை மார்க்சியத்தை நோக்கி பல புதிய வினாக்களை எழுப்பின. பணவீக்கம், வேலையின்மை போன்ற வெளிப்படையான பொருளாதாரப் பிரச்சனைகளின் தோற்றமானது மீண்டும் இடதுசாரிகளை தொழிலாள வர்க்க அரசியலின் (குறுகிய வரையறுப்பில்) அடிப்படைகளை நோக்கித் திருப்பியுள்ளது. வளர்ந்து வரும் மார்க்சிய லெனினிச முன்னோடிக் கட்சிப் பிரிவுகள் கோட்பாட்டளவிலும் செயற்பாட்டிலும் தீவிர – எதிர் – பெண்நிலைவாதிகளாக உள்ளனர். இடதுசாரிக் கல்வியாளர்களிடையே பெண்நிலைவாதப் பிரச்சினையின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியுள்ளது. இடதுசாரிகளின் கருத்தரங்குகளில் பிள்ளை பராமரிப்பு வசதிகளை செய்வது குறைவடைந்துள்ளது.

சிறுபிள்ளைத் தனமான கோரிக்கைகளை கைவிட்டு காத்திரமான புரட்சியாளர்களாக ஆகும்படி பெண்களை வேண்டுவது அதிகரித்துள்ளது. பணவீக்கம், வேலையில்லாப் பிரச்சனை போன்றவற்றுடன் ஒப்பிடும் போது பெண்களின் கோரிக்கைகள் நேர விரயத்தை ஏற்படுத்துபவை எனக் கருதப்படுகின்றன. பெண்களது வேலையில்லாப் பிரச்சனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்களால் பெரிய பிரச்சனையாகக் கருதப்படவில்லை. குறிப்பாகக் கூறுவதாயின், கடைசியாக 1930 களில் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியின் போது பெண்களை எல்லா விதமான வேலைகளில் இருந்தும் வெளியேற்றுவதன் மூலம் வேலையில்லாப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டது. குடும்பத்திற்கு ஒரு வேலை வழங்கப்பட்டது. அந்த வேலை ஆணுக்கே வழங்கப்பட்டது. நெருக்கடியிலிருந்து முதலாளித்துவமும் ஆணாதிக்க முறைமையும் தம்மை இதன் மூலம் விடுவித்துக் கொண்டதுடன் மட்டுமல்லாமல் பலப்படுத்தியும் கொண்டன. முதலாளித்துவ செயற்பாடுகளில் ஏற்படும் சமனிலையின்மையை சீர்செய்வதற்கு பொருளாதார நெருக்கடிகள் சேவை செய்வது போலவே, ஆணாதிக்கத்திற்கும் சேவையாற்ற முடியும். 1930 களில் பெண்கள் தமது இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பெண்நிலைவாதப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுகளும் செயற்பாடுகளும் கைவிடப்படின் ஆணாதிக்க முறைமை, முதலாளித்துவம் ஆகியவற்றிக்கு எதிரான போராட்டம் வெற்றியடைய மாட்டாது. முதலாளித்துவ ஒடுக்குமுறை உறவுகளுக்கு ஆணாதிக்க ஒடுக்குமுறை உறவுகள் வழங்கும் உள்ளார்ந்த ஆதரவு சரியாகக் கருத்திற்கெடுக்கப் படாவிட்டால், முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான இலக்கைக் கொண்ட ஒரு போராட்டம் தோல்வியடையவே செய்யும். பெண்களுக்கு பயனுள்ளதான சோசலிச வகையை வரையறுப்பதற்கு ஆணாதிக்க முறைமை பற்றிய ஆய்வுகள் அத்தியாவசியமானவை. முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கான பொதுவான தேவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டு. அதே சமயம் குறிப்பிட்ட பாலாருக்கு குறிப்பிட்ட நலன்கள் உள்ளன. எமது குறிப்புகளில் இருந்தும், வரலாற்றில் இருந்தும், ஆண் சோசலிசவாதிகளிடம் இருந்தும், நாம் போராடிக் கொண்டிருக்கும் சோசலிசமானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே அர்த்தம் உடையதுதானா என்பது தெளிவாக இல்லை. ஒரு மனிதாய சோசலிசத்திற்கு, புதிய சமூகம் எப்படியிருக்க வேண்டும் என்பதிலும், ஒரு ஆரோக்கியமான நபர் எப்படியிருப்பார் என்பதிலும் கருத்தொருமைப்பாடு இருப்பதும் அவசியமானதே. ஆனால் இன்னும் ஸ்தூலமாக சொல்வதானால், இது ஆண்கள் தமது தனிச் சலுகைகளைக் கைவிடுவதையும் அவசியமாக்குகின்றது.

நாம் பெண்கள் என்ற வகையில் கடந்த காலத்தில் நடந்தது போல எமது பிரச்சினைகளின் தீவிரத்தையும், முக்கியத்துவத்தையும் கைவிடக் கூடாது. பெண்நிலைவாத இலட்சியங்களைக் கைவிடும்படி மறைமுகமாகவும் நேரடியாகவும் செய்யப்படும் கட்டாயப் படுத்தல்களுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டும்

இது இரண்டு மூலோபாயங்களை வேண்டுவதாகும். முதலில் சோசலிசத்தை உருவாக்குவதற்கான போராட்டம் என்பது வேறு வேறான நலன்கள் கொண்ட குழுக்கள் ஒரு அணிச் சேர்க்கையை உருவாக்கும் அடிப்படையில் அமைந்த போராட்டமாக இருக்க வேண்டும். புரட்சிக்குப் பின் ஆண்கள் தமக்கு விடுதலை அளிப்பர் என பெண்கள் நம்பக் கூடாது. ஏனெனில் அவர்கள் அவ்வாறு செய்வதற்கான அவசியம் இல்லை. அதனை எவ்வாறு செய்வது என்பதனையும் அவர்கள் அறிய மாட்டார்கள். உண்மையில் எமது ஒடுக்குமுறை தொடர்வதில் ஆண்களின் உடனடி நலன்கள் தங்கியுள்ளன. பதிலாக நாம் எமது சொந்த அமைப்புக்களையும், சொந்த பலமான அடித்தளத்தையும் வைத்திருக்க வேண்டும்.

இரண்டாவதாக முதலாளித்துவத்தினுள் காணப்படும் பால் அடிப்படையிலான வேலைப் பிரிவினையானது மனிதர்களின் பரஸ்பர தங்கியிருத்தல், மற்றும் அவர்களின் தேவைகள்.... ஆகியன பற்றி விளங்கிக் கொள்ள சர்ந்தப்பம் அளித்துள்ளது என நாம் கருதுகின்றோம். முதலாளித்துவத்திற்கு எதிராக ஆண்கள் நீண்டகாலமாகப் போராடி வந்துள்ளனர். அதேசமயம் எதற்காகப் போராட வேண்டும் என்பதை பெண்கள் தெரிந்துள்ளனர். ஒரு பொது விதியாக, முதலாளித்துவம், ஆணாதிக்க முறைமை ஆகியவற்றில் ஆண்கள் கொண்டுள்ள நிலையானது, வளர்ச்சி, பகிர்ந்து கொள்ளல், போஷிப்பு போன்ற மனித தேவைகளையும், அதிகாரப் படிநிலை அமைப்பு அற்ற, ஆணாதிக்க முறைமையற்ற சமூகத்தில் இவற்றை எய்துதல் போன்றவற்றை உணர்வதைத் தடுக்கிறது. அப்படி அவர்களின் பிரக்ஞையை நாம் தட்டியெழுப்பினாலும் கூட ஆண்கள், தமக்குக் கிடைக்கக் கூடியவற்றையும், தாம் இழக்க வேண்டியதையும் எடைபோட்டுப் பார்த்து, தற்போதைய நடப்பு நிலையை தேர்ந்தெடுக்கவும் கூடும். ஏனெனில் அவர்களிடம் இழப்பதற்கு தமது கைவிலங்குகளையும் விட அதிகமுண்டு.

பெண்நிலைவாத சோசலிசவாதிகள் என்ற வகையில், ஆணாதிக்க முறைக்கும் முதலாளித்துவத்திற்கும் எதிரான போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். நாம் உருவாக்க விரும்பும் சமூகத்தில் பரஸ்பர சார்ந்திருப்பு சுதந்திரமானதாகவும், போஷிப்பு சர்வ வியாபகமானதாகவும், சுரண்டல் தன்மை அற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் ஆண்களது பொய்யான சுதந்திரத்தை தொடர்ந்து ஆதரிக்காததாகவும் இருக்க வேண்டும்.


பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர்ப்பு வெளிவருகிறது.

உயிர்ப்பின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பை

- நிதி உட்பட -

எதிர்பார்க்கின்றோம்.

*UYIRPPU*
*BM BOX 4002*
*LONDON*
*WC 1N 3XX*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கையில்

# தேசங்களின் உருவாக்கம்

'தமிழீழ பிரிவினைக் கோரிக்கையை ஆதரித்து நின்றதே தமிழ் மக்களின் இரண்டு தசாப்தகால துன்ப துயரங்களுக்கும் காரணமாக அமைகிறது.'

ஒரு பகுதியினரின் குற்றச்சாட்டு இது.

சின்னஞ் சிறிதான இலங்கைத் தீவினுள் ஐக்கியமாக வாழ்ந்து தாம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு இருக்கலாம் அல்லவா? மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றம் போன்ற 'சில்லறைப் பிரச்சினைகளுக்கு' தீர்வினை தேட பிரிவினை கோரியிருக்கத்தான் வேண்டுமா?. தமிழ் அரசியல் தலைமையின் பேராசையினதும் அறிவீனத்தினதும் வெளிப்பாடான 'தமிழீழக்' கோரிக்கையை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கப்போய் தமிழ் மக்கள் இன்று அழிவின் விளிம்பில் நிற்கின்றார்களே! யுத்தமும், பேரழிவுகளும் பிரிவினை கோரியதன் நேரடி விளைவுகள் அல்லவா?

தமிழ் மக்கள்மீது பச்சாதாபம் காட்டுவது போன்ற தொனியில் அமைந்த விமர்சனங்கள் இவை.

இவற்றைவிட மேலும் சில கூரிய குற்றச்சாட்டுக்களையும் கேட்க முடிகிறது.

இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு தமிழ் மக்கள் எப்போதும் விரோதிகளாகவே இருந்து வந்துள்ளனர். இலங்கையில் 'அனைத்து மக்களும் தழுவிய ஒரு பலமான தேசத்தைக் கட்டியெழுப்பும்' பணியில் தமிழ் மக்கள் என்றுமே அக்கறை காட்டியது கிடையாது. சர்வதேச அளவில் இந் நாட்டையும், பெரும்பான்மையினரான சிங்கள மக்களையும் கேவலப்படுத்தி பிரச்சாரங்களையே தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளனர்.

இவை அனைத்து சிங்கள தரப்பினர் மத்தியிலும் ஆழ்ந்து இறுகிப் போய்விட்ட கருத்துக்களாகும். சிங்கள புத்திஜீவிகள் பலரும்கூட இந்த வகையான மனோபாவத்தின் பிடிக்குள் அகப்படாமல் விடுபட்டவர்களாக இல்லை. இவற்றுக்கு மத்தியில் "தமிழ் மக்களிற்கு பல பிரச்சினைகள் உண்டு. அவற்றுக்கு உடனடியாக தீர்வு காண்போம்." என்று அவ்வப்போது, பல தசாப்தங்களாக சிங்கள அரசியல் தலைமை கூறி வந்துள்ள தையும் நாம் அறியாமல் இல்லை. இறுதியாக, "ஈழம் தவிர அனைத்தையும் தமிழ் மக்களுக்கு வழங்கத் தயார்" என்ற பிரேமதாசாவிற்கு ஏற்பட்ட புதிய விழிப்பையும் அறிந்துள்ளோம்.

தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்குள்ளான வரலாற்றினை தொகுத்தும், தொடர்படுத்தியும் கூர்மையாக நோக்கத் தவறினால் மேலுள்ள வாதங்களிலும் வாக்குறுதிகளிலும் நியாயங்கள் உள்ளதுபோல தோன்றக்கூடும். நீடித்த யுத்தக் கொடுமைகளை அனுபவித்து துயருறும் சராசரி தமிழ் மக்களின் மனங்கள் மேற்படி வாதங்களுக்கு முன்னால் தடுமாறக் கூடும். சராசரி மக்கள் மட்டுமல்ல, கருத்துத் தெளிவினையும், அரசியல் உணர்வையும் கொண்டுள்ள தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் முற்போக்குப் பிரிவினர்கள் பலரும் கூட தடுமாறிவிடலாம்.

'பாசிசத்தின்' தோற்றம் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கம்: கோட்பாட்டு ரீதியிலான பலவீனம் போன்ற பல காரணங்கள் முன்னேறிய பிரிவினர்கூட தேசியத்தில் பலமாக ஊன்றிநிற்பதற்குத் தடைகளாக அமைகின்றன. இதோ தீர்வுகள் முன்வைக்கப்பட்டு விடலாம் என்ற மயக்கமும் கூட சேர்ந்துவிடுவதைக் காணலாம்.

ஆயுதங்களைத் துறந்து புதிதாக 'ஜனநாயக வழிமுறைக்கு வந்துள்ள' புதிய தலைமுறை யினர் இலங்கை அரசியலில் கடந்தகால வரலாற்றுப் போக்கினைப் புரிந்துகொள்ளாத வர்களாக இனப் பிரச்சனைக்குத் தீர்வினைக் காண தாமே முதன்முதலாக முயலுமாப்போல சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு தடவையும் இவர்கள் வெறும் கைகளுடன் திரும்பி வருவதையும் பின் ஆவேசமான அறிக்கைகள் விடுவதையும் நாம் அறிவோம். என்றாலும் 'தன்முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன்' போல இதனையே தமது ஒரே அரசியல் நடவடிக்கை யாகக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கின்றனர். இப் போக்கினை அவர்களின் இன்றைய வாழ் நிலையின் பின்னணியில் புரிந்துகொள்ள முடியும். என்றாலும் பேரினவாத வேதாளம் தான் அடக்குமுறை மரத்தை விட்டும் இறங்கி வருவதாக இல்லை.

1976 இல் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தமிழ் மக்கள், 1950 களில் சி.சுந்தரலிங்கத்தின் ஈழக் கோரிக்கையை நிராகரித்து விட்டிருந்தார்கள் என்பதையும்: 1950 களில் சமஸ்டி சுயாட்சி முறையை ஆதரித்த தமிழ் மக்கள். 1920 களில் S.W.R.D. பண்டாரநாயக்க முன்மொழிந்த சமஸ்டிமீது அக்கறை செலுத்தாது ஒற்றையாட்சி முறையினையே வலியுறுத்தி நின்றதையும், இன்று தமிழ் மக்களைக் குற்றஞ்சாட்டுவோர் அனேகமாக மறந்துவிட்ட னர். ஒரே தேசமாக சகல இனமக்களும் ஐக்கியமாக வாழவேண்டும் என்ற தமிழ் சமூகத்தினதும் ஏனைய சிறுபான்மை

ஆயுதங்களைத் துறந்து புதிதாக 'ஜனநாயக வழிமுறைக்கு வந்துள்ள' புதிய தலைமுறை யினர் இலங்கை அரசியலில் கடந்தகால வரலாற்றுப் போக்கினைப் புரிந்துகொள்ளாத வர்களாக இனப் பிரச்சனைக்குத் தீர்வினைக் காண தாமே முதன்முதலாக முயலுமாப்போல சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு தடவையும் இவர்கள் வெறும் கைகளுடன் திரும்பி வருவதையும் பின் ஆவேசமான அறிக்கைகள் விடுவதையும் நாம் அறிவோம். என்றாலும் 'தன்முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன்' போல இதனையே தமது ஒரே அரசியல் நடவடிக்கை யாகக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கின்றனர்

சமூகங்களினதும் மானசீகமான விருப்பங்கள் சிங்கள தலைமைகளால் மிதித்துத் துவைக்கப் பட்டதையும் குற்றஞ்சாட்டுவோர் மறந்து போயினர்.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி அதிகார த்தில் அமர்ந்துகொண்ட சிங்கள ஆளும் வர்க்கங்களும், அவற்றின் பிரதிநிதிகளும் சிறுபான்மை சமூகங்களின் நியாயமான அபிலாசைகளைத் தூக்கியெறிந்து விட்டதோட ல்லாமல், அவைகளின்மீது படிப்படியாக ஒடுக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டதன் விளைவாக, சிறுபான்மை சமூகங்கள் அவற்றுக்கு எதிராக போராடவும் அதனூடாக தம்மை தனித்தனியான தேசங்களாக இனங் காணவும் வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டன. குறிப்பாக பல முனைகளிலும் ஒடுக்குமுறைகளையும் பாரபட்சங்களையும் முகம்கொடுத்த சிறுபான்மைகளில் எண்ணிக் கையில் பெரிதான தமிழ்ச் சமூகம் இறுதிநிலையாக பிரிவினையை கோரும் நிலைக்கே நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரிவினைப் போராட்டம் என்பது மிகவும் கடினமானதும் துயரம் மிக்கதுமாகும். இருந்தும் இவ்வாறான முடிவை நோக்கி எவ்வாறு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர்? என்ற வினாவை எழுப்பாதிருக்க முடியாது.

இப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தரப்பின் நியாயங்களையும் உணர்வுகளையும், பேரின வாத மேலாதிக்க உணர்வினாலும், ஐதீக வகைப்பட்ட கட்டுக்கதைகளினாலும் இறுகிப் போய்விட்டிருக்கும் சிங்கள சமூகத்திற்கு விளக்கி தெளிவுபடுத்துவது ஒருபுறம் இருக்க, அதைவிடவும் அவசரமான பணியொன்று நம்முன் உள்ளது. அதாவது சிறுபான்மை சமூகங்கள் இன்று அவசரமாக முகங்கொடுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டிய அரசியல் யதார்த்த நிலைமைகளையும், அடைய வேண்டிய இலக்குகளையும் குறித்து அவைகள் மத்தியில் காணப்படுகின்ற ஊசலாட்டங்களையும் மயக்கங்களையும் களைந்தெறிய வேண்டியதே அப் பணியாகும்.

இந்த வரலாற்றுக் கடமைக்காக, தேசியப் பிரச்சினை குறித்த கோட்பாட்டுப் பிரச்சினைகளையும் அதன் பின்னணியில் இலங்கையின் அரசியல் வரலாறு, சமூக உருவாக்கம் என்பவற்றையும் தேவையான அளவு விரிவாக பரிசீலிக்க வேண்டியுள்ளது. தேசியம் தொடர்பான கோட்பாட்டுப் பிரச்சினைகளிலும் இலங்கையின் அரசியல் வரலாற்று அனுபவங்களிலும் தமிழ்ச் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் ஆழமான தெளிவினைப் பெறுவது அவர்கள் தமது திட்டவட்டமாக அரசியல் இலக்கை வகுத்து தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமானதாகும்.

## தேசியவாதம் தொடர்பான சில கோட்பாட்டுப் பிரச்சினைகள்

இக் கட்டுரையில் தேசியவாதம் தொடர்பான சில கோட்பாட்டு அம்சங்களை எடுத்தாள்கின்றேன். தேசியவாதம் தொடர்பான கோட்பாடுகள் பொதுவாக இதுவரையில் தமிழ் வாசகர்கள் மத்தியில் முறையாக அறிமுகப் படுத்தப்படவும் விவாதிக்கப்படவும் இல்லை என்றே கொள்ளவேண்டும். ஆதலால் இக் கட்டுரையில் எடுத்தாளப்படும் கோட்பாடுகள் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தை தருவது அவசியம் எனக் கருதுகின்றேன். இக் கோட்பாடுகள் தமிழ் வாசகர்கள் மத்தியில் இன்னும் விரிவாக விளக்கம் பெறவும், விவாதிக்கப்படவும் வேண்டியிருப்பது உண்மையே எனினும் இக் கட்டுரையில் அது சாத்தியப்படாது என்பதால் இவை குறித்து இன்னோர் சந்தர்ப்பத்தில் பேசலாம் எனக் கருதுகின்றேன்.

**1.** 'தேசம்' (Nation) எனும் பதமானது பொதுவாக நாடு (Country), அரசு (State) போன்றவற்றைக் குறிக்கவும் பயன்படுத்தப் படுகின்றது. அரசியல் விஞ்ஞானத்தின் கறாரான அர்த்தத்தில் தேசம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைக் குறிப்பதாகும். தேசம் தொடர்பாக சமூகத்தில் புழக்கத்திலுள்ள தவறான புரிதல்களின் அடிப்படையில், அதாவது தேசம் என்பதை பிரதேசமாக, அரசாக, பொருளாதாரமாக அணுகுவதே தேசியவாதம் தொடர்பான பல்வேறு குழப்பமான வியாக்கியானங்களுக்கும் காரணமாகிறது. தேசியவாதத்துடன் தொடர்புடைய எந்த வரையறுப்புக்களும் மக்களை மையமாகக் கொண்டனவாக அமைய வேண்டியது அவசியமாகும்.

**2.** தேசம் என்பதை வரையறை செய்யும் ஸ்டாலின், ஒரு தேசம் என்பது வரலாற்று ரீதியில் மலர்ந்ததும், ஸ்திரமான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு, சமூகத்தின் கலாச்சாரம் மூலம் வெளிப்படுத்தும் மனோவியல் அமைப்பு என்பவற்றைக் கொண்ட ஒரு நிலையான சமூகம் என்றார். இதன்படி இவற்றில் ஏதாவது ஒரு கூறு இல்லாவிட்டாலும்கூட அந்த மக்கள் சமூகம் தேசமாக மாட்டாது. இந்த வரையறுப்பானது நீண்டகாலமாக மிகவும் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்துள்ளது. இவ் வரையறையின்படி அன்றைய ஜேர்மனியர்கள் ஒரு தேசமாக ஆகமாட்டார்கள். அதுபோன்றே ஸ்டாலினின் சொந்த தேசமான ஜோர்ஜியர்களும் ஒரு தேசமாக மாட்டார்கள்.

தேசியவாதம் தொடர்பாக பிற்காலத்தில் கொம்யூனிஸ்டுகள் முகம்கொடுத்த பல பிரச்சினைகளுக்கு இந்த குறுகிய, இறுக்கமான வரையறையும் ஒரு காரணம் என இன்றைய மார்க்சிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். லெனின் ஒருபோதும் இதுபோன்ற குறுகிய, இறுக்கமான சூத்திரங்களுக்குள் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டவரல்ல எனவும், எங்கெல்லாம் மக்கள் தமது விருப்பங்களை ஜனநாயகபூர்வமாக வெளிப்படுத்துகிறார்களோ, அவற்றையெல்லாம் அங்கீகரிக்க லெனின் தயாராகவே இருந்தார் எனவும் இவ் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மொழி, பாரம்பரிய பிரதேசம், பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற அம்சங்களுடன் கூடவே மதம், இனம் (Race), பொதுவான வரலாற்று அனுபவம் போன்ற காரணிகளும்கூட தேசங்களை உருவாக்கியதை வரலாறு காட்டியுள்ளது. எவ்வாறிருப்பினும், இத்தனை புறநிலை அம்சங்களும் ஒன்றுசேர இருப்பினும் கூட ஒரு மக்கள் கூட்டம் தன்னளவில் தேசமாகிவிட மாட்டாது. எப்போது ஒரு சமூகம் இவற்றில் ஏதாவது ஒன்றையேனும் அடிப்படை

> அமெரிக்க செவ்விந்தியரும், அமெரிக்க கறுப்பினத்தவரும், அவுஸ்திரேலிய சுதேசிகளும் கூட தத்தமது பழங்குடிக் குல மரபுகளை உயர்த்திப்பிடிக்கின்றனர். இதற்கு அர்த்தம் அவர்கள் பண்டைய கற்காலத்திற்குத் திரும்பிச் செல்ல முனைகின்றார்கள் என்பதல்ல. மாறாக இன்றைய நவீன சமுதாயங்களில் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களாக, உரிமைகள் மறுக்கப் பட்டவர்களாக உள்ள இவர்கள் தமது பழங்கால மாண்புகளை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் தமது நிகழ்கால அவலங்களை கடப்பதற்கான ஒரு உத்வேகத்தைப் பெறுகின்றார்கள்.

யாகக் கொண்டு தனது அரசியலை முன்னெடுக்கத் தலைப்படுகின்றதோ அப்போதே அக் குறிப்பிட்ட சமூகமானது ஒரு தேசமாகப் பரிணமிக்கத் தொடங்கிவிடுகிறது. தேச உருவாக்கத்தில் குறிப்பிட்ட மக்களது அகநிலை அம்சங்களுக்கு – தம்மை தேசமாக இனம்காண்பது மற்றும் தேசிய உணர்வுக்கு – முக்கியமான பாத்திரம் உண்டு.

**3.** ஒரு தேசத்திற்குப் பொருத்தமான அரசியல் வடிவம் 'தேச – அரசே' யாகும் என்பதை கடந்த இரண்டு நூற்றாண்டு கால தேசியவாதத்தின் வரலாறு நிரூபித்துள்ளது. பலமான ஒரு மைய அரசு தன்னைச் சுற்றி தேசத்தை கட்டமைப்பதன் மூலம் தன்னை நிலைப்படுத்திக் கொள்கின்றது. இப்படியான மைய அரசுடன் இணையாது புறம்பாக தனியாக உருவாகும் தேசங்கள் தமக்கென தனியான தேச – அரசுகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தமது எதிர்கால சுபீட்சத்தை உத்தரவாதப்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறாக தனக்கென தனியான ஒரு தேச – அரசை உருவாக்கிக் கொள்வதற்கு ஒவ்வொரு தேசத்திற்குமுள்ள அந்நியப்படுத்த முடியாத உரிமையே சுயநிர்ணய உரிமை எனப்படுகிறது.

> பொதுவாக தேசியவாத இயக்கங்களது பிரச்சாரங்களை பரிசீலித்தால், அவற்றில் பல பகுத்தறிவிற்குப் பொருந்தாத கட்டுக் கதைகளும், ஐதீகங்களும் நிறைந்தவைகளாக இருக்கும்.

**4.** பொருளாதாரம் என்ற ஒரே காரணி மூலம், வர்க்கம் என்ற ஒரே கருத்தாக்கத்தின் மூலம், சமூகத்திலுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் விளக்கிவிட முனையும் பொருளாதாரவாதமானது, தேசியவாதத்தின் தனித்துவமான பண்புகளை அங்கீகரிப்பதில்லை. அல்லது பெயரளவில் மாத்திரம் அங்கீகரிக்கின்றது. இதனால் வர்க்கப் போராட்டத்தை மதிப்பிடும் அதே அளவு கோலைக் கொண்டே தேசியவாதத்தையும் மதிப்பிட முனைகின்றது. இதுவே தற்போது தேசியவாதம் தொடர்பாக எழுகின்ற பல்வேறு சர்ச்சைகளுக்கும் மையமாகும்.

தேசியவாதமானது பொருளாதாரத்திலிருந்து வேறுபட்ட தனியான ஒரு கட்டமைப்பாக (structure) இனங்காணப்பட்டால், தேசியவாதத்தின் தனித் துவமான பண்புகள், குறிப்பான இயங்கு விதிகள் என்பவை புரிந்துகொள்ளப்பட்டால் – அதாவது தேசியவாதத்தின் பரிபாஷைகள் புரிந்துகொள்ளப்படுமாயின் – தேசியவாதத்துடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்களும் மிகவும் வித்தியாசமான விளக்கங்களைப் பெறுவதைக் காணலாம். இந்தவகையில் தேசியவாதத்துடன் தொடர்புடைய குறிப்பான சில அம்சங்களை எடுத்துக்காட்டுவது அவசியமானதாகிறது.

### அ) பழமைவாதம் பேசுவது :

ஒரு தேசிய இயக்கத்தில் குறிப்பிட்ட அந்த தேசத்தைச் சேர்ந்த பல்வேறு வர்க்கங்களும் இணைந்து கொள்கின்றன. பொதுவான வரலாறு என்பதைத் தவிர இந்த வர்க்கங்களுக்குப் பொதுவான அம்சங்கள் எதுவும் கிடையாது. இதனால் இந்த பொது வரலாற்று அம்சத்திற்கு தேசியவாதமானது அதிக அழுத்தம் கொடுக்கின்றது. எனவே பழம் பெருமைகளை பேசுகின்றது. இப்படியாக பழம் பெருமை பேசுவது எனும்போது, அத் தேசமானது மீண்டும் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கோ,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுமிராண்டிக் காலகட்டத்திற்கோ திரும்பிப் போக முனைவதாக பொருள்படாது. பழம் பெருமைகளை பேசினாலும்கூட பொதுவாக, **தேசிய இயக்கங்களது இலக்கானது முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசை நிறுவுவதாகவே இருக்கின்றது.**

பழமைவாதம் பேசும் இத்தகைய போக்கு எல்லா தேசிய எழுச்சிகளிலும் காணப்படுவதே. அமெரிக்க செவ்விந்தியரும், அமெரிக்க கறுப்பினத்தவரும், அவுஸ்திரேலிய சுதேசிகளும் கூட தத்தமது பழங்குடிக் குல மரபுகளை உயர்த்திப்பிடிக்கின்றனர். இதற்கு அர்த்தம் அவர்கள் பண்டைய கற்காலத்திற்குத் திரும்பிச் செல்ல முனைகின்றார்கள் என்பதல்ல. மாறாக இன்றைய நவீன சமுதாயங்களில் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களாக, உரிமைகள் மறுக்கப் படவர்களாக உள்ள இவர்கள் தமது பழங்கால மாண்புகளை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் தமது நிகழ்கால அவலங்களை கடப்பதற்கான ஒரு உத்வேகத்தைப் பெறுகின்றார்கள். **ஒரு தேசமானது, தனது வரலாற்றுக் கடமையைச் செய்வதற்கு தன்னை ஆயத்தம் செய்யும் ஒருவித உளவியல் தயாரிப்பே இந்த பழமை வாதமாகும்.**

எனவே இந்தப் பின்னோக்கிய பார்வையானது பின்னோக்கி செல்வதற்கான விருப்பமல்ல என்பதை அவர்களது அரசியல் கோரிக்கைகளில் இருந்து இனம் கண்டு கொள்ளலாம். மேலும் நவீன சமூகத்தில் ஒடுக்குமுறைக்குள்ளாகும் ஒரு தேசம் தன்னை தனியான தேசமாக இனம் காணும் முயற்சியாக தனது தனித்துவமான வரலாற்றை உயர்த்திப் பிடிப்பதாகவும் அர்த்தப்படுத்தப்படலாம்.

இரண்டாம் உலகப் போரின்போது, ஸ்டாலின் மகாபீட்டர் பற்றியெல்லாம் பேசினார். சர்வதேசவாதியான ஸ்டாலின் இவ்வாறு நடந்து கொண்டது அவர் தேசியவாதத்திற்கு பலியாகிப் போனதால்தான் என்று பலரும் விமர்சிப்பதுண்டு. ஆனால் ஜேர்மனியப் படைகள் மொஸ்கோவை முற்றுகையிட்டிருந்த நிலையில், அந்த யுத்தமானது ரஷ்யர்களைப் பொறுத்தவரையில் ஒரு தேசிய விடுதலை யுத்தமாக மாறிவிட்டிருந்தது. இந் நிலையில் அம் மக்களது தேசிய உணர்வுகளைத் தட்டியெழுப்ப, சர்வதேசவாதியான ஸ்டாலின் கூட பழம்பெருமை பேசித்தான் ஆக வேண்டியிருந்தது என்பதன் தெளிவான வெளிப்பாடு இதுவாகும்.

இந்த வெளிச்சத்தில் நோக்கினால், "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா...., "ஆண்ட பரம்பரை ஆள நினைப்பது..... " "கல் தோன்றி மண்தோன் றாக் காலத்து...." போன்ற கோசங்க ளின் தாற்பரியங்கள் புரிந்துகொள்ள முடியா தவைகள் அல்ல.

> "உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு" என்ற முழக்கத்தைக் கேட்கும் விவசாயி தனது பகுத்தறிவைப் பயன்படுத்தி அதனை ஆய்வுசெய்து கொண்டு இருப்பதில்லை. மாறாக தனது தலையை ஏற்கனவே தண்டவாளத்தில் வைத்திருப்பான்.

## ஆ) பகுத்தறிவிற்குப் பொருந்தாத வாதங்கள்

பொதுவாக தேசியவாத இயக்கங்களது பிரச்சாரங்களை பரிசீலித்தால், அவற்றில் பல பகுத்தறிவிற்குப் பொருந்தாத கட்டுக் கதைகளும், ஐதீகங்களும் நிறைந்தவைகளாக இருக்கும். உணர்ச்சி கொப்பளிக்கும் இவ் வாதங்களை பகுத்தறிவுக்குட்படுத்தினால் மிஞ்சுவது ஏதுமில்லை. சில நூற்றாண்டு கால வரலாற்றைக் கூட கொண்டிராத சமூகங்கள் தம்மை மிகவும் ஆதியானவைகளாகக் கற்பனை பண்ணுவதுடன், தமது வரலாறு பற்றிய மேலும் பல ஐதீகக் கண்ணோட்டங்களையும் கொண்டதாயிருக்கும். தேசியவாதிகளது பிரச் சாரங்களிலுள்ள வார்த்தை ஜாலங்களும், உணர்ச்சியை தட்டியெழுப்பும் உத்திகளும் பகுத்தறிவு பூர்வமாக சிந்திப்பவர்களுக்கு சில வேளை சகிக்க முடியாதவைகளாகக் கூட இருப்பதுண்டு. இவற்றின் தாற்பரியம் என்ன ?

பொதுவாக தேசிய இயக்கங்களின் எழுச்சி களின்போது, அந்த இயக்கங்களின் தலைமை யிலுள்ள அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் சமூக அரங்கிலுள்ள பெருமளவு எண்ணிக்கை யிலான கிராமப்புற விவசாயப் பிரிவினரை தேசிய இயக்கங்களில் அணிதிரட்ட வேண்டிய வர்களாயுள்ளனர். சமூகத்திலுள்ள பல்வேறு மக்கட் பிரிவினர்களிடையில் பொதுவான நலன்கள் இல்லாதது மட்டுமன்றி தேசியவாத த்தை முன்னெடுப்பவர்களின் தர்க்க நியாயங் களையும் அம் மக்கள் புரிந்துகொள்ள முடியாதவர்களாயுள்ளனர். இதனால் அம் மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் அம் மக்களின் உணர்வுகளைத் தொடக்கூடிய விடயங்களை மிகவும் உணர்ச்சிபூர்வமாக தேசியவாதிகள் முன்வைக்கின்றார்கள். தாய் மண், தன்மானம், இரத்தம், உயிர் போன்றவைகள்தான் இங்கு முக்கியமான பேசு பொருட்களாகின்றன.

"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு" என்ற முழக்கத்தைக் கேட்கும் விவசாயி தனது பகுத்தறிவைப் பயன்படுத்தி அதனை ஆய்வுசெய்து கொண்டு இருப்பதில்லை. மாறாக தனது தலையை ஏற்கனவே தண்டவாளத்தில் வைத்திருப்பான். அனேகமாக எல்லாத் தேசியவாதங்களுமே இப்படியான அம்சங்க ளைக் கொண்டு இருக்கவே செய்கின்றன. இந்த விளக்கத்தில் பார்த்தால் பாரதிதாசனும், காசி ஆனந்தனும், தி.மு.க வின் வார்த்தை ஜாலங்களும் தேசியவாதத்தின் இயல்பான வெளிப்பாடுகளே என்பதை புரிந்துகொள்ள முடியும்.

## இ) குறியீடுகளுக்கான முக்கியத்துவம்

தேச உருவாக்கம் என்பது மிகவும் வேறுபட்ட நிலைமைகளில் மிகவும் வேறுபட்ட கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் நிகழ்ந்தேறுகிறது. எந்தெந்த காரணிகளின் அடிப்படையில் ஒரு தேசம் உருப்பெறுகிறது என்பது வரலாற்றில் தற்செயலானவையே. ஒரு சந்தர்ப்பத்தில் மொழி ஒரு தேசத்தை உருவாக்குகிறது, வேறோர் சந்தர்ப்பத்தில் மதமோ, இனமோ (race) கூட தேசத்தை உருவாக்கலாம். இவ்வாறாக உருவாகும் தேசமானது, கடந்த காலத்தில் மிகவும் சிதறுண்டு கிடந்த மக்கள் கூட்டங்களை ஒன்றிணைத்து ஒரே தேசமாக மறுவார்ப்புச் செய்ய நேர்கிறது.

இந்த இலக்கில் பல்வேறு மக்களையும் இணைக்கவல்ல, பல தரப்பினரும் தம்மை ஒன்றாக இனம் காணவல்ல, அனைத்துத் தரப்பினதும் உயர்ந்தபட்ச விசுவாசத்தையும் பெறக்கூடியதான சில குறியீட்டு அம்சங்களின் தேவை எழுகின்றது. தேசியகொடி, தேசியகீதம், தேசியசின்னம், போன்றவை இவ்வகை ப்பட்டனவே. முற்றிலும் பகுத்தறிவின்படி நோக்கினால் இக் குறியீடுகளுக்கு உருப்படி யான அர்த்தமோ, 'பொருள் வகை' பயன்களோ இருக்கமாட்டாது.

பல வர்ணம் கொண்ட சிறு துண்டுத் துணியிலான தேசியக் கொடியானது கம்பத்தில் பறக்கவிடப்படுவதைத் தவிர வேறெதற்கும் பயன்படாது. ஆனால் தேசிய இயக்கத்தில் இக் கொடிக்கு இருக்கும் மதிப்பும், அதன் மீதான விசுவாசமும் அளவிடமுடியாதவை. பல சந்தர்ப்பங்களில் உணர்ச்சி பொங்கும் காரசாரமான விவாதங் களுக்கு இக் கொடியே மையமாவதுண்டு. எதிரித் தேசத்தின்மீது தொடுக்கும் முதல் தாக்குதலே அவனது தேசியக் கொடியை அவமதிப்பதாகும். தனது உயிரை கொடுத்தேனும் தேசியக் கொடியின் பெருமையை காக்கும் நிகழ்வுகள் தேசிய இயக்கங்களில் அடிக்கடி இடம்பெறுவதுண்டு.

எனவே தேசிய இயக்கங்களை மதிப்பிடும்போது அங்கு இக் குறியீடுகளுக்குள்ள முக்கியத்துவத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். குறியீட்டுத் தளத்தில் நடைபெறும் மோதல்கள் எந்தவகையிலும் முக்கியத்துவம் குறைந்தவையல்ல. இவைகுறித்து எழும் மோதல்களின் தாற்பரியங்கள் மிகவும் ஆழமான வையாகும்.

> தேச – அரசை ஏற்கனவே உருவாக்கி விட்ட ஒரு தேசத்தைப் பொறுத்தவரையில் அந்த தேசமானது ஏனைய தேசங்களுடனி உறவைப் பேணும்போது அதற்கு ஏற்படும் மிதமான பெருமித உணர்வு என்பதற்கு மேலாக அதற்கு தேசியவாதம் தேவைப்படமாட்டாது. இதற்கும் மேலாக, தேச – அரசைப் பெற்றுள்ள அத் தேசமானது தேசியவாதத்தை தீவிரமாக வெளிப்படுத்த முனைந்தால் அது வரலாற்றில் பின்நோக்கிச் செல்வதாக அர்த்தப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5) தேசியவாதம் என்பது ஓர் அரசியல் சித்தாந்தமாகும்.

*சிதறிக்கிடக்கும் மக்களை ஒரு தேசமாக உருவாக்கவும், அத் தேசம் தனக்கான தேச – அரசை அமைத்துக் கொள்ளவும் தேசியவாதம் வழிகாட்டுகிறது. இவ்வகையில் தேசியவாதம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் சுபீட்சத்திற்கான இயக்கப்போக்கில் ஒரு வழிமுறையே அன்றி அவர்களின் இலக்கு அல்ல.*

**இலங்கையின் தேச உருவாக்கமானது 'சிங்கள தேச' உருவாக்கமாகவே அமைந்தது. அத்துடன் சிங்கள மக்கள் தேசமாக உருவாக்கப்படும் செயல்முறை அனேகமாக ஏனைய சிறுபான்மை சமூகங்களின் அரசியல், ஜனநாயக, பொருளாதார, கலாச்சார உரிமைகளை விலையாகக் கொண்டே நடைபெறவும் செய்தது.**

தேச – அரசை ஏற்கனவே உருவாக்கிவிட்ட ஒரு தேசத்தைப் பொறுத்தவரையில் அந்த தேசமானது ஏனைய தேசங்களுடன் உறவைப் பேணும்போது அதற்கு ஏற்படும் மிதமான பெருமித உணர்வு என்பதற்கு மேலாக அதற்கு தேசியவாதம் தேவைப்படமாட்டாது. இதற்கும் மேலாக, தேச – அரசைப் பெற்றுள்ள அத் தேசமானது தேசியவாதத்தை தீவிரமாக வெளிப்படுத்த முனைந்தால் அது வரலாற்றில் பின்நோக்கிச் செல்வதாக அர்த்தப்படும். இதன் நடைமுறை விளைவு ஏனைய தேசங்களை ஒடுக்குவதாகவே இருக்கும். கைவசம் அரசொன்றைப் பெற்றுள்ள இத்தகைய தேசம் தனக்கென சொந்தமாக 'தேசியவாதக் குழுக்களை' அமைக்குமானால் அதில் தாக்குதல் நோக்கமே இருக்கும். மேலும் ஆளப்படும் ஏனைய தேசங்களை நசுக்கி தனது ஆட்சியை மேலும் இறுக்க விரும்புவதையே இது காட்டும். இந்தவகையில் இத்தகைய தேசியவாதம் பிற்போக்கானதாகும்.

அதேவேளை இன்னமும் ஒரு தேசமாக வடிவமையாத மக்களுக்கு அல்லது தனது சொந்த தேச அரசை இன்னமும் அமைத்துக் கொள்ளாத ஒரு தேசத்திற்கு தேசியவாதமானது அப்போதைய காலகட்டத்தில் மிகவும் முதன்மையான வரலாற்றுத் தேவையாகும். தேசியவாதத்தை முன்னெடுப்பதன் மூலமே அந்த மக்கள் கூட்டம் தமது தேசிய அவலங்களுக்கு முடிவுகட்டி எதிர்கால சுபீட்சத்தை உத்தரவாதப்படுத்த முடியும். இந்தவகையில் இம் மக்களது தேசியவாதம் முற்போக்கானதாகும். இவ்வாறாக ஒடுக்கும் தேசத்தினதும் ஒடுக்கப்படும் தேசத்தினதும், ஏற்கனவே அரசைக் கொண்டுள்ள தேசத்தினதும், இதுவரை அரசைக் கொண்டிராத தேசம் அல்லது இன்னும் தேசமாகவே உருப்பெறாத மக்களதும்., தேசியவாதங்களுக் கிடையிலான வேறுபாடு களை இனங்காணத் தவறக் கூடாது.

இரண்டு விதமான தேசங்களுமே பழமை பேசுகின்றன. உணர்ச்சி மயமான பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றன. அவ்வாறாயின் இவற்றை ஸ்தூலமாக வேறுபடுத்திக் காண்பது எவ்வாறு? இதற்கான வழிமுறை மிகவும் இலகுவானதே. இந்த தேசியவாதம் எழுப்பும் அரசியல் கோரிக்கைகளை பரிசீலித்தால் அடிப்படை வேறுபாடுகளைக் கண்டுகொள்ள முடியும். **எந்த தேசியவாதம் சமத்துவம், ஜனநாயகம் போன்றவற்றிக்காக நிற்கின்றதோ அது முற்போக்கான தேசியவாதமாகும். எந்த தேசியவாதம் தனிச் சலுகைகளைக் கோருகின்றதோ அது பிற்போக்கானதாகும்.**

எனவே கடந்த காலத்தில் சிங்கள, தமிழ் தலைமைகளது அரசியல் கோரிக்கைகளை எடுத்து நோக்கினால் இவ் வேறுபாட்டை இனம் காண்பது கடினமாக இராது. அண்மைக் காலத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தேசியவாதம் பேசுவதாக சிங்களக் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. தாம் 'சிறீலங்கா' என்று பொதுப்படையாக பேசுவதாகவும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தமது கட்சிப் பெயர்களில் "தமிழ்", "முஸ்லிம்" என்ற பதங்களைக் கொண்டிருப்பதன் மூலம் குறுகிய கண்ணோட்டத்துடன் செயற்படுவதாகவும் சிங்கள கட்சிகள் விமர்சிக்கின்றன.

முதலில் 'சிறீலங்கா' என்பது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய எல்லாத் தரப்பினரையும் உள்ளடக்காமல் சிங்களவர்களை மாத்திரமே குறிக்கிறது என்பதே உண்மையாகும். தனக்கென தேச – அரசை ஏற்கனவே பெற்றுள்ள சிங்கள மக்கள் தேசியவாதத்தை முன்னெடுப்பது ஏனைய தேசங்களை ஒடுக்குவதற்காகவே. ஆதலால் சிங்கள தேசியவாதம் பிற்போக்கான பாத்திரத்தையே ஆற்றமுடியும். மாறாக சிங்கள பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் தமிழர்களும், முஸ்லிம்களும் தம்மை தனியான தேசங்களாக இனம் காண்பதனாலும், தமக்கென தனியான தேச அரசுகளை அமைப்பதனாலுமே இன்றைய ஒடுக்குமுறைகளுக்கு முடிவுகட்டி தமது எதிர்கால சுபீட்சத்தை உத்தரவாதப்படுத்த முடியும்.

இந்தவகையில் தமிழ், முஸ்லிம் தேசியவாதங்கள் வரலாற்றுத் தேவையாக உள்ளது. முற்போக்கான பாத்திரம் வகிக்கின்றது. இங்கு தனக்கென அரசைக் கொண்டுள்ள சிங்கள தேசம் தேசியவாதம் பேசுவதே தவறு என்பதும் தமிழ், முஸ்லிம் மக்கள் தேசியவாதத்தைக் கைவிடுவதுதான் கேடு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு ஆணாதிக்க சமூகத்தில் ஒடுக்குமுறைக்குள்ளாகும் பெண்கள் முதலில் தம்மை பெண்களாக இனம் கண்டு உணர்வுபூர்வமாக தாமே போராடுவதன் மூலம்தான் தமது விடுதலையை வென்றெடுக்க முடியும். இதனால் ஒடுக்கப்பட்ட பெண்களைப் பொறுத்தவரையில் பெண்நிலை வாதமானது மிகவும் அத்தியாவசியமானது. சமூகத்திலுள்ள நிறுவனங்கள், ஒழுங்கமைப்புக்கள், கருத்துக்கள் போன்ற அனைத்துமே ஆணாதிக்க நலன்களைக் காக்கும் கைங்கரியத்தை ஏற்கனவே செய்துவருகின்றன. ஆண்கள் சமூகத்தின் பெயராலேயே, நடப்பு சமூக ஒழுங்கை அப்படியே பேணுவதினூடாகவே, பெண்களைத் தொடர்ந்தும் ஒடுக்குமுறைக்குள்ளாக்க முடியும். இதற்கு மேலாதிக்க நிலையிலுள்ள ஆண்கள் தம்மை தனியாக இனம்காண, தமது ஆண் உரிமைகளுக்காக என குரல் எழுப்ப வேண்டிய அவசியம் எழுவதில்லை. தனது மேலாண்மையை ஏற்கனவே நிலைநாட்டிவிட்ட ஒரு சமூகப் பிரிவானது உரத்த குரலில் பேசவேண்டிய தேவையில்லை. ஆனால் இதனையும் மீறி ஆண்கள் தம்மை தனியாக இனம் காணவும் ஒழுங்கமைக்கவும் முனைந்தால் அது பெண்கள் மீதான ஒடுக்குமுறையை இன்னும் தீவிரப்படுத்தவும் புதிய ஒடுக்குமுறைகளை உருவாக்குவதையுமே நோக்காகக் கொண்டிருக்கும். இதனையொத்த வேறுபாடுகளையே நாம் 'சிங்கள பாதுகாப்பு அமைப்புக்கும்' (SAS). 'தமிழர் விடுதலை அமைப்புக்கும்' இடையில் காணமுடியும்.

## 6. தேசியப் பிரச்சினையும் ஜனநாயகமும்

முதலாளித்துவ அமைப்பொன்றினுள் தேசியப்பிரச்சனைக்குத் தீர்வு முரணற்ற ஜனநாயகம் என்றார் லெனின். இங்கு முதலாளித்துவ ஜனநாயகமானது, தேசங்களுக் கிடையில் 'உண்மையான சமத்துவம்' என்ற பண்பினைக் கொண்டிருப்பது பிரதானமாகும். ஆனால் முதலாளித்துவ ஜனநாயகமானது வெறுமனே எண்ணிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சனையாகக் குறுக்கப்பட்டு விட்டால் இத்தகைய முதலாளித்துவ ஜனநாயகமானது இயல்பாகவே பெரும்பான்மை தேசம் சிறுபான்மை தேசங்களை ஒடுக்குவதற்கான ஒரு கருவியாக இலகுவில் மாறிவிடுகின்றது.

ஜனநாயகத்திலுள்ள இந்த அளவு, பண்பு வேறுபாடுகளை விளங்கிக்கொள்ள ஒரு உதாரணத்தை மட்டும் எடுத்துக்காட்டலாம், இலங்கையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு போதிய இடம் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அடிக்கடி எழுவதுண்டு. அவ்வாறு அரிதாக ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகளும்கூட ஏராளமான மக்கள் தொலைக்காட்சி பார்க்கும் நேரங்களில் (prime time) அல்லாமல் ஏனைய நேரங்களிலேயே காட்டப்படுகின்றன. அதிலும் கூட ஒரு விசேட நிகழ்ச்சி அல்லது அரச அறிக்கை படிக்கப்படுவது போன்ற காரணங்களுக்காக ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை இடைநிறுத்த வேண்டியேற்பட்டால் எப்போதும் பலியாவது தமிழ் நிகழ்ச்சிகள்தான் என்றும் விமர்சிக்கப்படுவதுண்டு. இக் குற்றச்சாட்டுகளை மறுக்கும் அரசானது தமிழ் மொழி பேசும் மக்களின் வீதாசாரத்திற்கு ஏற்ப 18வீதம் தமிழ் மொழி நிகழ்ச்சிகள் காட்டப்படுவதாக வாதாடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்மொழி பேசுவோரது சதவீதம் சுமார் 28வீதம் ஆகும். இந்த புள்ளிவிபர தவறை தவிர்த்துவிட்டால், தமிழ் மொழி பேசுவோரது விகிதத்திற்கு ஏற்பவே நிகழ்ச்சிகளை நடத்துவதாகக் கூறும் அரசின் வாதம் சரியானது போலவே தோன்றும். ஆனால் இந்தப் பிரச்சனையை இன்னோர் கோணத்தில் அணுகுவோம். தமிழ் மொழி, சிங்கள மொழி பேசும் இரண்டு தனிநபர்களை எடுத்துக் கொள்வோம். இருவரும் தொலைக்காட்சி அனுமதிப் பத்திரத்திற்கு ஒரே கட்டணத்தையே செலுத்துகின்றார்கள். சம அளவிலான நேரத்தை பொழுது போக்கிற்காகப் பெற்றுள்ளார்கள். ஆனால் சிங்களம் பேசும் ஒருவர் தான் பெரும்பான்மை தேசத்தைச் சார்ந்தவர் என்ற ஒரே காரணத்தில் அதிகளவு நேரத்திற்கு நுகர்கையில் தமிழ் பேசும் ஒருவர் குறைந்தளவு நேரத்திற்கே நுகர்கின்றார். அதாவது ஒரே கட்டணத்தையே செலுத்தி ஒரேயளவு நுகர்வுத் தேவையையே கொண்டிருந்தபோதிலும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் ஒருவர் குறைந்தளவு நுகர்ச்சியையும், பெரும்பான்மை யினரான சிங்கள மொழி பேசும் ஒருவர் அதிகளவு நுகர்வதும் சாத்தியப்படுகின்றது.

வெறுமனே எண்ணிக்கை வகையில் பார்த்தால் எல்லாமே இயல்பானது போலவே படுகின்றது. ஆனால் பண்பு வகையில் உண்மையில் சமத்துவம் என்பதன் அடிப்படையில் பார்த்தால் சிறுபான்மையினருக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவது புலனாகின்றது. இம் முரண்பாடானது தீவிரமடைகையில் தமிழ் மொழி பேசுவோர் ஒரு தனியான அலைவரிசையை உருவாக்குவது பற்றி சிந்திக்கத் தலைப்படுவார்கள். ஒருசில மாறுதல்களுடன் இது அரசியலுக்கும் பொருந்தக் கூடியதே. இலங்கை அரசியலில் நடைபெற்ற அனேக ஒடுக்குமுறைகள் முதலாளித்துவ ஜனநாயகம் பின்பற்றப்படுவதாக சொல்லிக் கொண்டே நடைபெற்றன.

இங்கு ஜனநாயகம் என்பது பண்புவகையில் உண்மையான சமத்துவமாக அர்த்தப்படுத்தப்படாமல் வெறும் எண்ணிக்கைத் தன்மைக்கே முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அம்சத்தை எப்போதுமே தமக்குச் சாதகமாக மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டே மலையக மக்களது குடியுரிமை, வாக்குரிமை பறிப்புகள் உட்பட தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் போன்ற அனைத்தும் செய்துமுடிக்கப்பட்டன. இவ்விதம் வாய்ப்பாக மாற்றியமைக்கப்பட்டுள்ள எண்ணிக்கைப் பலத்தை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகணத்தில் மக்கள் கருத்துக் கணிப்பு நடாத்துவது பற்றியும் இப்போது பேசப்படுகின்றது. **இலங்கையில் எரியும் பிரச்சனையாக இன்று நிலவுவது மாகாணப் பிரச்சனை அல்ல. மாறாக தேசியப் பிரச்சனையாகும். அதற்கு குறிப்பிட்ட தேசமானது தான் மற்றைய தேசத்தோடு சேர்வதா இல்லையா என்பதை அத் தேசம் மட்டும் கலந்துகொள்கின்ற சர்வஜன வாக்கெடுப்பால் மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும்.** அப்போதுதான் ஜனநாயகம் அதன் பண்புவகையில் மெய்யான சமத்துவமாக அர்த்தம்பெறும்.

## இலங்கையில் தேசம் கட்டமைக்கப்பட்ட விதம் குறித்த சில கருத்துக்கள்

தேச உருவாக்கத்தைப் பொறுத்தவரையில் வரலாற்று ரீதியாக நான்கு வகை தேசிய வாதத்தின் மாதிரிகளை எடுத்துக் காட்ட முடியும்.

முதலாவதாக,
**ஐரோப்பிய மாதிரித் தேசியவாதம்**
(European Model Nationalism) :

ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற கைத்தொழிற் புரட்சியும், பிரான்சில் நடைபெற்ற முதலாளித்துவப் புரட்சியும் இணைந்து முழு ஐரோப்பிய அரசியல் பரப்பிலும் ஏற்படுத்திய தாக்கங்களின் பயனாக தேசங்கள் பலவற்றின் கட்டமைவும், தேச – அரசுகளின் பரிணமிப்பும் இடம்பெற்றன.

இரண்டாவதாக,
**குடியேற்றவாதிகளின் தேசியவாதம்**
(Creole Nationalism) :

குறிப்பாக ஐரோப்பிய குடிகள் அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஆபிரிக்க கண்டங்களுக்கு இடம்பெயர்ந்து அங்கு தம்மை தனியான தேசங்களாக ஸ்தாபித்துக் கொண்டமை.

ஈற்றில் தமக்கென இறைமை கொண்ட சுதந்திரமான அரசுகளை அமைத்துக் கொண்டமை .

மூன்றாவதாக,
**உத்தியோகபூர்வமான தேசியவாதம்**
(Official Nationalism) :

ஏதோ ஒரு விதத்தில் ஆட்சிக்கு வரும் வர்க்கங்கள், குழுக்கள் தமது சொந்த மக்களிடம் இருந்தே தாம் அந்நியப்பட்டுப் போய்விடும் ஆபத்தை உணரும் நிலையில், அந்த மக்கள் மத்தியில் இயல்பாக உருவாகி எழுச்சிபெற்று வரும் தேசிய உணர்வுகளை தாமே முன்வந்து அரசின் துணையுடன் தீவிரமாக முன்னெடுப்பதன் மூலம் அம் மக்களின்மீது ஒருவகை அரசியல், சித்தாந்த மேலாண்மையை நிலைநாட்டிக் கொள்கின்றன.

நான்காவதாக,
**கொலனித்துவத்தின் கீழ் உருவாகும் தேசியவாதம் :**

கொலனித்துவ அரசொன்றின் ஆதிக்க வரப்பிற்குள் அமையும் பல்லின சமூகங்கள் கொலனித்துவ ஒடுக்குமுறைகளின் கடுமையை பரவலாக முகம்கொடுக்கின்றன. இதன் விளைவாக மக்கள் மத்தியில் கொலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்புகின்றன. ஒடுக்குமுறைகளும் அவற்றிக்கு எதிரான போராட்டங்களும் – அதாவது பொதுவான வரலாற்று விதியினால் பிணைக்கப் படுவது– சுதேச மக்களை ஒன்றிணைத்து ஒரே தேசமாக வடிவமைக்கின்றது. இப் பல்லின சமூகங்கள் மத, மொழி, கலாச்சார, மற்றும் பிராந்திய வேறுபாடுகள் போன்றவற்றைக் கடந்தே ஒரே தேசமாகின்றன. இவ்வாறாக ஒரே ஆட்சி எல்லைக்குள் பல்லின சமூகங்கள் நிலவும் சந்தர்ப்பங்களில் மேற்படி தேச உருவாக்கப் பணியின் பாரிய பொறுப்புக்கள் பெரும்பான்மை சமூகத்தின் அரசியல் தலைமைகளிற் குரியாதாகின்றது. சிறுபான்மை சமூகங்களின் அச்சங்களைப் போக்குதல்: அவற்றை அரவணைத்துச் செல்லுதல்: ஒவ்வொரு சமூகமும் சுயமாக வளர்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல்: வளங்களை நியாயமான முறையில் பங்கிடுதல்: எந்தவொரு சமூகமும் சிறுபான்மை என்பதற்காக பாதிக்கப்படாதிருப்பதை உத்தரவாதம் செய்தல் போன்ற பன்முகப் பொறுப்புகள் இத் தலைமைகளைச் சார்ந்ததாகிறது.

மேற்படி வரலாற்று மாதிரிகளில் உத்தியோக பூர்வ தேசியவாதம், கொலனித்துவத்தின் கீழ் உருவாகும் தேசியவாதம் போன்றவை இலங்கையில் தேச உருவாக்கம் பற்றிப் புரிந்து கொள்வதில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அத்தோடு ஏனைய கொலனிகளில் நடைபெற்றவை போன்ற தீவிரமான சுதந்திரப் போராட்டங்கள் இலங்கையில் நடைபெறவில்லை என்பதால் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளை பொதுவாக முகம்கொடுப்பது, அவற்றிக்கு எதிராக இணைந்து போராடுவது என்ற பொதுவான வரலாற்று விதியினால் (Common Historical Destiny) மக்கள் பிணைக்கப் படுவதற்கான வாய்ப்பு குறிப்பிடும் படியாக இங்கு இருக்கவில்லை.

இதன் காரணமாக இலங்கையின் தேச உருவாக்க மானது 1948 இல் சுதந்திரம் கிடைத்த பின்பே தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டியதாகிறது. இந்தவகையில் அரசு அதிகாரத்தை கையேற்ற சிங்கள பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலமைகளும் புத்திஜீவிகளும் தேசத்தைக் கட்டமைக்கும் பிரதான பாத்திரத்தை ஆற்றவேண்டி இருந்தனர். இவர்கள் தமது வரலாற்றுப் பாத்திரத்தை எவ்வாறு ஆற்றினார்கள் என்பதைப் பொறுத்தே இலங்கையில் தேச உருவாக்கமும் நிகழ்ந்தேறியது என்பதால் எமது கவனத்தை சிங்கள அரசியல் தலைமை, புத்திஜீவிகளின் பால் சற்று திருப்ப வேண்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், ஏற்கனவே நிலவிவந்த ஒடுக்குமுறை அரசினை எவ்வித மாற்றமும் இன்றி, சுரண்டும் வர்க்கங்களை சேர்ந்தவர்களாகவும், மக்களை எவ்விதத்திலும் பிரதிநிதித்துவப் படுத்தாதவர்களாகவும் இருந்தவர்களான சிங்கள நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ வர்க்கங்களை சார்ந்தவர்களே தம்வசப்படுத்திக் கொண்டனர். இந்த அரசுயந்திரத்தை சுதேச மக்களை ஒடுக்குவதற்கென்றே ஏகாதிபத்தியம் உருவாக்கியிருந்தது. இதனால் அரசிற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களுக்கும் இடையிலான உறவானது அடிப்படையில் பகைமை கொண்டதாகவே இருந்தது. மக்களுடன் பகைமை கொண்ட ஓர் அரசயந்திரத்தை கையேற்பது என்ற நிலையில் இந்த அரசியல் தலைமைகள் இயல்பாகவே மக்களிடம் இருந்து அந்நியப்படும் அபாயத்தை உடனடியாகவே எதிர்கொண்டிருந்தன. இவ் ஆளும் வர்க்கங்கள் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் மட்டுமல்ல கலாச்சார ரீதியிலும் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாதிருந்தன.

மூத்த தேசியத் தலைவர்கள் எனப்பட்ட D.S.சேனநாயக்க, S.W.R.D. பண்டாரநாயக்க, ஜோன் கொத்தலாவல போன்றவர்கள் கறுப்புத் தோலுடன் உலவிய வெள்ளைத் துரைமார் களாகவே தொடக்கத்தில் இருந்தனர். 1920 களில் சேனநாயக்க, கொத்தலாவல போன்ற வர்கள் பேச்சுவழக்கு சிங்களம் தெரிந்திருந்த தைத் தவிர சிங்கள மொழியை எழுதவோ, வாசிக்கவோ தெரியாதவர்க ளாயிருந்தனர். 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக் கழகத்திலிருந்து திரும்பும்வரை பண்டாரநாயக்கா சிங்களத்தில் சொற்பொழிவாற்றக் கற்றிருக்கவில்லை. இவ்வாறு சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார அம்சங்களில் சிங்கள மக்களிடம் இருந்து தனிமைப்பட்டிருந்த ஆளும் வர்க்கங்கள் தமது அதிகாரங்களை ஸ்திரப் படுத்துவதில் வருங்காலத்தில் பல ஆபத்துக் களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை தொடக்கத்திலேயே புரிந்து கொண்டிருந்தன.

இவ்வாறாக, பரந்துபட்ட சிங்கள மக்களிடம் இருந்து அந்நியப்பட்டிருந்த அரசியல் தலைமை, நீண்டகால கொலனித்துவ ஆட்சியின் கீழ் பொருளாதார, அரசியல், கலாச்சார உரிமைகள் மறுக்கப்பட்டிருந்ததால் அதிருப்தியுற்றிருந்த மக்கள் படிப்படியாக விழிப்புணர்வு பெற்றுவருவதைக் கண்டு எச்சரிக்கையடைந்தது. மேலும், அப்போது மக்கள் மத்தியில் பலமான தளத்தைக் கொண்டவர்களாகவும், ஆளும் வர்க்கத்தின் தீவிர எதிர்ப்பாளர்களாகவும் இடதுசாரிக் கட்சிகள் விளங்கியதையும் கண்டுகொண்டனர். எனவே தமது அரசியல் அதிகாரம் எந்நேரமும் கைநழுவிப் போய்விடக்கூடிய ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டே சிங்கள அரசியல் தலைமையானது இலங்கையில் தேச உருவாக்கம் என்ற பாரிய வரலாற்றுப் பணியினை செய்தாக வேண்டியிருந்தது. இதன் நிமித்தம் அப்போது பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் உள்ளூர உருவாகி, வளர்ச்சி பெற்று வந்த தேசிய விழிப்புணர்வை தாமே முன்வந்து ஏற்று, தம்வசம் உள்ள அரசு யந்திரத்தினால் கிடைக்கப்பெற்ற அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தி 'உத்தியோக பூர்வ தேசியவாதமாக' முன்னெடுக்க முனைந் தனர்.

இதன் காரணமாக சுதந்திரத்தின் பின்னான இலங்கையின் தேச உருவாக்கமானது 'சிங்கள தேச' உருவாக்கமாகவே அமைந் தது. அத்துடன் சிங்கள மக்கள் தேசமாக உருவாக்கப்படும் செயல்முறை அனேகமாக ஏனைய சிறுபான்மை சமூகங்களின் அரசியல், ஜனநாயக, பொருளாதார, கலாச்சார உரிமை களை விலையாகக் கொண்டே நடைபெறவும் செய்தது. சிங்கள அரசியல் தலைமை உணர்வுபூர்வமாகவே திட்டமிட்டு ஏனைய சிறுபான்மை சமூகங்களின்மீது அடக்குமுறை களை மேற்கொண்டதானது அந்தந்த சமூகங்கள் தம்மை பொதுவாக இலங்கையர் என இனங்காணாது தனியான சமூகங்களா கவே இனங்காண வைத்தது. காலப்போக்கில் தமது உரிமைகளுக்காகப் போராடவும், ஒடுக்குமுறைகளை எதிர்க்கவும் இதனூடாக தனித்தனியான தேசங்களாக உருவாகும் நிலைக்கும் அவற்றை இட்டுச்சென்றது.

புதிய அரசு இயந்திரத்தைப் பலப்படுத் தவும், அதனூடாக தமது வர்க்க மேலாதிக்கத்தை வலுவாக்கவும், வர்க்க நலன்களை தங்குதடையின்றி அடையவும் சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு வாய்ப்பான சமூக அடித்தளத்தை இடவேண்டிய அவசியம் சிங்கள அரசியல் தலைமைக்கு இருந்தது.

இவ்விதமாக நோக்கும்போது சிறுபான்மை சமூகங்களின் தேச உருவாக்கம் என்பது சிங்கள பேரினவாதத்தின் ஒவ்வொரு அடக்குமுறை நடவடிக்கைக்கும் எதிராக குறித்த சிறுபான்மை சமூகங்கள் நடாத்திடும் பல்வேறு போராட்டங்களினூடாக உருவாகி யிருப்பதைக் காணமுடியும். சிறுபான்மை சமூகங்களுள் எண்ணிக்கையளவில் பெரிதான தமிழ் மக்களின் அரசியல் நடவடிக்கைகளில் இப் போக்கை துல்லியமாக இனம் கண்டு கொள்ள முடியும். தமிழ் மக்களது எந்தவொரு அரசியல் கோரிக்கையும் வெறுமனே தற்செயல் வகைப்பட்டதோ அல்லது சில பேராசை பிடித்த தலைவர்களது கனவுகளாகவோ இருக்கவில்லை. மாறாக, சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைகளின் பிரதிவிளைவாக எழுந்த சாதாரண தற்காப்பு நடவடிக்கைகள்தான் என்பதைப் புரிந்துகொள்வது கடினமல்ல. எனவே சுதந்திரத்திற்குப் பின்பான இலங்கையின் அரசியல் வரலாறானது சிங்கள சமூகம் தனியான தேசமாக உருவாக்கப் பெற்றதும் அதன் எதிர்விளைவாக ஏனைய சமூகங்கள் தனித்தனி தேசங்களாக உருவாவதன் வரலாறாகவே அமைந்தது. வரலாற்றில் முக்கியத்தவம் மிக்க சில நிகழ்வுகளை பரிசீலிப்பதன் மூலம் இவ்வுண்மையை தெளிவுறப் புரிந்துகொள்ள முடியும்.

புதிய அரசு இயந்திரத்தைப் பலப்படுத் தவும், அதனூடாக தமது வர்க்க மேலாதிக்கத்தை வலுவாக்கவும், வர்க்க நலன்களை தங்குதடையின்றி அடையவும் சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு வாய்ப்பான சமூக அடித்தளத்தை இடவேண்டிய அவசியம் சிங்கள அரசியல் தலைமைக்கு இருந்தது. இதனை அடைய முதலாவதாக, சிறுபான்மை சமூகங்கள் அதுவரை கொண்டிருந்த அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்தினைக் குறைத்து அவற்றை சிங்கள மக்களிற்கு இரண்டாந்தரமாக வைத்தல் (சிங்கள அரசகரும மொழி, தேசிய மயமாக்கல், பௌத்த மதத்தினருக்கு பிரத்தியேக சலுகை, அரச நிறுவனங்களை சிங்கள மயமாக்குதல் போன்றவை இதன்பாற்பட்டது.)

இரண்டாவ தாக, இலங்கையில் சிங்கள தேசம் ஒன்றை மட்டுமே கட்டியெழுப்புவதை – அதாவது பல சமூகங்களையும் உள்ளடக்கிய உயர்ந்தபட்ச தேசநிர்மாணம் என்பதற்குப் பதிலாக 'சிங்கள தேச நிர்மாணம்' ஒன்றையே – சிங்களத் தலைமை முன்னெடுத் தது. சாதாரண நிலைமைகளில் சிங்கள சமூகத்துடன் இணைந்ததாக அரசியல், பொருளாதார, சமூக உறவுகளை நன்கு பேணவிரும்பிய சிறுபான்மை சமூகங்களின் விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் புறந்தள்ளப் பட்டே சிங்கள தேச உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. தமது எல்லாவகையான நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் மிதித்துத் துவைக்கப்பட்டதன் விளைவாகவே குறிப்பாக தமிழ்ச் சமூகம் மைய அரசு அமைப்பில் நம்பிக்கை இழந்து தனியான தேசமாகப் பரிணமிக்கத் தொடங்கியது. ஈற்றில் தமக்கென சொந்த தேச அரசினை நிறுவுவதை நோக்கித் தீவிரமாகச் செயற்படவும் செய்தது. எடுத்துக் காட்டப்படவுள்ள சில வரலாற்று நிகழ்வுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

### அ) குறியீட்டுத் தளத்தில் சிங்கள தேச உருவாக்கத்தின் வெளிப்பாடுகள்

பல்வேறு இன, மத பிரிவினர்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு தேசத்தை உண்மையிலேயே நிர்மாணிப்பதாயின் அத்த கைய தேசம் தொடர்பாக முன்வைக்கப்படும் குறியீடுகளும் அனைத்து சமூகப் பிரிவினர் களின் உணர்வுகளையும், அபிலாசைகளையும், பிரதிநிதித்துவம் செய்வதாகவும், அனைத்து சமூகங்களையும் இணைத்துச் செல்வதாகவும் அமையவேண்டும். ஆனால் இலங்கையிலோ தேசம் தொடர்பான இக் குறியீடுகள் தனியே சிங்கள சமூகத்தை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தின. சிங்கள ஆளும் வர்க்கங்கள் இலங்கையர் என்ற பெயரால் சிங்கள சமூகத்தை மட்டுமே ஒரு தேசமாக கட்டமைக்க விளைந்தமையையே இது வெளிப்படுத்தியது.

**தேசியம் (Nationality):**

பல்வேறு நாடுகளிலும் பல்லின, பல மத சமூகங்களையும் ஒன்றிணைத்ததாக தேச உருவாக்கம் நிகழும்போது அந்த மக்களது தேசியம் (Nationality) என்பது பொதுவான ஒன்றாகவே குறிக்கப்படுகின்றது. – குறிப்பாக அரசு ஆவணங்களான கடவைச் சீட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

போன்றவற்றில்— இன, மத வேறுபாடுகள் அப் பதிவுகளில் இடம்பெறுவதில்லை. இந்தியாவில் இத்தனை தேசிய முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் எந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரதும் தேசியமானது 'இந்தியர்' என்றே இன்றுவரை குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இலங்கையிலோ அனைவருக்கும் பொதுவான தேசிய அடையாளமாக 'இலங்கையர்' என்பது உருவாகவில்லை. சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கைச் சோனகர், மலாயர், பறங்கியர்...... என்றே அரசு ஆவணங்களில் வேறுபடுத்திக் காட்டப்பட்டது.

இதேவேளை 1921, 1931 ம் ஆண்டு சனத்தொகைப் புள்ளி விபரங்களில் கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என காட்டப்பட்ட வேறுபாடு பிற்கால புள்ளி விபரங்களில் மறைந்து சிங்களவர் என்ற இனம்காணல் பொதுவாகக் காட்டப்பட்டது. எனினும் தமிழர்களோ இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்றே தொடர்ந்தும் பிரித்துக் காட்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க தாகும். தமது வரலாற்றுச் சான்றாக சிங்களவர்களால் குறிப்பிடப்படும் மகாவம்சப்படி பார்த்தாலும் கூட வேடுவர் குடி தவிர்ந்த மற்ற அனைவருமே ஒருவித வந்தேறு குடிகள்தான். அப்படியிருக்க சிங்களவர்களை இலங்கையின் பூர்வீக குடிகளாகவும் ஏனைய சிறுபான்மை சமூகங்களை வந்தேறு குடிகளாகவும் சிங்களத் தலைமை வரையறுத்தது. இதன் தொடர்ச்சியாகவே சிங்களவர்கள் மட்டுமே 'இலங்கையர்கள்' என்ற தேசமாகக் கருதி சிங்களத் தலைமை செயற்படலாயிற்று.

### தேசியக்கொடி:

இலங்கையின் தேசியக் கொடியானது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஒரு துல்லியமான குறியீடாக அமைகின்றது. 1948 இல், அதாவது சுதந்திரம் கிடைக்கப் பெற்றவுடன் இத் தேசியக் கொடியின் மாதிரி அமைப்பானது முன்மொழியப்பட்டது. அதில், செங்கபில நிற பின்புலத்தில் மிக நேர்த்தியாக மஞ்சள் நிறத்தில் வரையப்பட்ட சிங்கம் ஒரு வாளை உயர்த்தியபடியுள்ளது. இச் சிங்கம் சிங்களவரையும் அவ் வாள் அவர்கள் கையிலுள்ள இறைமையையும் சுட்டி நிற்கின்றது. புத்தர் ஞானம் அடைந்ததாகக் கூறப்படும் அரசமரத்தின் 4 இலைகள் நான்கு மூலைகளிலும் மஞ்சள் நிறத்தில் தீட்டப் பட்டிருந்தன. எல்லா சமூகங்களையும் ஒருங்கே 'இலங்கையர்' என பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலோ, ஒருமித்த தேசிய உணர்வை வெளிப்படுத்தி, வலுப்படுத்தும் வகையிலோ இத் தேசியக் கொடி அமையவில்லை. மாறாக ஒரு பௌத்த, சிங்கள கொடியாகவே இத் தேசியக் கொடி அமைந்திருந்தது.

ஆனால் பல்வேறு நாடுகளினதும் தேசியக் கொடிகள் சமத்துவமான அளவில் பல வர்ணங்களைக் கொண்டதாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இங்கு முன்மொழியப் பட்ட தேசியக் கொடி மாதிரியானது ஏனைய சமூகங்களின் உணர்வுகளை பாதிக்கும்படியாக அமைந்திருந்தது. இதனையிட்டு சிங்கள இடதுசாரிகள்கூட கடுமையான தமது எதிர்ப்பினை அப்போது வெளிப்படுத்தினர். LSSP கட்சியைச் சேர்ந்த பிலிப் குணவர்த்தன 1948 இல் பின்வருமாறு தமது கண்டனத்தை வெளியிட்டார்.

"......... சிங்களவர்களோ, தமிழர்களோ, முஸ்லிம்களோ, டச்சுக்காரர்களோ எவராயிருந் தாலும் அவர்களது குல மரபுக் கொடிகளை கொண்டிருப்பதையிட்டு நான் அக்கறைப்பட வில்லை. ஆனால் குறிப்பிட்ட குலத் தலைவர்கள், அடிப்படையிலேயே ஓர் இனவாதக் கொடியாக உள்ள ஒரு கொடியை சிறுபான்மை சமூகங்களின் மீது திணிக்க முயலுவது ஒரு நேர்மையற்ற செயலாகவே உள்ளது........"

*(Hansard vol.2, 1948)*

இதற்கு மறுதலையாக A.E. குணசிங்கவின் நிலைப்பாடு அமைந்தது. தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் அபிலாசை களையும் பிரதிபலிக்கும் வண்ணம் தமிழ்த் தலைமையால் முன்வைக்கப்பட்ட ஆலோச னைகள் யாவற்றையும் நிராகரிப்பதாக அவரது கருத்து அமைந்தது.

" ........ சிறுபான்மை சமூகங்களை நாம் திருப்தி செய்வதாயின் அதற்கு எங்கே முடிவு இருக்கப் போகின்றது? தேசியக்கொடி என்ற பிரச்சினையில் நாம் விட்டுக் கொடுப்பவர்களாக இருப்போமானால் பிரச்சினைகளுக்கு முடிவே இருக்காது என்று நான் உணர்கின்றேன். ......."

ஏதோஒரு வகையில் பொருத்தமான உயர்ந்த முன்னெடுப்பு அவசியம் என்றும், நேர்மையான முறையில் எல்லா சமூகங்களையும் உள்ளடக்கும் வகையில் தேசியக் கொடியை வரைவு செய்யும்படியான உயர்ந்த மனத் திருப்பம் சிங்களவர்களுக்கு ஏற்படவேண்டும் எனவும் செல்வநாயகம் கேட்டுக் கொண்டார். சிங்கக் கொடியை தேசியக் கொடியாக்குவது சிங்கள அரசியல் மேலாதிக்கத்தின் ஒரு வெளிப்பாடே என விமர்சித்த கொல்வின்,

" ....... இது பெரும்பான்மை சமூகத்திலுள்ள இனவாத சக்திகளால் மேற்கொள்ளப்படும் ஒரு சதிமுயற்சியாகும். பெரும்பான்மை யினரின் உரிமை இது என்ற எண்ணப்பாட்டின் அடிப்படையில் எழுகின்ற இனவாத நிலைப் பாட்டில் மற்றவர்களின் தொண்டைக்குள் தமது விருப்பங்களைத் திணிப்பதாகும்.........." என்றார்.

T.B ஜாயாவும் தமிழ், முஸ்லிம் மக்களுடைய நலன்கள் நிராகரிக்கப்பட்டதனை யிட்டு தனது மனத்தாங்கலை வெளிப்படுத் தினார்.

எனினும் 1951ம் ஆண்டில் குறிப்பிடும் படியான எந்த மாற்றமும் இன்றி தேசியக்கொடி பூர்த்திசெய்யப்பட்டது. ஆக, கொடியில் சிங்கம் அமைந்துள்ள பிரதான பகுதிக்கு வெளிப்புறமாக சிங்கம் ஏந்தியுள்ள வாளுக்கு முன்னே தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களைக் குறிக்க இரண்டு சிறிய வர்ணக் கோடுகள் (செம் மஞ்சள் தமிழர்களையும், பச்சை முஸ்லிம் களையும் குறித்தது.) மட்டும் செங்குத்தாக வரையப்பட்டிருந்தன. இது சிறுபான்மை சமூகங்களை ஓரம்கட்டி வெளியில் நிறுத்தி வைப்பதற்கான குறியீட்டு மாதிரியாக அமைகி றது. இத்தகைய தேசியக் கொடியினைக் கண்டித்துக் கொம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த பிரேமலால் குமாரசிறி குரல் எழுப்பினார்.

" ............ இத் தேசியக் கொடியானது சிங்களவர் களில் அதீத தேசியவெறியும், இனவாதமும் கொண்ட பிரிவினர்களால் ஆதரிக்கப்படுகிறது. ......... இவர்கள் பொய்யா னதும் திரிக்கப்பட்டதுமான வரலாறு காரண மாக, தாம் ஒரு சிங்கத்தின் வம்சாவழியினர் என தவறான நம்பிக்கையை கொண்டுள்ளனர். ......... இப்போது வைக்கப்பட்ட உங்களுடைய உருவரையானது (design) சிங்களவர்களின் மத்தியில் உள்ள தேசியவெறியர்களுக்குச் செய்யும் ஒரு சலுகையாகும். இப்படியானவர்கள் சிறுபான்மையினருக்கு விட்டுக்கொடுப்பு செய்வ தைக் காட்டிலும் பிரித்தானிய தேசியக் கொடியின் கீழ் வாழக்கூடியவர்களாகும். ........"

*(Hansard vol 9. 1951)*

இத்தகைய தேசியக்கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவு யாதெனில் சிங்கள மக்கள் இக் கொடியினை தமது சொந்தக் கொடியாக மதித்து அரசு நிறுவனங்களில் மட்டுமல்ல, தமது தனிப்பட்ட திருமண வீடுகளிலும் விழாக் கொண்டாட்டங்களிலும் ஏற்றி மகிழ்ந்த அதே வேளை, தமிழ் மக்களோ இக் கொடியை தமது கொடியாக ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாமல் விட்டதுமாகும். தமிழ்ப் பிரதேசங்களில் அரச அதிகார பலத்தைக் கொண்டு அரச நிறுவனங்களில் இக் கொடி ஏற்றப்பட்டாலும் உடனடியாகவே அது கீழ் இறக்கப்பட்டு விடுவதே வழமையாக இருந்தது. இதனை அந்நியர் கொடியாகவே கருதிய நிலையில், தமிழ்த் தேசிய எழுச்சி தீவிரமடைந்த பிற்காலங்களில் சிங்கக்கொடி தமிழ் பிரதேசங்களில் பறக்கவிடப்படாதது மட்டுமன்றி அதனை எரித்து விடுவதன் மூலம் தமது எதிர்ப்பினை தமிழ் மக்கள் வெளிப்படுத்தவும் செய்தனர்.

> சிங்கள 'சிறீ' திணிப்பும், அதற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டமும், வெறும் எழுத்துத் தொடர்பான சர்ச்சை அல்ல. பிரச்சினையை அவ்வாறாக குறுக்கி நோக்குபவர்களும் உண்டு. உண்மையில் சமூக அளவில் நடைபெற்று வந்த பல்வேறு தேசிய ஒடுக்குமுறைகளுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் ஒரு குறியீட்டு வடிவ அம்சமாகவே இத் திணிப்பு அமைந்திருந்தது.

www.tamilarangam.net

**தேசிய கீதம் :**

தேசிய கீதமும்கூட சிங்கள தேசத்தை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவே அமைந்தது. 1952 இல் ஒரு சிங்களவரால் இயற்றப்பட்டதுடன், தமிழ், முஸ்லிம் தலைவர்களைக் கலந்தாலோசியாமலும் பாராளுமன்றத்தில் விவாதிக்காமலும் தேசிய கீதம் மந்திரி சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ், முஸ்லிம் தலைவர்களின் ஆலோசனைகள் அவசியமற்றவை என ஆளும் தரப்பினால் வெளிப்படையாகவே கூறப்பட்டது. இத்தகைய தேசிய கீதமும், அதில் வரும் 'நமோ,நமோ நம சிறீலங்கா' போன்ற பதங்களும் தமிழ் சமூகத்தின் உணர்வுகளைத் தொட்டதேயில்லை.

**சிறீலங்கா என்ற பெயர்மாற்றம் :**

தமிழ் மொழியில் 'இலங்கை' எனவும், ஆங்கிலத்தில் 'சிலோன்' (Ceylon) எனவும், சிங்களத்தில் 'லங்கா' எனவும் வழங்கப்பட்டு வந்த நாட்டின் பெயர் ஒட்டுமொத்தமாக மும்மொழிகளிலும் 'சிறீலங்கா' என 1972 இல் புதிய குடியரசு அரசியல் யாப்புடன் மாற்றம் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில்தான் தமிழ் மக்கள் மத்தியில் சிறீலங்காவுக்குப் புறம்பாக தமது தாயகப் பகுதியை 'ஈழம்' என திட்டவட்டமாக இனம்காணும் போக்கும் தீவிரமடைந்ததைக் காணலாம். இப் போக்கும் வெறும் தற்செயலின் பாற்பட்டதல்ல. இன்று Sri Lanka என்பதற்கு மேலும் சிங்கள அர்த்தத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டு அது Shri Lanka என பரபரப்பாக பெயர் மாற்றப்பட்டபோதும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அது வேற்றுத் தேசத்தின் பிரச்சினை என்பதால் இதனையிட்டு அவர்கள் அக்கறை எதுவும் கொண்டவர்களாக இல்லை.

**சிங்கள 'சிறீ' திணிப்பும் எதிர் விளைவுகளும் :**

சிங்கள மயமாக்கலின் மற்றொரு குறியீட்டு வெளிப்பாடாக, 1957 இல் மற்றும் தனியார் வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள 'சிறீ' எழுத்து பொறிக்கப்பட வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது. இங்கு 'சிறீ' என்பது 'சிலோன்' என்ற பெயர் 'சிறீலங்கா' என மாற்றப்படுவதற்கு முன்னோடியாக அதனை குறியீட்டு வகையில் வாகனங்களில் திணிக்கும் முயற்சியேயாகும். எனவே சிங்களத் திணிப்பின் ஒரு பகுதியாக சமூக அளவில் மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சியை தமிழ் மக்கள் ஆவேசமாக எதிர்த்ததை புரிந்து கொள்வது கடினமல்ல.

சிங்கள 'சிறீ' திணிப்பும், அதற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டமும், வெறும் எழுத்துத் தொடர்பான சர்ச்சை அல்ல. பிரச்சினையை அவ்வாறாக குறுக்கி நோக்குபவர்களும் உண்டு. உண்மையில் சமூக அளவில் நடைபெற்று வந்த பல்வேறு தேசிய ஒடுக்குமுறைகளுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் ஒரு குறியீட்டு வடிவ அம்சமாகவே இத் திணிப்பு அமைந்திருந்தது.

## ஆ) மொழி, கல்வி, கலாச்சாரத் துறைகளில் தேசங்கள் வேறுபடல்

**மொழி :**

மக்களிடையேயான சமூக, பொருளாதார, அரசியல் வகைப்பட்ட அனைத்து உறவுகளும் மொழியினால் பிணைக்கப்பட்டுள்ளன. இம் மொழியானது வெறும் ஊடகம் மட்டுமே என்றொரு கருத்தும் பலரிடையே காணப்படுகின்றது. மேலும் மொழியினை ஒரு மேற்கட்டுமான அமைப்பாகக் கருதி முக்கியத்துவம் அற்ற ஒன்றாக அதனைக் காட்டும் ஒரு போக்கும் மிக நீண்டகாலமாக சில மார்க்சியப் பிரிவினர்கள் மத்தியில் காணப்பட்டு வந்துள்ளது. ஆனால் ஸ்டாலின், 'மொழியானது மேற்கட்டுமானத்தின் ஒரு கூறல்ல' எனவும், 'அது அடித்தள கட்டுமானம், மேற்கட்டுமானம் என்பவற்றுக்கு வெளியே நிற்பது' எனவும் துல்லியமாக எடுத்துக் காட்டினார். குறிப்பிட்ட சமூகப் பரப்பில் நடைபெறும் சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகள் அனைத்துமே மொழியினூடாக நடைபெறுவதனால் அச்சமூக வளர்ச்சியில் மொழி பிரதானமான பாத்திரத்தை வகிக்கின்றது. எனவே இலங்கையில் உக்கிரமடைந்த மொழிப் பிரச்சினை என்பது

ஒரு குறித்த மொழிக்கு பிரத்தியேக சலுகை வழங்கி அதனை அதிகாரத்தில் இருத்துவதை எதிர்த்த ஏனைய சமூகங்கள் விட்டுக்கொடாது போராடுவதற்குக் காரணம், தமது மொழிமீது கொண்ட வெறியோ, பிற மொழிமீது கொண்ட வெறுப்போ அல்ல. மாறாக அத்தகைய எதிர்ப்பில் ஒடுக்கப்பட்ட மக்களது அடிப்படை சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவத்திற்கான தேவை, ஜனநாயக உரிமைக்கான கோரிக்கை, உள்ளார்ந்து கிடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறுமனே குறியீட்டுத் தளத்தில் நடைபெற்ற ஒரு சர்ச்சையல்ல. அது தமிழ் மக்களது சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாக உள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட வளர்ச்சியடைந்த மொழிகள் புழக்கத்திலுள்ள ஒரு நாட்டில் ஒரு மொழிக்கு மட்டும் தனிச் சலுகை வழங்கி, அதனை வலிந்து அரசியல் அதிகாரத்தில் இருத்தும்போது, சமூக வாழ்விற்கான எல்லாத் தளங்களிலும் குறித்த அம் மொழியினை பேசுவோர் இயல்பாகவே அதிகார ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகின்றனர். இதனால் ஏனைய மொழிகளைப் பேசும் சமூகங்கள் இரண்டாந்தர

> " ...... தேசத்தின் மிக முக்கியமான குணாம்சங்களில் ஒன்றாக மொழி அமைகின்றது. மொழியின்றி ஒரு தேசமானது தனது தனித்துவத்தை இழந்துவிடும் வாய்ப்பினை கொண்டதாகிறது. அல்லது இன்னொரு தேசத்தினால் உள்வாங்கப்படும் ஆபத்தை உடையதாகிறது. ஒரு தேசமானது மொழியைப் பற்றுக்கோடாகக் கொண்டு பல நூறாண்டுகள் நிலைத்திருக்க முடியும். எமது மொழியின் (சிங்களம்) காரணமாகவே சிங்கள இனம் 2400 வருடங்களாக நிலைத்து வருகின்றது ..."
>
> (Hansard 1944 May)
> J.R.ஜெயவர்த்தன

நிலைக்குத் தள்ளிவிடப்படுகின்றன. அதுமட்டுமல்ல, அச் சமூகப் பிரிவுகளது வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டு, சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் அவர்கள் இலகுவாக ஒடுக்கப்படுவதையும் சாத்தியமாக்குகின்றது. எனவே ஒரு குறித்த மொழிக்கு பிரத்தியேக சலுகை வழங்கி அதனை அதிகாரத்தில் இருத்துவதை எதிர்த்த ஏனைய சமூகங்கள் விட்டுக்கொடாது போராடுவதற்குக் காரணம், தமது மொழிமீது கொண்ட வெறியோ, பிற மொழிமீது கொண்ட வெறுப்போ அல்ல. மாறாக அத்தகைய எதிர்ப்பில் ஒடுக்கப்பட்ட மக்களது அடிப்படை சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவத்திற்கான தேவை, ஜனநாயக உரிமைக்கான கோரிக்கை, உள்ளார்ந்து கிடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று சிங்கள மொழி பேசுவோர் என்ற காரணத்தினாலேயே அரசாங்க நிறுவனங்களையும், அமைச்சுக்களையும், ஆயுதப்படை மற்றும் பொலிஸ் பிரிவுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள தேசத்தவர் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவதை தீவிரமாக எதிர்ப்பது ஏன்?. அரசியல் யாப்பில் இப்போது தமிழ் மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குக் குறுக்கே பிடிவாதமாக நிற்கின்றார்களே ஏன்? இதற்கெல்லாம் காரணம் அவர்களின் சிங்கள மொழி மீதான தீவிர பற்றோ? அல்லது தமிழ் மொழி மீதான வெறுப்போ? இல்லை. மாறாக, அரசு அதிகாரங்களிலும் நிர்வாகங்களிலும் மற்றும் துறைகளிலும் தாம் பெற்றுவரும் பிரத்தியேக வாய்ப்புக்களையும், அனுபவிக்கும் சலுகைகளையும் இழந்துவிடக் கூடாதே என்ற பொருள்வகை நலன் சார்ந்ததாகவே அம் முட்டுக்கட்டைகள் எழுகின்றன.

இங்கு மற்றொரு அம்சத்தினையும் கருத்தில் கொள்வோம். சமுதாயத்தில் காணப்படும் பொருளாதார வாய்ப்புக்களின் உச்சப் பயன்பாட்டினை அடையும் நோக்குடன் வெவ்வேறு மொழிகள் பேசும் சமூகங்கள் சக மொழிகளையும் விருப்புடன் கற்றுத் தேர்வதும் பயன்படுத்தும் இயல்பாகும். ஆனால் அதற்குகந்த சூழ்நிலை குறிப்பிட்ட சமுதாயத்தில் காணப்படுவது இதற்கு பிரதான அடிப்படையாகும். இலங்கையைப் பொறுத்தவரையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"...... ஒரு சிறிய அரசிலிருந்து, இரத்தம் சிந்துகின்ற சின்னாபின்னமாகிப் போன இரண்டு சின்னஞ்சிறு அரசுகள் தோற்றம் பெறலாம். ......" கொல்வின் ஆர்.டி.சில்வா
(Hansard 14 .6.1956)

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் தழுவியதாக தேசஉருவாக்கம் நடைபெற்றிருக்குமானால் ஒவ்வொரு சமூகத்தவரும் தமது வசதி கருதியே இணைப்பு மொழியாகிய ஆங்கிலத்தையும் ஏனைய சக மொழிகளையும் விருப்பத்துடன் கற்றிருப்பர். ஆனால் குறித்த ஒரு மொழியினை மட்டும் ஏனைய சமூகங்களின்மீது திணிக்க மேற்கொள்ளும் முயற்சியானது இயல்பாகவே அம் மொழி மீதான எதிர்ப்பினையும், வெறுப்பினையும் கிளறி விடுவதாக அமைகின்றது. இதனால் மக்கள் விருப்பார்வத்துடன் சக மொழிகளைக் கற்கும் வாய்ப்பிற்கு நிரந்தரமாகவே கொள்ளி வைக்கப்படுகின்றது. இதனைத்தான் சிங்கள அரசியல் தலைமையினால் சாதிக்க முடிந்தது என்பதே வரலாற்று உண்மையாகும்.

சிங்கள மொழியை மட்டும் அதிகாரத்தில் இருத்திய செயலுக்கும் சிங்கள தேச உருவாக்கத்திற்கும் இடையிலான உறவை சிங்கள தலைவர்களின் முன்னெடுப்புகளிலேயே வெளிப்படையாக இனம் காணமுடியும். ஒரு தேசத்தின் நிலைப்பிற்கும் பூரணத்துவத்திற்கும் மொழியின் அவசியத் தன்மை குறித்து 1944ம் ஆண்டில். J.R.ஜெயவர்த்தன என்ன கூறுகின்றார் என நோக்குவோம் :

"......... தேசத்தின் மிக முக்கியமான குணாம்சங்களில் ஒன்றாக மொழி அமைகின்றது. மொழியின்றி ஒரு தேசமானது தனது தனித்துவத்தை இழந்துவிடும் வாய்ப்பினை கொண்டதாகிறது. அல்லது இன்னொரு தேசத்தினால் உள்வாங்கப்படும் ஆபத்தை உடையதாகிறது. ஒரு தேசமானது மொழியைப் பற்றுக்கோடாகக் கொண்டு பல நூறாண்டுகள் நிலைத்திருக்க முடியும். எமது மொழியின் (சிங்களம்) காரணமாகவே சிங்கள இனம் 2400 வருடங்களாக நிலைத்து வருகின்றது ..."
(Hansard 1944 May)

ஒரு தேசத்தின் நிலைப்பிற்கும் மொழியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறிய பின்னர் இந்த சிங்கள தலைவர் மேலும் என்ன கூறுகின்றார் என்றால்,

"........ எல்லாப் பாடசாலைகளிலும் கற்பித்தல் சாதனமாக சிங்கள மொழி ஆக்கப்பட வேண்டும். எல்லாப் பொதுப் பரீட்சைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். சட்டசபையின் எல்லாச் செயற்பாடுகளும் சிங்கள மொழியில் நடைபெறும் வண்ணம் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும். ......"

இதே சிங்களத் தலைவர்தான் பிற்காலங்களில் தமிழ்த் தேசத்தின் இருப்பையே சிதைத்துவிடும் வகையில் மிகவும் திட்டமிட்டுச் செயற்பட்டவர் என்பது நாமறிந்ததே.

ஒரு தேசத்தின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் மொழி பிரதானமானது என்றால், வரலாற்று ரீதியாக பல சமூகங்கள் நிலைபெற்று வரும் ஒரு நாட்டில் சிங்கள மொழிக்கு மட்டும் சலுகை வழங்கி அதனை அரசு அதிகாரத்தில் இருத்துவது எதனைக் காட்டுகின்றது.? சிங்கள தேசத்தை மட்டும் கட்டி எழுப்பி, அதன் ஆதிக்கத்திற்கு ஏனைய சமூகங்களைக் கீழ்ப்படுத்தி அவற்றை சிதைத்துவிடும் நோக்கத்தைத்தானே காட்டுகின்றது. இதைத்தானே சிங்களத் தலைமை செயற்படுத்தியது.

இதைவிட ஒரு குறிப்பிட்ட மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கும்போது எவ்வாறு ஏனைய மொழி பேசும் சமூகங்கள் எல்லா அரச நடவடிக்கைகளில் இருந்தும் துண்டிக்கப்படுகின்றன என்பதை அன்றாட நடைமுறை அனுபவங்கள் உணர்த்துகின்றன. இலங்கை அரசு "நலன்புரி அரசு கட்டமைப்பைக்" கொண்டதாகும். இதில் பல்வேறு நிர்வாகத் துறைகளும் அரச மயப்படுத்தப்பட்டதாக மக்களின் அன்றாட தேவைகள் பலவற்றை அரசுடன் இணைக்கின்றன. இங்கு கடவைச் சீட்டு, பிறப்பு, இறப்பு சான்றுப் பத்திரங்கள் வழங்குவதுடன் மட்டும் அரசு மக்களுடன் சம்பந்தப்படவில்லை. இதற்கு மேலாக உணவு மானிய விநியோகம், சுகாதார சேவைகள், நீதித்துறை சார்ந்த நடவடிக்கைகள், (நீதிமன்ற செயற்பாடுகள், பொலிஸ் பதிவுகள்) கல்விசார் துறைகள், தொழிலாள, விவசாயிகள் தொடர்பான சட்ட உரிமைகள் மற்றும் நஷ்டஈடுகள், மானியங்கள், ஓய்வூதியங்கள் வழங்கல் போன்ற எண்ணற்ற அம்சங்களில் அரசு மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. இதன் நிமித்தம் மக்களும் தம் பங்கிற்கு அரசுடன் அடிக்கடி தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதாவது அன்றாடம் அரசு யந்திரத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உறவானது நிலவுகின்றது.

இந் நிலையில் 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழிச்சட்டமானது அரசுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் கொண்டிருந்த உறவிலிருந்து அவர்களை அனேகமாக துண்டித்து விடுகின்றது. அம் மக்கள் தமது அபிலாசைகளையும் அன்றாடத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்கான மையசாதனமான அரசின் தொடர்பு அற்ற நிலையில் விடப்படுகின்றனர். இந்த நிலைமையே அவர்களை தமக்கென ஒரு அரசை உருவாக்கிக் கொள்வதை நோக்கி படிப்படியாக உந்தித் தள்ளியது எனலாம். சிங்கள மொழித் திணிப்பின் காரணமாக எழப்போகும் பாரதூரமான எதிர்கால விளைவுகள் குறித்து கொல்வின் ஆர்.டி.சில்வா இவ்வாறு தீர்க்க தரிசனமாக அன்று கூறினார்.

"........ ஒரு சிறிய அரசிலிருந்து, இரத்தம் சிந்துகின்ற சின்னாபின்னமாகிப் போன இரண்டு சின்னஞ்சிறு அரசுகள் தோற்றம் பெறலாம். ......."
(Hansard 14 .6.1956)

இதே அர்த்தம் பொதிய கொல்வினின் LSSP கட்சியைச் சேர்ந்த லெஸ்லி குணவர்த்தனவும் பின்வருமாறு கூறினார்.

"...... நாடு பிளவடையும் அபாயம் உள்ளது. அந்த மக்கள் (தமிழர்) பாரதூரமானதும், சீர்செய்ய முடியாததுமான அநீதி தமக்கு இழைக்கப்படுகின்றது என உணர்வார்களேயானால் நாட்டின் ஏனைய பகுதியில் இருந்தும் தாம் பிரிந்து போய்விடுவது என்றுகூட அவர்கள் தீர்மானிக்கக் கூடிய சாத்தியம் உள்ளது. ......"

சுதேசிய மொழிகளின் பிரயோகத்தை பயனுள்ள முறையில் சமத்துவமாக அமுல் செய்திருக்கக் கூடிய வாய்ப்பு இருந்தும் அவ்வாறு செய்வதை வேண்டுமென்றே சிங்கள தலைமைகள் தவிர்த்தன. ஆங்கில மொழி அரசகரும மொழியாக இருந்தபோது கல்வி கற்றவர்களை கூடுதலாகப் பெற்றிருந்த தமிழ்ச் சமூகம் அரசதுறைகளுடன் இலகுவாகத் தொடர்புகொள்ள முடிந்தது என்பதும், சிங்கள சமூகம் பாதிப்படைந்தது என்பதும் உண்மையே. இந்நிலையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம், தமிழ் இரண்டையும் அரசகரும மொழிகளாக்கியிருக்க முடியும். ஆனால் ஆங்கிலத்தையும் அகற்றிவிட்டு சிங்கள மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கும்போது சிங்கள சமூகம் பன்முக வாய்ப்புகளைப் பெறும் அதேசமயம் தமிழ்ச் சமூகம் முழுவதுமாக புறக்கணிக்கப்படுகிறது. அதாவது தமிழ்ச் சமூகத்திடம் இருந்து பிடுங்கப்பட்ட வாய்ப்புகள்தான் இங்கு சிங்கள மக்களுக்கு வழங்கப்படுவதாக ஆகிறது.

> **தேயிலை, இறப்பர் தொழில் துறைகளில் மலையகத் தமிழர்களின் பங்களிப்பைப்போல், வட கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்களும் ஏனைய பொருளாதாரத் துறைகளில் தமது உழைப்பை கணிசமாக வழங்கியுள்ளன.**

தமிழ் மக்களையே நேரடியாகக் குறிவைத்துக் கொண்டு வரப்பட்ட இம் மொழிச் சட்டத்தினால் பாதிப்புற்ற தென்னிலங்கையில் பணிபுரிந்த தமிழ் அரச ஊழியர்களும் மற்றும் மொழித் திணிப்பை எதிர்த்த தமிழர்கள் பலரும் தமது தொழில் துறைகளையும் உத்தியோகங்களையும் கைவிட்டு வடக்கு, கிழக்கு தாயகத்தில் சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டனர். தமது சொந்த தேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது பலரிடம் இலட்சிய நோக்கமாகவும் காணப்பட்டது. எனினும் அன்றைய நிலையில் இம் முயற்சிகள் போதிய வெற்றியைத் தரவில்லை என்றபோதிலும் தமது தனியான தேச இருப்பை அன்றே நிலைநிறுத்த முயன்ற இத் தேடல் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

எனவே ஒட்டுமொத்தமாக சிங்கள மொழித் திணிப்பின் அனைத்து வடிவங்களையும் எதிர்த்து தமிழ் மக்கள் மேற்கொண்ட தீவிரமான அரசியல் போராட்டங்கள் அடிப்படையில்

www.tamilarangam.net

'தமிழ் வெறி', 'சிங்கள வெறுப்பு' என்பவற்றின் பாற்பட்டவை எனக் கொச்சைப்படுத்தலாகாது. அவ்வாறு செய்வது மொழியை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப் படுகின்ற அனைத்து அரசியல், பொருளாதார, சமூக ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்து வதாயும், அவற்றுக்குத் துணைபோவதாகவுமே அமையும். எனவே தமிழ் மக்களின் மொழிச் சமத்துவத்திற்கான போராட்டங்களில் அவர்களின் சமூக வளர்ச்சிக்கான சாராம்சமே உள்ளார்ந்து கிடக்கின்றது என்ற உண்மை புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

**முழு நாட்டிற்குமான நெல் தேவையின் கணிசமான பகுதியைப் பூர்த்திசெய்யும் நெற்களஞ்சியமாக கிழக்கு மாகாணம் இருந்த போதிலும், 2/3 கடல் பரப்பு தமிழகத்திற்கு உடைமையாவதை அனுமதிப்பதா என்ற இனவாதிகளின் கேள்விக்கு இலக்கான இதே கடல் பரப்பில் பிடிக்கப்பட்ட மீன்களில் பெருமளவு தென்னிலங்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்த போதிலும் வட கிழக்கு மீன்பிடி, விவசாயத் துறைகள் முன்னேற்றப்படாமலும், நவீனமயப் படுத்தப்படாமலும் விடப்பட்டன.**

## அரசதுறை வேலைவாய்ப்புகளிலும் கல்வியிலும், கலாச்சாரத்துறைகளிலும் காட்டப்பட்ட பாகுபாட்டின் விளைவுகள்

சமத்துவம் என்பது பூர்சுவா ஜனநாயகத்தின் அடிப்படையான அம்சமாகும். அதாவது சட்டத்தின் முன்பு அனைவரும் சமமானவர்கள் என்பதாகும். பூர்சுவா ஜனநாயகம் பழைய நிலப்பிரபுத்துவ சலுகைகளுக்கு முடிவு கட்டுவது மட்டுமல்லாமல் இன, மத, நிற, பால், பிரதேச பிரிவினர்களிடம் கூட சமத்துவத்தை வலியுறுத்துவதாகும். திறமை ஒன்றே இங்கு ஒருவரது தேர்விற்கான தகுதியாகக் கருதும்படி இங்கு எதிர்பார்க்கப் படுகிறது.

இருந்தும் இலங்கையில் பின்பற்றப்பட்ட வழிமுறைகளோ முற்றிலும் எதிர்மாறானதாக அமைந்திருந்தன. வேறெந்த தகைமைகளை விடவும், உயர்கல்வித் தகைமைகளை விடவும் சிங்களவர் என்ற ஒரே தகுதிக்கு அரசு முதலிடம் கொடுத்தது. இதன் விளைவாக அரசதுறை வேலைவாய்ப்புகள் அனைத்திலும், அதிகார படிநிலையமைப்பு முழுவதிலும், ஏற்கனவே 'வரம்' பெற்றுவிட்டவர்களாக சிங்கள சமூகத்தவர் ஆகியிருந்தனர். சிங்கள தேசஉருவாக்கத்தின் ஒரு பகுதியாக அரசுத் துறைகள், கூட்டுத்தாபனங்கள், திணைக் களங்கள் போன்றவற்றில் தமிழர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியதுடன் அவற்றை அரசு சிங்கள மயப்படுத்தவும் தொடங்கியது. அரசுத் துறைகளில் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளைக் கடினமாக்கியது. சிங்கள அரசின் பிரதான கொள்கையாகவே இது அமுல் செய்யப்பட்டது. ஒரு உதாரணத்திற்காக கூட்டுத்தாபனத் துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் இன விகிதாசாரம் (1980 இல்) இங்கு தரப்படுகின்றது..

| | மொத்த எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| சிங்களவர் | 195,955 | 85.7 % |
| தமிழர் | 24,373 | 10.06 % |

இங்கு தமிழர்களின் எண்ணிக்கை அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்தையும் விட கீழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. வேலைவாய்ப்புத் தளங்களில் அன்றாட நிகழ்வுகளாக பல கடினங்களையும், தடைகளையும் தமிழர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. 1980 களில் தேசிய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்திருந்த நிலையில் தமிழர்கள் நம்பமுடியாதவர்கள் எனக் கருதப்பட்டு சில வேலைவாய்ப்புகள் நேரடியாகவே மறுக்கப்பட்டன. 'எயார் லங்கா' வில் விமான ஓட்டிக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற ஒரு தமிழரிடம் "நீர் விமானத்தைக் கடத்திச் செல்லமாட்டீர் என்பதற்கு என்ன உத்தரவாதம் ?" எனக் கேட்கப்பட்டது ஒரு சிறு உதாரணமாகும். தவிர கொழும்பில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்ற காலங்களில் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் பணிபுரிந்த தமிழர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஏனைய அரசதுறைகளிலும், அரசயந்திரத்தின் பிரதான வன்முறைப் பாகமாகவுள்ள ஆயுதப்படைகள், பொலிஸ் படைகளுக்கான ஆட்திரட்டலிலும் தமிழரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு சிங்கள மயமாக்கம் நடைபெற்றுள்ளதை தூலாம்பரமாக வெளிப்படுத்த கீழ்க்காணும் அட்டவணை உதவும்.

| | 1956 இல் | 1970 இல் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவைகளில் தமிழர் | 30 % | 05 % |
| கிளறிக்கல் சேவைகளில் தமிழர் | 50 % | 05 % |
| நிபுணத்துவத் துறைகள் வைத்தியம், தொழில் நுட்பம், பல்கலைக் கழக விரிவுரையாளர் | 60 % | 10 % |
| ஆயுதப் படைப் பிரிவுகள் | 40 % | 01 % |
| உழைப்பாளர் பிரிவுகள் | 40 % | 05 % |

இங்கு எல்லாத் துறைகளிலும் தமிழரின் எண்ணிக்கை வீதம் அவர்களின் சனத்தொகை வீதத்திலும் குறைவான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக அரசின் அடக்குமுறை சாதனமான ஆயுதப்படை பிரிவுகளில் தமிழரின் எண்ணிக்கை வீதம் 40 வீதத்திலிருந்து 1 வீதம் ஆகக் குறைக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளே தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள், இன ஒழிப்பு என்பவற்றில் இன்றுவரையிலும் ஈடுபட்டு வருகின்றன.

தனியே சிங்கள தேசத்தின் கையில் அரசு, அதிலும் குறிப்பாக அடக்குமுறை சாதனமும் இருப்பதே இதற்கான ஒரே காரணமாகும்.

### உயர்கல்வியில் தரப்படுத்தல் முறை :

இதுவரை உயர்கல்வித் துறைகளில் தமிழர்களின் விகிதாசாரம் கூடுதலாக இருப்பதற்கான உண்மையான சமூக, வரலாற்றுக் காரணிகளை கருத்தில் கொள்ளாது சிங்கள தேச நலன் ஒன்றையே குறியாகக் கொண்டு உயர்கல்வியில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. முதலில் இனரீதியான தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இது உலக அரங்கில் அப்பட்டமான மனித மீறலாக அநாகரிக செயலாக அம்பலப்படவே இம் முறை மாவட்ட ரீதியிலானதாக பின்னர் மாற்றப்பட்டது. எனினும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பிற்கு எவ்வித பரிகாரத்தையும் இம் முறை வழங்கவில்லை. தரப்படுத்தலின்போது தமிழ் மக்கள் மத்தியில் கிளர்ந்த தீவிரமான எதிர்ப்புணர்வினை வெறுமனே குட்டி முதலாளித்துவ வர்க்கப் பிரதிபலிப்பே என அர்த்தப்படுத்தப்படுமானால் இவ் எதிர்ப்புகளின் கனத்தை உள்ளபடி சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. மேலும் இப் பாரபட்ச நடவடிக்கையின் முழுமையான தாக்கத்தினை தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான நலன்களைப் பாதிக்கும் ஏனைய அம்சங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்காமலும் எம்மால் புரிந்து கொள்ளமுடியாது.

அதாவது தமிழரின் தாயகத்தில் அவர்கள் செறிவாக வாழுகின்ற யாழ்ப்பாணம் நில, நீர் வளப் பற்றாக்குறை கொண்டிருக்கும் வரண்ட பிரதேசமாக இருக்கிறது. போதாக்குறைக்கு சிங்கள அரசினால் பொருளாதாரத் திட்டங்கள், அபிவிருத்தி முயற்சிகள் போன்றவை வட, கிழக்கு பிரதேசங்களில் ஏற்கனவே நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டிருந்தன. மொழிக் கொள்கை மூலம் அரசதுறை வேலைவாய்ப்புகளிலும் கதவடைப்பு செய்யப்பட்டிருந்தது.

இவை தவிர தாயகத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள வளங்களும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் சூறையாடப்பட்டு வந்தன. இந்நிலையில் தமிழ் மக்களுக்கு என எஞ்சியிருந்த பொருளாதார வாய்ப்பானது முழுக்க முழுக்க திறமையொன்றையே அடிப் படையாகக் கொண்ட நிபுணத்துவ சேவைத் துறைகளில் (Proffessional Services) மட்டுமே எஞ்சியிருந்தது. இதனால் மருத்துவ, பொறியியல், சட்ட துறைகளில் கற்றலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொள்வது தமிழ் சமூகத்தின் தீவிர அக்கறைக்குரிய ஒன்றாக இருந்தது. இந் நிலையில் தரப்படுத்தல் முறையைப் புகுத்தி இவ் வாய்ப்பிலும் கைவைப்பதானது தமக்கு இருந்த கடைசி வாய்ப்பும் பறிக்கப்படுவதாக தமிழ்த் தேசம் உணரும்படி செய்தது.

உயர்கல்வித் துறையில் தரப்படுத்தல் முறையின் விளைவாக பல்கலைக்கழக அனுமதி, குறிப்பாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் 1970–75 இடையில் ஏற்பட்ட வீழ்ச்சியை கீழே காணலாம்.

| | 1969 / 70 | 1970 / 71 | 1971 / 72 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| தமிழர் | 39.8 % | 35.3 % | 33.6 % | 29.5 % | 20.9 % | 19.0 % |
| சிங்களவர் | 57.7 % | 60.6 % | 63.6 % | 67.4 % | 75.4 % | 78.0 % |

சிங்கள மக்களின் சனத்தொகை வீதம் 71.8 வீதம் ஆக இருந்தும், சிங்கள மாணவர்கள் 1975 ம் ஆண்டில் பொறியியல் துறையில் 83.4 வீதத்தையும், மருத்துவதுறையில் 78.9 வீதத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனைய எல்லா அரசதுறைகளிலும் தமிழ் மக்கள் 'அசமத்துவமான' நிலையில் திட்டமிட்டு வைக்கப்பட்டுள்ள போது, அவர்களுக்கு ஓரளவு சாதகமாக இருந்த கல்வித்துறையிலும் 'சமத்துவத்தை' உருவாக்கும் தரப்படுத்தல் முறையானது சமூக அளவில் ஏற்கனவே உள்ள அசமத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே அமைகின்றது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்விதமாக சிங்கள மொழிக்கு தனிச் சலுகையும், இரண்டு சமூகங்களிடையே வேலைவாய்ப்புகளில் பாரபட்சமும், உயர் கல்வியில் தரப்படுத்தல் முறையும் "ஜனநாயக மயப்படுத்தல்" என்ற பெயரில் 'வாய்ப்புகளை சமப்படுத்தல், பரவலாக்கல்' மற்றும் 'தேசியமயமாக்கல்' என்ற போர்வையில் நடைபெற்றன. சனத்தொகை எண்ணிக்கைப் பரிமாணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமுல்செய்யப்பட்ட பூர்சுவா ஜனநாயகம் இனவாத அர்த்தத்தில் முழுக்க முழுக்க தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்தது. 1958 இல் நடைமுறையாக்கப்பட்ட தேசிய மயமாக்கல் போக்குகளையும், 1972ம் குடியரசு அரசியல் யாப்பையும் எதிர்த்த அன்றைய தமிழ்த் தலைமையை துரோகிகள் எனவும், ஏகாதிபத்திய அடிவருடிகள் எனவும் தூற்றியவர்கள் அவை நிகழ்ந்த பின்னணிகளையும் அவ்விரண்டிலும் நேரடியாக தமிழ்ச் சமூகமே பாதிக்கப்பட்டதையும் சரிவர கவனத்தில் கொண்டவர்களாக தெரியவில்லை என்பது எடுத்துக்காட்டப்பட வேண்டியுள்ளது.

**கலாச்சார ரீதியில் :**

கலாச்சார ரீதியிலும் அரசினால் சிறுபான்மை சமூகங்களுக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, தேசத்திற்கான வாய்ப்புகள் உயர்த்தப்பட்டன. அரச நிதி, மற்றும் அரச நிறுவனங்களின் துணையுடன் பௌத்த மதமும் சிங்கள கலை, கலாச்சாரமும் வளர்த்தெடுக்கப் பட்டன. சிங்கள கலாச்சார வளர்ச்சிக்கு அரசின் துணையுடன் தீவிரமாக முன்னின்று உழைத்த சிங்கள தலைமை, 1974ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த தமிழ் ஆராய்ச்சி மாகாநாட்டைத் தடைசெய்ய முயன்றது. தடைகளை மீறி நடைபெற்ற மாநாட்டை குழப்பியடிக்க அரசு படுகொலைகளை மேற்கொண்டமையானது அன்று வரலாற்றில் மிகவும் துயர்மிக்க சம்பவமாக அமைந்தது. தமிழ்த் தேசிய இயக்கத்தில் ஆழ்ந்த பாதிப்பினை அச் சம்பவம் ஏற்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கள தேச உருவாக்கத்தை நிறைவு செய்யும் வகையில் தொன்மையான கலாச்சார அம்சங்கள் தோண்டியெடுக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்ட அதேவேளை தமிழ்க் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சிகளோ தடைசெய்யப் பட்டன.

## இ) தேசம் கட்டமைக்கப்பட்டதில் பொருளாதாரத்தின் பாத்திரம்

தேச உருவாக்கச் செயல் முறையில், நாட்டின் வளங்கள் சமூகங்களிடையே நீதியாகப் பகிர்ந்து கொள்வது என்ற அம்சம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஒரு சமூகம் தான் சிறுபான்மையாக இருக்கின்ற ஒரே காரணத்தினால் பாதிக்கப்படாமலிருப்பதை நிலவும் பொருளாதார செயற்பாடுகள் உத்தரவாதப்படுத்த வேண்டும். ஆனால் இலங்கை அரசின் செயற்பாடுகளோ எதிர்மறையாகவே அமைந்தன. பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள், மீள் முதலீடுகள், விநியோகங்கள் என்பன சிங்கள தேச உருவாக்கம் என்ற இலக்கு நோக்கியே குவிக்கப்பட்டன. ஏனைய சமூகங்களோ அரசின் இம் முயற்சிகளில் புறம்தள்ளப்பட்டன.

இலங்கையின் மொத்த பொருளாதாரத்தில் சிறுபான்மை சமூகங்களின் பங்களிப்பினைச் சுருக்கமாக பார்ப்போமாயின் 1970 களுக்கு முற்பட்ட தசாப்தங்கள் வரை மொத்த தேசிய வருமானத்தில் 75 வீதத்தினை தேயிலை, இறப்பர் மூலம் ஈட்டிக் கொடுத்தவர்கள் மலையகத் தமிழர்களாகும். அவர்களின் உழைப்பின் உபரிகளைக் கொண்டே மலையகத் தமிழர் வாழ் பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் சிங்கள பிரதேசங்கள் வளம்படுத்தப்பட்டு எல்லா வகையான சமூக நலத்துறை செயற்பாடுகளும் மேம்படுத்தப்பட்டன. நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதிலும் மலையகத் தமிழ் மக்களின் உழைப்பே பெருமளவில் உறிஞ்சப்பட்டன.

தேயிலை, இறப்பர் தொழில் துறைகளில் மலையகத் தமிழர்களின் பங்களிப்பைப்போல், வட கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்களும் ஏனைய பொருளாதாரத் துறைகளில் தமது உழைப்பை கணிசமாக வழங்கியுள்ளன. மீன்பிடித் துறை, நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் என்பவற்றிலும், நிர்வாக தொழில்நுட்ப மற்றும் சேவைகள் துறைகளிலும், சிறுகைத் தொழில்கள், வெளிநாட்டு வருமானங்கள் மூலமும் எண்ணற்ற பொருளாதாரப் பங்களிப்பை இச் சமூகங்கள் முழு நாட்டிற்கும் வழங்கியுள்ளன. இவைபோக நேர் வரிகள், மறைமுக வரிகள் மூலமும் அரசுக்கு இச் சமூகங்கள் வருமானங்களை செலுத்தியுள்ளன. இருந்தபோதிலும் சிறுபான்மை சமூகங்களின் பங்களிப்பில் சொற்ப வீதம் கூட வளர்ச்சிக்கும் நலன்களுக்குமாக அரசினால் அச் சமூகங்கள் மத்தியில் மீள் முதலீடு செய்யப்படவில்லை.

அதாவது, மலையகத் தமிழர்களை அரை அடிமை நிலையில் வைத்துக் கொண்டதுடன் வட கிழக்குப் பிரதேசங்களில் காணப்படும் மூலவளங்களை முறையாகவும் உயர்ந்தபட்ச அளவிலும் பயன்படுத்தும் விதத்தில் அப் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதை திட்டமிட்டுத் தவிர்த்து வந்தது. அத்துடன் இத் தொழிற்துறைகளில் தமிழ் முதலாளிகள் சுயமாக மூலதனமிட முன்வந்தபோது அவர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்காததன் மூலம் அச் சுயமுயற்சிகளையும் அரசு தடைசெய்தது.

> தமிழ், முஸ்லிம் மக்களுடைய பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள அரசியல் தலைமையால் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டதன் உள்நோக்கத்தில் சிறுபான்மை சமூகங்களின் பாரம்பரிய நிலத்தை ஆக்கிரமிப்பது, பொருளாதாரத்தை சூறையாடுவது என்பவை ஒரு பகுதி மட்டுமே. இவற்றைவிட பாரதூரமான, அரசியல் அடிப்படையிலான இன்னுமொரு பகுதியும் உள்ளது. சனத்தொகை பரம்பலுக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையிலான உறவே அதுவாகும்.

இவ்வாறாக தமிழ், முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்களில் மீள் முதலீடுகள் செய்வது தவிர்க்கப்பட்டு தடைசெய்யப்பட்டது மட்டுமல்ல, சிறுபான்மை சமூகங்கள் மத்தியிலான சமூக வளர்ச்சித் திட்டங்களும் அவர்கள் பலமான சமூகங்களாக வளர்ச்சிபெறும் வகையில் 'உள்ளக கட்டுமானங்கள்' (Infrastructures) அமைக்கப்படுவதும் அரசினால் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டன. இதே வேளை மேற்படி யாவும் சிங்கள தேச உருவாக்கத்தின் நிமித்தம் ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்து முடிக்கப்பட்டன. அப்படித்தான் வடக்கு கிழக்கு பிரதேசத்தில்

www.tamilarangam.net

சமூக அபிவிருத்திகள், உள்ளக கட்டுமானங்கள் மீன் முதலீடுகள் செய்யப்பட்டிருந்தால் அவைகள் சிங்களப் பிரதேசங்களை அண்மியுள்ள பகுதியிலும் சிங்கள குடியேற்றப் பிரதேசங்களை மேலும் விரிவாக்க வேண்டும் என்ற நோக்குடனுமே நடைபெற்றன.

சிங்கள அரசின் இத்தகைய நடவடிக்கைகள் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே, அதாவது 1930 களில் சட்டசபையில் சிங்கள தலைமையின் ஆதிக்கம் நிலவிய கால கட்டத்திலிருந்தே ஓரளவு வெளிப்படத் தொடங்கியதை இங்கு சுட்டிக்காட்ட முடியும். பொது நிதியை சமூக நலன்களுக்குப் பயன்படுத்தும் விடயத்தில் சிங்கள சமூகத்திற்கு தனிச்சலுகை காட்டப்பட்டமை அன்றைய தமிழ்த் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. பௌத்த மதம், பௌத்த சிங்கள கலாச்சார வளர்ச்சிகள் என்பவற்றுக்கு மட்டும் பிரத்தியேக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. இதற்கென 1931ம், 1933ம் ஆண்டுகளில் 'பௌத்த நிறுவன சொத்துடமைத் திருத்த கட்டளைச் சட்டங்கள்' கொண்டு வரப்பட்டிருந்தன. அதேவேளை 1900–1930 இடையில் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான மொத்த செலவினத்தில் 50 வீத நிதி வட கிழக்கின் வரண்ட நிலைமை கருதி அதற்கென ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் 1931 க்குப் பின்னர் (அதாவது சர்வசன வாக்குரிமை நடைமுறையாகி ஆட்சியில் சிங்கள ஆதிக்கம் ஏற்படத் தொடங்கியதுமே) இந் நிதி ஒதுக்கீடு 19 வீதமாகக் குறைக்கப்பட்டது.

இதுதவிர தமிழ் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடிய இரண்டு பிரதான துறைகள் அரசினால் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டன. ஒன்று வடபகுதியில் காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாண துறைமுகங்கள் மீளவும் திறக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் முன்வைத்த கோரிக்கை சிங்கள அரசினால் தட்டிக்கழிக்கப்பட்டமையாகும். அவ்வாறு துறைமுகங்கள் செயற்பட வைக்கப்பட்டிருக்குமானால் தமிழ்ப் பிரதேசம் பொருளாதாரத்தில் கூடிய வளர்ச்சியினைப் பெற்றிருப்பதுடன் முழுநாட்டுக்கான பொருளாதாரத்தையும் கூட அத் துறைமுகங்கள் பெருமளவில் ஈட்டித் தந்திருக்கும். இரண்டாவது புறக்கணிப்பு, வட மாகாணத்தில் தாம்போதிகள் (Cause Ways) அமைக்கும் திட்டங்கள் இழுத்தடிக்கப்பட்டு, இதுவிடயத்தில் வடபகுதி பிரதிநிதிகள் மத்தியில் காணப்பட்ட இழுபறிகளை சாட்டாகக் கொண்டு இத் திட்டம் 4 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் பொருளாதார முக்கியத்துவம் அற்ற இடங்களிலேயே அரசு தாம்போதிகளை அமைத்தமையாகும்.

இவைகள் அன்றைய சில உதாரணங்களாக இருந்த போதிலும் சுதந்திரத்திற்கு பின்புதான் 'சிங்கள தேச கட்டுமானத்துடன்' தொடர்புடையதாக இலங்கையின் பொருளாதார வளங்கள், வருவாய்கள், வெளிநாட்டு நிதி உதவிகள், கடன்கள் என்பன திட்டவட்டமாக பல பரிமாணங்களிலும் பாகுபடுத்திப் பயன்படுத்தப்பட்டன. இதேவேளை வட கிழக்குத் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களோ பொருளாதார ரீதியாக பல முனைகளிலும் பின்தள்ளப்பட்டன.

முழு நாட்டிற்குமான நெல் தேவையின் கணிசமான பகுதியைப் பூர்த்திசெய்யும் நெற்களஞ்சியமாக கிழக்கு மாகாணம் இருந்த போதிலும், 2/3 கடல் பரப்பு தமிழீழத்திற்கு உடைமையாவதை அனுமதிப்பதா என்ற இனவாதிகளின் கேள்விக்கு இலக்கான இதே கடல் பரப்பில் பிடிக்கப்பட்ட மீன்களில் பெருமளவு தென்னிலங்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்த போதிலும் வட கிழக்கு மீன்பிடி, விவசாயத் துறைகள் முன்னேற்றப்படாமலும், நவீனமயப் படுத்தப்படாமலும் விடப்பட்டன. பிரதானமாக இத் தொழிற் துறைகள் எதுவித மீள்முதலீடுகளும் செய்யப்படாமல் அரசினால் கைவிடப்பட்டன. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக சிறுபான்மை சமூகங்கள் தமது இயல்பான வளர்ச்சியினை இழந்துவிட்டது மட்டுமன்றி, ஒன்றிணைந்த பலமான சமூகங்களாக வளர்ச்சி பெறாமலும் முடக்கப்பட்டன.

புத்தளத்தையும், மன்னாரையும், யாழ்ப்பாணத்தையும், முல்லைத்தீவையும், திருகோணமலையையும், மட்டக்களப்பையும், அம்பாறையையும் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலை அமைப்போ, ரயில் பாதை அமைப்போ ஸ்தாபிக்கப்பட்டிருக்குமாயின் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சி நிலைகள் இன்று முற்றிலும் வேறுவிதமாக அமைந்திருக்கும். மேலும் ஒருங்கிணைந்த பலமான சமூகங்களாக அவை தம்மை நிலைப்படுத்தியிருக்கும். இந்த நிலை என்றென்றும் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையில்தான் சிங்கள அரசு செயற்பட்டது. இப் பின்னணியின் ஒரு பகுதியாகவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ், முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்களுக்கிடையில் செருகப்பட்டன. இப்போது புழக்கத்திலுள்ள ரயில் பாதைகளும், நெடுஞ்சாலைகளும் கூட சிங்களப் பிரதேசங்களை அல்லது சிங்கள குடியேற்றத் திட்டங்களை ஊடறுத்துச் செல்லத்தக்க வகையிலேயே தொடர்ந்தும் பேணப்படுகின்றன.

சிங்கள தேச உருவாக்கம் நோக்கி பலமான பொருளாதார அடித்தளத்தை இட்டு வந்த அரசு, சமகாலத்தில் ஏனைய சிறுபான்மை சமூகங்களின் உழைப்பின் பயன்களை சுவீகரித்த அளவிற்கு அச் சமூகங்களின் வளர்ச்சிக்காக செயற்படவில்லை. தனது செயற்பாடுகள் மூலம் தெற்கையும், வட கிழக்கையும் பொருளாதார ஏற்றத்தாழ்வாகவே நடத்தியது. இத்தகைய அகக்–கொலனித்துவ (Internal-Colonisation) சுரண்டல் முறையின் மூலமாக அரசு சிறுபான்மை சமூகங்களை குறிப்பான பொருளாதார சுரண்டலுக்கு உட்படுத்தியது எனலாம்.

பொதுவாக இந்த அகக் கொலனித்துவ சுரண்டல் முறைதான் சமூகங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வான வளர்ச்சி நிலைகள் ஏற்படக் காரணமாகி தேசிய முரண்பாடுகளுக்கு வழிவகுப்பதாகவும் சில மார்க்சிய ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இவ்விதமான 'அகக்–கொலனித்துவ' சுரண்டலானது குறைவிருத்தி நாடுகளில் மட்டுமல்லாது மிகவும் முன்னேறிய நாடுகளிலும் கூட தேசிய முரண்பாடுகளுக்கு காரணமாகிறது. 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' போன்ற கோசங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, இத்தாலியிலும் கூட எழுவதுண்டு. இன்று ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இவ்வாறான பிரச்சினைகள் கூர்மையடைந்து வருகின்றன. இந்தவகையில் இலங்கையின் தேசிய பிரச்சினையிலும் கூட இவ் அகக்–காலனித்துவ முறை அதிக தாக்கத்தை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

## ஈ) திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் குடிசனப் பரம்பலை மாற்றுதலும் (Demographic Alteration) தொடர்பாக .....

தமிழ், முஸ்லிம் மக்களுடைய பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள அரசியல் தலைமையால் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டதன் உள்நோக்கத்தில் சிறுபான்மை சமூகங்களின் பாரம்பரிய நிலத்தை ஆக்கிரமிப்பது, பொருளாதாரத்தை சூறையாடுவது என்பவை ஒரு பகுதி மட்டுமே. இவற்றைவிட பாரதூரமான, அரசியல் அடிப்படையிலான இன்னுமொரு பகுதியுமுள்ளது. சனத்தொகை பரம்பலுக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையிலான உறவே அதுவாகும்.

அதாவது டொனமூர் குழுவினர் வருகைக்கு முன்பும், வருகையைத் தொடர்ந்தும், சிங்களத் தலைமையானது சட்டசபையில் அப்போது அமுலில் இருந்த இனவாரி பிரதிநிதித்துவ முறையை பிரதேச ரீதியான பிரதிநிதித்துவ முறையாக மாற்றியமைக்கும்படி வலியுறுத்தத் தொடங்கியிருந்தது. அரசியல் அரங்கில் அசைக்க முடியாத மேலாதிக்கத்தை நிறுவுவதே அத் தலைமையின் ஒரே நோக்கமாக இருந்தது. சிங்கள அரசியல்வாதிகளின் **இச் சிந்தனைப் போக்கு தனிச் சிங்கள பிரதிநிதிகளின் எண்ணிக்கையை எந்தெந்த வழிமுறைகளில் அதிகரிப்பது, சிறுபான்மை சமூகங்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களை எவ்வாறு இல்லாதொழிப்பது என்பதை நோக்கியே தவிர்க்க முடியாது அவர்களை இட்டுச் சென்றது.**

இந்நிலையில் 1931 இல் பிரதேசவாரியான தேர்தல் முறையும், கூடவே சர்வஜன வாக்குரிமையும் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீர்திருத்தத்தினால் கிடைத்த பலாபலன்களை நேரடியாகவும் பருண்மையாகவும் அறிந்து கொண்டதைத் தொடர்ந்து சிங்களத் தலைமையின் மேற்படி சிந்தனைப் போக்கு இன்னும் தீவிரமடைந்தது. இதற்குப் பின்னர் சமூகங்களின் குடிப்பரம்பல் என்பது அரசியல் வாதிகளுக்கு – குறிப்பாக சிங்கள அரசியல் தலைமைக்கு – மிகவும் அக்கறைக்குரிய ஒன்றாகியது. இதன் பின்னணியில் **சிங்கள பிரதிநிதித்துவத்தை அதிகரித்து அதன்மூலம் சட்டசபையில் சிங்கள மேலாதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதனை சாதிக்க திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என்பது அவர்களின் பிரதான வழிமுறையாகியது.**

சிங்கள அரசியல் தலைமையானது பெரும்பான்மை சமூகம் என்ற வகையில் சட்டசபையில் திட்டவட்டமான பெரும்பான்மையை ஏற்கனவே கொண்டிருந்தது. சிறுபான்மை சமூகங்கள் தாம் செறிவாக வாழ்ந்த வட கிழக்கு பிரதேசங்களில் மட்டுமே தம்மைத் தாமே பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பிரதிநிதிகளை தெரிவுசெய்யக் கூடியதாக இருந்தது. சிங்களத் தலைமை தம்வசம் இருந்த திட்டவட்டமான பெரும்பான்மை நிலையுடன் திருப்தி கொள்ளாது சிறுபான்மை சமூகங்களின் சொற்ப பிரதிநிதித்துவத்தையும் குறைக்க அல்லது இல்லாது ஒழிக்கவே முயன்றது.

மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டமை இதன் பின்னணியில் அமைந்த நேரடியான நடவடிக்கைகள் என்றால், வட கிழக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்கள்மீது மேற்கொள்ளப்பட்டது ஒருவித மறைமுக நடவடிக்கையாகும். தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசே முன்னின்று நடாத்துவதன் மூலம் குடிசனப் பரம்பலை செயற்கையாக மாற்றி அமைத்து தமிழ், முஸ்லிம் சமூகங்களை தமது தாயகப் பகுதிகளிலேயே சிறுபான்மையினராக்கியது. இதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் ரீதியில் தம்மைத் தாமே முழுமையாக பிரதிநிதித்தவம் செய்ய முடியாதவர்களாக்கப் பட்டனர். இது அம் மக்களின் அரசியல் உரிமையை மறைமுகமாக பறிப்பதாகவே அர்த்தப்படுகின்றது. **இதனால் குடியேற்றம் என்பது இங்கு ஒருவகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமை, இறைமை பற்றிய பிரச்சினையாக ஆகின்றது.**

டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் பின் நடந்த தேர்தலில், நேரடி வாக்களிப்பு மூலம் கிழக்கு மாகாணம் திருமலை, மட்டக்களப்பு என்ற இரு பெரும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த வேளையில் முஸ்லிம் மக்கள் செறிவாக வாழ்ந்த அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் தெரிவுசெய்யப்பட முடிந்தது.

மேற்கொண்டு குறிப்பான சில விடயங்களை நோக்குவோமாயின், ஒருகாலத்தில் மேல்மாகாணத்தில் தமிழர்களின் குடித்தொகை செறிவாக காணப்பட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு ஓர் அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை சிங்களத் தலைமை மிகத் தீவிரமாக எதிர்த்தது. 1948 இலும், தாம் திட்டவட்டமான பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தை பெற்றிருந்தும்கூட, மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமையை இத் தலைமை பறித்துக் கொண்டது. இவை போதாதென்று இதற்குப் பின்னரும் வாக்குரிமை கொண்டிருந்த எஞ்சிய மலையகத் தமிழர்களின் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் அவர்கள் மத்தியில் பல சிங்களக் குடியேற்ற கிராமங்களையும் நிறுவியது. மேலும் தோட்டங்களை 'தேசிய மயமாக்குவது' என்னும் பெயரிலும் மலையகத் தமிழரின் செறிவான குடியேற்றப் பரம்பலை மாற்றியமைத்தது. இன்றோ, கணிசமான மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை மீண்டும் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டாலும், அவர்கள் அவற்றை பிரயோகிக்க முடியாதவாறு மலையகத் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் சிதைக்கப்பட்டுள்ளது.

டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் பின் நடந்த தேர்தலில், நேரடி வாக்களிப்பு மூலம் கிழக்கு மாகாணம் திருமலை, மட்டக்களப்பு என்ற இரு பெரும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த வேளையில் முஸ்லிம் மக்கள் செறிவாக வாழ்ந்த அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தெரிவுசெய்யப்பட முடிந்தது. அவை பின்னர் தேர்தல் தொகுதிகளாக வகுக்கப்பட்டு பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டபோது இந்த முக்கியத்துவம் கல்லோயா சிங்களக் குடியேற்றத்தின் மூலமும், 1963 இல் புதிதாக அம்பாறை மாவட்டம் மற்றும் அம்பாறை தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதுடன் குறைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் இரண்டு சிங்கள பிரதிநிதித்துவமும், இதுபோல திருகோணமலை குடிசனப் பரம்பல் மாற்றியமைக்கப்பட்டதால் சேருவல தொகுதியில் ஒரு புதிய சிங்களப் பிரதிநிதித்துவமும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகவங்கி ஆலோசகர்களின் ஆட்சேபனைகளையும் மீறி சிங்களத் தலைமையானது அல்லை, கந்தளாய், கல்லோயா போன்ற பாரிய விவசாய குடியேற்றங்களை அன்று கிழக்கில் நிறுவியமைக்கு அடியாதாரமாக அமைவது, குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதற்கும் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்துவதற்கும் இடையில் காணப்படும் இந்த உறவுதான்.

குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் இலக்கை அடைய திட்டமிட்ட குடியேற்றம் என்பது ஒரு வழிமுறை என்றால் அவ்வாறான குடியேற்ற பிரதேசங்களிலும் அதனை அண்டியும் கலவரங்களை தூண்டி இனச் சுத்திகரிப்பை மேற்கொண்டமை அரசின் மற்று

1970 களிலும் அதன் பின்னரும் அரசு மேற்கொண்ட திட்டமிட்ட இலங்கைக் குடியேற்றங்களுக்கு குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன், தீவிரமடைந்து வந்த 'தமிழ்த் தேச உருவாக்கத்தை' சிதைக்கும் குறிப்பான உள் நோக்கமும் இருந்தது. தமிழ், முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்கள் மிகவும் கச்சிதமாக ஊடுருவப் பட்டு அப் பிரதேசங்களை கூறுபோடும் வகையில் சிங்களக் குடியேற்றங்கள் திட்டுத் திட்டாக நிறுவப்பட்டன.

மொரு வழிமுறையாகும். இவைதவிர நிர்வாக அதிகாரப் பிரயோக முறையும் மேற்கொள்ளப் பட்டது. அதாவது திருகோணமலை மாவட்டத்துள் அடங்கும் பாரம்பரிய தமிழ் கிராம சேவகர் பிரிவுகள் அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டதன் மூலம் திருகோணமலையில் தமிழரின் குடிசன வீதம் குறைக்கப்பட்டது. அதேவேளை அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுக்கு உரித்தாயிருந்த சில சிங்கள கிராமசேவகர் பிரிவுகள் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு அங்கு சிங்களவரின் குடித்தொகை வீதம் அதிகரிக்கப்பட்டது. இதையொத்த வழிமுறை அம்பாறை மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டது. விகிதாசார தேர்தல்முறை அறிமுகப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து அரசு இவ் வழிமுறைகளில் கூடிய கவனத்தைக் குவித்தது.

1970 களிலும் அதன் பின்னரும் அரசு மேற்கொண்ட திட்டமிட்ட இலங்கைக் குடியேற்றங்களுக்கு குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன், தீவிரமடைந்து வந்த 'தமிழ்த் தேச உருவாக்கத்தை' சிதைக்கும் குறிப்பான உள் நோக்கமும் இருந்தது. தமிழ், முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்கள் மிகவும் கச்சிதமாக ஊடுருவப் பட்டு அப் பிரதேசங்களை கூறுபோடும் வகையில் சிங்களக் குடியேற்றங்கள் திட்டுத் திட்டாக நிறுவப்பட்டன. உதாரணமாக கைத்தொழில் குடியேற்றம் (சீனன் குடா), சட்டவிரோத குடியேற்றம் (வடமுனை), மீனவ, விவசாய குடியேற்றங்கள் (மணலாறு, திருமலை கரையோரம்), முப்படையினருக்கான குடியேற்றம் (பன்குளம்), புனித நகர குடியேற்றங்கள் (தீரியாய், சேருவில, தீகவாபி) என்பன இவற்றில் சிலவாகும்.

திட்டமிட்ட குடியேற்றங்களுக்கான மற்றுமொரு நோக்கம் சிங்கள மக்களின் நிலப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, குடியிருப்புப் பிரச்சினைக்கு அரசு குறுக்கு வழியில் தீர்வு வழங்க முயன்றமையாகும். இம் மூன்று பிரச்சனைகளாலும் பாதிப்புற்ற சிங்கள மக்களின் வாக்குகள் அரசியல் மாற்றங்களை நிர்ணயிப்பதாகவும் இருந்தது. எனவே வட கிழக்கு பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய நிலங்களையும், மீன்பிடிப் பிரதேசங்களையும், சொற்ப பொருளாதார வளங்களையும் பறித்து சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கியது. குடியிருப்பு வசதிகளையும் ஏற்படுத்தி அங்கு குடியமர்த்தியது.

இவ்விதமாக, பன்முகப்பட்ட வழிமுறைகளைக் கையாண்டு மாற்றியமைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் குடிசனப்பரம்பல் வீதத்தை கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

| | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|
| 1921 | 4.69 % (8744) | 54.74 % | 40.55 % |
| 1953 | 14.85 % | 44.05 % | 36.15 % |
| 1981 | (255843) 25.8 % | 40.30 % | 32.2 % |

இவ்வாறாக கிழக்கு மாகாணத்தின் குடிசனப் பரம்பலை செயற்கையாக மாற்றியமைத்துவிட்டு இப்போது வடக்கு–கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தவேண்டுமென அரசு பேசுகிறது. பூர்சுவா ஜனநாயகம் இனவாத அர்த்தம் பெறுவதற்கு இது இன்னுமொரு உதாரணமாகும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மெய்யான பின்னணிகள் இவ்விதம் இருக்கையில், சிங்கள அரசியல் தலைவர்களாலும், புத்திஜீவிகளாலும் இவற்றை நியாயப்படுத்தி முன்வைக்கப்படும் சில வாதங்களை நோக்குவோம். 'இலங்கையில் எவரும் எங்கும் சுதந்திமாக குடியேறி வாழலாம்' என்ற ஜனநாயகத் தன்மையானது போலத்தோன்றும் ஒரு வாதம், 'இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தமானது, ஏனைய சமூகங்கள் மிகவும் பிற்காலத்தைய வந்தேறு குடிகளே' என்று கூறும் பேரினவாதம், 'நிலமற்ற சிங்கள விவசாயிகளுக்கு தரிசாகக் கிடக்கும் நிலங்களை வழங்குவது' என்ற ஒருவகை மனிதாபிமான வாதம் என்பவை சிலவாகும்.

1940 களுக்கு முந்திய இயல்பான சிங்கள குடிபெயர்வுகளும், 40 களுக்குப் பின்னர் அரசின் நேரடி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் பண்பில் ஒத்தவையல்ல. 40 களுக்கு முன் நடைபெற்ற சிங்கள மக்களின் இயல்பான வட கிழக்கு குடிபெயர்வுகள் பற்றிய எவ்வித அச்சங்களும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இருந்ததில்லை என்பது கவனத்திற்குரியது. ஆனால் அதற்குப் பிந்தியவற்றில் சிங்கள மக்களை அரசே முன்னின்று குடியேற்றியது. குடியேற்ற வாசிகளுக்கு தேவையான சகல ஊக்குவிப்புகளையும், சலுகைகளையும் அரசும், சமூக நிறுவனங்களும் வழங்கின. உதாரணமாக, துப்பரவாக்கப்பட்ட காணி, உழவு வேலைகளுக்கு எருமை மாடு, ஒரு வீடு, ஒரு கிணறு, விதை நெல், விவசாயத்திற்குத் தேவையான நீர் வழங்கல், முதலாம் அறுவடை முடியும் வரையும் பராமரிப்புச் செலவு, மானியம் அனைத்தும் அரசு செலவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டன. ஆனால் தமிழர்கள் தமது தாயகப் பகுதிகளில் தாமாகவே குடியேற முனைந்தபோது அரச படைகளாலும் காடையர்களாலும் அடித்து விரட்டப்பட்ட சம்பவங்கள் பல. பதவியா குடியேற்றத்தில் நடந்த நிகழ்வு இதற்கு உதாரணமாகும். எனவே இந்த அர்த்தத்தில் சிங்களக் குடியேற்றங்கள் சுதந்திரமான குடிப்பரம்பல் அல்ல. அவை அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களே.

இந்நிலையில் சிங்களத் தேசம் அடிக்கடி கூறுகின்ற "எங்கும் வாழ்வதற்கான சுதந்திரம்" என்ற கருத்தாக்கம் உண்மையில் தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் முழுவதையும் "தம் வசப்படுத்துவதற்கான சுதந்திரம்" என்பதாகவே அர்த்தம் பெறுகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின், அல்லது தேசத்தின் தனித்துவமான வாழ்விற்கு தொடர்ச்சியான பிரதேசம் என்பது தலையாய முக்கியத்துவம் உடையது. எனவே தொடர்ச்சியாக உள்ள ஒரு பிரதேசத்தை கூறுபோடுவதை உள்ளார்ந்தமாகக் கொண்ட கபடத்தனமான நிலைப்பாடே இந்த "எங்கும் வாழ்வதற்கான சுதந்திரம்". இதற்காக வாதிடுவோர் தென்னிலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கென பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்களை அமைக்கும் போதும், அல்லது அவற்றை தேவை கருதி விசாலப்படுத்த முயலும்போதும் அதனை எதிர்த்து சிங்களத் தேசம் கிளர்ந்தெழுவது ஏன் என்பதை விளக்குவார்களா ?

'எங்கும் வாழும் சுதந்திரம்' எனக் கூறிக் கொண்டு, தமிழர் தாயகத்தில் உள்ள வளமான பிரதேசங்களில் முதலில் சிங்களவர் குடியேற்றப்படுகின்றார்கள், அங்குள்ள வளங்கள் ஏற்கனவே தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் முன்னையவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே போட்டா போட்டிகள் ஏற்படுகின்றன. இதனை சாட்டாகக் கொண்டு அரசும், நிறுவனங்களும் கலவரத்தைத் தூண்டிவிடுகின்றன, கலவரங்களின்போது சிங்களக் குடியேற்றவாசிகள் அரச படைகளினால் பாதுகாக்கப்பட, தமிழர்கள் படையினராலும் சிங்களக் காடையர்களினாலும் தாக்கப்பட்டு தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்தே விரட்டப்படுகின்றனர். இது ஒருவகையில் "இனச் சுத்திகரிப்பாகவே" அமைகிறது எனலாம்.

வடக்கு, கிழக்கிலுள்ள தரிசு நிலங்களை, காடுகளை சிங்களவர்களுக்கு வழங்குவது நியாயமே என்ற வாதத்தை எடுப்போம். கொலனித்துவ ஆதிக்கமும், அதன் உள்ளூர் கூட்டாளிகளான நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ வர்க்கங்களும் நாட்டின் மத்திய, மேற்கு, தெற்கு பிரதேசங்களில் வாழ்ந்த வறிய சிறு விவசாயிகளின் பாரம்பரிய விவசாயக் காணிகளையும், காட்டு வளங்களையும் பலவந்தமாகப் பிடுங்கினார்கள். அவர்களை ஓட்டாண்டி ஆக்கினார்கள். விவசாய, நீர்ப்பாசனத் துறைகளை நாசம் செய்தார்கள் என்பதெல்லாம் வரலாற்று உண்மையாகும்.

இதன் விளைவாக பிற்காலங் களில் வெளிப்பட்ட நிலப் பிரச்சினைக்கும், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண தீவிரமான காணிச் சீர்திருத்தத்தையும், கைத்தொழில் மயமாக்கத்தையும் ஆளும் வர்க்கங்கள் முறைப்படி விரைவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால் இவ் ஆளும் வர்க்கங்கள் அவ்வாறு செயற்படவில்லை. ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளையும், பெருந் தோட்டங்களையும் இழக்க அவர்கள் முன்வரவில்லை. மேலும் கைத்தொழில் துறைகளை விரிவடையச் செய்து பலமான தொழிலாள வர்க்கப் பிரிவினர் உருவாவதையும் அவர்கள் விரும்பவில்லை. அனைத்துக்கும் பரிகாரமாக தமிழ், முஸ்லிம் மக்களையும் அவர்களின் உரிமைகளையும் விலையாகக் கொடுத்து சிங்கள மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே முயன்றனர். அப்படியே செய்தும் முடித்தனர்.

## உ) சிங்கள தேசக் கட்டமைவு அரசியலில் நிகழ்வதும் அதன் எதிர் நிகழ்வும்

சிங்களத் தேசத்தை கட்டமைக்கும் நிகழ்வில், பொதுவாக சிறுபான்மை சமூகங்கள் மீதும் குறிப்பாக தமிழ் மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் என்பதே இலங்கையின் அரசியல் வரலாறாக உள்ளது. தேச உருவாக்கம் தொடர்பான ஸ்தூலமான நிகழ்வுகள் சுதந்திரத்திற்கு பின்பே திட்டவட்டமாக நடைபெற்றன என்றாலும், அரசியல் அரங்கில் சிங்கள தலைமையின் பாலான நம்பிக்கையின்மை 1920 களிலேயே தமிழ்த் தலைமையிடம் ஏற்பட்டு வந்ததை இங்கு சுருக்கமாகக் குறிப்பிட்டாக வேண்டும். வாக்குறுதிகள் மீறப்படுவதும், துரோகத்தனங்களும் அன்றே முளைவிடத் தொடங்கியிருந்தன. சுதந்திரத்திற்குப் பின்பான தேச உருவாக்க நிகழ்வுகளில் இவ் ஆரம்பகாலப் போக்குகளும் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளன.

மேல்மாகாணத்தில் தமிழர்கட்கென இனவாரியான தேர்தல் தொகுதியொன்றை வழங்குவதாக 1918 இல் சிங்களத் தலைமையால் வழங்கப்பட்ட வாக்குறுதி 1921 இல் கைவிடப்பட்டது. சமகாலத்தில்தான் சிங்களத் தலைமை தனது மேலாதிக்கத்தை சட்டசபையில் நிலைநிறுத்தும் நோக்கில் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையையும் வலியுறுத்தத் தொடங்கியிருந்தது. இவற்றைத் தொடர்ந்து சிங்கள, தமிழ் தலைமைகளிடையே முதலாவது பிளவு ஏற்பட்டது. சிங்களத் தலைமையின்மீது நம்பிக்கை அற்றுப் போனதன் முதல் விளைவாக தமிழ்த் தலைமையினால் 'தமிழர் மகாசபை'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்தாபிக்கப்பட்டது. 1926 வரையிலும் வட கிழக்கு பிரதேசத்திற்கும், கண்டிய சிங்களவர்கட்கும், கரையோர சிங்களவர்கட்கும் என மூன்று சமஸ்டி அமைப்புகள் நிறுவப்பட வேண்டும் என குரல் கொடுத்துவந்த கண்டிய சிங்களவரான SWRD பண்டாரநாயக்க, 1929 இல் அக் கொள்கையை கைவிட்டார். பின் D.B. ஜெயதிலக, A.E குனசிங்க, D.S சேனநாயக்க போன்ற கரையோரச் சிங்களத் தலைவர்களுடன் இணைந்து கண்டிய, கரையோர சிங்களவர் இணைந்த பலமான சிங்களத் தேச உருவாக்கத்தின் ஆரம்பப் பணிகளில் அவர் பங்குகொண்டார். கூடவே தேசிய அரசியலில் இருந்து மலையகத் தமிழரை களையெடுக்கும் கைங்கரியமும் தொடங்கப்பட்டது.

1931 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூராட்சி நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்த பண்டாரநாயக்க 'கிராமிய சமூகங்களுக்கான கட்டளைச் சட்டத்தை' அறிமுகம் செய்தார். இதன்படி உள்ளூராட்சித் தேர்தல்களில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப் பட்டது. 1941 இல் இந்தியத் தமிழர் வருகைக்கான தடைச் சட்டமும், 1942 இல் இந்தியத் தமிழர்களை புதிதாக வாக்காளர் களாக பதிவுசெய்வதை தடைசெய்யும் சட்டமும் கொண்டுவரப்பட்டன. இவற்றின் நீட்சியாகவே 1948 இல் மலையகத் தமிழரின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் அரசியல் அநாதைகளாக ஆக்கப் பட்டமை நிகழ்ந்தேறியது.

மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமைப் பறிப்பிற்கும் சிங்களத் தேச உருவாக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. சுதந்திரத்திற்கு முன்னர் கண்டிய, கரையோர சிங்கள சமூகங்கள் மத்தியில் தீவிரமான முரண்பாடு காணப்பட்டது. இச் சூழ்நிலையில்தான் 1947 தேர்தலில் மலையகத் தமிழர் சார்பில் ஏழு ஆசனங்கள் பாராளுமன்றத்தில் பெறப்பட்டிருந்தன. மலை நாட்டில் சிங்கள ஆதிக்கத்தை மட்டுமே நிலை நிறுத்துவது என்ற நோக்குடன் மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கண்டிய சிங்கள தலைமையினால் அரசிடம் முன்வைக்கப்பட்டது. அன்று அரசு அதிகாரத் தில் பலவீனமான நிலைமையில் இருந்த D.S. சேனநாயக்க இவ் வாய்ப்பினை பயன்படுத்தத் தவறவில்லை. கண்டிய சிங்களத் தலைமையின் கோரிக்கையை உடனடியாக 1948 இல் பூர்த்திசெய்து அவர்களைத் திருப்தி செய்தார். அவர்களின் பூரண ஆதரவையும் பெற்றுக் கொண்டார். இதன் விளைவாக 1947 இல் பாராளுமன்றத்தில் 70 வீதம் இருந்த சிங்கள பிரதிநிதித்துவம் 1952 இல் 80 வீதம் ஆக அதிகரித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து கண்டிய, கரையோர சிங்களவர் என்ற வேறுபாடுகளும் மறையத் தொடங்கின. அதேவேளை குடியுரிமை சட்டத்தின் மூலமும் அதற்கு இலங்கைத் தமிழ் தலைமையின் ஒரு பகுதியின் ஆதரவினை அரசு பெற்றுக்கொண்டதன் மூலமும், தமிழர்களை 'இலங்கைத் தமிழர்' எனவும் 'இந்தியத் தமிழர்' எனவும் அரசு ஆழமாகப் பிளவுபடுத்திவிட்டது. இவ்வாறாக சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் வேறுபாடுகளையும், பகைமையையும் மிகவும் கவனமாக விதைத்து அதனால் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி சிங்களத் தேச உருவாக்கத்தை தீவிரப்படுத்தும் இதே தந்திரோபாயத்தை 1950 களின் பின்பும் இலங்கை தமிழர்,

மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமைப் பறிப்பிற்கும் சிங்களத் தேச உருவாக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.

முஸ்லிம்களுக்கிடையிலும் சிங்களத் தலைமை பிரயோகித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கும் கூட தமிழ்த் தலைமைகளின் தவறான நிலைப் பாடுகளும், செயற்பாடுகளும் சிறுபான்மை சமூகங்களுக்கிடையிலான பிளவுகளுக்கு ஒரு பகுதி துணையாகப் போனது என்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதே.

குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட அநீதியை செல்வநாயகம், வன்னியசிங்கம் அடங்கிய ஒரு சிறு குழுவினரைத் தவிர ஏனைய தமிழ்த் தலைவர்கள் ஆதரித்த போதிலும் ஒரு சிறுபான்மை சமூகத்தின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதானது அதனுடன் ஒத்த மற்றொரு சிறுபான்மை சமூகத்தையும் தவிர்க்க முடியாது விழிப்படை யவே செய்தது. அதாவது, மலையகத் தமிழரின் சமூக, அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதால் விழிப்புற்ற வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது எதிர்காலமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்பதை உணரவே செய்தனர். தமது அரசியல் உரிமைகளையும் மொழி, பிரதேசம், கலாச்சாரம் என்பவற்றையும் நிரந்தரமாக பாதுகாப்பது குறித்த வழிமுறைகள் பற்றி –அதாவது 'சமஸ்டி' சுயாட்சி அமைப்புப் பற்றி– பரிசீலிக்கத் தொடங்கியது.

மலையகத் தமிழர்களின் அரசியல், சமூக உரிமைகள் பறிக்கப்பட்டதன் எதிரொலியாக மட்டும் இலங்கைத் தமிழர் இவ்வாறான நம்பிக்கை இழப்பிற்கு உள்ளாகவில்லை. அதற்கு முன்பே சில திட்டவட்டமான அறிகுறிகள் சிங்களத் தலைமையிடம் இருந்து வெளிப்படத் தொடங்கியிருந்தன. டொனமூர் குழுவின் பிரசன்னத்துடனும் அதன் பின்பும் சிங்களத் தலைமையிடம் தமிழ்த் தலைமை நம்பிக்கையை கணிசமாக இழந்திருந்தது. சட்டசபையில் சிங்கள மேலாதிக்கத்தை நிறுவும் பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறையை சிங்களத் தலைமை தன்னிச்சை யாகக் கோரியும், 1937 இல் உள்ளார்ந்த சதி மூலம் "தனிச் சிங்கள மந்திரி சபையை" சேனநாயகா அமைத்துக் கொண்டமையும், நம்பிக்கையீனத்தை தமிழ்த் தலைமையிடம் ஏற்கனவே தோற்றுவித்திருந்தது. இவற்றின் விளைவாகவேஅன்று தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையான '50:50' சமநிலை பிரதி நிதித்துவம் (*Balance Representation*) முன்வைக்கப்பட்டதையும் நோக்கவேண்டும்.

இன்றும்கூட இக் கோரிக்கை தவறாக அர்த்தம் கொடுக்கப்பட்டு சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப் படுகின்றன. உண்மையில் சிறுபான்மை சமூகங்கள் ஒருபோதும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தால் ஒடுக்கப்படாத விதத்தில் பாதுகாப்பை உத்தர வாதப்படுத்தும் ஒரு அரசியல் யாப்பு ஏற்பாட்டையே இந்த 50:50 முன்மொழிவு கோரிநின்றது. சிங்களத் தலைமை இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்குமானால் அது சிறுபான்மை சமூகங்களை ஒடுக்கு வதற்கான வாய்ப்புகளைத் தவிர வேறு எதனையும் இழந்து விட்டிருக்காது. ஆனால் இதனை ஒரேயடியாக நிராகரித்து விட்டதன் மூலம் சிறுபான்மை சமூகங்களை நிரந்தரமா கவே ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் அதிகார த்தை சிங்களத் தலைமை தக்கவைத்துக் கொண்டது.

மேற்படி சில வரலாற்று நிகழ்வுகள் சிங்களத் தலைமைமீது தமிழ் மக்கள் சந்தேகம் கொள்ளும் விதத்தில் அமைந்த அதன் நடத்தைகளை எடுத்துக்காட்டவே குறிப்பிடப் பட்டன. இதனைத் தொடர்ந்து நாடு சுதந்திரம் அடைந்தது. ஏகபோக அரசியல் அதிகாரத் தைப் பெற்றுக்கொண்ட சிங்களத் தலைமை சிங்களத் தேச உருவாக்கம் நோக்கி விரைந்து செயற்படத் தொடங்கியது. முதலாவது அரசியல் பலிக்கு மலையக மக்கள் ஆளானார்கள். சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப் பறித்தெடுத்து அதனூடாக சிங்களத் தேச உருவாக்க நிகழ்வை முடுக்கிவிடுவதன் தொடக்கமாக குடியுரிமை, வாக்குரிமைப் பறிப்பு நாடு 'சுதந்திரம்' அடை ந்த கையோடு நடைபெற்றது.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தலைமை நிராகரி க்கப்பட்டு 'தமிழரசுக் கட்சி' ஸ்தாபிக்கப் பட்டமை மேற்படி நிகழ்வின் எதிர்விளைவாக அமைந்தது. தமிழ் மக்களது நிரந்தர பாதுகாப்பு, இருப்பு, மற்றும் தனியான தேசமாக வளர்ச்சியடைய வேண்டியதன் இன்றியமை யாமை என்பவற்றை புதிய தமிழ்த் தலைமை உணர்ந்துகொண்டது. இத்தகைய தீர்க்க

'எங்கும் வாழும் சுதந்திரம்' எனக் கூறிக் கொண்டு, தமிழர் தாயகத்தில் உள்ள வளமான பிரதேசங்களில் முதலில் சிங்களவர் குடியேற்றப்படுகின்றார்கள், அங்குள்ள வளங்கள் ஏற்கனவே தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் முன்னையவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே போட்டா போட்டிகள் ஏற்படுகின்றன. இதனை சாட்டாகக் கொண்டு அரசும், நிறுவனங்களும் கலவரத்தைத் தூண்டிவிடுகின்றன, கலவரங்களின்போது சிங்களக் குடியேற்றவாசிகள் அரச படைகளினால் பாதுகாக்கப்பட, தமிழர்கள் படையினராலும் சிங்களக் காடையர்களினாலும் தாக்கப்பட்டு தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்தே விரட்டப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரிசனத்துடன் பரிணமித்த **'தமிழ் அரசுக் கட்சி'** தன் பெயரினுள் உணர்வு பூர்வமாகவோ உணர்வு பூர்வமற்றோ **'அரசு'** எனும் கருத்தாக்கத்தை உள்ளடக்கியிருந்ததையும் காணலாம். தமிழ் அரசுக் கட்சியின் பெயரானது ஆங்கிலத்தில் சமஸ்டிக் கட்சி(Federal Party) என்றே மொழிபெயர்க்கப் பட்டிருந்தது. தமிழ்த் தரப்பிலோ அது தமிழ் அரசுக் கட்சி என்றே அழைக்கப்பட்டது. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டினை தமிழ் மக்கள் வந்தடைந்தமை வெறும் தற்செயலின் பாற்பட்டதல்ல என்பதை இக் கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்ட பரிமாணங்கள் உறுதிப்படுத்தும். சிங்களத் தலைமை தொடர்ந்தும் மேற்கொண்ட மேலாதிக்க நடவடிக்கைகளும், சிங்களத் தேச உருவாக்கத்தை முனைப்புடன் செயல்படுத்த ஏனைய சிறுபான்மை சமூகங்களை பலியிட்டமையும் தமிழ் மக்களின் மத்தியில் தனித் தேசமாக வளர்ச்சி பெறுவதையும் சுயாட்சிக்கான தேவையையும் மேலும் தூண்டிவிடவே செய்தன.

1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 'சிங்களம் மட்டும்' சட்டமானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அரசு மிகவும் கடுமையான எதிர்ப்பை தமிழ் மக்களிடம் இருந்து எதிர்கொண்டது. அதே வருடம் தமிழ் அரசுக் கட்சி பண்டாரநாயக்க அரசிடம் பிரச்சினைகளுக்குத் தீர்வாக தனது 4 அரசியல் கோரிக்கைகளை முன்வைத்தது.

> குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட அந்நிலை செல்வநாயகம், வன்னியசிங்கம் அடங்கிய ஒரு சிறு குழுவினரைத் தவிர ஏனைய தமிழ்த் தலைவர்கள் ஆதரித்த போதிலும் ஒரு சிறுபான்மை சமூகத்தின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதானது அதனுடன் ஒத்த மற்றொரு சிறுபான்மை சமூகத்தையும் தவிர்க்க முடியாது விழிப்படையவே செய்தது. அதாவது, மலையகத் தமிழரின் சமூக, அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதால் விழிப்புற்ற வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது எதிர்காலமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்பதை உணரவே செய்தனர்.

**1.** 'சமஸ்டி' அமைப்பை உறுதி செய்யக்கூடிய ஒரு அரசியல் யாப்பின் மூலம் ஏற்கனவே அமுலில் உள்ள சோல்பரி அரசியல் யாப்பை மாற்றீடு செய்தல்.

**2.** சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இடையில் சமத்துவமான அந்தஸ்து நிலையைப் பேணுதல்.

**3.** இந்தியத் தமிழர்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை என்பவற்றை மீளக்கொடுத்தல்.

**4.** பாரம்பரிய தமிழர் தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்தல்.

தமக்கென தனிச் சலுகைகளை எதிர்பார்க்காத, நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளாக மட்டுமே இவை அமைந்திருந்திருந்தன. எனினும் இக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. முரண்பாடு கூர்மையடைந்து அரசியல் பதட்ட நிலை அதிகரித்தது. சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்து 1956 ஜூன் 5 இல் தமிழரசுக் கட்சி காலிமுகத் திடலில் மேற்கொண்ட அமைதியான சத்தியாக்கிரகம் பொலிசாராலும் குண்டர் படையாலும் தாக்கப்பட்டு கலைக்கப்பட்டன. அரசியல் பதட்டம் மேலும் தீவிரமடைந்தது. அரசின் நிலையில் மாற்றம் இல்லாததால் 1957 இல் மீண்டும் பாரிய சத்தியாக்கிரகம் ஒன்றுக்கு தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்தது. நெருக்கடியை தவிர்க்க பண்டாரநாயக்கா செல்வநாயகத்துடன் அரசியல் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இதனை எதிர்த்து J.R. ஜெயவர்த்தனாவின் கண்டி பாதயாத்திரை நடைபெற்றது. பௌத்த பிக்குமார் பண்டாரநாயக்கவின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். பேரினவாதத்தின் பல் முனை நெருக்குதல்களை முகம்கொடுக்க முடியாத பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை கிழித்து வீசினார். இதைத் தொடர்ந்து வடக்கில் அரசினை எதிர்த்த பலத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதன் ஒரு பகுதியாக 'சிறீ' எதிர்ப்புப் போராட்டம் அமைந்தது. சிங்கள சிறீ எழுத்திட்ட அரச வாகனங்கள் எரிக்கப்பட்டன. உச்சநிலையாக 1958 மே இல் கலவரம் மூண்டது. ஐக்கிய இலங்கை என்ற அமைப்பினுள் சிங்கள சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழலாம் என்ற நம்பிக்கையின்மீது விழுந்த பலமான அடியாக இக் கலவரம் அமைந்தது.

## சத்தியாக்கிரக சட்ட மறுப்புப் போராட்டமும் தமிழ்த் தேசிய எழுச்சியும்

மொழிக் கொள்கையினால் ஏற்பட்ட பாரதூரமான பாதிப்பு, பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டதால் ஏற்பட்ட அரசியல் சூனிய நிலை, '58 கலவரம்' ஏற்படுத்திய ஆழமான வடு, போன்றவற்றால் கொதிப்படைந்தும் அவநம்பிக்கையுற்றும் தமிழ் மக்கள் காணப்பட்டனர். இந் நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் 1961 ஜனவரியுடன் 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழி ஏற்பாட்டை துரிதமாக அமுல்செய்யும் திட்டத்தை முன்வைத்தது.

ஆனால் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்குவதாகக் கூறி 1960 இல் சிறிமா தலைமை தாங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் அரசுக் கட்சியுடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருந்தும் இவ்வாறு அரசு நடந்து கொண்டது. இரு கட்சிகளும் இணைந்தே 1960 இல் யூ.என்.பி. ஆட்சியை பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் தூக்கியெறிந்தன. அதுபோல 1961 தேர்தலிலும் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வுடனான செயற்பாடும் காணப்பட்டது. இருப்பினும் தேர்தலில் வெற்றியீட்டிய சிறிமாவோ அரசாங்கம் எல்லா உடன்பாடுகளையும் தூக்கி வீசிவிட்டு சிங்கள மொழிச் சட்டத்தை துரிதமாக அமுல் செய்யும்படி ஆணையிட்டது. இதுவே மாபெரும் சத்தியாக்கிரக சட்டமறுப்புப் போராட்டத்திற்கு வழிகோலியது.

தமிழ் மக்கள் தம்மை தனியான ஒரு தேசமாக திட்வட்டமாக இனங்காண இப் போராட்டம் வழிவகுத்தது. 1961 இல் நடைபெற்ற இரண்டு மாத சத்தியாக்கிரகமானது. சிங்கள அரசின் அனைத்து நிர்வாகங்களையும் வட கிழக்கில் ஸ்தம்பிக்கச் செய்தது. "தமிழ் அரசு" க்கான தபால்சேவை நடைபெற்றது. தனியான முத்திரை வெளியிடப்பட்டது. சுதந்திரமான தமிழ்த் தேச அரசுக்கான குறியீட்டு வடிவங்களாக இவை அமைந்தன. சிறிமாவோ அரசாங்கத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட தனிச் சிங்கள இராணுவ ரெஜிமெண்ட் மூலம், அவசரகால சட்டத்தின்கீழ் சத்தியாக்கிரகப் போராட்டம் நசுக்கப்பட்டது. எனினும் தமிழ்த் தேசிய எழுச்சியின் ஒரு பாய்ச்சல் கட்டமாக ஒரு வரலாற்று முத்திரையாக இச் சத்தியாக்கிரகப் போராட்டம் அமைந்தது எனலாம்.

தமிழ் மக்களின் போராட்டமானது பாராளுமன்ற அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த எல்லையைத் தாண்டி பாராளுமன்றத்திற்கு அப்பால் வெகுஜனங்களின் கிளர்ச்சியாக மாறும் ஒரு பண்பு மாற்றத்தைப் பெற்று வந்ததை இச் சட்டமறுப்புப் போராட்டம் வலியுறுத்தி நின்றது. இப் போராட்டமானது அப்போதிருந்த சில இடதுசாரிகளால் "சப்பாணிப் போராட்டம்" எனக் கேலிசெய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த காலங்களில் தமிழ் மக்கள்மீது மோசமான அடக்குமுறை நடவடிக்கைகள் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்டன. இவற்றினால் வெளிப்பட்ட தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான உணர்வை 1964 இல் தமிழ் அரசுக் கட்சி செயலாளர் வெளியிட்ட கருத்தில் அறிய முடியும்.

> 1956ம் ஆண்டு கொண்டு வரப்பட் 'சிங்களம் மட்டும்' சட்டமானது தமிழ் மக்க மத்தியில் பெரும் அரசியல் கொந்தளிப்ப ஏற்படுத்தியது.

"ஒவ்வொரு வருடமும் தென்னிலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் வளர்ச்சிப் போக்குகளானது, சமூகங்கள் ஐக்கியமாக வாழலாம் என்ற நம்பிக்கை குறைந்து செல்கிறது என்ற முடிவிற்கே எம்மை இட்டுச் செல்கின்றது. சிங்கள மக்களின் தலைவர்கள் இவ்விதமான மனப்போக்கிலேயே தொடர்ந்தும் விடாப்பிடியாக நின்றால் ..... நீங்கள் சமஸ்டியை ஆதரிக்கும் காலகட்டத்தில் நாங்கள் இந் நாட்டைப் பிரித்து விடுவதையே தெரிவாகக் கொள்வோம். ........"

உண்மையில் இதுவேதான் அடுத்தடுத்த காலங்களில் நடந்தேறியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 1972 குடியரசு அரசியல் யாப்பும் அதன் எதிர்விளைவுகளும்

'1972' குடியரசு அரசியல் யாப்பு வரையப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் சிங்களத் தேச உருவாக்கம் பூரணத்துவம் பெறுகிறது எனலாம். சிங்கள சிறீலங்கா, சிங்கள அரசு, அரசு மதமாக பௌத்தம், அரசகரும மொழியாக சிங்களம், சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்த 29ம் சரத்து நீக்கம் போன்றவை குடியரசு அரசியல் யாப்பு சிங்கள தேசத்துக்கு மட்டுமே என்பதை உறுதிசெய்தன. '72' குடியரசு அரசியல் யாப்பு எவ்விதத்திலும் சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாதது மட்டுமல்ல திட்டவட்டமாக வேற்று சமூகங்களாக்கி அவற்றைப் புறக்கணிக்கவும் செய்தது. சொல் அளவில் இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசாகக் காட்டப்பட்டாலும் அது யதார்த்தத்தில் **சிறீலங்கா பௌத்த சிங்களக் குடியரசாகவே இருந்தது.**

இந்த அரசியல் யாப்பினை முற்றாகப் பகிஸ்கரித்த தலைமை முடிவாக ஆறு அரசியல் கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்தது

1. தமிழர்களுக்குரிய நியாயமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.
2. மதச்சார்பின்மை பேணப்பட வேண்டும்.
3. இந்திய வம்சாவழி மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.
4. அடிப்படை மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு வேண்டும்.
5. சாதி அமைப்பு முறையை ஒழித்தல் வேண்டும்.
6. ஜனநாயக ரீதியில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

1958 இல் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் போன்றே இவைகளும் அடிப்படையான ஜனநாயகக் கோரிக்கையாகும். தமிழ் மக்களுக்கென தனிச் சலுகை இங்கும் கோரப்படவில்லை. எல்லா சமூகங்களும் சமத்துவமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே இக் கோரிக்கைகளின் உள்ளடக்கமாகும். எனினும் இம் மனுவை கையேற்பதற்குக்கூட அன்றைய பிரதமர் சிறிமாவோ முன்வரவில்லை.

இந் நிலையில் தம்மை முற்றிலும் அந்நியப்படுத்தி விட்ட அரசியல் யாப்புக்குப் பதிலாக தமது அடிப்படை உரிமைகளை உத்தரவாதப் படுத்தக்கூடிய சொந்த அரசியல் யாப்பொன்றின் தேவை குறித்து சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாமல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. இலங்கை என்ற பொதுவான கட்டமைப்பினுள் தாம் உள்ளடக்கப்படவில்லை. எனவே ஒரேயொரு மாற்று வழிதான் அவர்கள் முன்னே இருந்தது. அதாவது திட்டவட்டமான தனித் தேசமாக தம்மை வளர்த்தெடுக்க வேண்டும்! தமக்கென ஒரு தேச – அரசினைப் படைத்தாக வேண்டும்! இந்த உணர்வு இயல்பாகவே தமிழ் மக்கள் மத்தியில் கருக்கொண்டது. 1972 க்கு பிந்திய ஆண்டுகளில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் 'சிறீலங்கா' விற்கு மாற்றாக 'தமிழீழம் ' என்ற கருத்து வேரூன்றத் தொடங்கியிருந்தது. இவ் அழுத்தமே ஈற்றில் 1976ம் ஆண்டு தனித் 'தமிழீழம்' என்ற கோரிக்கையாக தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறீலங்கா அரசின் '72' குடியரசு அரசியல் யாப்பின் தவிர்க்க முடியாத விளைவாகவே இத் தமிழீழக் கோரிக்கை பிறப்பெடுத்தது என்பது ஓர் எளிமையான உண்மையாகும்.

1976 மே மாநாட்டில் நிறைவேறிய 'சுதந்திர தமிழீழம்' என்ற கோரிக்கையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

" ....... .ஒவ்வொரு தேசத்திற்கும் பிறப்புரிமையாக உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை கொண்ட, மதச்சார்ப்பற்ற சோசலிச தமிழீழ அரசை நிர்மாணிக்கவும் கட்டி எழுப்பவுமான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இம் முடிவானது இலங்கையிலுள்ள தமிழீழ மக்களின் இருப்பைப் பாதுகாப்பதற்கு தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது ..... "

வட்டுக்கோட்டை மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியில் ரீதியில் பிரிந்து செல்வதற்கான தமிழீழக் கோரிக்கையானது, 1977 பொதுத் தேர்தலில் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதப்பட்டு தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பிற்கு விடப்பட்டது. 'தமிழ்த் தேசத்தின்' 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைக் கொண்டு இக் கோரிக்கையானது சட்டபூர்வ ஆணையைப் பெற்றுக்கொண்டது. இது இவ்வாறிருக்க இன்று கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் கோரவேண்டும் என்கின்ற 'ஜனநாயகவாதிகள்' இனியாவது முழு தமிழ்த் தேசமும் சிங்கள அரசின்கீழ் இணைந்து வாழ விரும்புகின்றதா அல்லது தனியே பிரிந்து செல்ல விரும்புகின்றதா என்று தமிழ் தேசத்தின் மத்தியில் நடாத்தும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்துப் பார்க்கட்டுமே.

தமிழ் மக்களினதும், இளைஞர்களினதும் அரசியல் அபிலாசையாகிய தமிழீழக் கோரிக்கையை கூட்டணி 1976 இல் ஏற்று தேர்தலில் வாக்கெடுப்பிற்கு விட்டபோதிலும் அக் கட்சி அதனை ஒரு செயல் முழக்கமாகக் கருதி ஒருபோதும் முன்னெடுக்கவில்லை. ஒற்றை ஆட்சி அமைப்பினுள் பேசித் தீர்வு காண்பதே அக் கட்சியின் ஒரே வழிமுறையாக இருந்தது. பேரம் பேசுவதற்கான கோரிக்கை என்பதற்குமேல் அதற்கு அக் கட்சித் தலைமை முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் அரசோ மறுபுறம் இன ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கிவிட்டது. தமிழ்ச் சமூகமானது ஒரு தேசமாக முழு வளர்ச்சி பெறுவதை சிதைக்க அரசு பல பரிமாணங்களிலும் அழிவு வேலைகளில் ஈடுபட்டது. 1977 இன் பின் அடுத்தடுத்து நடைபெற்ற இன ஒழிப்பு முயற்சிகளின் உச்சநிலையாக 1983 ஜூலை வன்முறைகள் அமைந்தன.

83 ஜூலை இன ஒழிப்பின் பயங்கரத்திலிருந்து தமிழ் மக்கள் மீளமுன்பே அரசினால் அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்ட 6 வது திருத்தம் தமிழ் மிதவாத அரசியல் தலைமையை பாராளுமன்றத்திலிருந்து – தெளிவாக சொல்லப் போனால் சிறீலங்கா அரசியல் அரங்கிலிருந்து – முற்றாக வெளியேற்றியது. இதற்கு மேல் தமிழ்த் தலைமை விரும்பினாலும்கூட அவர்களுடன் பேசத் தயாராக இல்லை என்பதை சிங்களத் தலைமை ஊர்ஜிதம் செய்துவிட்டது. தொடர்ந்து போராட்டம் உக்கிரம் பெற்ற காலங்களில் தமிழ் மிதவாத அரசியல்வாதிகளோ, தீவிரவாதப் பிரிவினர்களோ மூன்றாவது தரப்பொன்றின் மத்தியஸ்தம் இன்றி சிங்களத் தேசத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியாத நிலைமையே காணப்பட்டது. **இந் நிலை சிங்களத் தேசமும், தமிழ்த் தேசமும் தனித்தனியாக திட்டவட்டமாக கூறுண்டு போய்விட்டதற்கான துல்லியமான அரசியல் வெளிப்பாடாக அமைந்தது.**

சுதந்திரத்திற்குப் பின்பான அரசியல் நிகழ்வுப் போக்கு ஒருவேளை வேறுவிதமாக அமைந்திருக்கும் எனக் கொண்டால் அந் நிலையில் இனப் பாகுபாடுகளைக் கடந்து ஒரு பூர்சுவா ஜனநாயக அடிப்படையில் அமைந்த அரசியல் போக்குகள் நிலவியிருக்கும் எனலாம். அதாவது சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, சகல சமூகங்களையும் சேர்ந்த ஆளும் வர்க்கங்கள் தம்மிடையேயுள்ள இன மற்றும் குறுகிய வேறுபாடுகளைக் களைந்து எறிந்து விட்டு, கைவசம் கிடைத்த முதலாளித்துவ அரசின் துணையுடன் முதலாளித்துவ ஜனநாயக விழுமியங்களை நிறைவு செய்திருக்கும். இதனூடாக தமது வர்க்க நலன்களை உயர்ந்தபட்ச அளவிற்கு அடைந்திருக்கும். ஆனால் இவ்விதம் செய்வதற்கு ஆளும் வர்க்கங்களின் குறிப்பான நிலைமைகளும், இலங்கையின் சமூக உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணியும் அனுமதிக்கவில்லை என்பதே யதார்த்தமாகியது. அரசு யந்திரத்தை சிங்களத் தேசக் கட்டமைப்பிற்காக மட்டும் பயன்படுத்தியதோடன்றி ஏனைய சமூகங்களை ஒடுக்கவும் பயன்படுத்தியதைத்தான் சிங்கள ஆளும் வர்க்கத் தலைமைகளினால் செய்ய முடிந்தது.

சிங்கள அரசினால் இடைவிடாது தமிழ் மக்கள்மீது பிரயோகிக்கப்பட்ட சகிக்க முடியாத இந்த ஒடுக்குமுறைகளின் தவிர்க்க முடியாத விளைவே அம் மக்கள் அவ்வப்போது மேற்கொண்ட போராட்டங்களாகும். அழுத்தங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் கனதிக்கு ஏற்ப போராட்டத்தின் கடுமையும் வெளிப்பட்டது. சிறுபான்மை சமூகங்களை குறிப்பாக தமிழ் சமூகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை சிங்களத் தேசத்தின் 'ஜனநாயக ஆட்சி' என்பதன் அர்த்தம் யதார்த்தத்தில் 'சிங்கள மேலாதிக்கம்' என்பதாகவே இருந்தது. இவ் உணர்வுகளின் திரட்சியே அதன் அரசியல் செயல்ரூபமாக வெளிப்பட்டு முதலில் சுயாட்சி அரசியல் வடிவமான 'சமஸ்டி' யாகியது. பின்னர் அதனையும் தாண்டி தமிழீழ தேச – அரசு என்ற வளர்ச்சியினைப் பெற்றது. தமிழ்த் தேசம் தனது வரலாற்றுத் தேவையை இறுதியாக மிகவும் சரியாக இனங்கண்டு கொண்டதையே இப் போக்குகள் எடுத்துக் காட்டுகின்றன.

## இலங்கையின் சமூக உருவாக்கமானது சிங்கள தேசமாகவும் தமிழ்த் தேசமாகவும் கூறுண்டு கிடக்கும் இன்றைய நிலைமை

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு சாராம்சமாக எமக்கு எதனைப் புலப்படுத்துகின்றது என நோக்குவோம். இலங்கையில் வாழும் குடிமக்கள் தனித்தனி தேசங்களாக கூறுண்டுபோய்க் கிடப்பதையே இவ் வரலாற்றுச் சாராம்சம் வெளிப்படுத்துகின்றது. ஒருபுறம் அரசின் போஷிப்பில் 'சிங்களத் தேச உருவாக்கம்' தனியாக நிகழ்ந்தேற மறுபுறம் இதே அரசின் ஒடுக்குமுறைகளுக்கும், திட்டமிட்ட புறக்கணிப்புகளுக்கும் உள்ளான தமிழ் மக்கள் அவற்றுக்கு எதிரான இடைவிடாத போராட்டங்களினூடாக மற்றொரு தனியான 'தமிழ்த் தேசமாக' வளர்ச்சி பெற்றுள்ளனர்.

தவிர வட கிழக்கு முஸ்லிம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் கூட தனித்துவமான அரசியல், சமூக, கலாச்சார அம்சங்களுடன் தம்மை இனம்கண்டு தனியான தேசங்களாக வளர்ந்து வருகின்றனர். இவ்வாறு நிகழ்ந்தமைக்கான காரணம் யாது? பொறுப்பு யார்? என்று கடந்தகால நிகழ்வுகளின்மீதும் சம்பந்தப்பட்டவர்கள் மீதும் பழிபோடுவதைவிட இப்போது தேசங்கள் இவ்வாறு திட்டவட்டமாக கூறுண்டு போயுள்ளதே யதார்த்த நிலையாகும் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமானது. இலங்கையில் தற்போதைய சமூக உருவாக்கமானது தேசங்கள் யதார்த்தத்தில் இவ்வாறு கூறுண்டு போயுள்ளதை துலாம்பரமாகக் காட்டுகின்றன. அனைத்து மக்களையும் ஒருமித்து பிரதி நிதித்துவம் செய்யும்படியாக நிறுவனங்கள் ஏதேனும் உண்டா எனவும் பரிசீலிப்போமாயின் ...........

எல்லா சமூகங்களும் விருப்புடனும் நம்பிக்கையுடனும் இணைந்து செயற்படக் கூடியதாக பொதுவான "தேசிய அரசியல் கட்சிகள் உண்டா" என்றால் அவை இல்லை எனலாம். சிங்களக் கட்சிகளாகவும் தமிழ்க் கட்சிகளாகவும் முஸ்லிம் கட்சிகளாகவுமே அரசியல் கட்சிகள் பிரிந்து கிடக்கின்றன. தமது அரசியல், சமூக, உணர்வுகளை பிரதி நிதித்துவம் செய்யும் அத்தகைய சொந்தக் கட்சிகளின் பின்னேதான் அந்தந்த சமூகங்கள் அணிதிரண்டுள்ளன. இடதுசாரிக் கட்சிகளும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல.

தவிர, அனைத்து சமூகங்களையும் ஓரணியில் கொண்டுள்ள பொதுவான பலமான தொழிற்சங்கங்கள், விவசாய அமைப்புக்கள் என்பனவும் இலங்கையில் கிடையாது. வைத்தியர்கள், தாதிமார்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள் சிறீலங்காவில் உக்கிரமாக நடைபெற்ற வேளையில் ஈழத்திலோ யுத்தத்தில் காயமடைந்த மக்களுக்கு இரவுபகலாக சிகிச்சை அளிக்கவேண்டிய கட்டாயத்தில் தமிழ் வைத்தியர்களும், தாதிமார்களும் இருந்தனர். அன்னையர் முன்னணி அமைப்புகளும்கூட வெவ்வேறு காலகட்டங்களில் வேறுபட்ட நோக்கங்களுடன் சிறீலங்காவில் புறம்பாகவும் ஈழத்தில் புறம்பாகவும் அந்தந்த தேசப் பெண்களால் முன்னின்று நடாத்தப் பட்டன. தீவிரமான அரசியல், ஆயுதப் போராட்டங்களிலும் கூட வேறுபட்ட தேசக் குணாம்சங்களை நாம் காணமுடியும். சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சிகள் இரு தடவைகள் வெடித்துள்ளன. வடக்கு கிழக்கில் 20 வருடங்களாக தீவிரமான விடுதலைப் போராட்டம் நடந்து வருகின்றது. எனினும் இரண்டு தரப்பிற்கும் முற்றிலும் வேறுபட்ட, தனித்தனியான இலக்குகளே இருந்துள்ளன.

மூன்று மொழிகளும் நன்கு தெரிந்த அல்லது சகதேசத்தின் மொழியை விருப்புடன் கற்றுத் தேர்ந்த புத்திஜீவிகள் அனேகமாக எத்தரப்பிலும் இல்லை எனும் அளவிற்கு இடைவெளிகள் உள்ளன. தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி மூலமான போதனைப் பீடங்கள் 80 களிலேயே படிப்படியாக மூடப்பட்டுவிட்டன. அதுவரை யான காலத்தில் இன ஒற்றுமைக்கு உதாரணமாக காட்டப்பட்டு வந்த பல்கலைக் கழகங்களின் 1982 இல் கலவரங்கள் மூண்டன. தமிழ் மாணவர்கள் அங்கு தொடர்ந்து படிக்க முடியாத நிலை உருவானது. தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்கு சேவையாற்றும் தமிழ் நிபுணர்களின் பதவியுயர்வு களிலும் மேற்படிப்பிற்கான வாய்ப்புக்களிலும் பாரபட்சங்கள் தொடரவே செய்கின்றன.

சிங்கள அரசியல்வாதிகள், படைத் தளபதிகள் போன்றவர்களின் வம்ச வரலாறுகள், பொருளாதார பின்னணிகள் பற்றிய தகவல்கள் சிங்கள மக்களுக்கு சரளமாகவே தெரிந்திரு க்கும். ஆனால் தமிழ், முஸ்லிம் மக்களோ இவைபற்றி துளிகூட அறிந்திருக்க மாட்டார்கள். அவ்வாறே தமிழ் அரசியல் தலைவர்கள், இயக்கங்களின் தலைவர்கள், விடுதலை இயக்கங்கள் பற்றிய விவரங்கள், தகவல்கள் எதுவும் சிங்கள மக்களுக்குத் தெரிந்திருக்காது. ஆனால், 'பிரபாகரனுக்கும் குட்டிமணிக்கும் இடையிலுள்ள உறவு முறை

**இந்து மத நிறுவனங்கள் தமிழ்த் தேசம் சார்ந்த நிலைப்பாட்டையும், பௌத்த மத பீடங்கள் சிங்கள பேரினவாத நிலைப்பாட்டையுமே எடுக்கின்றன. கிறித்துவ மதபீடங்களும் கூட வட கிழக்கிலுள்ளவை தமிழ்த் தேசம் சார்நிலையையும், தென்னிலங்கையிலுள்ளவை சிங்களத் தேசம் சார் அல்லது அரச சார் நிலையையுமே எடுக்கின்றன.**

என்ன?' ...... 'வவுனியா சிவசிதம்பரத்திற்கும் புலேந்திரன் கொலைக்கு இடையிலான தொடர்பு என்ன?' ..... போன்ற உள்விபரங்கள் கூட தமிழ் மக்களுக்குத் துல்லியமா தெரிந்திருப்பதைக் காணலாம். விஜேவீரவையும் அவரது முழுக் குடும்பத்தையும் பற்றிய விவரங்கள் சிங்கள மக்களுக்கு அத்துப்படியாக இருக்கும்போது தமிழ் மக்களுக்கு விஜேவீரவின் அரசியல் என்பதுகூட தெளிவாக தெரிந்திருக் காது. இவ்வாறாக தேசங்கள் இரு வேறு தளங்களில் பரஸ்பரம் எட்டாதவைகளாக இருந்து வருகின்றன.

தினசரிப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டாலும் கூட ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் ஏதோ ஒருவகையில் சிங்கள பேரினவாதக் கருத்துக்களை பரப்புவனவாகவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் உணர்வுகளையும் சிறுமைப் படுத்துவனவாக வுமே முனைந்து செயற்படுகின்றன. வீரகேசரி தமிழ்ப் பத்திரிகையோ அடிக்கடி ஐக்கியம் பற்றி அழுது புலம்பும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்படி சிங்களத் தலைமையை இரைஞ்சும். எனினும் அவைகள் சிங்களத் தலைமைகளை சென்றடையுமா? என்பது கேள்விக்குறியே! மொத்தத்தில் முழு மக்களது உணர்வுகளையும், அபிலாசை களையும் நியாயமாகப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தேசிய தினசரிப் பத்திரிகைகூட இல்லை எனலாம்.

மத பீடங்களையும் எடுத்துப் பார்ப்போம். இந்து மத நிறுவனங்கள் தமிழ்த் தேசம் சார்ந்த நிலைப்பாட்டையும், பௌத்த மத பீடங்கள் சிங்கள பேரினவாத நிலைப்பாட்டையுமே எடுக்கின்றன. கிறித்துவ மதபீடங்களும் கூட வட கிழக்கிலுள்ளவை தமிழ்த் தேசம் சார்நிலையையும், தென்னிலங்கையிலுள்ளவை சிங்களத் தேசம் சார் அல்லது அரச சார் நிலையையுமே எடுக்கின்றன. 80 களில் தமிழீழ விடுதலை அமைப்புகளுடன் தொடர்புபடுத்தி தமிழ்ப் பாதிரிமார்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 83 க்குப் பின்பு தென்னிலங்கையில் தமிழ் மதகுருமார் படிப்பது, பணியாற்றுவது சிரமமானதாயிற்று.

சார்க், ஆசிய பிராந்திய விளையாட்டுப் போட்டிகளின் போதும், இலங்கை கிரிக்கெட் அணி ஏனைய நாட்டு அணிகளுடன் மோதும்போதும் மற்றும் இது போன்ற நிலைமைகளிலும் இங்குள்ள சிறுபான்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகங்கள் இலங்கை அணியையும், வீரர்களையும் ஆதரிப்பதிலும் பார்க்க அதற்கு எதிராக விளையாடும் குழுக்கள் அல்லது வீரர்களையே ஆதரிப்பதையே காணமுடிகிறது. சிறுபான்மை சமூகங்களின் தேசிய விசுவாசம் இன்மையை இது காட்டுவதாக முத்திரை குத்தாமல், மாறாக பொதுவான இலங்கையர் என்ற உணர்விலிருந்து முற்றாக சிறுபான்மை சமூகங்கள் அந்நியப்பட்டுப் போனதன் விளைவாகவே நோக்க வேண்டும்.

முப்படைகளும், பொலிஸ் படையும், உளவுப் பிரிவுகளும் சிங்களத் தேசத்தின் படைகளாகவே உள்ளன. தமிழ்த் தேசத்தின் மீது முழுமையான ஆக்கிரமிப்பை அவை மேற்கொண்டுள்ளன. இப் படைகள் தம்மைப் பாதுகாக்கப் போராடுவதாக சிங்களத் தேசம் கருதுகின்ற அதேவேளை தமிழ்த் தேசமோ தமிழ்த் தீவிரவாத அமைப்புகளையே தம்மையும், தமது உரிமைகளையும் பாதுகாக்கப் போராடும் படைகளாக ஏற்றுக்கொண்டது. அரச படைகளோ அன்றி தமிழ்ப் போராட்ட அமைப்புகளோ எதிர்த்தரப்பு மீது பாரிய இராணுவ வெற்றிகளை ஈட்டும்போது, அந்தந்த தேசத்தவர் அவ் வெற்றிகளை எதிரிப் படைகள் மீதான தம் சொந்தப் படைகளின் வெற்றியாகக் கருதி பூரிப்படைகின்றனர்.

அரச படைகள் சிங்களத் தேசத்தின் படைகளாக உள்ள நிலையில், அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட வடிவம் தவிர்க்க முடியாது அரச படைகளின் மீதான தாக்குதல்களாகவே அமையும். இதனால், அத் தாக்குதல்கள் சிங்களவர்கட்கு எதிராக மேற்கொள்ளப்படுவதாக சிங்களத் தேசத்தால் கருதப்படுகிறது. 1983 ஜூலையில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டபோது பழிதீர்க்கும் உணர்வுடன் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் கலவரம் இலங்கை பூராவும் வெடித்ததை இதன் பின்னணியில் புரிந்துகொள்ள முடியும். உளவுப் பிரிவுகளைப் பொறுத்த வரையிலும் விடுதலைப் போராட்டத்தின் போது கைதான தமிழ் இளைஞர்களை விசாரணை செய்வதற்குக்கூட தமிழ் அதிகாரிகள் அல்லது நன்கு தமிழில் தேர்ச்சி பெற்ற சிங்கள அதிகாரிகள் இப் பிரிவுகளில் இல்லாத நிலையையே காண்கின்றோம்.

இவ்விதமாக இலங்கையில் சமூக உருவாக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் அனைத்துமே கூறுண்டு போய்விட்டிருக்கும் நிலையில் அரசியலில் மட்டும் எப்படி அவைகள் ஒன்றாக இருக்க முடியும்? அது மட்டுமல்ல தமிழ்த் தேசம் சிங்கள அரசின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு நிலையிலும் அல்லவா வைக்கப்பட்டுள்ளது. உண்மை இவ்வாறிருக்க, தென்னிலங்கைக்கு இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் நிம்மதியுடனும், பாதுகாப்புடனும் வாழ்வதாக ஒரு கருத்து பரவலாக நிலவுகிறது. ஆழ்ந்து நோக்கினால் இக் கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என்பது புலனாகும்.

நீடித்த யுத்தத்தின் கோரமும், தொடர்ச்சியான பொருளாதாரத் தடையும், சகஜ வாழ்விற்கான விரிவான வாய்ப்புக்கள் இன்மையும், மோசமடைந்துவிட்ட சுகாதார நிலைமையும், இன்னும் இதுபோன்ற காரணங்களும் வடக்கு கிழக்கில் இருந்து தமிழ் மக்களை சிறீலங்காவிற்கு விரட்டியடித்துள்ளன. இவ்வாறு நகர்ந்து வந்துள்ளவர்கள் சிங்களத் தேசத்தின் மத்தியில் இரண்டாம்தர பிரஜைகளாகவே வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புணர்வு அற்ற நிலையிலேயே எந்நேரமும் காலம்தள்ள வேண்டியுள்ளனர்.

தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக எந்நேரமும் கைதுசெய்யப்படலாம், தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு பணம் பறிக்கப்படலாம் என்ற பயபீதியுடனேயே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எந்நேரமும் இனக்கலவரம் வெடிக்கலாம் என்ற பயம் வேறு! தமிழ் பத்திரிகைகள் கைகளில் கொண்டு செல்லவும், பொட்டு வைத்துக் கொள்ளவும், சமய விழாக்களை சுதந்திரமாக நடாத்தவும் அஞ்சுபவர்களாகவே தமிழ் மக்கள் உள்ளனர். வீடுகள், அறைகள், போன்றவற்றை இலகுவில் வாடகைக்கு எடுக்கமுடியாத நிலை, அப்படித்தான் கிடைத்தாலும் தமிழர் என்பதற்காகவே இரண்டு மூன்று மடங்காக வாடகைத் தொகை கொடுக்க வேண்டிய நிலை, வாடகைக் காலம் முடிய முன்பே பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு, மீதிப் பணம் கொடாத நிலையில் விரட்டப்படுகின்றனர். முரண்டு பிடித்தால் 'தமிழ்ப் பயங்கரவாதிகள்' என பொலிசாரிடம் காட்டிக் கொடுக்கப்படுகின்றனர்.

தமிழ் மக்கள் தென்னிலங்கையில் இரண்டுங் கெட்டானாக நின்று தடுமாறும் இந்த நிலைமைகூட நிச்சயமானது என கூற முடியாது. ஏனெனில் விடுதலைப் புலிகளை குடாநாட்டுக்குள் தனிமைப்படுத்தி அழிக்கும் நோக்குடன் அங்குள்ள தமிழ் மக்கள் அனைவரையும் வவுனியா அகதிகள் முகாம்களுக்குள் கொண்டு வந்து இருத்தலாம் என்று 1991 இல் சிங்கள அரசு திட்டமிட்டதை முதலில் நினைவு கூர்வோம். இதனைக் கருத்தில் கொண்டால், எதிர்வரும் காலங்களில் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் பெருமளவு குண்டு வெடிப்புகள் நிகழுமாயின் –தமிழ் நாட்டில் ஜெயலலிதா அரசு செய்ததுபோல்– கொழும்பில் அகதி முகாம்கள் அமைத்து முழுத் தமிழர்களையும் அங்கு 'சிறை' வைத்துவிட்டு புலி வேட்டையில் ஈடுபடலாம் என அரசு திட்டமிடாது என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. இன்றும்கூட தமிழர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்த பின்பேதான் சிறீலங்காவில் தங்கியிருக்க முடியும். பதிவுசெய்யாவிடில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றார்கள்.

இதுவே சிறீலங்காவிற்கு இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பொதுவான நிலைமைகளாகும். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பலஸ்தீனியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒருவகை 'சுதந்திரமே' சிறீலங்காவில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

மேலும் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் பயபீதியின் உச்சநிலையில் காணப்பட்ட குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களை இங்கு சுட்டிக்காட்ட முடியும். பிரேமதாசாவுக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட காலம், ரஞ்சன் விஜேரட்ண குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சந்தர்ப்பம், வடக்கில் கொப்பேகடுவ உட்பட உயர்படைத் தளபதிகள் கொல்லப்பட்ட சந்தர்ப்பம், ஜனாதிபதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சந்தர்ப்பம் போன்றவை இவற்றில் சிலவாகும். சாதாரண தமிழ்ப் பொதுமக்கள் மட்டுமல்ல, நீண்டகாலமாக தென்னிலங்கையில் பணிபுரியும் மருத்துவர்கள் போன்ற அறிவுத்துறை நிபுணர்கள்கூட இதே பாதுகாப்பற்ற உணர்வுடனும், இரண்டாந்தர பிரஜைகள் நிலையிலும் வைக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தில் காயமடைந்து சிகிச்சைக்கு கொழும்பு கொண்டு வரப்படும் உயர் படை அதிகாரிகளுக்கு தமிழ் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும்போது, அவர்களை சக சிங்கள வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் மட்டுமல்ல, சாதாரண சிங்கள நோயாளிகளும் கூட சந்தேகத்துடன் நோக்கும் நிலையே உள்ளது. இதுவே தென்னிலங்கையில் வாழும் தமிழர்களின் சராசரி நிலையாகும்.

அண்மைக் காலங்களில் பிரேமதாசாவினால் தான் இனக்கலவரங்கள் வராமல் தடுக்கப்பட்டதாக பரவலாகப் பேசப்பட்டதை அறிவோம். ஒரு வாதத்திற்கு இது சரியெனக் கொண்டாலும், இக் கூற்று எதனை வெளிப்படுத்துகின்றது. தேசங்களிடையே இன்று நிலவும் உறவின் உண்மைத் தன்மைக்கு ஒரு மாதிரியாக இது அமையவில்லையா? பிரேமதாச கொலை செய்யப்பட்ட தினத்திலிருந்து தகனக் கிரியைகள் நடைபெற்று முடியும் வரையில் தென்னிலங்கை பூராவும் நிலவிய கடுமையான பதட்டத்தின் மூலம் தமிழ்

**நீடித்த யுத்தத்தின் கோரமும், தொடர்ச்சியான பொருளாதாரத் தடையும், சகஜ வாழ்விற்கான விரிவான வாய்ப்புக்கள் இன்மையும், மோசமடைந்துவிட்ட சுகாதார நிலைமையும், இன்னும் இதுபோன்ற காரணங்களும் வடக்கு கிழக்கில் இருந்து தமிழ் மக்களை சிறீலங்காவிற்கு விரட்டியடித்துள்ளன.**

www.tamilarangam.net

மக்களுக்கு உள்ள "பாதுகாப்பின் தன்மையை" அறிந்துகொள்ள முடிந்தது. பல தமிழர்கள் வாடகை வீடுகளிலிருந்து விரப்பட்டார்கள், தனியார்துறை தமிழ் ஊழியர்கள் தொழிலகங்களில் மிரட்டப்பட்டார்கள். சில வசதியுடைய தமிழ் மக்கள் பெரும் 'கொட்டல்களில்' இடம் தேடினார்கள். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் தென்னிலங்கையை விட்டும் கொழும்பை விட்டும் தமது தாயகமான வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு நோக்கி அச்சத்துடன் சாரிசாரியாக வெளியேறிச் சென்று கொண்டிருந்தபோது சிங்கள தேசத்தவரோ ஆயிரக்கணக்கில் சாரிசாரியாக பிரேமதாசாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவும் தகனக் கிரியைகளில் பங்குகொள்ளவும் சோகத்துடன் பல இடங்களில் இருந்தும் வந்து கொழும்பில் குவிந்து கொண்டிருந்தார்களே. இது தேசங்களின் கூறுண்ட தன்மைக்கு மிகவும் பிந்திய ஓர் உதாரணமாகிறது.

**சமூக உருவாக்க நிகழ்வில் தேசங்கள் தனித்தனியாக கூறுண்டு போய்விட்ட நிலையில், சமூக அளவில் நடந்து விட்ட இப் பிளவானது அரசியல் ரீதியில் பூரணத்துவப் படுத்தாமல் இருப்பது தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரையில் சகிக்க முடியாத ஒன்றாக உள்ளது.**

இவ்வாறு உணர்வுகள் முதலாக நிறுவனங்கள் வரையிலும் தேசங்கள் வெவ்வேறாக கூறுண்டு போய்விட்டதன் விளைவாக, சாதாரண சிங்கள மக்களுக்கு அவசியமானது, நியாயமானது எனக் கருதிச் செயற்படும் சமூக அபிவருத்தித் திட்டங்கள் கூட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நேர் எதிரே பாதகமாகவே அமைகின்றன. அல்லது அவ்வாறான அர்த்தத்தை பெறுகின்றன. வறிய சிங்கள மக்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் உதவுவதில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வரும் 'சர்வோதயம்' போன்ற அரசு சார்பற்ற அமைப்புகள் கூட தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் தமது தாயகப் பகுதியை ஆக்கிரமிக்கும் அரசின் செயற்பாட்டிற்கு துணைபோகும் ஒன்றாகவே இனம் காணப் படுகிறது.

இதுபோலவே நந்தா மாலினி போன்ற முற்போக்குவாதிகளின் சிங்களத் தேசிய எழுச்சிப் பாடல்கள் இன்று ஒருவகையில் தமிழ்த் தேசத்திற்கு எதிரான சிங்கள மக்களின் உணர்வுகளை மறைமுகமாக தூண்டி விடுவனவாக அமைந்து விடுகின்றன. இவ்வாறான பாடல்களை வானொலியில் ஒலிபரப்ப அனுமதித்த அரசு தமிழ்த் தேசிய எழுச்சிக் காலங்களில் பாரதி பாடல்கள் ஒலிபரப்பப்படுவதைத் தடைசெய்திருந்தது. இதேவேளை இனவெறியூட்டும் மிக மோசமான சிங்கள இனவாத பாடல்கள் அன்றாடம் ஒலிபரப்பப்படுகின்றன. இன ஒருமைப்பாட்டை வளர்க்கின்றோம் என்ற பெயரில் அரசு தமிழ் நிகழ்ச்சியில் சிங்களப் பாடல்களை செருகுகின்றது. ஆனால் சாதாரண தமிழ் மக்களின் உணர்வைப் பொறுத்தவரையிலோ சிங்கள ஊடுருவல் தமிழ் வானொலி நிகழ்ச்சியையும் கூட விட்டுவைக்க வில்லை என்பதாகவே உள்ளது.

இவ்வாறு தேசங்கள் கூறுண்டு கிடக்கும் யதார்த்தத்தை நெருங்கிப் பரிசீலித்த நாம் அடுத்து, "இலங்கையர் என்ற ஒரே தேசத்தின் பகுதியாக தமிழ் மக்களை சொந்தம் பாராட்டும்" அரசு உண்மையில் எவ்விதம் செயல்படுகிறது என்பதையும் நோக்குவோம். தமிழ் மக்களும் நாமும் ஒரே தேசமே எனக் கூறும் அரசு 10வது வருடமாக தமிழ் மக்கள்மீது யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. யுத்தத்தின் குணாம்சமும் ஒரு எதிரித் தேசம் மீதான யுத்தமாக உள்ளது. தமிழ் மக்கள் நூற்றுக் கணக்கில் பால், வயது வேறுபாடுகள் இன்றி வீதிகளிலும், வீடுகளிலும், அகதிகள் முகாம்களிலும் கொல்லப்படுகின்றனர்.

கொக்கட்டிச்சோலை, வீரமுனை, மயிலந்தனை போன்ற தமிழ்க் கிராமங்கள் கொலைக் களங்களாக்கப்பட்டுள்ளன. பல கிராமங்களும், விளைந்த நெல்வயல்களும் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. கோயில், திருவிழாக்கள் நடக்கும்போது வேண்டுமென்றே மக்கள்மீது குண்டுகள் போடப்படுகின்றன. குடாநாட்டுக்குள் மாற்றுவழியின்றி படகில் செல்வோர் சுடப்பட்டு, வெட்டப்பட்டு கொல்லப்படுகின்றனர். நூல் நிலையங்கள், கோவில்கள், மற்றும் கலாச்சார சின்னங்கள் கொளுத்தப்படுகின்றன. தமிழ் மக்களும் இலங்கையர் என்ற ஒரே தேசமாக ஏற்கப்பட்டிருந்தால் இத்தகைய அழித்தொழிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்க முடியாது.

இவை ஒருபுறம் இருக்க தொடர்ச்சியான பொருளாதாரத்தடை தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்டிருக்கும் விதத்தையும் நோக்குவோம். சிறிலங்காவில் எப்போதாவது ஒரு தடவை சில மணிநேரங்களுக்கு மட்டும் அமுல்செய்யப்படும் மின்சார வெட்டு, நீர் விநியோகத் தடை, போக்குவரத்துப் பாதை தடை போன்றவற்றை சிங்கள தேசத்தினால் சகிக்க முடியாத நிலையில், வருடக்கணக்காக நீர் விநியோகம், மின்சாரம், தொலைத் தொடர்பு, போக்குவரத்து என்பன வடக்கில் துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றன. போதிய உணவின்மையால் மக்கள் போசாக்கின்றி வாடிமடிகின்றனர். சிசு மரண வீதம் வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. அடிப்படை மருத்துவ வசதியின்மைகளாலும் மக்கள் நூற்றுக்கணக்கில் மடிகின்றனர். யுத்த பீதியும் எதிர்காலம் பற்றிய சூனிய நிலையும் பலரை மனநோயாளர்களாக்குகின்றது.

பொருளாதாரத்தடை, குறிப்பாக எரிபொருட் தடை காரணமாக தமிழ் மக்களின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்குச் சிதைந்து போயுள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் தாம் ஈடுபட்டு வந்த தொழில்களைக் கைவிட்டுள்ளனர். நூற்றுக் கணக்கில் கைத்தொழில் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன. இப் பாதிப்புகள் எதனையும் சிங்கள மக்களும் சிங்களத் தலைமைகளும் புத்திஜீவிகளும் உண்மையாக உணர்ந்திருப்பார்களா? அவ்வாறு உணர்ந்திருப்பின் இப் பாதகங்கள் தொடர்வதை அனுமதித்திருப்பார்களா? எனவே தமிழ் மக்களை வேறோர் தேசமாக அதுவும் எதிரித் தேசமாக சிங்களத் தேசம் கருதியிருப்பதன் வெளிப்பாடுதானே இது?

நாட்டின் முன்னேற்றம், சமூக, பொருளாதார அபிவிருத்தி, மக்களின் சபீட்சம் பற்றிப் பேசும் அரசு ஒரே தேசமாக தமிழ் மக்களையும் கருதியிருந்தால் இத்தனை அவலங்களையும் நிச்சயமாக அனுமதித்திருக்க முடியாதல்லவா? இப்போதும்கூட யுத்தத்தைத் தொடர்ந்தும் நீடிக்க பாரியளவிலான ஆயுத, தளபாடங்களை அரசு குவித்தே வருகின்றது. வடக்கு கிழக்கு மக்களையும் அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் நாட்டின் பிற பகுதியிலிருந்து துண்டித்து விட்டதன் மூலமாக சிங்கள அரசே 'தமிழ்த் தேசம்' தனியான தேசம் என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டியுள்ளது.

சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அம்சங்களில் சிங்கள, தமிழ் என்ற இரண்டு தேசங்களாக பிளவுண்டு காணப்படும் யதார்த்த நிலைமை தெளிவான பின்னரும்கூட அரசு அதிகாரத்தைக் கொண்டுள்ள சிங்களத் தேசம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை முன்வைக்கத் தயாராக இல்லை. இன்றுள்ள முதன்மையான இந்தப் பொறுப்பினை யூ.என்.பி. அரசாங்கம் ஏனைய கட்சிகளின் தலைகளிலும் அக் கட்சிகள் பதிலுக்கு அரசாங்கத்தின் தலையிலும் கட்டிவிடுவதற்கே முயல்கின்றன. ஏனெனில் இவர்கள் எவரிடமும் இதற்கான சரியான தீர்வு இல்லை.

நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்த சர்வகட்சி மாநாடும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் இன்று கண்டுள்ள தீர்வுதான் என்ன? பூச்சியமான அவற்றின் வெளிப்பாடுகள் ஆளும் தேசமானது ஒடுக்கப்படும் தேசத்தின்மீது தனது மேலாதிக்க விருப்புக்களை மீண்டும் திணிப்பதையேதான் நிரூபிக்கின்றன. தெரிவுக் குழுவின் 45 உறுப்பினர்களில் 80 சதவீத சிங்களத் தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இருந்த வேறு எதனைத்தான் எதிர்பார்க்க முடியும்? எனவே பா.ம தெரிவுக்குழு அடைந்துள்ள முடிவு ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் தீர்விற்கான சாரம் எங்கோ இருக்க எங்கெல்லாமோ தெரிவுக்குழு சுற்றிப் பேசி முடிவில் தமிழ்த் தாயகத்தையே வடக்கு–கிழக்கு என கூறுபோடல் என்ற முடிவுக்கு வந்துள்ளது. மேலும் சமஸ்டி கூட்டாட்சி என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை என்பதையே தெரிவுக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுடைய பிரச்சினையின் அரசியல் சாரம்சத்தை சிங்களத் தேசம் புரிந்துகொள்ள முடியாமல் இருந்த அல்லது புரியாததுபோல காட்டிக் கொண்ட நிலைக்கு இது ஒன்றும் புதிய அனுபவமல்லவே! '83' ஜுலை இன ஒழிப்பு வன்முறையில் உச்சகட்டத்தில், "சிங்களவர் தமது இயல்பான உணர்வுகளையே வெளிப்படுத்தியுள்ளனர்" எனவும் "போர் என்றால் போர்" எனவும் பெருமையாகக் கூறி மிருகவெறிக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கிய 'மாபெரும் சிங்களத் தலைவர்' J.R. ஜெயவர்த்தன, 1985 திம்பு சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் சமயம் "தமிழ் மக்களுக்கு அப்படி என்னதான் பிரச்சினை உள்ளது" என்று அப்பாவித்தனமாகக் கேட்டாரே! அவர் மட்டுமல்ல இதே வினாவை இன்றும் ஏனைய சிங்களத் தலைவர்களும், புத்திஜீவிகளும் கேட்கின்றனரே, இவற்றுக்கெல்லாம் அர்த்தம் தான் என்ன?

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய, இலங்கை அரசுகள் இணைந்து திணித்த மாகாணசபை நிர்வாகம் வட கிழக்கில் சிங்கள ஆளுனரின் கீழ் ஆளப்படுகிறது. ஏனைய மாகாணங்களிலோ இச் சபைகள் ஏதோ ஒரு வகையில் கிரமமாகச் செயற்படுகின்றன. தமிழ் மக்களுக்கும் மாகாணசபைத் திட்டத்திற்கும் இடையிலான உறவு மறக்கப்பட்டு விட்டது போலுள்ளது. தமிழ்த் தேசத்தின்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் செத்துமடிந்த பின்பும் கூட ஏனைய தமிழ் மக்கள் அகதிகளாகவும் அழிவின் விளிம்பிலும் நிற்கும்போதும் கூட பாராளுமன்ற தெரிவுக் குழுவானது சிறிநிவாசனின் இரவல் யோசனையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தை கூறுபோடும் முடிவுக்கே வந்துள்ளது. சிறிநிவாசனின் 10 அம்ச திட்டத்தையும் கூட வெட்டிக் குறுக்கி ஆகக் குறைந்தபட்ச அரசியல் சீர்திருத்தங்களையும் கூட அகற்றி விட்டது, இந்த தெரிவுக்குழு.

சிங்களத் தேசத்தின் மனோநிலை, நடத்தை என்பவை குறித்து மேலே விவரிக்கப்பட்ட அம்சங்களை இட்டு தமிழ் மக்களும், மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களும், தமிழ் புத்திஜீவிகளும் புரட்சியாளர்களும் கொதிப்படைய வேண்டியதில்லை. சிங்களத் தேசம் ஏன் இன்னும் எமது பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதாக இல்லை என ஆதங்கப்படவும் தேவையில்லை. சிங்கள, தமிழ் தேசங்களினுடைய தேவைகளும் பிரச்சினைகளும், உணர்வுகளும் ஏன் அரசியலும் வெவ்வேறான பின்னர், இரு தேசங்களும் சமூக அளவிலும் நிறுவன வகையிலும் கூறுண்ட பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களுக்குப் புரியாமல் போனது ஆச்சரியமல்ல.

தமிழ்த் தேசத்தின் முதுகில் உட்கார்ந்து கொண்டு, அரசியல் சதுரங்கம் ஆடுவதும், ஈழக் கோரிக்கையை கைவிடுங்கள் என்பதும், பின் சமஸ்டி முறையை கைவிடுங்கள் என்பதும், ஈற்றில் வடக்கு கிழக்கு இணைப்பையும் விட்டுவிடுங்கள் நாம் உங்களை கௌரவமாக சமத்துவமாக நடாத்துவோம் என்ற கிளிப் பிள்ளைப் பாடத்தை போதிப்பதும், ஆச்சரியமே அல்ல! ஆனால் இதே குறளை சில தமிழ்த் தரப்பினர் இன்னமும் ஓதிக் கொண்டிருப்பது தான் உண்மையில் ஆச்சரியமாக உள்ளது. '83 ஜுலை' இனஒழிப்பில் முதன்மைப் பாத்திரம் வகித்த பிரேமதாசவின் 'கருணை மனத்திலிருந்து' மாகாணசபையின் அற்ப சொற்ப உரிமைகளையும் பிடுங்கிக் கொண்ட அவருடைய 'ஜனநாயக உள்ளத்திலிருந்து' தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு ஒளி பிறக்கும் என சில தமிழ்த் தரப்புகள் கையேந்தி மண்டியிட்டு கிடந்ததே உண்மையில் ஆச்சரியமாகும். முப்படைகளினதும் தளபதி இந்த ஜனாதிபதி பிரேமதாசாதான் என்பது இந்த அப்பாவிகளுக்கு தெரியாது போலும்.

இவை தவிர தேசங்கள் கூறுண்டு போயுள்ள உண்மைக்கு சான்றாக ஒரு பிரதானமான அம்சத்தை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது. சமாதானமான முறையில் ஒரு அரசியல் தீர்வினை அடைவதற்கு இரு தரப்பிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையும் கூட 3 வது தரப்பின் இடையீடு இன்றி நடைபெறமுடியாத கட்டம் இப்போது எட்டப்பட்டுள்ளது. 1980 களில் இந்திய அரசும், 90 களில் மேற்குலக அரசுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் மத்தியஸ்தம் இன்றி இரு தேசங்களுக்கு இடையிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் நிலை இல்லை. எதிர்காலத்தில் "ஐக்கிய நாடுகள் சபை" யின் மூலமாக தீர்வுகாணும் நிலைக்கே இரு தேசங்களுக்கும் இடையிலான பிளவு விசாலமடைந்துள்ளது எனலாம்.

**தமிழ்த் தேசத்தின் முதுகில் உட்கார்ந்து கொண்டு, அரசியல் சதுரங்கம் ஆடுவதும், ஈழக் கோரிக்கையை கைவிடுங்கள் என்பதும், பின் சமஸ்டி முறையை கைவிடுங்கள் என்பதும், ஈற்றில் வடக்கு கிழக்கு இணைப்பையும் விட்டுவிடுங்கள் நாம் உங்களை கௌரவமாக சமத்துவமாக நடாத்துவோம் என்ற கிளிப் பிள்ளைப் பாடத்தை போதிப்பதும், ஆச்சரியமே அல்ல! ஆனால் இதே குறளை சில தமிழ்த் தரப்பினர் இன்னமும் ஓதிக் கொண்டிருப்பது தான் உண்மையில் ஆச்சரியமாக உள்ளது.**

இதுவரை பல பரிமாணங்களிலும் எடுத்துக் காட்டப்பட்ட உண்மைகளின் ஒட்டுமொத்தமான காரண, காரியங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டுமாயின், முதலில் சமூகங்கள் அடிப்படையிலேயே தனித்தனியான தேசங்களாக கூறுண்டு போயுள்ளதைப் புரிந்து கொண்டதாக வேண்டும். அப்போதுதான் இன்றைய அரசியல் நிகழ்வுப் போக்கினைப் பற்றிய முழுமையான விளக்கத்தையும் நாம் எட்டமுடியும்.

## முடிவாக ....

இலங்கையின் சமூக உருவாக்கமானது ஈற்றில் இவ்வாறாக வெவ்வேறு தேசங்களாக கூறுண்டு போயிருப்பதன் விளைவே இன்று தீவிரப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாகும். இதைவிட்டு, இலங்கையின் சமூக உருவாக்கத்தை இத் தேசிய விடுதலைப் போராட்டமானது இனிமேல்தான் கூறுபடுத்தி விடப்போவதாக வாதிடுவது யதார்த்தங்களை சரிவரப் புரிந்து கொள்ளாமையைத்தான் காட்டுகின்றது. குறிப்பிட்ட ஒரு தேசத்தின் 'சுயநிர்ணய உரிமை' என்ற பிரச்சினை என்பது சமூக உருவாக்கமானது ஏற்கனவே தனித் தேசங்களாக கூறுண்டு போன பின்னரே உருவெடுக்கின்றது என்பது ஓர் எளிமையான உண்மையாகும்.

சமூக உருவாக்க நிகழ்வில் தேசங்கள் தனித்தனியாக கூறுண்டு போய்விட்ட நிலையில், சமூக அளவில் நடந்து விட்ட இப் பிளவானது அரசியல் ரீதியில் பூரணத்துவப் படுத்தாமல் இருப்பது தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரையில் சகிக்க முடியாத ஒன்றாக உள்ளது. இன்று நிலவும் அரசியல் தேக்கம் யுத்தத்தின் அவலங்கள் அதன் ஆக்கிரமிப்புத் தன்மை போன்ற அனைத்திற்கும் இதுவே காரணமாகிறது. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எவ்விதமான முயற்சிகளும் இந்த அடிப்படை உண்மையிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். எனவேதான் பிளவுண்ட இந் நிலைமையை அரசியல் மட்டத்தில் நிறைவுசெய்துகொள்ள தமிழ்த் தேசம் முனைகிறது. இவ் வேட்கை தவிர்க்க முடியாததும் முழுக்க முழுக்க நியாயமானதும் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களத் தேசமும், தமிழ்த் தேசமும் தனித்தனியானவைகளாக உருவாகிவிட்டன. சிங்களத் தேசத்தின் கரங்களிலோ அடக்குமுறை கருவியான அரசு இருக்கின்றது. தமிழ்த் தேசத்தினை ஒடுக்குவதற்கு இவ் அரசினை சிங்களத் தேசம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ்த் தேசம் தனக்கென்று தனியான அரசை உருவாக்குவதன் மூலமே இத் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும். எனவே தமிழ்த் தேசம் தனக்கான தேச–அரசு ஒன்றை ஸ்தாபிப்பதே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியமாகவும் உள்ளது.

பல்வேறு பரிமாணங்களிலும் ஒடுக்கப்பட்டு வரும் தேசமாக தமிழ்த் தேசம் உள்ளது என்ற வகையில் இன்றுள்ள அரசியல் வடிவங்களைத் தொடர்ந்தும் பேணுவது என்பது அதற்கு மிகவும் துன்பகரமான ஒன்றாக உள்ளது. மாறாக ஒடுக்கும் சிங்களத் தேசத்தைப் பொறுத்தவரையிலோ இன்றுள்ள நடப்பு நிலைமைகளைத் தொடர்ந்தும் பேணுவது குறுகிய அர்த்தத்திலாவது பயனுள்ளதாகவே அமைகின்றது. இந்த அடிப்படையில்தான் நடப்பு அரசியல் வடிவங்களைத் தொடர்ந்தும் பேணுவதா இல்லையா என்பது தொடர்பாக இரண்டு தேசங்களும் எதிரும் புதிருமான நிலையில் மோதிக்கொள்ள நேர்கின்றது.

இதுவே உண்மை என்பதால், இரு தேசங்களுக்கும் இடையேயான அரசியல் இணைவு என்பது தமிழ்த் தேசத்தினைப் பொறுத்தவரையில் கடந்த காலத்திலும் இப்போதும் எவ்வித நன்மைகளையும் தந்துவிடவில்லை. எனவே பாதிப்புக்குள்ளான தமிழ்த் தேசம் தனக்கென பிரத்தியேக அரசியலையும் அரசையும் கொண்டிருக்க முனைவது நியாயமானதே. ஆனால் 'அரசியல் இணைவு' என்ற போர்வையில் கடந்த காலங்களில் பயனடைந்த, இன்னும் பயனடைந்துவரும் சிங்களத் தேசம் வருங்காலத்திலும் அவ்வாறான ஒரு அரசியல் இணைவைப் பேணவே தீவிரமாக விளைகின்றது.

ஆனால் திட்டவட்ட மாக உருவாக்கம் பெற்றுவிட்ட தமிழ்த் தேசத்தை முன்னரைப் போல ஒரு கீழ்ப்பட்ட சமூகமாக தொடர்ந்தும் வைத்திருக்கலாம் என்பது இன்று முடியாத காரியமாகும். இதற்குமேல் சிங்களத் தேசம் தமிழ்த் தேசத்துடன் ஏற்படுத்தும் எந்தவொரு அரசியல் இணைவும், தமிழ்த் தேசத்தின் இறைமையை, தனித் தேச–அரசு அமைக்கும் அதன் உரிமையை அங்கீகரித்தும் சமத்துவமான அடிப்படையில் அரசு அதிகாரங்களையும் பல்வேறு துறைகளையும், மற்றும் வளங்களையும் நியாயமாக பகிர்ந்து கொள்வதை உத்தரவாதப் படுத்துவதாகவும் அமையவேண்டும். அவ்வாறான ஓர் அரசியல் இணைவில் அரசியல் யாப்பு, தேசியக் கொடி போன்ற எதுவுமே சமத்துவ அடிப்படையில் அமைந்ததாகவே இருக்க முடியும். ஆனால் இதற்கெல்லாம் சிங்களத் தேசம் இன்று தயாராக உள்ளதா? என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

இனவாதத்தின் கைதியாகிவிட்ட முழுச் சிங்களத் தேசமும் குறிப்பாக அதன் அரசியல் தலைமைகளும் இவ்வகையான முன்னெடுப்புகளை ஜீரணிக்கும் என்பதை கற்பனைகூடப் பண்ண முடியாதுள்ளது. இப்படியிருக்க இனவாதப் பிடிக்குள் சிறைப்பட்டக் கிடக்கும் சிங்களத் தேசத்தின் மனம்நோகாத வகையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் நீடித்த தேசியப் பிரச்சினைக்கு நிஜமான தீர்வாக மாட்டாது. மாறாக புண்ணுக்கு புனுகு தடவும் செயலாக இது அமையும். சிங்கள சிறீயை நீக்குதல், விகிதாசார வேலைவாய்ப்புக்கள், அரசின் சுற்றறிக்கைகளை தமிழ் மொழியில் வெளியிடுதல் போன்ற அற்பமான தீர்வுகள் இன்று காலங்கடந்தவைகளாகும். *(Too Little and Too Late)*

இப்படியான தீர்வுகளை வழங்கி பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய காலகட்டத்தை இலங்கை கடந்துசென்று பல பத்தாண்டுகளாகி விட்டன. தனக்கென தனியான தேச–அரசை அமைக்க வீறுகொண்டெழுந்துவிட்ட ஒரு தேசத்தின் முன்பு இவ்வாறான அற்ப சலுகைகளை வைப்பதானது உண்மையில் அந்த தேசத்தையே அவமதிப்பதாகும். கறாராக சொல்வதாயின், தனக்கென ஒரு தேச–அரசை அமைக்கும் தவிர்க்க முடியாத நிலைப்பாட்டிற்கு தமிழ்த் தேசம் வந்தடைந்தமைக்கான முழுப் பொறுப்பினையும் சிங்களத் தேசமே ஏற்றுக்கொள்வதுடன், தமிழ்த் தேசத்தின் இறைமையில், சுயநிர்ணய உரிமையில் குறுக்கிடாமல் அது விலகி நிற்கவேண்டியதே இன்று எஞ்சியுள்ள பிரச்சினையாகும்.

இந்த நாடு கூறுபடுத்தப்படுவது சிங்களத் தேசத்திற்கு கவலைதரும் விடயமாக இருக்கலாம். ஆனால் தனது அரசு அதிகார எல்லைக்குள் வாழும் ஏனைய சமூகங்களை சமத்துவமாக நடாத்த முடியாத ஒரு தேசம், ஒரு நாட்டினை முழுமையாக பேணும் தகுதியற்றது என்ற படிப்பினையைத்தான் அது பெறவேண்டியிருக்கும்.

இறுதியாக தமிழ் மக்கள் மத்தியிலுள்ள "புரட்சிகர சக்திகளைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசம் கொண்டுள்ள தனக்கென தனியான தேச–அரசை அமைப்பதற்கான உரிமை, தேவை, கட்டாயம் குறித்து எவ்வித மயக்கமோ தடுமாற்றமோ இருத்தலாகாது. பிரேமதாசாவின் மலின அரசியலைச் சோசலிசம் எனச் சித்தரிக்க முயலும் சிலர் இலங்கையில் இனவாதம் மறைந்து செல்கின்றது எனவும், தேசியப் பிரச்சினைக்கு அவர் ஒருவராலேயே தீர்வு காணமுடியும் எனவும் சாதிக்க முனைந்தார்கள். இவர்கள் இவ்வாறு நம்பிருப்பது என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான். ஆனால் இதனையே திரும்பத் திரும்ப கூறும் தமிழ் முற்போக்குப் பிரிவினர் ஒன்று தமது தத்துவார்த்த, அரசியல் நேர்மையை யதார்த்தத்துடன் உரசிப் பார்த்துக் கொள்ளட்டும். அல்லது தமது தத்துவார்த்த அசட்டுத்தனத்தை ஒப்புக் கொள்ளட்டும்.

● தேவதாஸ்

**தொடர்பு :**

**UYIRPPU**
BM BOX 4002
LONDON
WC 1N 3XX



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நட்புடன் உயிர்ப்பினர்க்கு,**

இரண்டாவது இதழில் இடம்பெற்ற "நீங்கள் எங்களுக்கு.........." பகுதியில் பிரான்சிலிருந்து முரளி என்பவர் எழுதியிருந்த விமர்சனமே எனக்கும் ஏற்பட்டது. நீ.......ண்ட இடைவெளியின் பின்பு உயிர்ப்பு மீண்டும் உயிர்ப்புப் பெற்று இதழ்-2 கைக்கு வந்தது. பிரச்சார ஏடு போலிருந்தது. புத்தகம் போல் தோற்றம் பெற்றதான ஒரு பிரமை ஏற்பட்டது.

இரண்டு இதழ்களிலும் பொதுவான அம்சங்களாக எழுத்துப் பிழைகள், தெளிவற்ற சொற்பிரயோகங்கள், தொடர்பற்ற சொற்பிர யோகங்கள், தொடர்பின்மையான பந்தி யமைப்புக்கள், கூறியது கூறல், கருத்துக்களில் ஊசலாட்டம், இடையில் காணாமல்போன சொற்றொடர்கள், வரிந்து கட்டிக்கொண்டு ஏற்படுத்தியது போன்ற கருத்துத் தெளிவின்மை, அனைத்துக் கருத்துக்களையும் மார்க்சியத்தில் ஊறப்போட்டு உலருவதற்கிடையில் வெளியிடும் தன்மை போன்ற இன்னும் பல ...... இதழ்கள் முழுமையையும் இரவல் எடுத்திருந்தன.

உங்களிடமிருந்து ஜனரஞ்சகமான கருத்துக்களை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இலகு தமிழில், எளிமையாகப் புரிந்துகொள்ளக் கூடிதான ஆக்கங்களையே எதிர்பார்க்கின் றோம். அனைத்து மார்க்சியவாதிகளும், தாங்கள் அறிவுஜீவிகள் என்ற பார்வையுடன், அறிவு ஜீவிகள் புரிந்து கொள்வார்கள் என்ற மாயையில் இவ் வழிமுறையைக் கைக்கொள்வது வருந்தத்தக்கது. இலங்கையைப் பொறுத்தவரை அறிவுஜீவிகள் இவற்றைப் புரிந்து, புரிந்தவற்றை ஏனையவர்களுக்குப் புரியவைப்பர் என நினைப்பது நகைப்பிற்கிடமானது. எனவே உங்கள் ஆக்கங்கள் எவ்வளவு இலகுவில் பெரும்பாலோரைப் போய்ச்சேருகிறதோ, பாதிக்கி றதோ அப்போதுதான் உங்கள் கருத்துக்களுக் குப் பிடிமானம் ஒன்று கிடைக்கும் என எண்ணுகிறேன். மேலும் ஏகலைவன் இரண்டு இதழ்களிலும் ஏக இடங்களை எடுத்து நாட்டின் மிக முக்கியமான ஒரு பிரச்சினையையும் நாடிபிடித்துப் பார்த்திருந் தமை, உயிர்ப்பின் மீதான அவரின் செல்வாக்கைத் தெட்டத் தெளிவாக்கின. இவைபோன்றவை தவிர்க்கப்படுவது நன்று. இல்லாவிடில் உயிர்ப்பும் நூற்றோடு நூற்றொன்றாகவே போய்விடும்.

"உங்களுடன் நாம்.........." யதார்த்தமாக இருந்தது. "மனித உரிமைகள்" வித்தியாசமான பார்வையில் அமைந்திருந்தது. "சிறீலங்கா ..... ஒரு தோல்வியுற்ற புரட்சி" – அரவிந் சில விடயங்களை விட்டிருந்தார், சில விடயங்களைத் தவறாகத் தந்திருந்தார் என நினைக்கிறேன். இளைஞர்கள் JVP யில் சேர்ந்தமைக்கு ஆயுதக் கவர்ச்சியும் முக்கியமானதொரு காரணம். புரட்சி தோல்வி யுற்றமைக்கு முக்கிய காரணங்களாக, அரசியற் தெளிவின்மை, சீரான தலைமைத்துவமின்மை, எழுந்தமானமாக உறுப்பினர்களாலேயே மேற் கொள்ளப்பட்ட தீர்மானங்கள், பிரேமதாசா அரசு மேற்கொண்ட சாணக்கியம், இறுதிக் கட்டத்தில் JVP என்ன செய்வது என்று தெரியாத நிலையில் உணர்ச்சி மேம்பட்டுச் செய்த செயல்கள் மூலம் மக்களிடமிருந்து அந்நியப்பட்டமை, ரஞ்சன் விஜயரட்ண வின் மனிதாபிமானமற்ற அணுகுமுறை போன்றனவே யமைந்தன.

"தனிநபர் பயங்கரவாதம் பற்றி......" எழுதிய வாணி புலிகளின் கொள்கை பரப்புபவராக இருந்திருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது. "மனித உரிமைகள்" கட்டுரையை அவர் ஒருமுறை வாசித்தலவசியம். அதன்பின்பும் அவர் தனது கொள்கைகளை மாற்றாவிடில், அவரை வானுலகு அனுப்புவதற்கு அவரின் கொள்கையே போதுமானதாகும். தேவதாஸின் "சிங்கள பேரினவாத இயக்கப் போக்கின் திசை ......" முழுமையற்றது. மேல் விபரம் வேண்டும். இதனை எழுதுவதற்குத் துணைபுரிந்துள்ள குமாரி ஜெயவர்த்தனாவின் "இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்" பற்றிக் குறிப்பிடாததானது, அவர் ஒரு தனித் தமிழர் என்பதை நிரூபித்துள்ளது. இவ்வாறான போக்குகளை தவிர்த்தல் நலமென யான் எண்ணுகிறேன். எவ்வாறாயினும் அனைத்துத் தமிழரும் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் என்பதில் சந்தேகமேதுமில்லை.

ஏகலைவனின் "தொடரும் விவாதம் ...." பகுதியில் இடம்பெற்ற 'தேசிய சக்தி பற்றிய சில பிரச்சனைகள்' பற்றித் தீர்க்கமாக ஆராயவேண்டியுள்ளது. ஆனால் ஒன்று, எவ்வாறாயினும் தற்போது புலியின் இருத்தல் அவசியம் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாதென நினைக்கிறேன்.

– மறவன்
ஈழம்

# வாசகர் கடிதம்

**அன்புடையீர்,**

தங்கள் 'உயிர்ப்பு' வெளியீடுகள் கிடைக்கப் பெற்றேன். கணணி மயப்படுத்தப்பட்ட இரண்டாவது **உயிர்ப்பு** அமைப்பில் நன்றாக இருந்தது. ஜனரஞ்சக மயப்படுத்தப்பட்டு வரும் புலம்பெயர்ந்தோர் இலக்கியப் பரப்பில், இன்று தமிழர்கள் மத்தியில் உயிர்ப்பு தேவையான முயற்சி. தயவுசெய்து உயிர்ப்பு மூலம் சர்வதேசமெங்கும் வாழும் புத்திஜீவிகளுக்கிடையேயான ஒரு கூட்டு முயற்சியை ஏற்படுத்த முயற்சியுங்கள். உயிர்ப்பு கட்டுரைகளில் ஈழத்தின் சமகால நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

– திலகன், ஈழம்

**ஆசிரியர், உயிர்ப்பு,**

'உயிர்ப்பு' – மாசி 1992ம் இதழ் இலங்கையின் தற்போதைய தமிழ்த் தேசிய இயக்கம் பற்றிய விமர்சனமாகவே உள்ளது. இலங்கையின் இடதுசாரி இயக்கம் அது மொஸ்கோ சார்பாக இருந்தாலென்ன, சீன சார்பாக இருந்தாலென்ன ஆரம்பத்தில் விட்ட பிழைகளில் தமிழ்த் தேசிய இயக்கம் பற்றிய விடயமும் ஒன்று ஆகும். அதன் காரணத்தினாலும் அது தமிழ் மக்கள் மத்தியில் வளர்ச்சியடைய முடியவில்லை. வேறு காரணங்களும் உண்டு. தேசிய அளவில் விட்ட பிழைகளால் தேசிய மட்டத்திலும் அது வளர்ச்சியடைய முடியவில்லை. இன்று உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையில் நிற்கிறது. தென்னிலங்கையிலும் ஈழத்திலும் சில உதிரிகள் பெயருக்கு இடதுசாரிகள் என்று கூறுவதுடன் உள்ளது.

அரசியல் ரீதியாக கைவிடப்பட்ட தமிழ்த் தேசிய இயக்கத்தை – தமிழ்த் தேசிய அமைப்புக்கள்தான் முன்கொண்டு சென்றன– அவை தமக்குள் முட்டிமோதி ..... வலிமையற்றன கீழே தள்ளப்பட, வலிமையுள்ள அமைப்பாக புலிகள் முன்வந்தன. இனிமேல் என்ன நடக்கும் என்று கூறமுடியாது. இந்த நிலையில் இடதுசாரிகள் தத்துவார்த்த ரீதியான புலமையில் விவாதங்கள் நடத்திக்கொண்டு இருந்தார்களே ஒழிய, நடைமுறையில் எந்தவித நிலைப்பாட்டையும் காட்டவில்லை. இனிமேல் என்ன செய்யப் போகின்றார்கள்? தொடர்ந்தும் தத்துவார்த்த புலமையில் தங்கள் திறமையைக் காட்டப் போகின்றார்களா?

நிற்க, ஏகலைவன் எழுதிய கட்டுரை 'தேசியசக்தி பற்றி சில பிரச்சனைகள்' சிந்திக்கக் கூடியது ஆகும். மற்றைய கட்டுரைகள் யதார்த்த நிலைமைகளை ஆராய்வனவாக உள்ளது. முஸ்லிம் மக்கள் தொடர்பாக சில குறிப்புகள் பயனுள்ளது ஆகும். ஆனால் இவற்றின் பயன்–எதிர்பார்ப்பு என்ன?

– காண்டீபன், ஈழம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர் அவர்கட்கு,

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் 'உயிர்ப்பு' போன்ற சஞ்சிகைகள் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். 2வது இதழில் நடப்பியல் விவகாரங்களை (இலங்கை) அருஞ்சுவையுடன் தந்திருக்கிறீர்கள். பாராட்டக்கூடிய விடயமாகும். **உயிர்ப்பு** தொடர்ந்தும் வெளிவரவேண்டும். உலக முழுவதும் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உயிர்நாடியாக விளங்க வேண்டும்.

**– ராமநாதன்**
மலையகம்

**உயிர்ப்பு – 2** இதழில் ஏகலைவன் தனது "தேசிய சக்தி பற்றிய சில பிரச்சினைகள்" என்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த. கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" 70 களில் சாதிய எதிர்ப்புப் போராட்டம் தீவிரம் குறைந்து போனதற்கு உயர்சாதி இளைஞர்களின் கரங்களுக்கு ஆயுதங்கள் வந்ததே காரணம் என்று 'தூண்டிலில்' சாந்தன் குறிப்பிடுகின்றார். இவர் 70 களுடன் தொடர்புடைய இன்னோர் மாற்றத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றார். அதுதான் 1970 இல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு முன்னெடுத்த தமிழர் விரோதக் கொள்கைகளும் இவற்றின் விளைவாக தமிழ்த் தேசியவாதம் தீவிரமடைந்ததுமாகும். இதனால் சாதிய எதிர்ப்புப் போராட்டம் இரண்டாம் பட்சமான நிலையை எடுத்தது ......".

உண்மையில் தீவிரமான சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் 1960 களின் பிற்பகுதியிலேயே கைவிடப்படிருந்தது. 1970 களின் தொடக்கத் தில் கம்யூனிஸ்ட் கட்சி பீக்கிங் அணி பிளவுபட்டு சீர்குலைந்திருந்தது. ஒரு பகுதி வரட்டு வேதாந்தம் பேசும் தீவிரவாத சிறுகுழுவாக சிறுத்துப்போக, மறுபகுதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசிடம் சரணாகதியடைந்தது. 1971 கிளர்ச்சி தோல்வியடைந்த பின்னர் நிலவிய அரசியல் சூழலையும், 1970 தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்ற பின்னர் சீன அரசின் இலங்கைக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்து கொள்வதும் 1970 களில் கம்யூனிஸ்ட் கட்சி பீக்கங் அணியினரது ஊசலாட்டங்களைப் புரிந்துகொள்ள உதவக்கூடும்."

மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியோ 1970 களில் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்தது. மேற்படி கம்யூனிஸ்ட் கட்சியின் சாதிய எதிர்ப்பு இயக்கமான "சிறுபான்மைத் தமிழர் மாசபை" தலைவர் திரு எம்.சி.சுப்பிரமணியம் தேசிய முன்னணி அரசினால் நாடாளுமன்ற உறுப்பினராக வேறு நியமிக்கப்பட்டிருந்தார். இக் காலத்தில் கூட்டணியினரின் அரசியலிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரது பங்கு பற்றுதல் அதிகரித்து வந்தது. 1977 தேர்தலில் சிறுபான்மைத் தமிழரான திரு.இராஜலிங்கம் கூட்டணி சார்பாக நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றார்.

வட, கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழக அனுமதியில் இடம் பெற்ற மொழிவாரி தரப்படுத்தலுக்கும் ஏனைய இன ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக தமிழ் இளைஞர் கிளர்ச்சிகள் ஆரம்பமானது. சிறிமாவோவின் இன ஒடுக்கல் அரசின் பின்னே சரணடைந்திருந்த மாஸ்கோ, பீக்கிங் சார்பு கம்யூனிஸ்டுகளை தீவிரவாத தமிழ் இளைஞர்கள் துரோகிகளாகப் பார்த்தார்கள். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆனால் 1970 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட இந்த வளர்ச்சிகள் எதுவும் 1970 க்கு முன்னரே சாதிய ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டங்கள் வலுவிழந்து போனதற்கு போதிய விளக்கமாக மாட்டாது. யாழ்ப்பாணத் தமிழரது சாதியமைப்புப் பற்றிய ஆய்வறிவும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக 1960 களில் இடம்பெற்ற போராட்ட வரலாற்றின் வர்க்க ரீதியான விளக்கமும் இன்றி இப் புதிரை விடுவிக்க இயலாது. இத்தகைய ஆய்வுத் துறைகள் வளர்ச்சி அடையாவிடின் எமது புதிய தலைமுறை சிந்தனையாளரது அரசியல், தத்துவ விசாரணைகள் 1960 களில் இடம்பெற்றது போல கற்பனாவாத தளத்திற்குப் பாய்ந்து வெறும் உயிர்ப்பற்ற தர்க்கமாகப் போய்விடலாம்.

யாழ் குடாநாட்டின் சாதி அமைப்பு ஏனைய தமிழ்ப் பகுதிகளின் சாதி அமைப்புடனும் சிங்களவரது சாதி அமைப்புடனும் அடிப்படை அம்சங்கள் சிலவற்றில் மாறுபட்டுள்ளது. இந்த மாறுதல்களே ஒப்பீட்டளவில் யாழ்பாணத்து சாதி அமைப்பு ஒடுக்கும் தன்மை மிகுந்திருப்பதற்கு வழிவகுக்கின்றது எனலாம். யாழ்பாண சாதிசார் சமூக அமைப்பிலும் அதன் வரலாற்றிலும் 1960 களில் யாழ்குடாநாட்டில் மையப்பட்டிருந்த சாதிய ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தின் தோற்றம் வளர்ச்சி தேய்வு பற்றிய ஆய்வுக்கு தேவையான சில அம்சங்களை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

**1) கொள்கை ரீதியான 'வெள்ளாளரது' ஆதிக்கம் :**

யாழ்குடாநாட்டின் ஒட்டுமொத்தமான சனத்தொகையிலும் சரி கிராமிய மட்ட சனத்தொகைகளிலும் சரி 'வெள்ளாள' சமூகத்தவர்களது பெரும்பான்மை முக்கியமான அம்சமாகும். யாழ்குடாநாட்டின் ஒருபாதி 'வெள்ளாளர்' சமூகமாக இருக்க மறுபாதி பதினைந்துக்குமதிகமான சாதியினரினால் பகிரப்பட்டுள்ளது. இவர்களுள் 'கரையார்', 'நளவர்', 'பள்ளர்', 'கோவியர்' தவிர்ந்த ஏனைய சாதியினர் தொகைரீதியான பலம் எதுவும் அற்ற மிகச் சிறுபான்மையினராக உள்ளனர்.

**2) உற்பத்திக் காரணிகளில் வெள்ளாளரது சாதிவாரி ஏகபோகம் :**

யாழ் குடாநாட்டில் கடல் சார்ந்த உற்பத்திக் காரணி புறநீங்கலாக ஏனைய உற்பத்திக் காரணிகளில் பெரும்பாலானவை வெள்ளாளரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

**3) அடிமை குடிமை பிரிவு :**

ஒட்டுமொத்தமான யாழ்ப்பாண குடாநாடு மட்டுமன்றி, தனித்தனி கிராமங்களும் கூட சொத்துடைமையாளரான வெள்ளாளரை மையமாகக் கொண்டிருந்தது. வெள்ளாளன் தனது நிலத்தில் உழைத்த நளவர், பள்ளர், கோவியர் சமூகங்களை சேர்ந்தவர்களை சட்டரீதியாக அடிமைகளாக வைத்திருந்தான். அடிமைகளாக விற்கவும் வாங்கவும் சீதனமாக கையளிக்கவும் தேசவழமைச் சட்டத்தில் போதிய ஏற்பாடுகள் இருந்தது.

தனிப்பட்ட வெள்ளாளரது பணிகளைச் செய்யாது ஒவ்வொரு கிராமத்திலும் மையமானதும் தொகைரீதியாக பெரியதுமான வெள்ளாளர் வட்டாரத்துக்கு பல்வேறு சேவைகளை சில சமூகத்தவர்கள் வழங்கி வந்தனர் (உ–ம் சலவைத் தொழில், சிகையலங்காரம், பறை அடித்தல், தச்சு வேலை செய்தல்). தனிப்பட்ட ஒருவருக்கு உடைமையாக இருக்காதபோதும் கிராமீய சமூகத்துக்கு சேவைகளை வழங்க 'கடமைப்பட்டிருந்த' இவர்கள் குடிமை பிரிவினராக வகுக்கப் பட்டிருந்தனர். குடிமைப் பிரிவினருள் 'கோவிய பறையர், அம்பட்டர், வண்ணார்' சமூகத்தவர்கள் கீழ்நிலைப் படுத்தப்பட்டிருந்தனர்.

**4. சட்ட ரீதியாக (தேசவழமை சட்டம்) 1844 வரை தொடர்ந்த சாதிவாரி அடிமை முறையும் (slave) அதன் மிச்ச சொச்சங்களும்!**

1844 டிசம்பர் 20ம் திகதி அடிமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை யாழ்ப்பாணத்தில் சட்டரீதியான சாதிவாரி அடிமை முறை நிலவியது. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே நிலம் சார்ந்த உற்பத்தியில் சாதிவாரி அடிமை முறை நிலவியது. 1844 வரை தமது அடிமைகளை வெள்ளாளர் சட்டரீதியாக விற்கவும், வாங்கவும், சீதனமாக வழங்கவும் செய்தனர். அடிமைகள் வெள்ளாளரது புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து, வெள்ளாளரது பயிர்ச் செய்கை நிலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உழைத்தனர். 1844 சட்டரீதியாக அடிமை முறை ஒழிக்கப்பட்ட போதும் நிலச் சீர்திருத்தமோ கைத்தொழில் வளர்ச்சியோ ஏற்படாதமையால் சாதிவாரி அடிமைகளாக இருந்த சமூகத்தவர்கள் தொடர்ந்தும் குடியிருப்பு, உழைப்பு என்பவற்றால் வெள்ளாளரது நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனர். கிராமம் கிராமமாக சிதறி வெள்ளாளரது நிலத்தில் கட்டுண்டு வாழ்ந்த இவர்கள் தொகை ரீதியாகவும் குடாநாட்டு மட்டத்திலும் கிராம மட்டங்களிலும் சிறுபான்மையினராக இருந்தனர்.

**5. கொலோனியல் ஆட்சிக் காலத்தில் அடிமைச் சாதியினர் மத்தியிலும் குடிமைச் சாதியினர் மத்தியிலும் சுதந்திரமான பிரிவுகள் உருவானமை :**

போர்த்துக்கீசிய, டச்சு ஆட்சியாளர்கள் தமது பணிகளுக்காக வெள்ளாளர்களது அடிமைகள் பலரை விடுவித்தனர். மேலும் இப் பணிகளுக்காக தென்இந்தியாவில் இருந்து புதிதாக பள்ளர், பறையர், சமூகத்தவர்களையும் கொண்டு வந்தனர். யாழ்ப்பாணத்தில் பள்ளர் சமூகம் அடிமை சாதியாகவும், பறையர் சமூகம் கீழ்ப்படுத்தப்பட்ட குடிமை சமூகமாகவும் இருந்தது. இவ்வகையில் கொலோனியல் ஆட்சியாளர்களது பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட நளவர், பள்ளர் சமூகத்தவர்களும் புதிதாக கொண்டுவரப்பட்ட பள்ளர், பறையர் சமூகத்தவர்களும் ஒடுக்கப்பட்ட சாதியினருள் சுதந்திரமான பிரிவுகள் தோன்றக் காரணமானார்கள். சுதந்திரமான பிரிவினருக்கு கொலோனியல் ஆட்சியாளர்கள் குடியிருப்பு நிலமும் தொழிலும் வழங்கினர். வெள்ளாளரின் சமூக ஆதிக்கத்திலிருந்து பொருளாதார ரீதியாக இவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் கூட கலாச்சார ரீதியாக விடுபட இயலவில்லை என்பது கவனத்துக்கு உரியதாகும். இவ்வகையில் வெள்ளாளரிடமிருந்து சுதந்திரமடைந்த பிரிவினர் அடிமைப் பிரிவினரிடம் இருந்து விலகி ஒப்பீட்டுரீதியாக மேலோங்கியதுடன் உபசாதிப் பிரிவுகளாகவும் வளர்ச்சி பெற்றனர். மேற்படி உபசாதி பிரிவுகளை அடையாளப்படுத்த கொலோனியல் ஆட்சியினருக்கு அவர்கள் ஆற்றிய பணிகளின் பெயர்கள் அவர்களது சாதிப் பெயர்களின் முன் அடைமொழிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. (உ—ம் வேர்குத்தி பள்ளர், செருப்புக்கட்டி பள்ளர், கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர், வேர்குத்தி பறையர், உழுபறையர்......)

ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த பணக்காரர்கள், கற்றறிந்தவர்கள், சிறு விவசாயிகள், குத்தகை விவசாயிகள் போன்றவர்களுடன் பெரும்பாலானவர்களும் சுருட்டுக் கைத்தொழில், கட்டுமானத் தொழில், நகர்ப்புறப் பணிகள் என்பவற்றில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், வாகன ஓட்டிகள், மெக்கானிக்குகள் போன்றவர்களுள் கணிசமானவர்களும் மேற்படி ஒடுக்கப்பட்ட சமூகங்களது சுதந்திரமான பிரிவுகளைச் சார்ந்தவர்களாவர். சுதந்திரமான பிரிவினர் நளவர் சமூகத்தில் அதிகமாக காணப்பட்டனர். அடுத்து தொகைரீதியாக பள்ளர் சமூகம் அதிக சுதந்திர பிரிவினரைக் கொண்டிருந்தது.

1930 களில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முன்முயற்சியுடன் இடம்பெற்ற சாதி ஒடுக்குதலுக்கு எதிரான முதலாவது போராட்டத்திலும் சரி, 1960 களில் இடதுசாரிகள் தலைமை தாங்கிய சாதி ஒடுக்குதல்களுக்கு எதிரான இரண்டாவது போராட்டத்திலும் சரி ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த சுதந்திரமான பிரிவினரே முதன்மையான பங்கை வகித்தனர். இப் போராட்டங்களில் வெள்ளாளரின் நிலங்களில் குடியிருந்து பணிபுரிந்து வந்த கட்டுண்ட பிரிவினர் பெரியளவில் அணிதிரட்டப்படவில்லை. எங்கெங்கு கட்டுண்ட பிரிவினர் சாதிய எதிர்ப்புக் குரல் கொடுத்தார்களோ அங்கெல்லாம் சாதி ஒடுக்குதல் வன்முறை வடிவம் எடுத்தது. குடியிருப்புக் காணிகளில் இருந்து விரட்டப்படுகிற, தொழில் வாய்ப்புகள் தடைப்படுத்தப்படுகிற ஆபத்துகளுக்கு முகம்கொடுக்க அஞ்சிய இவர்களால், தமிழரசுக் கட்சியினரது காந்திய அடிப்படையிலான சீர்திருத்த நடவடிக்கைகளை மட்டுமே ஆதரிக்க இயன்றது.

1930 களின் யாழ்ப்பாண வரலாற்றில் முக்கியமான பிரமுகரும் சாதி ஒடுக்குதலுக் கெதிரான முதலாவது போராட்டத்தின் நாயகருமான "ஜொகுவல் போல்" அவர்கள் சுதந்திரமான பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். பிரபல கட்டிட ஒப்பந்தக்காரரான இவரே யாழ்ப்பாணம் நகர மண்டபத்தை நிர்மாணித்தார். இவரைச் சார்ந்து ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெரிய கட்டிடத் தொழிலாளர் படை ஒன்றிருந்தது.

ஒடுக்கப்பட்ட சாதியினருள் 'கட்டுப்பட்ட' பிரிவினர் வெள்ளாளரது நிலத்துடன் பிணைக்கப்பட்டு யாழ்ப்பாணத்து சாதி ஒடுக்குதலின் மிகமோசமான நடவடிக்கைகளை எதிர்நோக்கினார்கள். சாதிய ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் முன்னணிப் பாத்திரம் வகித்த சுதந்திரமான பிரிவினர் முதன்மைப்படுத்திய பிரச்சினைகள் பெரும்பகுதியும் கலாச்சார சமத்துவம் தொடர்பானதாக அமைந்தது. கோவில் பிரவேசம், தேனீர்க் கடைப் பிரவேசம் போன்ற கலாச்சார நடத்தைகளே கொலைகளை விழுத்துகிற பிரச்சினையாக இருந்தது. மேற்படி காலகட்டத்தில் கலாச்சார பிரச்சினைகளும் குறைத்து மதிப்பிட முடியாத அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளாக இருந்தன என்பது கவனத்துக்குரியதாகும். சாதிய ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டம் கலாச்சார ஒடுக்குதல்களை முறியடிப்பதில் 60களின் பிற்பகுதிகளில் பெரிய அளவில் வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூன்று வழிகளில் ஈட்டப்பட்டது.

1. நேரடிப் போராட்டத்தின் மூலம்
2. தேசிய வாதிகளை சாதி ஒடுக்குதலுக்கு எதிரான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நிர்ப்பந்தித்து தூண்டியதன் மூலம்
3. பொருத்தமான அரசின் தலையீட்டை நிர்ப்பந்தித்ததன் மூலம்.

போராட்டம் ஓய்ந்துபோனபோதும் சீர்திருத்த நடவடிக்கைகள் 1970 களின் பின்னரும் தொடர்ந்தது. அரசின் சீர்திருத்தம் சார்ந்த தலையீடுகள் சிறுபான்மைத் தமிழர் மாசபை தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் (70—77), பின்னர் கூட்டணி சார்பாக திரு.இராசலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டன. பனம்பொருள் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டமை, கள்ளிறக்கும் தொழில் கூட்டுறவு மயப்படுத்தப்பட்டமை, வேலைவாய்ப்பு, காணிப் பங்கீடு என்பவற்றில் சில அனுகூலங்கள் ஓரளவு கிட்டியமை, கன்பொல்லையில் அமைந்த வீடமைப்புத் திட்டம் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.

நூற்றாண்டு காலமாக எவ்வித அரசியல் செல்வாக்குமில்லாத ஒரு சமூகப்பிரிவினர் என்றவகையில் புதிய மாற்றங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

1970 களில் ஏற்பட்ட மிளகாய், வெங்காய விலை எழுச்சி தோட்டக்காரர்களது வருமானத்தை உயர்த்தியபோது, குத்தகை தோட்டக்காரர், சிறு தோட்டக்காரர்களாக இருந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்கள் (பெரும்பாலும் சுதந்திரமான பிரிவினர்) பெரிதும் பயன்பெற்றனர். கூலி விவசாயிகளது பொருளாதார நிலைமையிலும் மாற்றம் ஏற்பட்டது. புதிய சேமிப்பும் மூலதன திரட்சியும் புதிய பாதைகளை அவர்களுக்கும் திறந்து விட்டிருந்தது. 1970 களில் உயர்சாதி உயர்வர்க்க இளைஞர்கள் இங்கிலாந்துக்கும் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர ஆரம்பித்தபோது மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சிங்கப்பூருக்கும் புலம்பெயர்கின்ற கூலித் தொழிலாளரது பட்டியலிலாவது ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்களது பெயர்களும் இடம்பெறத் தொடங்கியது. கடந்த ஒரு நூற்றாண்டுகளாக மலேசியா தொடங்கி கனடா வரை பணம் சேர்க்கும் மார்க்கமாக அமைந்த புலம்பெயர்வுகளில் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மேலோங்கிய பிரிவுகளுக்கும் 80 களில் மெல்லமெல்ல இடம் கிடைத்தது. மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருக்கின்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்களது பின்னணியை ஆராய்ந்தால், பெரும்பகுதியினர் ஒடுக்கப்பட்ட சமூகங்களது சுதந்திரமான சமூகப் பிரிவினராகவோ அல்லது மேல்தட்டு குடிமைப் பிரிவினராகவோ இருப்பது தற்செயலானதல்ல.

1960 களின் பிற்பகுதிகளில் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மேலோங்கிய பிரிவினரது பிரதான பிரச்சினையாக இருந்த கலாச்சார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்குதல் பிரச்சினைகள் தகரத் தொடங்கின.

1970 களில் வெள்ளாளரது நிலத்துடனான தமது பிணைப்பை குறைந்தபட்சம் குடியிருப்பு நிலம் தொடர்பாகத்தன்னும் அறுத்துக்கொள்ள முடியாதிருந்த பஞ்சைப் பராரிகள் சம்பந்தப்பட்டு மட்டுமே சாதி அமைப்பின் ஒடுக்கும் அம்சங்கள் பெரும்பாலும் எஞ்சிநின்றன. 1960 களின் போராட்டத்திலும் 1970 களின் சீர்திருத்தங்களிலும் சாதிவாரியாக ஒடுக்கப்பட்ட மக்களின் மேலோங்கிய பிரிவினரே தலைமைப் பாத்திரம் வகித்தனர். இப் போராட்டங்களில் முற்போக்கான வெள்ளாளரது பங்கும் தலைமைத்துவமும் தொடர்ச்சியாக இருந்துவந்தமை (உ–ம் : நெல்லியடி சாந்தா தோட்ட வெள்ளார்) கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்தவகையில் 1960 களின் பிற்பகுதியில் தீவிரமான போராட்டங்களின் அவசியம் மேற்படி மேலோங்கிய பிரிவினருக்கு குறைந்துபோகத் தொடங்கியது. பின்னர் இவர்களில் பலரும் இடதுசாரி இயக்கங்களில் இருந்து விடுபட்டு இடைக்காலத்தில் தமிழரது தேசிய இயக்கத்துடனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற அரசாங்க கட்சிகளுடனும் தம்மை அடையாளப்படுத்தினர். எனினும் இன்று அவர்களுள் பெரும்பகுதியினர் விரக்திகளுடனும் விமர்சனங்களுடனும் ஏதோஒரு வகையில் தமிழ்த் தேசிய நீரோட்டத்துள் கலந்துள்ளனர்.

1960 களின் பிற்பகுதிகளில் இவர்களால் கழற்றிவிடப்பட்ட நிலத்துடன் பிணைக்கப்பட்ட பாவப்பட்ட மக்களது பிரச்சினையை இதுகாறும் யாரும் முறையாக அணுகிவிடவில்லை. இன்று நடைபெறும் போராட்டம் எஞ்சியுள்ள பிரச்சினைகளை அணுகுவதற்குப் பதிலாக பின்போடவே உதவியுள்ளது.

இன்றும் யாழ்ப்பாண குடாநாட்டின் பின்தங்கிய மூலை முடுக்குகளுக்குள் (உ–ம் : வேம்பிராய் , கோப்பாய்) கால்வைக்கிற எவரும் கல் நிலமும் பள்ளங்களுமாக உள்ள அந்த ஒதுக்குப்புறங்களில் சிறு குடிசைகளில் வாழுகின்ற, இன்னமும் ஏதோஒரு வழியில் வெள்ளாளரது நிலத்துடன் பிணைக்கப்பட்ட இந்த ஒடுக்கப்பட்ட சமூகங்களின் அடிமைப் பிரிவினரது சந்ததிகளது வாழ்நிலைகண்டு அதிர்ந்துபோவார்கள்.

இவர்களது பிரச்சினை சாதி ஒடுக்குதலுக்கு எதிரான மூன்றாவது கட்ட போராட்டத்துக்கான பிரச்சினையாகும். இக் காலகட்டத்துக்குள் 1930 களில் முதலாவது காலகட்ட போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தாராளவாத தலைமையோ அல்லது இரண்டாவது கட்ட போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற இடதுசாரி தலைமையோ நுழையவில்லை. இப் போராட்டத்தை தமிழரது தேசிய விடுதலை இயக்கத்தின் ஒரு அங்கமாக இணைக்கிற முயற்சிகளிலும் எவரும் ஈடுபடவில்லை. சாந்தனும் ஏகலைவனும் குறிப்பிடுவதுபோல 1960 களின் இரண்டாம் கட்ட போராட்டம் தமிழரின் தேசிய விடுதலை எழுச்சியால் பின்தள்ளப்படவில்லை. இந்த எழுச்சி கருக்கொள்ள முன்னமே உள்ளார்ந்த காரணங்களால் 1960 களின் இரண்டாம் கட்ட சாதிய ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இன்று எழுச்சிபெறுகிற புதிய தலைமுறை சிந்தனையாளர்களும், சிறு சஞ்சிகைகளும் அரசியல், சித்தாந்த தேடல்களை மட்டுமின்றி அவற்றுக்கு அடிப்படையான பல்துறை ஆய்வு பங்களிப்புகளையும் ஊக்குவிக்கவும் ஆக்குவிக்கவும் வேண்டும். இப் பணியின் பெரும்பகுதி நடமாடும் பல்கலைக் கழகங்களாக நாட்டிலும் புலம்பெயர்ந்தும் வாழும் முதியவர்களது அனுபவங்களில் இருந்து திரட்டவேண்டியுள்ளது. இந்த அனுபவங்கள் சரிபார்க்கப்படவும் வேண்டும். வரலாற்றுக் குறிப்புகளை விட்டுச் செல்கிற மரபில்லாத ஒரு சமூகத்தவர்கள் என்ற வகையில் புதிய தலைமுறை ஆய்வாளர்கள் எதிர்நோக்கும் பணி பாரியது. புதிய ஆய்வாளர்களையும், சிந்தனையாளர்களையும் ஊக்குவித்தும், ஆதரித்தும் அவர்களை எழுதத் தூண்டியும் அவர்களது எழுத்துக்களை வெளியிட்டும் கூட நமது பணிகளைத் தொடரவேண்டியுள்ளது.

நமது வாழ்வும் வரலாறும் பற்றி கிடைக்கக்கூடிய சில பதிவேடுகளுள் ஒரு பகுதி போர்த்துக்கீச, டச்சு மொழிகளில் உள்ளன. இவற்றுள் பெரும்பகுதி இன்னமும் மொழிபெயர்க்கப்படவில்லை. ஆங்கிலத்தில் உள்ள பதிவேடுகள் பல லண்டன் நூலகங்களில் தேடுவாரற்றுக் கிடக்கின்றது. புதிய தலைமுறை ஆய்வாளர்களதும் சிந்தனையாளர்களதும் பணி பாரியது. 1960 களில் பலர் இத்தகைய ஆய்வும் அறிவும் இல்லாமல், பள்ளிமாணவர்கள் கேத்திர கணித சூத்திரங்களை வைத்துக்கொண்டு இரண்டு கோணங்கள் சர்வசமன் என்று நிரூபிக்க அல்லது மறுக்க முனைகிறதுபோல, மார்க்சிய எடுகோள்களையும் ரசிய அல்லது சீன வர்க்க ஆய்வுகளையும் வைத்துக்கொண்டு நமது நாட்டு நிலைமைகள் அவற்றுக்கு சமன் என்றும் இல்லையென்றும் கோஷ்டி பிரிந்து வாதாடிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய விவாதங்கள் சில கைகலப்பில்கூட முடிந்திருக்கிறது.

இன்றைய தலைமுறை சிந்தனையாளர்களுக்கு இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டுவிடக் கூடாது. மார்க்சிசத்தை வேதப் புத்தகமாக அல்லது சாத்தானின் போதனைகளாகப் பார்க்கிற பார்வையே அன்று மேலோங்கியிருந்தது. மார்க்சிசத்தை சிலர் கலைக் களஞ்சியம் போலவும் அகராதி போலவும் மருத்துவக் கைநூல் போலவும் பயன்படுத்தினர். இவற்றைவிட மார்க்சிசம் பற்றிய, மார்க்சிச எடுகோள்கள் பற்றிய வேறு எந்தக் கண்ணோட்டத்தையும் இவர்களுள் பலர் கொண்டிருக்கவில்லை. உலகம் முழுவதும் மார்க்சிசத்துள் அடக்கம் என்று வேறு நம்பினார்கள்.

முதன்முதலில் தென் அமெரிக்காவில் இருந்து தக்காளிப்பழம் அறிமுகம் செய்யப்பட்டபோது பைபிளில் குறிப்பிடப்படாத அந்தப் பழம் ஏடன் பூங்காவில் இறைவன் விலக்கிவைத்த பழமாக இருக்கலாமோ என்ற சந்தேகம் ஐரோப்பாவில் சில வைதீக கத்தோலிக்கர்களுக்கு ஏற்பட்டதாம். இத்தகைய பின்னணியில் 1960 களில் பெரிய அளவில் சித்தாந்த வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றபோதும் பங்களிப்புகள் எதுவும் இடம்பெறாதமையைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வெளிவரும் சிறு சஞ்சிகைகளது கையிலும் இளைய சிந்தனையாளின் கையிலும் நமது நிகழ்கால இருட்டை மறுக்கிற, எதிர்காலத்தை பிரகாசமாக்கிற பாரிய பணியை வரலாறு ஒப்படைத்திருக்கிறது. அவர்கள் உயிர்ப்போடும் தன்னம்பிக்கையோடும் கடின உழைப்பில் ஈடுபட்டு வெற்றிபெற வேண்டும்.

– வ.ஐ.ச.ஜெயபாலன்
நோர்வே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**UYIRPPU**
BMBOX 4002
LONDON
WC 1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்